

# சமூக அறிவு நூல்

மூன்றாம் புத்தகம்



ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

# சமூக அறிவு நூல்

T-UN-260

## மூன்றாம் புத்தகம்

[ஆறாம் பாரத்திற்குரியது]

*(Prepared according to the Final Syllabus issued in 1949)*

இ. ராமஸ்வாமி சாஸ்திரி, B. A., L. T.,
ஹிந்து உயர்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி

&

எம். எஸ். நரஸிம்ஹாச்சாரி, B. A., L. T.,
சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை.,
சென்னை.

*Approved for Class use: Vide Page 34, Supplement to Fort St. George Gazette dated 4-4-56.*

பதிப்பாளர் :

**ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்**

53-56, பவழக்காரத் தெரு, : : சென்னை-1

பதிப்புரிமை] 1958 [விலை ரூ. 2-25

முதற் பதிப்பு : 1951
பதினொன்றாம் பதிப்பு : ஜூலை, 1958

# மதிப்புரை

திரு இராமசுவாமி சாஸ்திரியாரும், திரு நரசிம்மாச்சாரியாரும் சமூக அறிவு நூலின் மூன்றும் பாகத்தினை இன்று வெளியிடுகின்றனர். அவர்கள் நூலினை உயர்நிலைப் பள்ளிகள் மகிழ்ச்சியோடு வரவேற்பதனைக் காண்கிறேன். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களே இத்தகைய நூல்களை எழுதுவதுதான் சிறப்பு; அவர்கள் கற்றுக்கொடுக்க வேண்டியதனை அவர்கள் தாம் அறிவார்கள். சிறந்த தமிழ்ப் புலவர் உதவி கொண்டு வெளிவருவதும் இந்த நூலின் பெருமையாகும். இந்த நூல் நல்ல தமிழில் விளக்கமாக இன்றுவரைத் திருத்திய செய்திகளோடும், பல புதுப்படங்களோடும், பயிற்சிகளோடும், கற்போர்க்குப் பெரிதும் பயன்படும் நிலைமையில் அமைந்திருப்பது பாராட்டத் தக்கதே ஆகும்.

தே. பொ. மீனாட்சி சுந்தரன்,
M. A., B. L., M. O. L.

The Progressive Printers, Madras-1.

# நான்முகம்

ஆறும் பாடச் சமூக அறிவு நூலாகிய இது அரசியலாரின் பாடத்திட்ட முறையைப் பெரிதும் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது. தற்போதுள்ள இவ்வகுப்புப் பாடத்திட்டப்படி நமது சுதந்திர இந்தியாவிற்கு ஏற்ற, சிறப்பும் நுட்பங்களுஞ் செறிந்த ஆட்சிமுறை எனும் முற்பகுதியையும், பொருளாதாரம் எனும் இரண்டாம் பகுதியையும் கொண்டு இந்த நூல் விளங்குகிறது. ஆதலால், நம் நாட்டு மாணவர்கட்கு நம்மாட்சி முறையிலும், பொருளாதாரத் துறையிலும் நல்லறிவும், ஆர்வமும் பெருகுமாறு நம் நாட்டுப் பண்பு முறையில் அப்பொருட்களுடன் இந்நூல் முழுதும் தக்க இடங்களில் தொடர்ப்படுத்தப்பட்டுள்ளன.

நமது அரசியல் அமைப்பின் நவீன அமிசங்களும், இந்திய சூழ்நிலைக்கேற்பப் பொருளாதாரத் திட்டத்தின் புதிய அமிசங்களும் மாணவர்க்கு மட்டுமின்றிப் பொதுமக்கட்கும் பயன் தருவகையில் இந்நூற்கண் எழுதப்பட்டுள்ளன. ஏற்ற விடங்களில் பொருந்திய படங்களுடன் தக்க புள்ளி விவரங்களும் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் புதிய முறை வினுப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளதோடு மாணவர்கள் எதிர்கால வாழ்விற்கு ஏற்ற அரசியல் பயிற்சி பெறுமாறு சமூக அலுவல் பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

பாடத் திட்டத்தைப் பெரிதும் பின்பற்றி எழுதப்பட்டுள்ளதாயினும் சிறந்த பல நுட்பங்கள் இத் திட்டத்தில் அமைந்திருத்தலின் இதில் பல குறைகள் காணப்படுதல் இயல்பே. நாங்கள் அக்குறைகளை நீக்குதற்கும், நல்ல முறைகளை மேலும் மேற்கொள்ளுதற்கும், கற்றறிந்த மேலோர்கள் வழிகாட்டுவார்களாயின் அது நன்றியறிதலுடன் மேற்கொள்ளப்படும்.

இந்நூல் எழுதுவதற்கு அரசாங்க வெளியீடுகள் பெரிதும் உதவியாய் இருந்தன. ஆதலின், அரசியலார்க்கு எமது நன்றி உரித்தாகுக.

தமிழ்ப் பேராசிரியரும், ஆன்றவிந்தடங்கிய சான்றோரு மான திருவாளர், வித்வான் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் M. A., B. L., M. O. L., அவர்கள் இப் புத்தகத்தை எழுத அன்புடன் எங்களை ஊக்கியதோடு சிறந்த பல செய்திகளையும் கொடுத்துதவினார்கள். அன்னாரின் சிறந்த கட்டுரையின் கருத்துக்கள் இறுதிப் பகுதியான மங்கல முடிபிற்கு அணி செய்வன ஆயின. அப் பெருந்தகையாளருக்கு எங்கள் அன்பார்ந்த நன்றி என்றும் உரித்தாகுக.

மேலும், எம்மருமை நண்பர்கள் பலர் எமக்குப் பல வழியிலும் உதவியும், ஆசியும் புரிந்தனர். அவருக்கு எம் நன்றி உரித்தாகுக.

எங்கட்குப் பேருறு துணையாகவும், பக்க பலமாகவும் இருந்து கொண்டு இந்நூலை எழுத எங்களை ஊக்கியதுடன் அது நறுந்தமிழ் நடையில் திகழ்ந்திடத் திரு. வித்வான் ரா. சக்கர-பாணியார் காட்டிய அன்புக்கும் பேருதவிக்கும் யாது கைம்-மாறு காட்ட வல்லோம்! யாம் அவர்க்கு என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் முயற்சிகள் எல்லாம் கைகூடுமாறு தோன்றாத் துணையாய் இருந்து இன்னருள் புரிந்த தடங்கருணைக் கடலான இறைவனை மனமார நினைத்து வாயார வாழ்த்துவோமாக.

இங்ஙனம்,

கி. ராமஸ்வாமி சாஸ்திரி,

எம். எஸ். நரஸிம்ஹாச்சாரி.

# பொருளடக்கம்

## முதற் பாகம்

### ஆட்சி சாஸ்திரம்


பக்கம்

அத்தியாயம் 1.

பொது விளக்கம் ... 1

அத்தியாயம் 2.

நம் நாட்டுப் பழங்கால ஆட்சி முறைகள்

பகுதி 1: மௌரியர் ஆட்சி முறை ... 4

பகுதி 2: தமிழகத்தில் கிராம சுய ஆட்சி ... 9

அத்தியாயம் 3.

நம் நாட்டு மத்தியகால ஆட்சி முறை

பகுதி 1: ஷெர்ஷாவின் ஆட்சி முறை ... 12

பகுதி 2: அக்பரின் ஆட்சி முறை ... 15

பகுதி 3: சிவாஜியின் ஆட்சி முறை ... 19

அத்தியாயம் 4.

நவீன ஆட்சிமுறை (பிரிட்டிஷ் ஆட்சி)

பகுதி 1: இந்தியாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி ... 23

பகுதி 2: கி. பி. 1757—1858 ... 24

பகுதி 3: முடியாட்சியின் கீழ் இந்தியா ... 27

அத்தியாயம் 5.

சுதந்திரப் பிறப்பு

பகுதி 1: சுதந்திரப் பிறப்பு ... 37

பகுதி 2: சுதந்திரம் அளிக்கப்படுதலும் இந்தியப் பிரிவினையும் ... 42

பகுதி 3: இந்திய அரசியல் நிர்ணய சபை ... 45

அத்தியாயம் 6.

பகுதி 1: நமது அரசியல் அமைப்பியல் ... 48

பகுதி 2: அரசியல் பிரிவுகள் ... 52

அத்தியாயம் 7.

நமது யூனியன் அரசாங்கம்

பகுதி 1: மத்திய அரசாங்கம் ... 55

பகுதி 2: ஜனாதிபதி ... 56

பகுதி 3: பிரதம மந்திரியும் யூனியன் மந்திரி சபையும் ... 59

பகுதி 4: யூனியன் பார்லிமெண்ட் ... 61

அத்தியாயம் 8.

நமது யூனியனில் அடங்கியுள்ள ராஜ்ஜியங்களின் ஆட்சியமைப்பு

பகுதி 1: ராஜ்ஜியங்களின் சுதந்திரம் ... 66

பகுதி 2: ராஜ்ஜியங்கள் ... 68
பகுதி 3: ஆட்சி இலாக்காக்கள் ... 72

அத்தியாயம் 9.
ஸ்தல ஆட்சி
பகுதி 1: ஸ்தல ஆட்சியின் தன்மை ... 75
பகுதி 2: ஸ்தல ஆட்சி உத்தியோகஸ்தர்கள் ... 75
பகுதி 3: ஸ்தல சுய ஆட்சி ... 79

அத்தியாயம் 10.
நீதி பரிபாலனம்
பகுதி 1: நீதி ... 89
பகுதி 2: நம் நாட்டு நீதிமன்றங்கள் ... 90
பகுதி 3: சட்டமும் ஒழுங்கும் ... 94

அத்தியாயம் 11.
நம் நாட்டின் பாதுகாப்பு
பகுதி 1: பாதுகாப்பின் அவசியமும் அதன் முக்கிய அமிசங்களும் ... 98
பகுதி 2: யூனியன் படைகள் ... 99
பகுதி 3: தேசீய இளைஞர் படை ... 105
பகுதி 4: இராணுவப் பயிற்சிக் கல்லூரிகள் ... 106

அத்தியாயம் 12.
சமூக நல்வாழ்வு
பகுதி 1: பொதுச் சுகாதாரமும் மருத்துவ உதவியும் ... 110
பகுதி 2: முன் பாதுகாப்பு ... 114
பகுதி 3: முதற் சிகிச்சை ... 116
பகுதி 4: செஞ்சிலுவைச் சங்கம் ... 116
பகுதி 5: தொழிலாளரின் நலனுக்கான சமூக முன்னேற்றத் திட்டங்கள் ... 120
பகுதி 6: வேலையற்றோர்க்கு உதவி ... 123

அத்தியாயம் 13.
பஞ்சமும் பஞ்ச நிவாரணமும்
பகுதி 1: நம் நாட்டுப் பஞ்சங்கள் ... 127
பகுதி 2: பஞ்ச நிவாரணம் ... 129
பகுதி 3: உணவுப் பொருள்களின் பங்கீடும் கட்டுப்பாடுகளும் ... 131

அத்தியாயம் 14.
குடிமை
பகுதி 1: எழுத்தறிவின்மையைப் போக்கல் ... 133
பகுதி 2: நமது வாக்குரிமை ... 135
பகுதி 3: நமது உரிமைகளும் கடமைகளும் ... 139

**அத்தியாயம் 15.**
ஐக்கிய தேசத்தினர் அமைப்பு
பகுதி 1: ஐ. தே. அமைப்பும் பணியும் ... 143
பகுதி 2: உலகக் குடிமை ... 148
பகுதி 3: உலக அமைதி ... 149

இரண்டாம் பாகம்

பொருளாதாரம்

**அத்தியாயம் 16.**
விவசாயம்
பகுதி 1: நமது விவசாயம் ... 154
பகுதி 2: முக்கியமான சில நிலவுரிமைத் திட்டங்கள் ... 158
பகுதி 3: கிராமக் குடியானவன்—இந்தியப் பயிர்த்தொழிலின் குறைபாடுகளும் பரிகாரங்களும் ... 161
பரந்த பண்ணை முறையும் கூட்டுறவு விவசாயமும் ... 165
பகுதி 4: விவசாய இலாக்கா ... 167
பகுதி 5: ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தி ... 171

**அத்தியாயம் 17.**
தொழில் அபிவிருத்தி
பகுதி 1: நமது நாட்டுப் பழைய கைத்தொழில்கள் ... 174
பகுதி 2: சுதேசி இயக்கம் ... 176
பகுதி 3: குடிசைத் தொழில் ... 178
பகுதி 4: கிராமப் புனரமைப்பும் பொருளாதாரமும் ... 181

**அத்தியாயம் 18.**
நம் நாட்டு ஆக்கத் தொழில்
பகுதி 1: மேனாட்டுச் செய்தொழில் முறைகள் நம் நாட்டில் பரவுதல் ... 187
பகுதி 2: சில முக்கிய ஆக்கத் தொழில்களின் வளர்ச்சி ... 188
பகுதி 3: நிலக்கரி முதலிய பிற சுரங்கச் செல்வப் பொருள்களும், அவற்றின் பயன்களும் ... 195
பகுதி 4: நம் நாட்டு ஜல மின்சக்தி திட்டங்கள் ... 197

பகுதி 5 : சிறு தொழில்களும் அவற்றிற்கு ஏற்ற சூழ்நிலைகளும் ... 199

அத்தியாயம் 19.

நம் தொழில் வளர்ச்சி

பகுதி 1 : காப்பு இயல்முறையும் தடையிலா வர்த்தகமும் ... 203

பகுதி 2 : பேரளவைப் பொருளுற்பத்தியும் சிற்றளவைப் பொருளுற்பத்தியும் ... 206

பகுதி 3 : செய்தொழிற் செறிவு ... 208

பகுதி 4 : எதிர்காலத் தொழில் வளர்ச்சி ... 211

அத்தியாயம் 20.

ஜனத்தொகை ... 218

அத்தியாயம் 21.

நமது பொருளாதாரப் போராட்டம்

பகுதி 1 : விவசாயத் தொழிலாளியும் ஆலைத் தொழிலாளியும் ... 221

பகுதி 2 : நிலச் சொந்தக்காரரும் மானியதாரும் ... 222

பகுதி 3 : முதலாளியும் தொழிலாளியும் ... 223

பகுதி 4 : நம் தொழிலாளரின் இயல்பு ... 224

பகுதி 5 : தொழிலாளர் சங்கம் ... 227

பகுதி 6 : கூட்டுறவும் அரசாங்க சமதர்மமும் ... 229

அத்தியாயம் 22.

நுகர்வு ... 233

அத்தியாயம் 23.

பாங்குகளும் கொடுக்கல் வாங்கல்களும்

பகுதி 1 : பாங்குகளும் அவற்றின் கடமைகளும் ... 237

பகுதி 2 : நம் நாட்டுப் பாங்குகள் ... 238

பகுதி 3 : இந்திய நடைமுறை நாணயம் ... 244

அத்தியாயம் 24.

இன்ஷுரன்ஸ் ... 246

அத்தியாயம் 25.

பொது நிதி

பகுதி 1 : அரசாங்க வரவு செலவினங்கள் ... 248

பகுதி 2 : ஐந்தாண்டுத் திட்டங்கள் ... 253

மங்கலவுரை ... 256

கலைச் சொற்கள் ... 259

## FORM VI

*Objective.*—To aid pupils to the fullest understanding of our social, political and economic problems and to become responsible and efficient citizens.

*Civics*—

1. *Introductory*: Mauryan administration, provincial and municipal. Village autonomy in the Tamil kingdoms of the far south. The Governments of Sher Shah, Akbar and Sivaji.

   The rule of the British East India Company. The transfer to the Crown. Stages of Indian partnership in British Rule. Government of India Act of 1935.

2. *How we are governed today*: The Constituent Assembly—Interim Government—the grant of Independence—the Indian Dominion and Pakistan.

   National Government—Central—the Prime Minister and Cabinet—the law-making bodies.

   The autonomy of the Provinces—the Governor and Cabinet—law-making bodies—departments of Government.

   Local Government and its services. The Collector.

   Local Self-Government, District Boards, Municipalities and Corporations.

   The Administration of Justice—Federal and Provincial, the District Court etc. The Village Panchayats.

   Law and Order—the Magistracy—the Police—the Home Guards.

   Defence: Army, Navy and Air Force—National Army-Military Colleges.

   Social Welfare—Public Health and Medical Relief—Safety-first—First-aid—Red Cross and Ambulance.

Social betterment schemes for labour welfare—unemployment relief.

Famine—power of resistance—Famine relief funds—Rationing of foodstuffs—controls.

Citizenship—eradication of illiteracy—compulsory education—our right to vote—woman suffrage—our rights and duties as citizens of India.

The U.N.O.—World Citizenship—young citizens and world peace.

3. *Economics*: Our economic conditions. Agriculture—India, essentially an agricultural country—the fertility of the land, the availability of labour—the zamindari and ryotwari systems—the village farmer—difficulties of Indian agriculture—Department of Agriculture—spread of new methods. The possibility of large-scale and co-operative farming as in Canada, U.S.A. and U.S.S.R.—Production for export.

Industrial Progress—Indian industries of the past—causes for decay—the Swadeshi movement—Charka and Khadi movements—Village Reconstruction—restoration of cottage industries—Rural economy.

Introduction of the Western manufacturing systems. The growth of cotton and jute industries. Heavy industries—Jamshedji Tata. Hydro-electric Power Systems. Exploitation of coal and other mineral resources—Smaller industries—their possibilities. Cottage industries in China and Japan. Adoption of these methods in India.

Protection versus Free Trade—the Tariff Board—Protection of our young industries—small and large-scale production and localization with reference to some of our chief industries. The future of our Industrial development. Population problems in relation to food supply and industrial development—Decennial Census—Birth and Death rates.

4. *Our Economic Struggle*: Agricultural and Industrial labour—Landlord versus tenant—Capitalist versus labour. Trade Union Movement. Labour problems. Remedy—Co-operative Movement—State Socialism based on nationalization of industries and transport etc.

Our wants—getting our money's worth in making purchases. Consumption—Whether production can keep pace with consumption.

Banking and Credit. The functions of banks, banker and customer—Co-operative credits—Reserve Bank of India—Indian currency.

Insurance—Protecting health, life and property. How the Public Services are paid for. Chief Sources of Revenue and Heads of Expenditure.

The Central Government. The Provincial Governments, e.g., Madras.

Ideals of the State: Health, Wealth and Happiness.

5. What the world expects of you. Personal problems and their solutions. "My vocation and what I must do to succeed in it."

# சமூக அறிவு நூல்

## மூன்றாம் புத்தகம்

### முதற் பாகம்

—:o:—

# ஆட்சி சாஸ்திரம் (Civics)

## அத்தியாயம் 1

### பொது விளக்கம்

நாம் அன்னிய ஆட்சியினின்றும் விடுதலை பெற்றுவிட்டோம். நம் அருமை நாடு பொன்போன்ற சுதந்திரத்தை எய்தி வீறுடன் விளங்குகிறது. உயிரினும் மேன்மையான நமது உரிமையைக் காக்கும் பொறுப்பும், கடமையும் மாணவர்களாகிய உங்கள் உடையனவே என்பதை மறவாதீர்கள். கடமையுடன் திறமையும் பெற்ற குடிமக்களாக நீங்கள் விளங்குதல் வேண்டும் என்னும் பேராவலையே கைக்கொண்டு திகழ்தல் வேண்டும். அத்தகைய ஆவல் கைகூட வேண்டுமாயின் நீங்கள் சமூக, அரசியல், பொருளாதார விஷயங்களை நன்கு அறிந்து கொள்ளுதல் முக்கியமாகும்.

மனிதன் தன்னினத்துடன் கூடிவாழும் இயல்பினன். தனித்து வாழுதல் அவனால் இயலாது. தனது சொத்தையும் உயிரையும் காக்கும் பொருட்டே அவன் பலருடன் கூடி வாழும் வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளான். அவ்வாழ்க்கையே சமூக வாழ்க்கையாம். சமூக அமைப்பு,

ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் உள்ள தொடர்பு, ஆட்சியாளரின் அதிகாரங்கள், உரிமைகள் ஆகிய அனைத்தையும் விளக்குவதே ஆட்சி சாஸ்திரம் ஆகும்.

அரசாங்கம் என்பது நல்லாட்சியின் பொருட்டு ஏற்பட்டுள்ள திட்டமாகும். ஒரு நாட்டின் அரசாங்கம் அந்நாட்டின் ஆட்சித் தன்மைக்குத் தக்கவாறு அமையும். அரசரால் நடத்தப்பெறும் ஆட்சி முடியாட்சி யென்றும், குடிகளால் நடத்தப்படும் ஆட்சி குடியாட்சி யென்றும் வழங்கப்பட்டு வருகின்றது. அன்றியும், இக்காலத்தில் பல நாடுகளில் பொதுஜனங்கள் தங்கள் பிரதிநிதிகள் மூலமாகத் தங்கள் அரசை நடத்தி வருவதையும் பார்க்கிறோம். இதுவே ஜனநாயக ஆட்சியாகும். வேறு சில இடங்களில் ஒரு தனிப்பட்ட மனிதன் ஒருவன் அரசியல் அதிகாரங்கள் அனைத்தையும் தன் வசமாக்கிக்கொண்டு, தானே ஆட்சி புரிந்து வருவதையும் பார்க்கிறோம். இதுவே சர்வாதிகார ஆட்சி எனப்படும். நவீன காலத்து அரசாங்கம் சில பிரிவுகளையுடையது. நிர்வாகம், சட்டம், நீதி பரிபாலனம் ஆகிய மூன்றும் அரசியலின் முக்கியப் பிரிவுகளாகும். இம் முறையைப் பின்பற்றி நமது நாட்டின் ஆட்சி முறையை நாம் கவனிப்போம்.

இந் நாட்டுச் சரித்திரத்தைப் பழைய காலம் அல்லது இந்து அரசர்கள் ஆண்ட காலம், மத்திய காலம் அல்லது முஸ்லிம் அரசர்கள் ஆண்ட காலம், நவீன காலம் அல்லது பிரிட்டிஷ் ஆட்சிக் காலம், புது இந்திய காலம் — என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். பழைய காலத்தில் வட இந்தியாவில் மௌரியரின் ஆட்சிமுறையும், தென்னிந்தியாவில் தமிழகத்தில் மூவேந்தர்களின் ஆட்சி முறைகளும் மிகமிகப் போற்றத் தக்கனவாம். மத்திய காலத்தில் முஸ்லிம் மன்னர்களான ஷெர்ஷாவும், அக்பரும், இந்து மன்னரான சிவாஜியும் நிறுவிய ஆட்சித் திட்டங்கள் மிகவும் போற்றத்தக்கனவாம்.

விதிவசமாக அரசியல் கொந்தளிப்புக்களினுல் இந்தியா அன்னியர் ஆட்சியின்கீழ் வந்தது. வாணிபம் செய்ய வந்த பிரிட்டிஷார் இந்நாட்டை ஆளத் தொடங்கினர். கி. பி. 1600-ல் இந்நாட்டில் வர்த்தகம் செய்ய ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டது. கி. பி. 1600 முதல் கி. பி. 1757 வரை பிரிட்டிஷார் இந்தியாவுடன் வெறும் வர்த்தகத் தொடர்பு மட்டும் வைத்துக்கொண்டிருந்தனர். கி. பி. 1757 முதல் வாணிபம் செய்து கொண்டே அவர்கள் இந்தியாவின் பல பகுதிகளை மெல்ல மெல்ல வென்று, கி. பி. 1858-க்குள் இந்நாடு முழுவதையும் ஆளத்தொடங்கினர். கம்பெனியார் ஆங்கிலப் பார்லிமென்டின் கண்காணிப்பில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பின்பற்றி ஆட்சி முறைகளை நிறுவினர். பின்னர் கி. பி. 1858 முதல் கி. பி. 1947 ஆகஸ்டு 15-ஆம் நாள் வரை இந்தியா நேர் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. இக்காலத்தில்தான் நாம் இப்போது கண்டுவரும் ஆட்சிமுறைத் திட்டங்களான சிறந்த நிர்வாகத் திட்டங்கள், சட்ட திட்டங்கள், ஒழுங்கு முறைகள், சட்ட சபைகள், நீதி பரிபாலனத் திட்டங்கள் முதலிய வனைத்தும் உறுப்பெற்றன.

அடிமைத் தளையிலிருந்து நாம் விடுதலைபெற அண்ணல் காந்தி அவதரித்தார். அவரது தலைமையின்கீழ் நாம் விடுதலை பெற்ருேம். 1947 ஆகஸ்டு 15-ஆம் நாளன்று நம் நாடு உரிமை பெற்றதை அறிவீர்கள். சுதந்திர இந்தியா தனது பண்பிற்கு ஏற்ப ஓர் அரசியல் திட்டத்தை வகுத்துக்கொண்டிருக்கிறது. இத் திட்டத்தின்படி நம் நாடு 1950 ஜனவரி 26-ஆம் தேதி முதல் **பரிபூரண சுதந்திர ஜனநாயகக் குடியரசாக** வீறுடன் விளங்கி வருகிறது. சுதந்திர இந்தியாவின் ஆட்சி முறைகள் மிகமிகப் போற்றத் தக்கவை.

ஆட்சி சாஸ்திரத்துடன் நெருங்கிய தொடர்புடையது பொருளாதார சாஸ்திரம் (Economics). பொருளாதார சாஸ்திரமாவது, செல்வப் பெருக்குக்குக் காரணமான

பொருள்களும், இயற்கை வசதிகளும் சமூக நலனுக்கேற்ப அமைந்துள்ள வகையைப்பற்றி விளக்கிக் கூறுவதாகும். இந்தியா ஒரு விவசாய நாடு; ஆதலால், இந்நாட்டின் பொருளாதாரமே உலகில் தனி நிலையுடையது. விவசாயம் போன்றே கைத்தொழிலும் நம் நாட்டிற்கு முக்கியமானது. அக் கைத்தொழில்களைப் பற்றியும், அவற்றைப் பெருக்கும் வழிகளைப் பற்றியும் நீங்கள் அறிதல்வேண்டும். "பொருள் இலார்க்கு இவ்வுலகமில்லை" என்ற மெய்யுரைக் கிணங்க நமது நாட்டின் பொது நிதியைப்பற்றியும் அதனைப் பெருக்கும் வழிகளைப் பற்றியும் நீங்கள் படித்தறிதல் வேண்டும். ஆட்சி முறை, பொருளாதாரம் முதலிய விஷயங்கள் பல மாணவர்களுக்கு ஏற்ப இந் நூலிற் கூறப்பட்டுள்ளன.

நோயில்லாமை, செல்வம், விளைவு, இன்பம், பாதுகாவல் ஆகிய இவ்வைந்துமே நாட்டிற்கு அழகு செய்வன என்னும் கருத்தமைய, "பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம் அணியென்ப நாட்டிற் கிவ்வைந்து" என்று வள்ளுவனார் கூறியுள்ளார். நீங்கள் உயிரினுஞ் சிறந்த ஒழுக்கத்தைக் கைக்கொண்டு வள்ளுவர் கூறும் நலன்கள் எல்லாம் நாட்டில் வளர்ந்தோங்க உழைப்பீர்களாக!

---

## அத்தியாயம் 2

## நம் நாட்டுப் பழங்கால ஆட்சி முறைகள்

பகுதி 1

### மௌரியர் ஆட்சி முறை

கிறிஸ்து பிறப்புக்குப் பல நூற்றுண்டுகட்கு முன்னிருந்தே நம் நாடு சிறந்த பல ஆட்சி முறைகளுடன் திகழலாயிற்று. கி. மு. 6-ஆம் நூற்றுண்டில் வட இந்தியாவில் கங்கைச் சமவெளியில் மகதம் என்னும் பெயர் பெற்ற ராஜ்ஜியம் ஒன்று தோன்றியது. கி. மு. 322 முதல் கி. மு. 184

வரை இதனையாண்ட மௌரிய வம்சம் சிறந்ததொன்றாகும். அவ்வமிசத்தை நிறுவியவர் சந்திரகுப்த மௌரியர் எனும் வேந்தராவர். அவரும், அவருடைய பேரரான அசோக சக்கரவர்த்தியும் மௌரிய வமிசத்தின் திலகங்களாவர். மௌரியர்களின் காலத்தில்தான் இந்தியாவின் நிர்வாகம் ஒரே ஆட்சியின்கீழ் வந்தது. அவர்களது ஆட்சிமுறை, தற்கால ஆட்சி முறையின் மேலான அம்சங்கள் கொண்டு விளங்கியது. பேராசிரியர் வின்ஸென்ட் ஸ்மித் என்பார், "மௌரியர் ஆட்சி முறை பல வகைகளிலும் முகலாயரின் ஆட்சியைவிடச் சிறந்தது" எனக் கூறுகிறார். இதற்கு முக்கிய ஆதாரங்கள் : (1) சந்திர குப்த மௌரியருக்கு உறு துணையாக விளங்கிய சாணக்கியர் என்பார் எழுதிய அர்த்த சாஸ்திரம் என்னும் நூல்; (2) சந்திரகுப்த மௌரியர் ஆஸ்தானத்திற்கு வந்த மெகஸ்தனிஸ் என்னும் கிரேக்க இராஜ தூதர் எழுதிய இண்டிகா என்னும் நூல்; (3) அசோகரின் கல் வெட்டுகள்.

**மாகாண ஆட்சி முறை :** மௌரியப் பேரரசு மிகவும் விரிந்து பரந்தது. தமிழகம் நீங்கலாக, இந்தியா முழுவதும் அது தன்னகத்தில் அடக்கிக் கொண்டிருந்தது. நிர்வாகத்தின் பொருட்டு அது பல மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. தலைநகரின் தூர எல்லைகளில் இருந்த மாகாணங்கள் பெரிய மாகாணங்கள் என்றும், தலைநகருக்கு அருகில்—உள்நாட்டில் இருந்த மாகாணங்கள் சிறிய மாகாணங்கள் என்றும் வழங்கப்பட்டன. வடமேற்கு மாகாணம், கிழக்கு மாகாணம், மேற்கு மாகாணம், தென் மாகாணம் என்னும் நான்கும் பெரிய மாகாணங்கள் ஆகும். அவற்றின் தலைநகரங்கள் முறையே தக்ஷசீலம், தோசாலி, உஜ்ஜயினி, சுவர்ணகிரி என்பனவாம். இப்பெரிய மாகாணங்கள் அரசர் குடும்பத்தைச் சேர்ந்த இராஜப் பிரதிநிதிகளின் கீழ் இருந்தன. ராஷ்ட்ரீயர் என்னும் கவர்னர்கள் சிறிய மாகாணங்களின் அதிபர்கள் ஆவர்.

மௌரியரின் ஆட்சியில் ஒவ்வொரு மாகாணமும் பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஜில்லா அதிகாரிகளுக்கு ஸ்தானிகர் என்று பெயர்; சிறிய ஜில்லாக்கள் ராஜுகர்கள் என்னும் அதிகாரிகளின் கீழ் இருந்தன. மாகாணங்களிலிருந்து அவ்வப்பொழுது அனுப்புதற் கேற்ற முக்கியச் செய்திகள் புருக்கள் மூலம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டன.

ஒவ்வொரு ஜில்லாவும் பல கிராமங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்தக் கிராமங்களே ஆட்சி அமைப்பு அனைத்திற்கும் அடிப்படையாய் அமைந்து விளங்கின. ஒவ்வொரு கிராமமும் கிராமணி (Head-man) என்னும் தலைவரின் கீழ் சுயேச்சையாய் விளங்கியது. கிராமக் காரியங்களைக் கவனிக்க பஞ்சாயத்து ஒன்றிருந்தது. அன்றியும், கோபர்கள் என்னும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கிராமங்களைக் கண்காணித்து வந்தனர். வரி வசூலித்தல், வரவு செலவு கணக்குகளைக் குறித்தல், விவசாயத்தைப் பற்றிக் குறிப்பு வரைதல் என்பன கோபர்களின் முக்கிய அலுவல்களாகும். கிராம அதிகாரி முதல் மாகாண அதிகாரி வரையும் உள்ள உத்தியோகஸ்தர்கள் அனைவரும் மத்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஒற்றர்களால் வேவு பார்க்கப்பட்டு வந்தனர்.

நகர பரிபாலனம்: ஒவ்வொரு நகரமும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரிவும் ஸ்தானிகர் ஒருவரின் கீழ் இருந்தது. இவர்களுக்குக் கோபர்கள் என்னும் உத்தியோகஸ்தர்கள் உதவி செய்து வந்தனர். ஒவ்வொரு கோபனும் 10 முதல் 40 வரையுமுள்ள வீடுகளுக்கு அதிகாரி ஆவான். ஜனன மரண கணக்குப் பதிவு செய்தல், அந்நியர்களைக் கண்காணித்தல் என்பன இவர்களின் முக்கிய பொறுப்புக்கள். நகர முழுமைக்கும் நாகரகர் (the Mayor of the town) என்பவரே தலைமை அதிகாரியாவார். நகரத்தின் அமைதியைக் காத்தல், நகர மக்களின் சொத்துக்

கணக்குகளைக் குறித்தல், தீ விபத்து, கொள்ளை நோய் முதலியவை நேரிடாமல் பார்த்தல், குடி தண்ணீர் நலன்களைக் கவனித்தல் முதலியன இவருடைய முக்கியக் கடமைகள் ஆகும்.

பெரிய நகரம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நகராண்மைக் கழகத்தினால் நன்கு பரிபாலிக்கப்பட்டு வந்தது. தலைநகரான பாடலிபுரத்தின் நகர பரிபாலனத்தைப்பற்றி மெகஸ்தனிஸ் தம் நூலில் நன்கு விவரித்துள்ளார். பாடலிபுரத்திற்கு 30 அங்கத்தினர்கள் கொண்ட நகராண்மைக் கழகம் ஒன்றிருந்தது. அவர்கள் அவ்வைந்து பேர் கொண்ட ஆறு சிறு பஞ்சாயத்துக் குழுக்களாகப் பிரிந்திருந்தனர். பஞ்சாயத்து ஒவ்வொன்றும் அதற்கென்று குறிப்பிட்ட அலுவலைப்பார்த்து வந்தது. ஒரு பஞ்சாயத்து கைத்தொழிலைப் பார்த்துவந்தது. இரண்டாவது அயல் நாட்டினரையும், மூன்றாவது ஜனன மரணக் கணக்கையும் கவனித்துவந்தன ; நான்காவது சில்லரை வியாபாரத்தையும், நிறுத்தல் முதலிய அளவுகளையும், ஐந்தாவது தொழிலுற்பத்தியையும், விற்பனையையும் கண்காணித்து வந்தன ; ஆறுஞ் சபை விற்பனை வரியை $\frac{1}{10}$ ஆக வசூலித்து வந்தது. இங்ஙனம் பாடலிபுரம் சுமார் 2,000 ஆண்டுகட்கு முன்னரே தற்காலத்தை ஒத்து சிறந்த நகர பரிபாலன முறையுடன் விளங்கிய செய்தி நாம் வியப்பும் பெருமையும் அடைவதற்குரிய விஷயமாகும்.

மத்திய அரசாங்கம் : மௌரிய ஆட்சி முறையின் ஒரு சிறந்த அமிசம் அதன் வன்மைவாய்ந்த மத்திய அரசாங்கமாகும். மத்திய அரசாங்கத்தின் தலைவர் சக்கரவர்த்தியே ஆவர். மௌரிய மன்னர்கள் வல்லரசர்களாய் யதேச்சாதிகாரத்துடன் ஆட்சி புரிந்தனர். எனினும், அவர்கள் குடிகளின் நலனுக்காகவே நன்கு உழைத்தனர்.

ஆட்சி புரிவதில் அரசருக்கு உதவியாக ‘மந்திரி பரிஷத்’ என்னும் மந்திராலோசனை சபை ஒன்றிருந்தது. அவசியம் நேரிடும்போதுதான் அரசர் மந்திரி சபையைக் கூட்டுவார்.

அரசாங்க அலுவல்களைக் கவனிக்க உத்தியோகஸ்தர் பலர் நியமிக்கப்பட்டனர். அவர்களில் பெரிய உத்தியோகஸ்தர் மகாமாத்திரர் எனப்படுவார். அசோகர் காலத்தில் மக்களிடையே புத்த தருமத்தைப் பரவச் செய்யவும் நல்லொழுக்கத்தை நிலை நாட்டவும் தர்ம மகாமாத்திரர்கள் என்னும் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டனர். மத்திய அரசாங்க நிர்வாக இலாக்காக்கள் அத்தியக்ஷகர்கள் என்னும் தலைவர்களின் கீழ் இருந்து வந்தன. ஜாதி மத இன வேற்றுமை இல்லாமல் திறமை ஒன்றையே பின்பற்றி உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டனர் என்ற செய்தி போற்றத் தக்கதாகும்.

அரசாங்க வருமானம்: நிலவரியே அரசாங்கத்தின் முக்கிய வருமானமாகும். அக்கால நிலவரி, விளைவில் ஆறில் ஒரு பங்காகும். நீர்ப்பாசன வரி, காட்டிலாக்கா வரி, சுங்க வரி, சுரங்க வரி, அயல் நாட்டு வாணிப வரி, தொழிலாளர், வியாபாரிகள் முதலியோர் செலுத்திய லைசென்ஸ் வரி, தோணி வரி, வருமான வரி, நீதிபதிகள் விதித்த அபராதம், வேறு விசேஷ வரிகள் முதலியனவெல்லாம் அரசாங்கத்திற்குக் கிடைத்த வேறு வருவாய்களாகும். அன்றியும் மௌரிய மன்னர்கள் செல்வர்களிடமிருந்து நன்கொடை பெறுதலும் உண்டு.

வருமானத்தின் பெரும் பகுதி சேனைக்கும், நிர்வாகத்திற்கும் செலவழிக்கப்பட்டது. ஒரு பகுதி நாட்டின் நலனுக்காகச் செலவழிக்கப்பட்டது. பெரிய சாலைகள், நீர்ப்பாசனத் திட்டங்கள், கல்வி ஸ்தாபனங்கள், மருத்துவச்சாலைகள் இன்னோரன்னபிற நிறுவப்பட்டன. ஏழைகளும், அனாதைகளும் அரசாங்க உதவி பெற்றனர். பஞ்சக் காலத்தை முன்னிட்டுப் பல ஏற்பாடுகள் முன் எச்சரிக்கையாகச் செய்யப்பட்டன.

நீதி பரிபாலனம்: அரசரே நேரில் நீதியை வழங்கினார். நீதிமன்றங்கள் உரிய இடங்களில் நிறுவப்பட்டன. திறமை

வாய்ந்தவர்கள் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர். இக்காலம் போலவே வழக்கறிஞர்கள் பலரும் அக்காலத்தில் இருந்தனர். குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். ஆதலால், மௌரியர் காலத்தில் குற்றங்கள் குறைவு. சாலைகள் திருடர் பயமின்றி இருந்தன. அர்த்த சாஸ்திரத்தில் பதினெட்டு விதத் தண்டனைகள் கூறப்பட்டுள்ளன. உறுப்புக் குறைத்தல், சித்திரவதை செய்தல், சிரச்சேதம், பேரபராதம் விதித்தல் என்பன அக்கால முக்கியத் தண்டனைகள்.

சேனை: மௌரியர் சேனை மிகப் பெரியது.வல்லரசைச் செலுத்தவும், பேரரசைக் காக்கவும் அவர்கள் வன்மை வாய்ந்த சேனையை வைத்திருந்தனர். தேர், யானை, குதிரை, காலாட் படைகள் என்னும் நால்வகைப் படைகளையும் அவர்கள் வைத்திருந்தனர். படைகளைக் கவனிக்க முப்பது உறுப்பினர்கள் கொண்ட யுத்தசபை ஒன்றிருந்தது. அவர்கள் ஆறு பஞ்சாயத்துக்களாகப் பிரிந்திருந்தனர். நால்வகைப் படைகளையும் கவனிக்க நான்கு பஞ்சாயத்துக்கள் இருந்தன. ஐந்தாவது சபை வேண்டிய உணவு, உடை, போராயுதங்கள் முதலியவற்றையும், ஆருவது கப்பற் படையையும் கவனித்துவந்தன.

## பகுதி 2

### தமிழகத்தில் கிராம சுய ஆட்சி

மிகப் பழைய கால முதற்கொண்டே நமது நாட்டின் ஆட்சி அமைப்பிற்குக் கிராமமே அடிப்படையாக விளங்கி வந்திருக்கிறது. தமிழகம் முழுதும் அமைந்த கிராமங்கள் எல்லாம் சுய ஆட்சி பெற்று விளங்கின என்பதற்குச் சோழர் ஆட்சியும் பல்லவராட்சியுமே சிறந்த சான்றுகளாகும். அவர்களது கால கல்வெட்டுகள் வாயிலாகவும் அதனை அறியலாம். கிராம ஆட்சியின் பொருட்டு ஒவ்வொரு கிராமத்திற்கும் பொதுச்சபை ஒவ்வொன்றிருந்தது. அதற்கு ஊர்ச் சபை என்று பெயர்.

**ஊர்ச் சபையின் அமைப்பு :** கிராமம் அல்லது ஊரில் வாழ்ந்து வந்த மக்களே ஊரார் சபையின் அங்கத்தின ராவர். ஒவ்வொரு ஊரும் பல தொகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு தொகுதியின் சார்பாகவும் ஆண்டிற் கொருமுறை ஒரு அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப் படுவர். ஓரளவு நிலமும், தக்க வயதும், கல்வியறிவும், ஒழுக்கமும் நிரம்பப் பெற்றவர்களே தேர்ந்தெடுக்கப் பட்டனர். பஞ்சமகா பாதகர், வஞ்சகர், பித்தேறியவர், வயது நிரம்பாதவர் முதலியோருக்கு வாக்குரிமை இல்லை. நவீன கால ஜனநாயக ரகசிய வோட்டு (Secret Ballot) முறைப்படியே அக்காலத்திலும் குடஓலைகள் மூலம் அங்கத் தினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அங்கத்தினரின் எண்-ணிக்கை கிராமத்திற்கு ஏற்றவாறு இருந்தது.

**இராமச் சபையின் வேலை :** கிராம நிர்வாகமே கிராமச் சபையின் வேலையாகும். நிர்வாகத்தை நடத்த அது பல சிறிய குழுக்களாகப் பிரிந்திருந்தது. விளைநிலங்கள், வரி வசூல், நீதி பரிபாலனம், கோயில்கள், குளங்கள், நீர்ப் பாசனம், தோப்புகள், சாலைகள், தான தருமங்கள், கல்வி நிலையங்கள், சுகாதாரம், மருத்துவச் சாலைகள் முதலிய அனைத்தையும் கவனிக்கத் தனித் தனிக் குழுக்கள் இருந்தன. விஷயங்கள் முதலில் பொதுவாகச் சபையில் ஆராயப்பட்டு, பின்னர் அதற்குரிய குழுவினால் எடுத்துக் கொள்ளப்படும். ஆலயங்களிலும் தக்க பொதுவிடங்களி லுமே சபை கூட்டப்பெறும். ஊரார் சபைக்கும் பல அதிகாரங்கள் இருந்தன.

**வரியைப் பற்றிய அதிகாரங்கள் :** நிலங்களுக்கு ஏற்ற வரி நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது. வரி கட்டத் தவறிய உழவர்களின் நில உரிமை பறிக்கப்பட்டது. நிலவரி தானியமாகவோ அல்லது ரொக்கமாகவோ செலுத் தப்பட்டது. நிலத் தகராறுகளும், தீர்வைத் தகராறுகளும் சபையால் தீர்க்கப்பட்டன. வரிப்பணத்தைச் செலவழிக்க

வேண்டிய வகையைச் சபையே தீர்மானித்தது. மத்திய அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சபையின் கணக்குகளை அவ்வப்போது மேற்பார்த்து வந்தனர்.

**நீதி அதிகாரங்கள் :** கிராமத்தின் நீதி பரிபாலனத்தைக் கிராமச் சபையே கவனித்து வந்தது. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது கிராமாதிகாரிகளின் கடமை ஆயிற்று. சபையோரால் நியமிக்கப்பட்ட தனி நீதிபதிகளால் குற்ற வாளிகள் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். ஜூரி களின் உதவியைக் கொண்டும் விசாரணைகள் நடை பெற்றன. இந்தியர்களுக்குப் பொதுவாகப் புதுமை யானதும், ஆங்கிலேயர்களின் தனிப் பிறப்புரிமையும் என்று கூறப்படும் ஜூரி முறை பழங்காலத் தமிழகத்தில் நடை முறையில் இருந்தது. கொலைக்கு மட்டுந்தான் மரண தண்டனை ; ஏனையவை கடுமையானவை அல்ல. அபரா தங்கள், அவமானப்படுத்தல், சமூக வெளியேற்றம், சிறை வாசம் முதலியன முக்கிய தண்டனைகளாகும்.

**வேறு அதிகாரங்கள் :** ஊர்ச்சபை ஊராரின் பணத்தை யும் வாங்கிப் பாதுகாத்து வைத்தது. தரும காரியங் களுக்கு அது மானியங்கள் அளித்தது. பல அறநிலையங் களையும் தன் மேற்பார்வையில் வைத்து, அது அவற்றை அபிவிருத்தி செய்து வந்தது. சபையின் கட்டளைகளையும், நிர்வாக அலுவல்களையும் நிறைவேற்றப் பலதரப்பட்ட உத்தியோகஸ்தர்கள் இருந்தனர். ஊரார் சபைபோன்றே அந்தணர்கள் வாழ்ந்துவந்த கிராமங்களில் மகாசபை என்னுந் தனிச் சபைகளும் இருந்தன.

மத்திய அரசாங்கம் கிராம நிர்வாக விஷயத்தில் தலை யிடாமல் கிராமச் சபைக்கு நல்ல உரிமையளித்து ஊக்கி யது ; அதனால் கிராமச் சபை உள்நாட்டு நிர்வாகம் முழுதும் பார்த்து வந்தது. ஒவ்வொரு கிராமமும் தற்கால ஜனநாயக ஆட்சி முறையைப் பின்பற்றி முற்காலத்தில் ஒரு சிறிய குடியரசைப் போல் சுயேச்சையாய் விளங்கியது.

### பயிற்சி

1. மௌரியர் ஆட்சி முறைக்கு ஆதாரங்கள் எவை?
2. மௌரியர் காலத்தில் இராஜப் பிரதிநிதி மாகாணங்கள் எவை? அவற்றின் தலைநகரங்கள் எவை?
3. ராஷ்ட்ரீயர்கள் யார்? அவர்கட்கும் இராஜப் பிரதிநிதிகட்கும் என்ன வித்தியாசம்?
4. மஹா மாத்திரர்கள், நாகரகர், அத்தியக்ஷகர்கள் யாவர்?
5. மௌரியர் காலத்துக் கிராம உத்தியோகஸ்தர்கள் யார்?
6. பாடலிபுர நகர பரிபாலனத்தை விவரிக்க.
7. மௌரிய மன்னர் கொடுங்கோல் மன்னர் அல்லர் என்று எதனால் கூறலாம்?
8. மௌரிய ஆட்சி முறையின் சிறந்த அமிசங்களை விவரிக்க.
9. தமிழகத்தில் எந்த இரு அரச வமிசங்கள் காலத்தில் கிராம ஆட்சி முறை தலை சிறந்து விளங்கியது?
10. ஊர்ச் சபையின் அமைப்பையும் முக்கிய அதிகாரங்களையும் விவரிக்க.
11. தமிழகத்தில் ஒவ்வொரு கிராமமும் ஒரு சிறிய குடியரசெனக் கூறுதல் எப்படிப் பொருந்தும்?

# அத்தியாயம் 3

# நம் நாட்டு மத்தியகால ஆட்சி முறை

## பகுதி 1

### ஷெர்ஷாவின் ஆட்சி முறை

ஷெர்கான் அல்லது ஷெர்ஷாசூர் என்பவர் மத்திய காலத்தில் வட இந்தியாவில் ஆண்ட முகம்மதிய மன்னர்களுள் மிக்க புகழ் பெற்ற ஒருவராவர். ஹுமாயூன் என்னும் இரண்டாம் மொகலாய மன்னரைப் புறங்கண்டு அவரை நாட்டினின்றும் துரத்திவிட்டு இவர் டில்லி சிங்கா-

தனத்தைக் கைப்பற்றிச் சூர் வமிசம் என்னும் இடைக்கால வமிசத்தை நிறுவினர். இவர் கி. பி. 1540 முதல் 1545 வரை சிறப்பாக ஆட்சி புரிந்தார். இவ்வேந்தர் ஆண்ட ஆண்டுகள் ஐந்தேயாயினும் இக் குறுகிய காலத்தில் பற்பல சீர்திருத்தங்களை இயற்றி, யாவரும் போற்றத்தக்க ஆட்சி முறை ஒன்றை நிறுவினர்.

ஆட்சி அமைப்பு: தனது பரந்த சாம்ராஜ்ஜியத்தை ஷெர்ஷா நாற்பத்தேழு சர்க்கார்கள் எனப்படும் ஜில்லாக்களாகப் பிரித்தார். ஒவ்வொரு சர்க்காரும் பர்க்கானுக்கள் எனப்படும் பல தாலுக்காக்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பர்க்கானுவும் பல கிராமங்களாகப் பிரிந்திருந்தது. இவர் காலத்திலும் ஆட்சியமைப்பிற்கு அடிப்படை கிராமமேயாகும்.

ஒவ்வொரு சர்க்காருக்கும் ஷிக்தார் என்பவர் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். சிவில், இராணுவ விஷயங்கள் யாவும் இவர் கீழ் இருந்தன. நீதி பரிபாலனத்தில் காஜி என்னும் உத்தியோகஸ்தரும், வரி வசூல் விஷயத்தில் முன்சீப்பு என்னும் உத்தியோகஸ்தரும் இவருக்கு உதவி செய்தனர். ஒவ்வொரு பர்க்கானுவும் அமீன் என்னும் உத்தியோகஸ்தரின் கீழிருந்தது. உத்தியோகஸ்தர்கள் ஒரேயிடத்திலிருந்தால் தீங்கு ஏற்படும் என்று கருதிய ஷெர்ஷா அவர்களை அடிக்கடி மாற்றி வந்தார். அன்றியும் நிர்வாக இலாக்கா ஒவ்வொன்றையும் ஷெர்ஷா தாமே நேரில் கவனித்து வந்தார் என்ற செய்தி போற்றுதற்குரியதன்றோ! மாகாண கவர்னர்களால் தமக்கு ஆபத்து ஏற்படும் என்று அஞ்சி அவர் தம் சாம்ராஜ்யத்தை மாகாணங்களாகப் பிரிக்காமல் ஜில்லாக்களாகவே பிரித்தார்.

நிலவரித் திட்டம்: ஷெர்ஷாவின் நிலவரித் திட்டம் மிகவும் போற்றத்தக்கது. இதற்கு ராஜாதோடர்மால் என்னும் இராஜபுத்திரர் பெரிதும் உதவினர். உழவனே சாம்ராஜ்ஜியத்தின் உயிர்நாடி ஆவான் என்றுணர்ந்த ஷெர்ஷா

அவனுக்கு உதவியாய் நிலவரித் திட்டத்தைச் செப்பமுறச் சீர்படுத்தினர். விளை நிலங்கள் யாவும் சரிவர அளக்கப் பட்டுப் பட்டாக்கள் நிச்சயிக்கப்பட்டுத் தரம் வாரியாகத் தீர்வைகள் விதிக்கப்பட்டன. நிலத்தீர்வை விளைச்சலின் $\frac{1}{4}$ ஆகும். அது தானியமாகவோ அல்லது ரொக்கமாகவோ செலுத்தப்படலாம். பஞ்ச காலங்களிலும், பயிர் பச்சைகள் நலிவுற்ற போதும் வரி குறைக்கப் பட்டது; அல்லது வஜா செய்யப்பட்டது. வரி வசூலிக்கும் உத்தியோகஸ்தர்கள் உழவர்களைத் துன்புறுத்தாமல் இருக்கும்படி ஷெர்ஷா திட்டமிட்டார். தீர்வை நிர்ணயிப்பதில் ஷெர்ஷா கருணை காட்டியபோதிலும் தீர்வை வசூலிப்பதில் அவர் கடுமையாகவே நடந்து கொண்டார்.

**பயன் தரும் மற்றைய சீர்திருத்தங்கள் :** ஷெர்ஷாவின் நீதி பரிபாலன முறை மிகவும் சிறந்தது. சாதிமத வேற்றுமையும், ஏழை பணக்காரன் என்னும் வேற்றுமையும் பாராட்டாமல் நடுநிலைமையுடன் நீதி வழங்கப்பட்டது. ஆங்காங்கு நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டு நீதிபதிகளும் நியமிக்கப்பட்டனர். அன்றியும் தாமே நேரில் நீதி வழங்கியும் வந்தார். கிராமங்களில் நிகழும் குற்றங்களை விசாரிக்கும் பொறுப்பைக் கிராமாதிகாரிகளே பெற்றிருந்தனர். போலீஸ் முறையை நன்கு சீர்திருத்தி நாடெங்கும் அமைதி நிலவுமாறு அவர் செய்தார்.

வர்த்தகப் போக்குவரத்தையும், இராணுவ நடமாட்டம் முதலியவற்றையும் கருதி அவர் நாடெங்கும் நீண்ட பாதைகளைப் போட்டார். அப்பாதைகளில் நிழல் தரும் மரங்களையும், வழிப்போக்கர்கள் தங்கச் சத்திரங்களையும் ஏற்படுத்தினர். வணிகர்கள் திருடர் பயமின்றிச் செல்லப் பாதுகாப்பு பல செய்தார். அவர் குதிரைச் சவாரி மூலமாகத் தபால் எடுத்துச் செல்லும் முறையையும் ஏற்படுத்தினர். நிதியைப் பெருக்க நாணய முறையைச் சீர்திருத்தினர்.

அதனால் பல புதிய நாணயங்கள் அச்சிடப்பட்டன. தற்கால வெள்ளி நாணயமுறைக்குத் தந்தை ஷெர்ஷாவே யாவர். அமைதியைக் காக்கவும், சாம்ராஜ்ஜியத்தைப் பரிபாலிக்கவும் அவர் இராணுவத்தை நன்கு சீர்திருத்தி வன்மை வாய்ந்ததாக விளங்கும்படிச் செய்தார். அவருடைய குதிரைப் படைகள் மிகச் சிறந்தவையாகும்.

அவர் முஸ்லிம் வேந்தராக இருந்தனராயினும் அரசாங்கத்திலும் இராணுவத்திலும் இந்துக்களுக்கு உத்தியோகங்கள் பல கொடுத்துப் புகழ் பெற்றார். நல்லாட்சி முறையை ஏற்படுத்த அரும்பாடுபட்ட முதல் முகம்மதியமன்னர் இவரே யாவர். சிறப்பாக கீன் என்னும் பேராசிரியர், "இந்தப் பதானைப்போல எந்த அரசாங்கமும்—ஏன், பிரிட்டிஷாருங் கூட அவ்வளவு அறிவு காட்டி ஆண்டதில்லை" என்று வாயாரப் போற்றுகின்றார். புகழ் மிக்க அக்பர் சக்கரவர்த்தி ஷெர்ஷாவின் ஆட்சி திட்டங்களுள் பலவற்றைப் பின்பற்றி ஆண்டதால் ஷெர்ஷாவை அக்பரின் வழிகாட்டி எனக் கூறுதல் மிகையன்று. ஷெர்ஷா இறந்த பத்து வருடத்திற்குப் பிறகு இவரது வமிசம் முடிவு பெற்று மீண்டும் மொகலாயரின் ஆட்சி ஏற்பட்டது.

## பகுதி 2

**அக்பரின் ஆட்சி முறை (1556-1605):** ஷெர்ஷா காலமானதும் அவரது சூர் வமிசத்தை ஹுமாயூன் ஒழித்து, தான் இழந்த மொகல் சிங்காதனத்தை மீண்டும் பெற்றார். அவருக்குப் பின்னர் அவருடைய புதல்வரான அக்பர் அரியணை ஏறினார். அவர் பெரியதொரு சாம்ராஜ்ஜியத்தை நிறுவி மிகவும் போற்றத்தக்க ஆட்சி முறை ஒன்றையும் ஏற்படுத்தினார். ஹிந்துஸ்தான் முழுமையும், ஆப்கானிஸ்தானத்தின் பெரும் பாகமும், பலுசிஸ்தானத்தில் ஒரு பகுதியும் தக்ஷிணத்தின் ஒரு பகுதியும் அவருடைய சாம்ராஜ்ஜியத்தில் அடங்கியிருந்தன.

**அரசியல் நிர்வாகம் :**—அக்பர் தமது பரந்த நாட்டை 15 மாகாணங்கள் அல்லது சுபாக்களாகப் பிரித்தார். சுபாவின் தலைவர் சுபாதார் ஆவர். ஒவ்வொரு சுபாவும் பல ஜில்லாக்கள், அல்லது சர்க்கார்களாகப் பிரிக்கப் பட்டது. சர்க்காரின் தலைவர் பூஜிதார் ஆவர். இவர் சுபாதாருக்குக் கீழ்ப்பட்டவர். பூஜிதார்கள் தற்காலத்து ஜில்லா மாஜிஸ்திரேட்டுகளைப் போன்றவர்கள். ஒவ்வொரு சர்க்காரும் பல பர்க்காணுக்களாகவும் இராமங்களாகவும் பிரிந்திருந்தது.



படம் 1. அக்பர்.

மத்திய அரசாங்கத்திற்குச் சக்கரவர்த்தியே தலைவராவர். அவருக்கு உதவி புரிய மந்திரிகளின் சபையும் ஒன்றிருந்தது. அவரது மந்திரிகளுள் முக்கியமானவர்கள் வக்கீல் அல்லது பிரதம மந்திரி, பொக்கிஷ அதிகாரியான திவான் அல்லது வஜிர், இராணுவத்தின் பட்டுவாடாவையும், பொதுக் கணக்குகளையும் பார்த்து வந்த மீர்பக்ஷி, நீதி இலாக்காவின் தலைவரான காஜி என்பாரே ஆவர். அரசாங்கத்தின் மிகப் பெரிய உத்தியோகஸ்தர் திவான் ஆவர். அக்பரின் புகழ் பெற்ற திவான் ராஜா தோடர்மால் ஆவர். இவர்கள் அன்றியும், அக்பர் ஒருவித பெரிய அரசாங்க உத்தியோகஸ்தர்களை

யும் ஏற்படுத்தி யிருந்தார். இவர்கள் ஒவ்வொருவரும் மொகல் படைக்கு வறையறுத்த மான்சுப் அல்லது குதிரை வீரர்களைக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களாதலின் இவர்கள் மான்சுப்தார்கள் என்று அழைக்கப்பட்டனர். பெரிய மான்சுப்தார்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அக்பர் தம்முடைய பெரிய அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு ஜாகீர்களுக்குப் பதிலாக சம்பளங்களைக் கொடுத்தார்.

இராணுவம்: சாம்ராஜ்ஜியத்தைக் காக்கும் பொருட்டும், அமைதியை வளர்க்கும் பொருட்டும் அக்பர் வன்மையும் திண்மையும் வாய்ந்த மாபெரும் சேனை ஒன்றைப் பெற்றிருந்தார். அவரது குதிரைப் படைகள் சாலச் சிறந்தவை. குதிரையுடன் வீரர்களைக் கொடுத்துதவியவர்கள் முன்னரே கூறப்பட்ட மான்சுப்தார்களே ஆவர். அவர்கள் தம்மை ஏமாற்றுதிருக்கும் பொருட்டு அக்பர் குதிரைகளுக்கு முத்திரையிட்டார். பீரங்கிப் படையும், கப்பற் படையும் அவரிடம் இருந்தன. பெயர்பெற்ற ராஜபுத்திர வீரர்களான ராஜா மான்சிங்கும், ராஜா பகவான்தாசும் சேனைத் தலைவர்களாயிருந்தனர். பீரங்கி, துப்பாக்கிகள் செய்ய ஆயுதச்சாலை ஒன்றும் இருந்தது.

நிலவரித் திடடம்: அக்பரின் நிலவரித் திட்டம் மிகவும் போற்றத்தக்கது. இந்து மந்திரியான ராஜா தோடர்மாலின் உதவியால் அக்பர் நிலவரித் திட்டத்தை ஷெர்ஷாவைப் பின்பற்றி ஒழுங்கான முறையில் அமைத்தார். பயிரிடும் நிலங்கள் யாவும் அளக்கப்பட்டுத் தரம் வாரியாகப் பிரிக்கப்பட்டன. விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டது. வரித்தொகை தானியமாகவோ அன்றிப் பணமாகவோ செலுத்தப்படலாம். சாகுபடி ஆகாத காலத்தில் வரிகள் குறைக்கப்பட்டன, அல்லது தள்ளுபடி செய்யப்பட்டன. சாதிமத பேதமின்றி வரி ஒரே நிகராய் விதிக்கப்பட்டது. உழவர்கள் அரசாங்க அதிகாரிகளின் கொடுமையிலிருந்து காக்கப்பட்டனர். தற்கால ரயத்வாரி முறையைப்

போன்றே அக்கால நிலவரித் திட்டமும் குடியானவர்களிடம் நேராய்ச் செய்துகொள்ளப்பட்டது. உழவர்களுக்கு அரசாங்கம் பண உதவி செய்து பயிர்த்தொழிலை ஊக்கியது.

நிதி : அரசாங்கத்தின் பொது நிதியைத் திவான் கண்காணித்து வந்தார். அரசாங்கத்தின் வரிவசூல் இலாக்காவும் இவர் பார்வையில் இருந்தது. அவருக்குதவி செய்ய ஒரு பெரிய காரியாலயம் இருந்தது. கணக்குகள் அனைத்தும் பாரசீக மொழியில் வைக்கப்பட்டன. இந்துக்கள் அரசாங்கத்தில் உத்தியோகம் பெறும் பொருட்டுப் பாரசீகம் கற்கவேண்டும் என்பதைத் தோடர்மால் வற்புறுத்தினார். இந்துக்கள்மீது விதிக்கப்பட்டிருந்த ஜஸியா போன்ற சின்னஞ்சிறு வரிகளை அக்பர் நீக்கினார். அவர் நாணயத்தைச் சீர்திருத்தித் தங்க மோஹர், வெள்ளி டங்கா, செம்பு பைசா போன்ற புதிய நாணயங்களை வெளியிட்டார். நாணயங்கள் வெளியிடும் சாலை ஒன்றும் அரசாங்க சார்பில் இருந்தது.

நீதி பரிபாலனம் :- நாடெங்கும் நீதிபதிகளான காஜிகளால் நீதி நன்கு வழங்கப்பட்டது. இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் அவரவர்களுக்கேற்ற முறைப்படி நீதி வழங்கப்பட்டது. அமைதியைப் பாதுகாக்கப் போலீஸ் அதிகாரிகளும் இருந்தனர். நகரப் போலீஸ் அதிகாரிகள் கொத்தவால்கள் என்று அழைக்கப்பட்டனர்.

அக்பர் பரந்த நோக்கங் கொண்டவர். அவர் சிறந்த சமயப் பொறுமையை மேற்கொண்டொழுகினார். அவர், தாம் முகம்மதியராக இருப்பினும் எல்லா மதத்தினரையும் தம் குடையின் கீழ் ஒன்றுபடுத்தி, ஒரு தேசீயத் தலைவராகத் தாம் விளங்கப் பேராவல் கொண்டார். இந்துக்களுக்கும், ராஜபுத்திரர்கட்கும் பெரிய உத்தியோகங்களையும் கொடுத்தார். எல்லா மதங்களையும் இணைத்துத் தன்னாட்டில் சமரசம் காணக்கருதி அவர் "தீன் இலாகி" அல்லது தெய்வ மதம் என்னும் புதிய மதம் ஒன்றை ஸ்தாபித்தார்.

அவருடைய ஆட்சி, மதத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுகா மல் அனைவருக்கும் ஒத்த உலக இயல்பை ஒட்டி நடந்த முறை மிகவும் பாராட்டற் குரியதாம்.

## பகுதி 3

சிவாஜியின் ஆட்சி முறை: கி. பி. 17-ஆம் நூற்றுண்டில் மகாராஷ்டிரர்களை ஒன்று திரட்டி மொகலாயப் பேரரசை எதிர்த்துத் தமது ஒப்பற்ற வீரத்தினல் மேற்கிந்தியாவில் ஒரு வன்மை வாய்ந்த இந்துப் பேரரசை ஸ்தாபித்தவர் சத்ர-பதி சிவாஜி மகாராஜா ஆவர். அவர் மொகல் சக்கரவர்த்தி ஒளரங்கசீப் காலத்தில் விளங்கினர். சிவாஜி ஒளரங்க சீப்பை எதிர்த்து இந்துமதமும் அதன் தருமங்களும் அழியா வண்ணங் காத்தார்.

சிவாஜி ஒப்பற்ற இராஜ தந்திரமும், அரசாளும் ஆற்ற லும் படைத்தவர். அவர் இந்து தர்ம சாஸ்திரப்படி சிறந்த ஆட்சிமுறை ஒன்றை நிறுவினர். அவ ருடைய நேராட்சிக்கு உட் பட்ட பகுதி சுயராஜ்யம் என் றும், உட்படாத பகுதி மொகலாய் என்றும் வழங் கப்பட்டன. ஆட்சி செய் வதில் தமக்கு உதவி புரிவ தற்காக அவர் அஷ்டப் பிர தான் என்னும் எட்டு மந்திரி கள் அடங்கிய ஒருசபையை ஏற்படுத்தினர். மந்திரிகள் அரசரால் நியமிக்கப்பட்ட னர். ஒவ்வொரு மந்திரியும் ஒரு நிர்வாக இலாக்காவின்



படம் 2. சிவாஜி.

தலைவராய் விளங்கினர். அவர்களுள் முக்கியமானவர் பீஷ்வா அல்லது பிரதம மந்திரியாவர். எனவே, இந்த அஷ்டப் பிரதானை மகாராஷ்டிர அமைச்சுக் குழு எனக் கூறுதல் பொருந்தும். இவ்வமைச்சுக் குழுவில் சேர்ந்தோர்:—
(1) மக்களின் பொது நலனைக் கவனித்து வந்த பீஷ்வா அல்லது பிரதம மந்திரி; (2) நிதி விஷயத்தைக் கவனித்து வந்த மஜூம்தார்; (3) அயல்நாட்டு மந்திரியான டபீர்; (4) ராஜ சபை நிகழ்ச்சிகளைக் குறித்து வந்த வாகியா நாவிஸ்; (5) அரசனுடைய கடிதப் போக்குவரத்தையும் அரசாங்க சாஸனங்களையும் கண்காணித்து வந்த சுருநாவிஸ்; (6) சேனைத் தலைவரான சாரிநௌபத்; (7) மதத்தையும் தரும காரியங்களையும் பார்த்துவந்த தனுதியக்ஷர்; (8) பிரதான நீதிபதியான நியாயாதீசர்.

சிவாஜி தம் உத்தியோகஸ்தர்களுக் கெல்லாம் ஜாகீர்கள் அளிக்காமல் சம்பளங்களைக் கொடுத்தார். அரசனது அதிகாரத்தைக் காக்கும் பொருட்டு சிவாஜி மற்ற மந்திரிகளின் பதவியையாவது பீஷ்வாவின் பதவியையாவது பரம்பரைப் பதவியாக ஆக்கவில்லை.

அரசியல் நிர்வாகம்: சுயராஜ்யம் 14 ஜில்லாக்கள் அல்லது பிராந்துகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிராந்தும் பல சுபாக்கள் அல்லது மகல்களாகவும் கிராமங்களாகவும் பிரிந்திருந்தது. ஒவ்வொரு பிராந்தும் திறமை வாய்ந்த ஓர் அதிகாரியின் கீழிருந்தது. எல்லாக் கிரிமினல் வழக்குகளையும் இவ்வதிகாரியே தீர்த்துவந்தார். வரி வசூலையும் அவர் மேற்பார்வையிட்டு வந்தார். அவருக்கு ரொக்கச் சம்பளம் கொடுக்கப்பட்டது. சிவாஜியின் ஆட்சி அமைப்பிற்குக் கிராமமே இன்றியமையாததா யிருந்தது. ஒவ்வொரு கிராமத்திற்கும் படேல் என்பார் கிராமத் தலைவராயிருந்தார். கிராம நடைமுறைகளைக் கவனிக்கக் கிராம பஞ்சாயத்துக்கள் இருந்தன. இவை சிவில் வழக்குகளைச் செவ்வனே தீர்த்து வந்தன. குடிகளை உத்தியோகஸ்தர்கள் துன்புறுத்தாதபடி சிவாஜி நல்ல திட்டமிட்டார்.

நிதி: அரசாங்கத்தின் முக்கிய வருவாய் நிலவரியே ஆகும். நிலவரி விளைச்சலில் $\frac{2}{5}$ பாகம் வசூலிக்கப்பட்டது. நிலவரி உழவர்களிடமிருந்து நேராகவே வசூலிக்கப்பட்டது. எனவே, சிவாஜியின் நிலவரித் திட்டமும் ரயத்வாரி முறையே ஆகும். உழவர்கள் அரசாங்கத்தாரால் கண்ணை இமை காப்பதுபோல் நன்கு காக்கப்பட்டனர்.

சுங்க வரிகள், நாணயங்களை அச்சிடுவதால் வரும் ஊதியம், வருமான வரி, தொழில் வரி முதலியன அரசாங்கத்தின் பிற வருவாய்கள் ஆயின. சிவாஜியின் நேராட்சிக்-குட்படாத மொகலாயிலிருந்து நாலில் ஒரு பகுதியான சௌத் என்னும் வரியும், பத்தில் ஒரு பங்கான சர்தேஸ்முகி என்னும் வரியும் வசூலிக்கப்பட்டன.

சேனை: சிவாஜியின் படை வன்மையும் திறமையும் பெற்றுத் திகழ்ந்தது. படை வீரர்கள் ஜாக்கிரதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் ரொக்க சம்பளம் பெற்றனர். சிவாஜியின் சேனை காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, ஒட்டகப்படை, பீரங்கிப்படை முதலிய பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவற்றுள் குதிரைப்படையே பெரிதும் போற்றத்தக்கதாயிருந்தது. சாரிநௌபத் என்னும் அதிகாரி சேனைத் தலைவராவர். அவ்வதிகாரியின் கீழ் ஹவில்தார்கள், ஜமல்தார்கள், ஹஜாரிகள் முதலியோரான கீழ்த்தர இராணுவ உத்தியோகஸ்தர்களும் இருந்தனர். ஒவ்வொரு இராணுவ அதிகாரிக்கும் ஒரு காரியாலயம் உண்டு. அன்றியும் சிவாஜி கப்பற்படை ஒன்றையும் நிறுவிக் கடற்கொள்ளைக் கூட்டத்தினரையும் அடக்கினர்.

சிவாஜி பெரிதும் போற்றத்தக்க இராணுவச் சட்டங்களையும் தக்க விதிகளையும் இயற்றிவைத்தார். படையினர் கொள்ளையடித்தல், பெண்கள் படையுடன் செல்லல், பெண்களும் குழந்தைகளும் சிறைபிடிக்கப்படல் ஆகிய இவையனைத்தும் ஒழிக்கப்பட்டன.

மகாராஷ்டிர நாட்டில் போற்றத்தக்க 240 மலைக்கோட்டைகள் இருந்தன. அவையே அந்நாட்டின் உயிர் நாடியாய் அமைந்தன. ஆட்சி நிலைபெறுவதற்கும், மக்களின் தேவைக்குரிய நற்பொருட்களைச் சேகரித்து வைப்பதற்கும், பாதுகாப்பதற்கும் இவையே பயன்பட்டு வந்தன.

சிவாஜி எல்லா நடப்புகளையும் தாமே நேரில் கவனித்து வந்தார். அவர் தம் ராஜ்ஜியம் தரும ராஜ்ஜியமாகத் திகழுமாறு தாமே தரும நெறியில் நின்றார். அறநெறி யொழுகும் துறவோரின் கொடியாகிய மஞ்சள் நிறக் கொடியே மாண்புறு அரசியல் கொடியாய்க் கொண்டார் சிவாஜி. இதனால் குடிமக்கள் சாதிமத வேறுபாடின்றி இனிதாய் வாழ்ந்தனர். இவ்வேந்தரின் சமயப் பொறுமை பெரிதும் பாராட்டுதற்குரியது. இந்து மதத்தில் மிகவும் பற்றுடையவராயினும் இஸ்லாம் மதத்தையும் அவர் நன்கு மதித்தார்; அவர்களின் வேத நூலையும் கௌரவித்தார்; மசூதிகளையும் அவர்கட்குக் கட்டிக்கொடுத்தார். மேலும், இவர் முஸ்லிம்களுக்குத் தம் அரசாங்கத்தில் பெரிய பதவிகளைக் கொடுத்துதவினர். இவருடைய ஆட்சி, இந்துமதப் பண்பாடு செழித்து வாழச் செழுங் கொழுகொம்பாய் விளங்கிற்று.

## பயிற்சி

1. ஷெர்ஷா ஸ்தாபித்த வமிசத்தின் பெயர் யாது? அவரது நிலவரித் திட்டத்தைப்பற்றிக் குறிப்பொன்று வரைக.
2. குடிகளின் நன்மையைக் கருதி ஷெர்ஷா இயற்றிய சீர்திருத்தங்களில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.
3. யாருடைய ஆட்சிக்குப் பின்னர் அக்பர் ஆட்சி புரிந்தார்? அக்பரின் அரசியல் நிர்வாக அமைப்பைச் சுருக்கி வரைக.
4. அக்பரின் நிதி மந்திரி யார்?
5. அக்பரின் நிலவரித் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் எவை?

6. அக்பரின் அரசியல் குறிக்கோள் யாது?
7. அக்பர் ஆட்சியின் சிறப்பு யாது?
8. சிவாஜியின் அரசியல் நிர்வாக முறையின் அமிசங்கள் யாவை?
9. சிவாஜியினுடைய ஆட்சியில் அரசாங்கத்தின் முக்கிய வருவாய்கள் எவை?
10. சிவாஜி ஆட்சியின் அடிப்படை நோக்கமென்ன?
11. சிவாஜியின் சமயப் பொறுமைக்குச் சில சான்றுகள் தருக.
12. குறிப்பு வரைக:
அஷ்டப்பிரதான்; சௌத்; சர்தேஸ்முகி.
13. சிவாஜியின் பிரதம மந்திரியினுடைய அரசாங்கப் பூர்வ பெயர் என்ன?
14. சிவாஜியின் ஆட்சி —. (இராணுவ ஆட்சி, ஜனநாயக ஆட்சி, சர்வாதிகார ஆட்சி.)

---

# அத்தியாயம் 4

# நவீன ஆட்சி முறை

## பிரிட்டிஷ் ஆட்சி

### பகுதி 1

### இந்தியாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி

'வர்த்தகம் முன்னே, கொடி பின்னே' என்னும் ஏகாதிபத்திய சூத்திரத்தையொட்டி பிரிட்டிஷ் ஆட்சி நம் நாட்டில் ஏற்பட்டதாகும். அக்பர் சக்கரவர்த்தி செங்கோலோச்சிய காலமான கி. பி. 1600-ல் கீழ் நாடுகளுடன் வாணிபஞ் செய்ய இங்கிலாந்தை ஆண்டுவந்த முதலாம் எலிசபெத் ராணியிடமிருந்து சாஸனம் பெற்று, ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டதனாலுண்டான பெருமை இவ் வர்த்தகச் சங்கத்திற்கே உரியது. எனவே, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்

காலத்தை முப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை: (1) வர்த்தகம் பேரரசாக மாறுதல்; (2) வர்த்தக சங்கத்தினாட்சி முடியாட்சியாக மாறுதல்; (3) இந்தியா சுயாட்சிக்குத் தயாராகுதல் என்பனவாம்.

கி. பி. 1600-ல் எலிசபெத் ராணியார் சாஸனம் அளித்தது முதற்கொண்டு கி. பி. 1757 வரை மேற்சொன்ன முதற் பகுதிக்குரிய காலமாகும். இக் காலத்தில் ரோ என்பவர் கைக்கொண்ட திட்டப்படி ஆங்கிலேயர் நம் நாட்டில் வர்த்தகம் ஒன்றிலேயே கருத்தூன்றி நின்றனர். அரசியலில் ஈடுபடுதலும் மண்ணாசை கொள்ளுதலுமான இவை அவர்கள்பால் இல்லை. ஆங்காங்கு ஏற்பட்ட வர்த்தக இடங்களே கம்பெனி ஆட்சிக்குட்பட்ட நிலப் பகுதிகளாகும். இத்தகைய இடங்களுள் முக்கியமானவை சென்னை, பம்பாய், கல்கத்தா என்பனவாம். இம் மூவிடங்களில் மூன்று கவர்னர்கள் இருந்தனர். அவ்வப்போது கம்பெனியார் வர்த்தக சாஸனத்தைப் புதுப்பித்து வரலாயினர். இதன் பின்னர், கி. பி. 1757-ல் கிடைத்த பிளாஸி வெற்றி, வர்த்தகத்தைப் பேரரசாக மாற்றியது.

## பகுதி 2

### கி. பி 1757—1858

கி. பி. 1757-ல் பிளாஸி யுத்தத்திலும், கி. பி. 1764-ல் பக்ஸார் யுத்தத்திலும் கிடைத்த சீர்மிக்க வெற்றிகளும், கி. பி. 1765-ல் அலஹாபாத் உடன்படிக்கையின்படி வங்களாம், பீஹார், ஒரிஸ்ஸா முதலான மாகாணங்களில் திவானி அல்லது வரிவசூல் செய்யும் உரிமையும் கிடைத்த நிலைமையே வர்த்தகச் சங்கத்தை வளநாடாளும் ஆளவந்தாராக மாற்றிவிட்டது. நாளடைவில் இந்தியா முழுவதும் கம்பெனியின் ஆட்சியின் கீழ் வந்துவிட்டது. கி. பி. 1858 வரை இந்திய ஆட்சியைக் கம்பெனியே கவனித்து வந்தது.

திவானி உரிமையின் விளைவாக வளங்கொழிக்கும் வங்காளத்தில் கிளைவ் என்பவரால் இருதலை ஆட்சி முறை ஏற்படுத்தப்பட்டது. இவ்வகை ஆட்சியை வங்காள நவாப், கம்பெனி ஆகிய இவ்விருவரும் பார்த்துவரும் நிலை ஏற்பட்டது.

கம்பெனியார் ஆளும் அதிபராய் மாறினது முதற் கொண்டே ஆங்கில பார்லிமெண்ட், கம்பெனி விவகாரங் களில் தலையிட ஆரம்பித்தது. இத் தலையீட்டிற்குக் காரணம் கம்பெனியின் மலிந்த ஊழலேயாம். கம்பெனியின் ஆங்கில உத்தியோகஸ்தர்கள் அநீதியாகப் பணம் சம்பா-தித்து, செல்வக் களிப்புடன் இங்கிலாந்து திரும்பி, அங்கு ஆடம்பர வாழ்க்கை நடத்தலாயினர். நாளடைவில் கம்பெனியின் செல்வநிலை சீர்கெட்டு அது பார்லிமெண்டி னிடம் கடன்வாங்கும் நிலையை அடைந்தது. எனவே, கம்பெனியில் காணப்பட்ட ஊழல்களைப் போக்கி, அதன் இந்திய விவகாரங்களைக் கண்காணிக்கப் பார்லிமெண்ட் ஒழுங்குபடுத்தும் சட்டம் (Regulating Act) என்ற சட்டத்தை 1773-ல் இயற்றியது. அது முதற்கொண்டு பார்லிமெண்ட் கம்பெனி விவகாரங்களில் தலையிட ஆரம்பித்தது. இச்சட்-டத்தின்படி வங்காள கவர்னர் கவர்னர் ஜனரலானுர். அவருக்கு ஆலோசனை கூற 4 பேரடங்கிய ஒரு சபை ஏற்பட்டது. அன்றியும், பம்பாய், சென்னை கவர்னர்கள் கவர்னர் ஜனரலுக்கு அடங்கியிருத்தல் வேண்டும். கவர்னர் ஜனரலும், அவருடைய ஆலோசனை சபையும் கம்பெனியின் கீழுள்ள ராஜ்ஜியங்களுக்குச் சட்டம் இயற்றித் தரலாம். இதுவே இந்திய அரசாங்கத்தின் சட்டம் இயற்றும் அதிகாரத் துவக்கம் எனலாம். மேலும், கல்கத்தாவில் தலைமை நீதிபதி ஒருவரும், கீழ்த்தர நீதிபதிகள் மூவரும் கொண்ட தலைமை நீதி மன்றம் ஒன்று நிறுவப்பட்டது. இச்சட்டப்படி வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பார் முதல் கவர்னர் ஜனரலானுர்.

இச் சட்டத்தில் குறைபாடுகள் பல இருந்தன. கவர்னர் ஜனரலின் சபைக்கும், உயர் நீதி மன்றத்துக்கும் உள்ள

சம்பந்தம் வரையறுக்கப்படவில்லை. உயர் நீதிமன்றம் பின்பற்ற வேண்டிய சட்டமுறை தெளிவாக இல்லை. கவர்னர் ஜனரல் தமது சபையின் பெரும்பான்மையோர் அபிப்பிராயத்தைப் பின்பற்றி நடக்க வேண்டி வந்ததால் அவரது நிலை மிகவும் இரங்கத் தக்கதாயிற்று.

ஒழுங்கு படுத்தும் சட்டம் ஏற்பட்ட சில ஆண்டு களுக்குள் பிரிட்டிஷார் தங்களது அமெரிக்கக் குடியேற் றங்களை இழந்தனர். இதனுல் பிரிட்டிஷாரின் நோக்கம் கீழ்த்திசையில் திரும்பியது. அவர்கள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் குறைகளைப் போக்கிக் கம்பெனியின் ஆட்சியை நன்கு சீர்படுத்துவதற்கு கி. பி. 1784-ல் பிட் இந்தியச் சட்டம் இயற்றித் தந்தனர். அச்சட்டத்தின்படி கம்பெனி ஆட்சி யைக் கவனிக்க ஆறு பேரடங்கிய நிர்வாக சபை (Board of Control) ஒன்று ஏற்பட்டது. கவர்னர் ஜனரலின் அதிகா ரங்கள் மேலும் உயர்த்தப்பட்டன. அவரது ஆலோசனை சபையின் அங்கத்தினர் மூவராயினர்.

கி. பி. 1813-ல் ஏற்பட்ட பார்லிமெண்டின் சட்டப்படி இந்திய வியாபாரம் ஆங்கிலேயர் அனைவருக்கும் உரியதாயிற்று. கி. பி. 1833-ல் பார்லிமெண்ட் மற்றொரு முக்கிய சட்டத்தையும் இயற்றியது. அதன்படி வங்காள கவர்னர் ஜனரல், இந்திய கவர்னர் ஜனரலானுர். முதலில் இம் முறையில் வில்லியம் பெண்டிங் (1828-35) கவர்னர் ஜனரலானுர். சட்டம் இயற்றுவதற்காக மேலும் ஒரு சட்ட அங்கத்தினர், கவர்னர் ஜனரலின் ஆலோசனை சபையின் தொகை நான்காகுமாறு, சேர்க்கப்பட்டார். இதனுல் அறிவிற் சிறந்த ஆங்கிலேயரான மெக்காலே பிரபு இந்தியாவின் முதல் சட்ட அங்கத்தினராயினர். பிரிட்டிஷ் இந்தியா முழுமைக்கும் சட்டம் இயற்றும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கே விடப்பட்டது. அந்நாளில் சட்டமியற்றும் அதிகாரம் மாகாணங்களுக்கு இல்லை. அன்றியும், இச்சட்டப்படி இந்தியர்கள் பெரிய உத்தி யோகங்கள் பெறலாயினர்.

கி. பி. 1853-ல் உண்டான பார்லிமெண்ட் சட்டப்படி கம்பெனி, தான் உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை இழந்துவிட்டது. இந்தியாவில் உத்தியோகங்கள் போட்டியில் விடப்பட்டன. சட்டம் இயற்றுவதற்காகக் கவர்னர் ஜனரலின் ஆலோசனை சபை 12 பேர் கொண்டதாகப் பெரிதாக்கப்பட்டது. இதுவே இந்தியாவின் முதற் சட்ட சபை என்னல் தகும். கம்பெனியின் வர்த்தக சாஸனம் புதுப்பிக்கப்பட்ட போதிலும் காலம் குறிக்கப்படவில்லை. இவ்வாறு கி. பி. 1858 வரை பிரிட்டிஷ் அரசாங்கம் கம்பெனியின் இந்திய ஆட்சியைக் கண்காணித்து வந்தது.

## பகுதி 3

### முடியாட்சியின் கீழ் இந்தியா
### (கி. பி. 1858 — 1935)

வளம் பல கொழிக்கும் இந்நாட்டில் ஆங்கில ஏகாதிபத்தியம் நன்கு வேரூன்றியது. பேராசையினால் கம்பெனி நாடு சேர்த்ததும், சமூக சீர்திருத்தங்கள் செய்ததும் இந்திய மக்களுக்கு வெறுப்பையும் ஆத்திரத்தையும் மூட்டின. கி. பி. 1857-ல் நாட்டில் மாபெரும் புரட்சி ஒன்று ஏற்பட்டது; அறிவுமிக்க ஆங்கிலேயர் பலர் அப்புரட்சி அரசியல் சம்பந்தமானதென்றும் இராணுவ சம்பந்தமானதன்று என்றும் உணர்ந்தனர். அப்புரட்சி அடக்கப்பட்ட பின்னர் கி. பி. 1858-ல் பார்லிமெண்ட் இந்தியாவின் மேன்மைக்குரிய ஆட்சிக்கென ஒரு சட்டத்தை இயற்றியது. கிழக்கிந்தியக் கம்பெனி ஒழிக்கப்பட்டது. இந்திய ஆட்சி, கம்பெனியிடமிருந்து பார்லிமெண்டுக்கு மாறியது.

**கி. பி. 1858-ஆம் ஆண்டுச் சட்டம்:** இனி இந்தியா பிரிட்டிஷ் முடிவேந்தரின் பேரால் பார்லிமென்டால் ஆளப்படுதற்குரியதாயிற்று. இந்திய விவகாரங்களைக் கவனிக்கும் இந்திய காரியதரிசி என்னும் பிரிட்டிஷ் மந்திரி ஒருவர் நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவி செய்ய 15 பேர் அடங்கிய

ஆலோசனை சபை ஒன்று நிறுவப்பட்டது. கவர்னர் ஜனரல் முடியின் சார்பாக இராஜப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அதன்படி கானிங் பிரபு இந்தியாவின் முதல் இராஜப் பிரதிநிதி யானார். இம் மாறுதல்கள் அனைத்தும் அப்பொழுது இங்கிலாந்தை ஆண்டுவந்த விக்டோரியா ராணியின் பேரறிக்கையின் வாயிலாக, கி. பி. 1858, நவம்பர் 1-ஆம் தேதி அறிவிக்கப்பட்டது. இனி இந்தியாவில் நாடு சேர்க்கும் முறை கைவிடப்படுமென்பதும், சுதேச மன்னர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமென்பதும், மத விஷயங்களில் அரசாங்கம் தலையிடாதென்பதும், ஜாதி மத வித்தியாசமின்றித் திறமைக்கேற்றபடி அரசாங்கத்தில் உத்தியோகம் அளிக்கப்படுமென்பதும், அவ்வறிக்கையின் முக்கிய அமிசங்களாகும். இது முதற்கொண்டு இந்திய அரசாங்கத்தின் ஆட்சிமுறைகளும் நிர்வாக அமைப்பும் வளர்ச்சியுறலாயிற்று.

இந்தியாவில் புதிதாகத் தோன்றிய அரசியல் விழிப்பின் பயனாகப் பார்லிமென்ட் இந்திய அரசியல் முன்னேற்றத்தைக் கருதிப் பல சட்டங்களை இயற்றியது. பரந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் ஒரு கண்ணியம் வாய்ந்த பகுதியாக இந்தியாவை ஆக்குவதே அரசியல் சீர்திருத்தங்களின் நோக்கமாயிற்று.



படம் 3. விக்டோரியா.

கி. பி. 1861-ஆம் ஆண்டுச் சட்டம்: இச் சட்டப்படி கவர்னர் ஜனரலின் சபைக்கு ஐந்தாவது அங்கத்தினர் ஒருவர் நியமிக்கப்பட்டார். சட்டம் இயற்றுவதற்காக 6 முதல் 12 அங்கத்தினர் வரையும் கொண்டியலுமாறு கவர்னர் ஜனரலின் சபை பெரிதாக்கப்

பட்டது. இவர்களுள் பாதிக்குக் குறையாமல் உத்தியோகஸ்தர் அல்லாதார் இருத்தல் வேண்டும் என்பது விதியாயிற்று. இங்கிலேயில் மாகாணங்களிலும் 4 முதல் 8 அங்கத்தினர் வரையும் கொண்ட சட்ட சபைகளும் முதன் முதலாக ஏற்பட்டன. இச் சட்ட சபைகள் இயற்றும் சட்டங்கள் கவர்னர் ஜனரலின் சம்மதத்தைப் பெறவேண்டும். இச் சட்டத்தினுல் முதன் முதலாக இந்தியர்கள் சட்டசபையில் இடம் பெற்றனர். இச் சட்டமே இந்தியாவில் பிரதிநிதித்துவ ஆட்சிக்கு அடிகோலியது. அன்றியும் இச் சட்டத்தினுல் மத்திய அரசாங்கத்தில் நிர்வாக இலாக்காக்கள் பிரிக்கப் பட்டன. செலவு நிதியைக் கவனிக்க ஒரு தனி அங்கத்தினர் நியமிக்கப்பட்டார். கி. பி. 1861-ல் கல்கத்தா, சென்னே, பம்பாய் முதலிய இராஜதானி நகரங்களில் உயர் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

கி. பி. 1883-ல் இராஜப் பிரதிநிதியான ரிப்பன் பிரபு இந்தியர்களுக்கு சுய ஆட்சி முறையில் பயிற்சி அளிக்கும் பொருட்டு ஸ்தல சுய ஆட்சித் திட்டத்தை நிறைவேற்றினுர். அதனுல் ஜில்லா போர்டுகள், தாலூகா போர்டுகள், கார்ப்பரேஷன்கள், முனிசிபாலிடிகள், பஞ்சாயத்து போர்டுகள் ஏற்பட்டன. இவற்றின் அங்கத்தினர்கள் பெரும்பாலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரே ஆவர்.

கி. பி. 1885-ல் இந்நாட்டின் விடுதலையை நாடி இந்திய தேசிய காங்கிரஸ் ஏற்பட்டது. பெருகிவரும் தேசீய உணர்ச்சியைக் கண்டு பார்லிமென்ட் கி. பி. 1892-ல் மற்ருெரு சட்டத்தை இயற்றியது.

**கி. பி. 1892-ஆம் ஆண்டுச் சட்டம்:** இச்சட்டப்படி சட்ட சபைகள் மேலும் பெரிதாக்கப்பட்டன. இதனுல் உத்தியோகஸ்தர் அல்லாதார் உறுப்பினராகும் தொகை அதிகரித்தது. மேலும், பல்கலைக் கழகங்கள், வர்த்தகக் குழுக்கள், ஸ்தல ஸ்தாபனங்கள் ஆகிய இவைகளும் சட்ட சபை

களுக்குச் சில அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தனுப்பும் உரிமையைப் பெற்றன. தேர்தல் முறை மறைமுகமாய் வழக்கத்திற்கு வருதல் இங்குக் கவனிக்கத் தக்கதாகும்.

20-ஆம் நூற்றுண்டு தொடக்கத்திலிருந்தே இந்தியாவில் தேசீயம் கொழுந்துவிட்டுத் தளிர்க்க ஆரம்பித்தது. இவ்வேளையிற்றுன் ஜப்பானின் வெற்றி ததும்பும் எழுச்சி ஆசிய மக்களின் சுதந்திர தாகத்தைத் தூண்டிவிட்டது. மேலும், கி. பி. 1905-ல் இராஜப் பிரதிநிதியான கர்சன் பிரபுவின் வங்கப் பிரிவினை எரியுந் தீயில் எண்ணெய் விட்டாற் போலாயிற்று. அதுகாலை இங்கிலாந்தில் பெருமிதங்கொண்டிருந்த லிபரல் கட்சி அரசாங்கத்தினர் சில இந்திய அரசியல் திருத்தங்களை மேலும் வழங்குவதின் அவசியத்தை நன்கு உணர்ந்தார்.

கி. பி. 1909-ஆம் ஆண்டுச் சட்டம்: இச் சட்டத்தினுல் உண்டான சீர்திருத்தங்களுக்கு மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் என்று பெயர். இந்திய இராஜப் பிரதிநிதியான மின்டோ பிரபுவும், இந்திய மந்திரியான மார்லி பிரபுவும் கலந்தியற்றியதனுல் அதற்கு இப்பெயர் வந்தது. இச்சட்டத்தினுல் சென்னை, பம்பாய் கவர்னர்களின் நிர்வாக சபைகளில் 4 அங்கத்தினர் ஏற்பட்டனர். மத்திய சட்டசபையும் மாகாண சட்டசபைகளும் மேலும் பெரிதாக்கப்பட்டன. மாகாணங்களில் உத்தியோகஸ்தர் அல்லாதார் உறுப்பினராகும் எண்ணிக்கை பெருகியது. ஆனுல், மத்திய சட்டசபையில் உத்தியோகஸ்தர் உறுப்பினராகும் தொகையும் பெருகியே வந்தது. அரசாங்க வரவு செலவுத் திட்டத்தை விவாதிக்கவும், அரசியல் விஷயமாகக் கேள்விகள் கேட்கவும் சட்டசபைகள் உரிமை பெற்றன. இச் சீர்திருத்தமே சட்ட வரம்பிற்குட்பட்ட ஆட்சியைத் தொடங்கிக் கொடுத்தது என்று கூறலாம். பொதுமக்கள் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் நல்லுரிமையைப் பெற்றனர். இந்தியக் காரியதரிசியின் சபையில் இரு இந்தியர்களும், இராஜப்

பிரதிநிதியின் நிர்வாக சபையிலும், கவர்னர்களின் நிர்வாக சபைகளிலும் ஒவ்வொரு இந்தியரும் நியமிக்கப் பெற்றனர். (மத்திய நிர்வாக சபையில் முதன் முதலாக நியமிக்கப்பட்ட இந்தியர் ஸின்ஹா பிரபு). அன்றியும், எதிர்கால இந்தியரின் பிளவுக்கு வித்தான தனித் தொகுதியும் முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட்டது. மேலும், சில சிறுபான்மையோரின் பிரதிநிதிகளையும் அரசாங்கம் நியமிக்கலாம். இம்முறையில் இந்தியாவில் பிரதிநிதித்துவ ஆட்சி ஏற்படுத்த இச்சட்டம் முயன்றது. கூர்ந்து கவனித்தால் இச்சட்டம் பொறுப்பு வாய்ந்த பிரதிநிதித்துவ ஆட்சியை ஏற்படுத்தவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாம். இது மக்களுக்கு அளிக்கக் கருதிய அரசியல் பங்கு மிகவும் சொற்பமே. மேற்கூறியவற்ருல் இந்திய மக்களின் மனம் அமைதியுறவில்லை; தேசீயக் கிளர்ச்சி வளர்வதாயிற்று.

கி. பி. 1919 —1935 : இக் காலத்திற்ருன் தேசீய உணர்ச்சியை வளர்த்துவரும் இந்நாட்டு மக்களின் கூட்டுறவைப் பெறப் பிரிட்டிஷ் அரசாங்கம் முயன்றது. கி. பி. 1914-ல் ஏற்பட்ட முதல் உலகப் போர் உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் சுய ஆட்சி நிர்ணய உரிமையை ஏற்படுத்தியது. இப் போரில் இந்தியரின் தொண்டைப் பாராட்டி நன்றி செலுத்து முகமாக, கி. பி. 1917-ல் ஆகஸ்ட் 20-ம் தேதி இந்திய அமைச்சரான மாண்டேகு, அறிக்கை ஒன்றை வெளியிட்டார். இந்தியர்களுக்கு அரசியல் நிர்வாகத்தில் அதிகப் பங்கு கொடுப்பதும், சுய ஆட்சி ஸ்தாபனங்களைப் படிப்படியாக வளர்த்து, இறுதியில் இந்தியர்களுக்குப் பொறுப்பாட்சி அளித்து, இந் நாட்டைப் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தின் கண்ணியம் வாய்ந்த ஒரு பகுதியாக ஆக்குவதுமே அதில் குறிப்பிட்ட செய்திகளாம். இவ்வறிக்கையை யொட்டிப் பார்லிமென்ட் கி. பி. 1919-ல் ஒரு சட்டமியற்றியது. இதனுலுண்டான சீர்திருத்தங்களுக்கு இந்திய மந்திரியான மாண்டேகு பிரபுவும், இராஜப் பிரதி-

நிதியான செம்ஸ்போர்டும் காரணமானதால் இவற்றிற்கு மாண்ட்-போர்டு சீர்திருத்தங்கள் என்று பெயர் வழங்கலாயிற்று.



படம் 4. மாண்டேகு.



படம் 5. செம்ஸ்போர்டு

**கி. பி. 1919-ஆம் ஆண்டுச் சட்டம்:** இச் சட்டத்தினால் இந்திய ஆட்சியில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. மத்திய சட்டசபை இரு பகுதிகளாக அமைக்கப்பட்டது. அவை (1) 60 அங்கத்தினர்கள் கொண்ட மேற்சபை அல்லது இராஜாங்க சபை (Council of State) என்றும், (2) 140 அங்கத்தினர்கள் கொண்ட கீழ்ச்சபை அல்லது இந்திய சட்ட சபை (Legislativc Assembly) என்றும் பெயர் கொண்டன. மேற்சபையின் அங்கத்தினர்களுள் 20-க்கு மேற்படாமல் உத்தியோகஸ்தர்களாகவும், 33 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும் இருத்தல் நியதியாயிற்று. பெரிய சொத்துரிமைக்காரர்களுக்கு மேற்சபையின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டது. கீழ்ச் சபையின் அங்கத்தினர்களுள் 100 பேர், குறித்த சொத்துரிமை உடைய மக்களால் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். நிய-

மிக்கப்பட்ட அங்கத்தினர்களுள் 26 பேர் உத்தியோகஸ்தர்களாய் இருத்தல் அவசியமாம். கீழ்ச்சபை தமக்குள் ஒரு தலைவரைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளலாம். ஆண்டின் வரவு செலவுத் திட்டங்களை விவாதிக்கவும், அத்திட்டத்தின் சில அமிசங்களை ஏற்க மறுக்கவும் மத்திய சட்டசபை அங்கத்தினர்களுக்கு உரிமை வழங்கப்பட்டது. அன்றியும் இராஜப் பிரதிநிதியின் அனுமதியின் பேரில் பொதுஜனங்களுக்குப் பயன்படக் கூடிய சில திட்டங்களையும் மத்திய சட்டசபை இயற்றலாம். சட்டசபை இயற்றிய எத்தகைய சட்டத்தையும் நிராகரிக்கும் உரிமை இராஜப் பிரதிநிதிக்கே கொடுக்கப்பட்டிருந்தது.

மாகாண சட்டசபைகள் பெரிதாக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. வாக்குரிமை முன்னைவிட விஸ்தரிக்கப்பட்டது. மாகாண அரசியல் நிர்வாகத்தில் "இரட்டை ஆட்சி" (Diarchy) எனப்படும் புதியதோர் துரைத்தனம் ஏற்பட்டது. நிர்வாக இலாக்காக்கள் விடாப் பகுதி (Reserved Half) என்றும், மாற்றிய பகுதி (Transferred Half) என்றும் இரு பிரிவுகளாயின. போலீஸ், சட்டம், வரிவசூல், நியாய விசாரணை முதலியன விடாப் பகுதியுள் அடங்கும். கல்வி, ஸ்தல சுய ஆட்சி, சுகாதாரம், கூட்டுறவு முதலியன அனைத்தும் மாற்றிய பகுதியுள் அடங்கும். மாற்றிய பகுதி சட்ட சபையில் பெரும்பான்மைக் கட்சிக்குப் பொறுப்பான மந்திரிகள் வசம் வந்தது. கவர்னரின் நிர்வாக சபையின் அங்கத்தினர்கள் விடாப் பகுதியைப் பார்த்து வரலாயினர்.

மாகாண சட்ட சபைக்கு வரவு செலவுத் திட்டங்களை விவாதிக்கவும், அதில் ஒவ்வாப் பகுதிகளை நிராகரிக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டது. ஆயினும், சட்ட சபை இயற்றிய சட்டங்களைத் தள்ளிவிடக் கவர்னருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்ட செய்தி குறிக்கத் தக்கதாகும்.

இராஜப் பிரதிநிதி, கவர்னர் ஆகியோரின் நிர்வாக சபைகள் பெரிதாக்கப்பட்டன. அவற்றில் இந்தியரின் தொகை அதிகமாயிற்று. மேலும், இந்தியக் காரியதரிசியின் சபையிலும் இந்தியர் மூவர் நியமிக்கப்பட்டனர். இந்தியர் நலன்களைக் கண்காணிக்க ஹை கமிஷனர் என்னும் ஒரு இந்திய உத்தியோகஸ்தர் லண்டனில் நியமிக்கப் பெற்றார்.

இச் சட்டத்தினால் மாகாணத்தில் அல்லது மத்திய அரசாங்கத்தில் உண்மைப் பொறுப்பாட்சி ஏற்படவில்லை. மத்திய அரசாங்கம் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருந்தும் அது பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கே பெரிதும் பொறுப்புள்ளதாயிற்று. அன்றியும், மாகாணங்களில் ஏற்பட்ட இரட்டையாட்சி பொறுப்பாட்சிக்கு விரோதமானது என்பதிலும் ஐயமில்லை. அவ்வாறே அதுவும் கட்டுக் கடங்காமலே இருந்து வந்தது. கவர்னருக்கும், இராஜப் பிரதிநிதிக்கும் இருந்த விசேஷ அதிகாரங்கள் ஜனநாயக முறைக்கும் ஏற்றதல்ல. பல குறைகளிருப்பினும் இச் சட்டம் பொறுப்பாட்சி வளர்ச்சிக்கு உதவியதென்றே கூறலாம்.

மாண்ட் - போர்டு சீர்திருத்தங்களும் இந்திய மக்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அதனால் தேசீயக் கொந்தளிப்பு அதிகரித்தது. அங்கிலையில் கி. பி. 1929-ஆம் ஆண்டில் அக்டோபர் 31-ந் தேதி இராஜப் பிரதிநிதியான இர்வின் பிரபு இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கம் என்று கூறினார். இந்திய அரசியலின் சிக்கலைத் தீர்க்க மூன்று வட்ட மேஜை மகாநாடுகள் கூடின. ஆனால், பூரண சுதந்திரமே காங்கிரஸின் தலையான நோக்கமாயிருந்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் மகாத்துமாவின் தலைமையில் போரிடக் காங்கிரஸ் தொடங்கிற்று. பின்னர், வட்டமேஜை மகாநாட்டின் விளைவாக கி. பி. 1935-ஆம் ஆண்டில் பார்லிமெண்ட் ஒரு சட்டம் இயற்றியது.

கி. பி. 1935-ஆம் ஆண்டின் இந்தியச் சட்டம்:— இது போது இங்கிலாந்தில் இருந்த இந்தியக் கௌன்சில் ஒழிக்கப்பட்டது. இந்தியாவில் மத்திய அரசாங்கத்தைச் சுதேச சமஸ்தானங்களும், மாகாணங்களும் கலந்த கூட்டாட்சி அரசாக (Federation) ஆக்குதற்கு ஏற்ற ஆலோசனை இருந்தது. மத்திய சட்டசபையில் மேற்சபை என்றும் (Council of States), கீழ்ச் சபை என்றும் (Federal Assembly) இரு பகுதிகள் ஏற்பட்டன. மாகாணங்களில் இருந்த இரட்டை ஆட்சி கூட்டாட்சியில் நுழைக்கப்பட்டது. பாதுகாப்பு, வெளி நாட்டு விவகாரம் முதலியவை வைஸ்ராயின் நிர்வாக சபையிடம் இருந்தன. அகில இந்தியப் பொது விஷயங்கள் சட்டசபையின் மந்திரியினிடம் விடப்பட்டன. வைஸ்ராய் பல விசேஷ அதிகாரங்களைப் பெற்றார். ஆனால், பல காரணங்களால் கூட்டாட்சி அமைப்பு ஏற்படுத்தப்படவில்லை.

மாகாணங்களில் இரட்டை ஆட்சி ஒழியப் பூரண பொறுப்பாட்சி ஏற்பட்டது. நிர்வாக இலாக்காக்கள் அனைத்தும் சட்ட சபைக்குப் பொறுப்பு வாய்ந்த மந்திரி சபையினிடம் ஒப்படைக்கப்பட்டன. இவ்வாட்சிக்கு மாகாண சுய ஆட்சி (Provincial Autonomy) என்று பெயர். மாகாண சபைகள் பெரிதாக்கப்பட்டன. எழுத்தறிவு பெற்றவர் அனைவரும் வாக்குரிமை பெறலாயினர். இச்சட்டப்படி 11 மாகாணங்கள் ஏற்பட்டன. சிந்துவும், ஒரிஸ்ஸாவும் தனி மாகாணங்கள் ஆயின. பர்மா தனி நாடாயிற்று. இச் சட்டத்தின் பெருங் குற்றம் யாதெனில், கவர்னருக்குச் சட்ட சபையால் இயற்றப்படும் சட்டங்களை நிராகரிக்க விசேஷ அதிகாரங்களை அளித்தமையேயாம்.

அன்றியும் கூட்டாட்சி அரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கத்திற்கும் ஏற்படும் விவாதங்களையும், கூட்டாட்சியால் உண்டாகும் சிக்கல்களையும் தீர்க்கச் சமஷ்டி நீதிமன்றம் (Federal Court) எனும் உயர்நீதி மன்றம் ஒன்றும், ரிசர்வ் பாங்கு எனும் அரசாங்க பாங்கு ஒன்றும் இச்சட்டத்தினுல்

நிறுவப்பட்டன. மேலும், கி. பி. 1937-ல் மாகாணங்களில் மட்டும் புதிய சட்டம் அமுலுக்கு வந்தது. 6 மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டன.

## பயிற்சி

1. கிழக்கிந்திய வர்த்தகச் சங்கம் எப்பொழுது, ஏன் நிறுவப்பட்டது? ஆரம்பத்தில் நம் நாட்டில் கம்பெனி ஆட்சிக்குட்பட்ட மூன்று முக்கிய நகரங்கள் யாவை?
2. ஒழுங்குபடுத்தும் சட்டம் எப்பொழுது, ஏன் இயற்றப் பட்டது? அதன் முக்கிய அமிசங்கள் என்ன? அச் சட்டத்தின் குறைபாடுகளை நீக்கிய வேறு சட்டம் யாது?
3. வங்காளத்தில் கிளைவ் ஏற்படுத்திய ஆட்சிக்கு என்ன பெயர்? அது யாரால் ஒழிக்கப்பட்டது?
4. கி. பி. 1833, 1853-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட சட்டங்கள் எவ்வாறு முக்கியமானவை?
5. கம்பெனி ஆட்சி எப்பொழுது முடிவு பெற்றது? அப் பொழுது இந்திய ஆட்சி முறையில் ஏற்பட்ட முக்கிய மாறுதல்கள் யாவை?
6. இந்தியாவின் முதல் கவர்னர் ஜனரல் யார்? கடைசி கவர்னர் ஜனரல் யார்? முதல் இராஜப் பிரதிநிதி யார்? கடைசி இராஜப் பிரதிநிதி யார்?
7. கானிங் பிரபு காலத்தில் ஆட்சியமைப்பில் உண்டான சில முக்கிய மாறுதல்களைக் குறிப்பிடுக.
8. இந்திய தேசீயக் காங்கிரஸ் எப்பொழுது, ஏன் ஸ்தா-பிக்கப்பட்டது?
9. கி. பி. 1909-ம் ஆண்டுச் சட்டத்தினுல் உண்டான முக்கிய மாறுதல்கள் என்ன?
10. பூர்த்தி செய்க:— கி. பி. 1919-ல் உண்டான சீர்திருத்-தங்களுக்கு — சீர்திருத்தங்கள் என்று பெயர். அவற்ருல் மாகாணங்களில் — ஆட்சி ஏற்பட்டது. அவ்வாட்சி கி. பி. — சட்டத்தினுல் முடிவு பெற்றது. இச் சட்டத்தினுல் மாகாணங்களில் ஏற்பட்ட ஆட்சிக்கு ——— என்று பெயர். இவ்வாட்சி ——— ஆண்டில் அமுலுக்கு வந்தது.
11. கி. பி. 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின் முக்கிய விளைவுகள் யாவை?

# அத்தியாயம் 5

## சுதந்திரப் பிறப்பு

### பகுதி 1

கி. பி. 1939-ல் ஏற்பட்ட இரண்டாம் உலகப்போரின் விளைவால் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் காங்கிரஸிற்கும் கருத்து வேற்றுமை ஏற்படவே காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜிநாமா செய்தன. காந்தியடிகளின் தலைமையில் காங்கிரஸ் உரிமைப் போரை வெற்றிகரமாக முடிக்கத் திட்டமிட்டது. இந்தியாவில் இரு முக்கிய அரசியல் கட்சிகளான முஸ்லிம் லீகும் காங்கிரஸும் ஒரு மனப்பட்டுச் சுதந்திரப்



படம் 6. காந்திஜி.

போரை நடத்தவில்லை. காங்கிரஸ் பூரண சுதந்திரத்தை தன் குறிக்கோளாகக் கொண்டபோது, ஜின்னாவின் தலைமையில்

முஸ்லிம் லீக் மதத்தை அடிப்படையாகக் கொண்ட பாகிஸ்-தான் என்னும் தனி நாடொன்றை இந்தியாவிற்குள் ஏற்படுத்தக் கிளர்ச்சி செய்தது. போர் அச்சம் இந்தியாவை நெருங்கலாயிற்று. ஜப்பானியரால் இந்தியாவிற்கு ஏற்படவிருந்த பேராபத்தைப் போக்கப் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியர்க-ளின் ஒத்துழைப்பைப் பெற உறுதி கொண்டது. எனவே, கி. பி. 1942-ல் இந்திய அரசியல் சிக்கலைத் தீர்க்கவும், போரில் இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெறவும் சர் ஸ்டா-போர்டு கிரிப்ஸ் என்னும் பிரிட்டிஷ் மந்திரி இங்குத் தூதராக வந்தார். ஆனால், அவர் அளிக்க உத்தேசித்த பொறுப்பாட்சித் திட்டம் எந்த அரசியற் கட்சிக்கும் பிடிக்காமையால் அன்னார் தூது பயனற்றதாயிற்று.

இந் நிகழ்ச்சிக்குப் பின்னர் காங்கிரஸ் காந்தியடிகளின் தலைமையில் கி.பி. 1942-ஆம் ஆண்டில் வெள்ளையர் வெளியேற நேரடியாகப் போரைத் தொடங்கிற்று. அதனால் நாட்டில் பெருங் குழப்பம் ஏற்பட்டது. அதனை அடக்க அரசாங்கம் பலாத்காரத்தைக் கை-யாண்டது. காங்கிரஸ் தலைவர் அனைவரும் சிறைப் புகுந்தனர். 1945-ல் 2-ஆம் உலகப் போர் முடிவுற்றது. அப்பொழுது இங்கிலாந்தில் ஆட்லியின் தலைமையில் தொழிலரசாங்கம் ஏற்பட்டது. பிரிட்டிஷ் தொழிற் கட்சியினர் இந்நாட்டு மக்க



படம் 7. ஆட்லி.



படம் 8. பெதிக் லாரென்ஸ்.



படம் 9. ஏ.வி. அலெக்சாந்தர்



படம் 10. சர் ஸடாபோர்டு கிரிப்ஸ்

ளின் சுதந்திரக் கோரிக்கைக்கு அனுதாபங் காட்டினர். கி. பி. 1946-ல் இந்தியாவில் தேர்தல்கள் நடைபெற்றன. மீண்டும் பல மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிசபைகள் ஏற்பட்டன. பிரிட்டிஷ் பிரதமர் ஆட்லி இந்திய அரசியல் நிலையை நன்னிலைப் படுத்தவேண்டியதின் அவசியத்தை நன்குணர்ந்தார். இதனால் 1946 மார்ச்சில் அவர் பிரிட்டிஷ் மந்திரியின் தூதுக் குழு ஒன்றை இங்கு அனுப்பினர். அதுகாலை இந்திய மந்திரியாயிருந்த பெதிக் லாரென்ஸ் பிரபு, ஏ. வி. அலெக்ஸாந்தர், சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் ஆகிய இம்மூவரும் அக் குழுவினுள் சேர்ந்தவராவர். காங்கிரஸ், முஸ்லிம் லீக் பிரதிநிதிகள் கலந்து அமைந்த கூட்டம் ஒன்று சிம்லாவில் கூட்டப்பட்டது. ஆனால், அத் தூதுக் குழுவினரின் முயற்சி வீணாயிற்று. காங்கிரஸ் பூரண உரிமையைக் கோரியபோது, முஸ்லிம் லீக் பாகிஸ்தானைப்பெறுவதே தன் குறிக்கோள் என்று மன்றாடியது. இங்ஙிலையில் இந்தியத் தலைவர்களிடம் சமரசம் ஏற்படாததைக் கண்ட தூதுக்குழுவினர் மே மாதம் 16-ஆந் தேதியன்று இந்திய அரசியல் திட்டம் ஒன்றை வெளியிட்டனர். அத் திட்டப்படி லீகின் பிரிவினைக் கோரிக்கை மறுக்கப்பட்டது. இந்திய அரசியல் அமைப்புத் திட்டத்தை வகுக்க அரசியல் நிர்ணய சபை ஒன்றைக் கூட்டவும், புதிய அரசாங்கம் ஏற்படும்வரை முக்கியமான எல்லா அரசியல் கட்சிகளுமடங்கிய இடைக்கால அரசாங்கம் ஒன்றை நிறுவவும் அத்திட்டத்தில் கண்டிருந்த வேறு முக்கியச் செய்திகளாம்.

இராஜப் பிரதிநிதியான வேவல் பிரபு காபினெட் தூதுக் குழுவின் திட்டப்படி இடைக்கால மத்திய அரசாங்கம் ஒன்றை நிறுவ முயன்றார். லீக் கட்சியினர் காங்கிரசோடு ஒத்த சமத்தொகை உரிமை தமக்கும் வேண்டும் என்று வாதாடினர். காங்கிரஸிற்கும் இராஜப் பிரதிநிதிக்கும் ஒரு சமரஸம் ஏற்பட்டதால் கி. பி. 1946 செப்டம்பர் 2-ஆம் தேதி ஸ்ரீ ஜவஹர்லால் நேருவை உபதலைவராகக் கொண்ட மந்திரி

சபை ஒன்று ஏற்பட்டது. முதற்கண் இதனிற் சேர மறுத்த முஸ்லிம் லீக் இறுதியிற் சேர்ந்தது. மொத்தம்14 உறுப்பி னர்களைக் கொண்ட இம் மந்திரி சபை இடைக்கால அரசாங்கம்



படம் 11. ஸ்ரீ ஜவஹர்லால்.

(Interim Government) எனப் பெயர் பெற்றது. இச் சபை யில் காங்கிரஸ் 6 ஸ்தானங்களும், முஸ்லிம் லீக் 5 ஸ்தானங் களும், சிறுபான்மைக் கட்சியினரான சீக்கியர்கள், பார்ஸிகள், இந்தியக் கிறிஸ்தவர்கள் ஆகியோர் ஒவ்வொரு ஸ்தானத்தையும் பெற்றனர். இராஜப் பிரதிநிதி நிர்வாகப் பொறுப்புக்கள் அனைத்தையும் இம் மந்திரிசபையிடம் ஒப் படைத்ததுமன்றித் தம் விசேஷ அதிகாரங்களைப் பயன் படுத்துவதில்லை என்றும் வாக்களித்தார். இவ்விடைக்கால அரசாங்கம் அக்டோபர் முதல் நாளிலிருந்து பணியாற்றத் தொடங்கியது. ஆனால், லீக் கட்சியினர் காங்கிரஸுடன் ஒத்துழைக்கவில்லை. மேலும், அவர்கள் நேருவைத் தலை

வராக ஏற்கவும் மறுத்தனர். இவ்விரு கட்சிகளும் தனித் தனியே வேலை செய்து வந்தன.

## பகுதி 2

சுதந்திரம் அளிக்கப்படுதலும் இந்தியப் பிரிவினையும் :— காபினெட் தூதுக் குழுவின் திட்டப்படி அரசியல் நிர்ணய சபைக்காக கி. பி. 1946-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சட்ட சபைகளால் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அரசியல் நிர்ணய சபை டிசம்பர் 9-ந்தேதி டில்லி மாநகரில் கூடலாயிற்று. முஸ்லிம் லீக் கட்சியினர் அச் சபையில் பங்கெடுத்துக் கொள்ள இசைந்திலர். லீகை அரசியல் நிர்ணய சபையில் சேரும்படியாவது செய்தல் வேண்டும் அல்லது இடைக்கால அரசாங்கத்தினின்றும் விலகும்படியேனும் செய்தல் வேண்டுமென்று காங்கிரஸ் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எடுத்துரைத்தது. முஸ்லிம் லீக் சேராது போயினும் அரசியல் நிர்ணய சபையின் வேலையைத் தொடர்ந்து செய்யக் காங்கிரஸ் உறுதி கொண்டது. இதனல் இவ்விரு கட்சிகளுக்கும் பகைமை மேலும் வளரலாயிற்று. வகுப்புக் கலவரங்களும் வட இந்தியாவில் பற்பல விடங்களில் தீப்போல் பரவிற்று. மதவெறிக்கு எண்ணிறந்த மக்கள் இரையாயினர். லீகின் பிடிவாதத்தைக் கண்ட காங்கிரஸ் கட்சியினர், பிரிட்டிஷார் தம் அதிகாரத்தை விட்டு வெளியேறினல் இங்கு ஒற்றுமை நிலவும் என்று கருதினர். இந்தியர்களின் மனப்பான்மையை நன்குணர்ந்த பிரிட்டிஷ் அரசாங்கம் 1948 ஜூன் மாதத்திற் குள் முழு அரசியல் அதிகாரத்தையும் மாற்றுவதே தங்களின் உண்மையான நோக்கமென 1947 பிப்ரவரியில் ஒரு அறிக்கை மூலம் வெளியிட்டனர். அன்றியும் இந் நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்படாமையால் அரசியல் அதிகாரத்தை யாரிடம் ஒப்ப டைப்பது என்பதைப் பற்றியும், பிரிட்டிஷ் அரசாங்கம் சிந் தித்து முடிவு செய்யும் என்றும் அறிவிக்கப்பட்டது. அது



படம் 12. மவுண்ட் பாட்டன்.

காலை இராஜப் பிரதிநிதி யான வேவல் இங்கிலாந் திற்கு அழைக்கப்பட்டு அன்னாருக்குப் பதிலாக இந்தியாவின் அரசியல் சிக்கலைத் தீர்க்க **மவுண்ட் பாட்டன் பிரபு** இங்கு அனுப் பப்பட்டார். இந்திய அரசியல் சூழ்நிலையை நன்குணர்ந்த மவுண்ட் பாட்டன் பிரபு ஐக்கிய இந்தியா ஏற்படுத்தல் இயலாதென்று அறிந் தார். ஆதலின், அவர் காங்கிரஸ், முஸ்லிம் லீக் கட்சியினருடன் சேர்ந்து சிந்தித்து, இறுதியில், 1947 ஜூன் 3-ந் தேதி இந்திய அரசியல் முட்டுக் கட்டையைத் தகர்க்கப் **புதுத் திட்டம்** ஒன்றை வெளியிட்டார். அதன்படி பாகிஸ்தான், இந்தியா என இந்நாட்டை இரு கூறாக்கவும், வங்காளம், பஞ்சாப் மாகாணங்கள் ஒவ்வொன்றையும், இரண்டாகப் பிரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இத்திட்டத்தை யொட்டிப் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் 1947, ஜூலை 15-ந் தேதி இந்திய சுதந்திர மசோதாவை நிறைவேற்றியது. வேறு வழி இல்லாமையால் காங்கிரஸ் கட்சியினர் பிரிவினைக்கிணங்க வேண்டியவராயினர். விரைவில் எல்லைக் குழுவினர் எல்லை விவாதங்களைத் தீர்த்தனர். இறுதியில் 1947, ஆகஸ்டு 15-ஆம் **நாள் சுதந்திர இந்தியா, பாகிஸ்தான் என்னும் இரு புதுடொமினி யன்கள்** இந்நாட்டில் ஏற்பட்டன. பிரிட்டிஷ் அரசாங்கம்

இந்திய அரசியல் அதிகாரத்தை இவ்விரு டொமினியன் களுக்கும் மாற்றியது. இந்திய ராணுவம் இரு அரசாங்கங் களுக்கும் பங்கிடப்பட்டது.



படம் 13. ஜின்னு.

ஸிந்து, வடமேற்கெல்லை மாகாணம், மேற்குப் பஞ் சாப், பலுசிஸ்தானம், சில்ஹெட், கிழக்கு வங்காளம் ஆகிய பகுதிகள் கொண்டது பாகிஸ்தான் ஆயிற்று. கராச்சி அதன் தலைநகர். மற்ற பிரிட்டிஷ் இந்தியப் பகுதி சுதந்திர இந்தியாவாயிற்று. டில்லி இதன் தலைநகர். காங்கிரஸின் விருப்பப்படி மவுண்ட் பாட்டன் பிரபு சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜனரலானுர். முஸ்லிம் லீகின் விருப்பப்படி காய்தே ஆஜாம் முகமதலி ஜின்னு பாகிஸ்தானின் முதல் கவர்னர் ஜனரலானுர். ஒவ்வொரு டொமினியன் சட்ட சபைக்கும் அதற்கு வேண்டிய சட்டங்களை இயற்றிக் கொள்ளப் பூரண உரிமை அளிக்கப்பட்டது. 1947, ஆகஸ்ட் 15-ஆம் தேதி முதல், இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத் தின் பொறுப்பனைத்தும் மறைந்தொழிந்தது; சுதேச சமஸ்தானங்களின் மீதிருந்த ஆதிபத்தியமும் மறைந்து

ஒழிந்தது. இந்தியாவின் சக்கரவர்த்தி என்ற புகழுரை யும் போயிற்று. சுதேச சமஸ்தானங்கள், புதிய டொமினியன்கள் ஏதேனும் ஒன்றுடன் இயற்கை யமைப்பை ஒட்டி இணைந்துவிட நேர்ந்தது. இரு டொமினியன்களிலும் புதிய அரசியல் திட்டத்தைத் தயாரிக்க இரு அரசியல் நிர்ணய சபைகள் ஏற்பட்டன. இங்ஙனம் நமது சுதந்திரப் போராட்டம் முடிவுபெற்று நாம் விடுதலை பெற்றோம். மவுன்ட் பாட்டனுக்குப் பின்னர் ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார் இந்திய கவர்னர் ஜனரலானர்.



படம் 14. ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார்.

## பகுதி 3

இந்திய அரசியல் நிர்ணயச் சபை : ஒரு நாட்டின் எதிர்கால அரசியல் அமைப்பைப் புதிதாகத் தயாரிக்கும் பொருட்டு அந்நாட்டு மக்களின் பிரதிநிதிகள் கொண்டதாய்க்கூடும் சபைக்கு அரசியல் நிர்ணயசபை என்று பெயர். தொழிற் கட்சித் தலைவரான ஆட்லி 1945, மார்ச்சு 15-ந்தேதியன்று பார்லிமென்டில் இந்தியர்கள் ஒரு அரசியல் நிர்ணய சபையின் வாயிலாகத் தங்களது அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளுதலே தக்கது என அறிவித்தார்.

இந்திய அரசியல் சிக்கலைத் தீர்க்க அவரால் அனுப்பப்பட்ட காபினெட் தூதுக்குழுவினர் வெளியிட்ட திட்டத்தில் இந்தியாவின் எதிர்கால அரசியல் திட்டத்தைத் தயாரிக்க ஒரு அரசியல் நிர்ணய சபை கூட்டப்படல் வேண்டும் என்று கண்டிருந்தது. இதனை யொட்டி 1946, டிசம்பர் மாதம் 9-ஆம்

தேதி டில்லியில் இந்திய அரசியல் நிர்ணய சபை முதற்கண் கூடியது. இதன் உறுப்பினர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட மாகாண சட்டசபையினரால் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஆனால், அதில் முஸ்லிம் லீகினர் சேர மறுத்தனர். பாகிஸ்தான் எனும் தனி நாட்டைப்பெற உறுதி கொண்ட லீகினர் இச் சபையின் தீர்மானங்கள் தம்மைக் கட்டுப்படுத்தா எனவும், முஸ்லிம்களுக்கெனத் தனி அரசியல் சபை கூட்டப்படல் வேண்டும் என்றும் தீர்மானித்தனர். இம் முட்டுக்கட்டை 1947, ஆகஸ்ட் 15-ஆம் தேதி நாடு பிரிக்கப்படும் வரை நீடித்திருந்தது. பிரிவினைக்குப் பின்னர் சுதந்திர இந்தியாவிற்கு ஒன்றும், பாகிஸ்தானிற்கு மற்றொன்றுமாக இரு அரசியல் நிர்ணய சபைகள் ஏற்பட்டன.

சுதந்திர இந்தியாவில் அரசியல் நிர்ணய சபை இந்தியாவின் எதிர்கால அரசியல் திட்டத்தைத் தயாரிக்கத் தொடங்கியது. பாபு ராஜேந்திர பிரசாத் இச்சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இச்சபையின் அங்கத்தினர் 308 பேர் ஆவர். இவர்கள் மாகாண சட்ட சபைகளின் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், முக்கிய வகுப்புகளின் பிரதிநிதிகளும் சுதேச சமஸ்தானப் பிரதிநிதிகளும் ஆவர். இப்புதுச் சபையின் முதற்கூட்டத்தில் தலைவர் ராஜேந்திர பிரசாத் புதிய இந்தியாவில் வகுப்பு வாதமற்ற சமூகத்தை அமைத்தலே இச்சபையின் தலையாய குறிக்கோள் என்று தம் முதற் பேருரையில் முழக்கினர்.

கி. பி. 1947, ஜூலை 22-ஆம் தேதியன்று இச்சபை அசோகரின் தரும சக்கரம் நடுவில் விளங்கும் முந்நிறக் கொடியை இந் நாட்டின் தேசியக் கொடியாக ஆக்கியது. இச்சக்கரம் சாரனத்திலுள்ள அசோகரின் கல் சிங்கச் சின்னத்தில் (The Lion Capital of Asoka) காணப்பட்டுள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் அரசியல் அமைப்பை வகுக்க டாக்டர் அம்பேத்கார் தலைமையில் அவருட்பட ஆறு உறுப்பினர்



படம் 15. ஸ்ரீ பாபு ராஜேந்திர பிரசாத்.

கொண்ட ஒரு குழு ஏற்பட்டது. இதன் ஏனைய உறுப்பினர்கள் சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், டி. டி. கிருஷ்ணமாச்சாரியர், என். கோபாலசுவாமி ஐய்யங்கார், கே. எம். முன்ஷி, முகமது சாதுல்லாகான் என்போர் ஆவர். இக்குழுவினர் கி. பி. 1948, பிப்ரவரியில் தங்களுடைய தீர்மானங்களை உருவாக்கி அரசியல் நிர்ணய சபைக்குச் சமர்ப்பித்தனர். இச்சபை 2 வருடம் 11 மாதம் 18 நாட்கள் நீடித்தது. பதினேரு கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்களில் நடந்த நீண்ட விவாதங்களுக்குப் பின்னர், புதிய இந்தியா அரசியல் அமைப்பு உருப்பெற்றது. இறுதியாக, கி. பி. 1949, நவம்பர் 26-ஆம் தேதி இப் புதிய அரசியல் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப் புதிய அரசியல் திட்டம் 395 விதிகளும், 8 அனுபந்தங்களும் கொண்டதாகும்.

பயிற்சி

1. முஸ்லிம் லீக் கட்சியின் ஒப்பற்ற தலைவர் யார்? அவரது அரசியல் நோக்கம் யாது?
2. கிரிப்ஸ் தூது என்பது யாது? அத் தூது ஏன் முறிந்தது?
3. ஆகஸ்ட் புரட்சி என்பது யாது?
4. காபினெட் தூது எப்பொழுது இந்தியாவுக்கு வந்தது? அதன் முக்கிய அங்கத்தினர் யாவர்? அவர்களின் திட்டம் யாது?
5. இடைக்கால அரசாங்கம் என்பது யாது? அது எப்போது நிறுவப்பட்டது? அதன் தலைவர் யார்?
6. கி. பி. 1947, ஜூன் 3-ஆம் தேதியின் திட்டம் யாது?
7. இந்தியச் சுதந்திர மசோதா எப்போது நிறைவேறியது? அது எப்போது நடைமுறைக்கு வந்தது?
8. சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜனரல் யார்? சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜனரல் யார்?
9. அரசியல் நிர்ணய சபை என்றால் என்ன? அது எப்போது, எங்கு முதன் முதலாகக் கூடியது? அதன் தலைவர் யார்? அச்சபை எப்போது முடிவுற்றது?

---

# அத்தியாயம் 6

## நமது அரசியல் அமைப்பியல்

## (Our New Constitution)

### பகுதி 1

நமது அரசியல் அமைப்பியல் உலகிலுள்ள பன்னாடுகளின் நல்ல அரசியல் திட்டங்களையெல்லாம் வடித்தெடுத்து நம் நாட்டுப் பண்பாட்டிற்கிசைய அமைக்கப்பட்டதாகும். இந்நாட்டு மக்கள் 1930 ஜனவரி 26-ல் சுதந்திர விரதங் கொண்ட நினைவிற்கறிகுறியாகவே 1950 ஜனவரி 26-ஆம்தேதி புதிய திட்டம் நடைமுறைக்கு வரும் நன்னாள் எனக் கருதி அமைக்கப்பட்டது. ஸ்ரீ பாபு ராஜேந்திர பிரசாத் இந்தியக்



படம் 16. வல்லபாய் படேல்.

குடியரசின் முதல் ஜனாதிபதியாகவும், ஸ்ரீ ஜவஹர்லால் நேரு முதல் பிரதம மந்திரியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அரசியல் அமைப்பின் சில முக்கிய அம்சங்கள் : (1) கி. பி. 1950 ஜனவரி 26-ஆம் தேதி முதற்கொண்டு நம்நாடு பரிபூரண சுதந்திர ஜனநாயக இந்தியக் குடியரசு (Sovereign Democratic Republic of India) என்ற பெயருடன் திகழ்ந்துவரும். நமது புதிய அரசியலில் பிரிட்டிஷ் முடியாட்சியின் சின்னங்கள் ஒன்றுமிரா. குடியரசு தோன்றியது முதற்கொண்டு பிரிட்டிஷ் மன்னர் இந்தியாவின் அரசு பதவிச் சின்னங்கள் அனைத்தையும் இழப்பார். இந்திய நாடு குடியரசாக விளங்கினாலும், அது பிரிட்டன் முதலிய நாடுகளைக் கொண்ட

பொதுநல அரசில் (Commonwealth) ஒரு அங்கமாய் இருந்து வரும்.

(2) இந்தியா பல ராஜ்ஜியங்கள் கொண்ட ஒரு யூனியனுக விளங்கும். யூனியனின் அங்கங்களான மாகாணங்கள், சமஸ்தானங்கள் முதலியன வெல்லாம் ராஜ்ஜியங்கள் (States) என்றே அழைக்கப்படும். எல்லா ராஜ்ஜியங்களும் ஒரே விதமான ஆட்சி முறைக்குட்படும்.

(3) இந்தியாவின் எல்லைக்குள் பிறந்த அனைவரும் இந்தியாவின் பிரஜைகள் ஆவர். ஒருவருடைய தாய் அல்லது தந்தை இந்திய எல்லைக்குள் பிறந்திருப்பினும் அவரும் இந்தியப் பிரஜையே ஆவர்.

(4) இந்திய மக்கள் அனைவரும் அமைதியாக வாழ அரசாங்கத்தால் பறிக்க முடியாத சில நல்லுரிமைகளைப் பெற்றுள்ளனர். அவை ஜீவாதார உரிமைகள் எனப்படும். அவற்றுள் முக்கியமானவை: (a) சட்டத்தின் முன் அனைவரும் சமம். அதனுல், அரசாங்க உத்தியோகங்களைப் பெற அனைவருக்கும் சமமான சந்தர்ப்பம் வாய்த்தல்; (b) தீண்டாமை ஒழிக்கப்படுதல்; (c) அனைவருக்கும் பேச்சுரிமை, எழுத்துரிமை, அமைதியாகக் கூட்டங் கூடிப் பேசும் உரிமை, கழகங்கள் ஸ்தாபிக்கும் உரிமை, இந்நாட்டில் எங்கும் தடையின்றிப் போய்வரும் உரிமை, இந்நாட்டின் எப் பகுதியிலேனும் வாழுமுரிமை, எவ்வகைத் தொழில் அல்லது வர்த்தகம் செய்யும் உரிமை; (d) வழிபாட்டுரிமை; (e) அவரவர் தாய்மொழி மூலம் கல்வி பெறும் உரிமை; தனிமொழி, லிபி, பண்பாடு இவற்றைப் பாதுகாக்கும் உரிமை, எக் கல்வி நிலையங்களிலும் தடையின்றிக் கல்வி பயிலும் உரிமை ஆவனவாம். இந்த ஜீவாதார உரிமைகளே நம் அரசியல் அமைப்பின் இணையற்ற அமிசமாகும்.

(5) நாட்டின் முன்னேற்றத்தின் பொருட்டு அரசாங்கம் பின்பற்றுதற்குரிய சில இலட்சியங்களை அரசியல்

அமைப்புத் திட்டம் கொண்டுள்ளது. மக்களிடேயே பசி, பிணி, எழுத்தறியாமை ஆகியவற்றை ஒழிப்பதும், வாழ்க்கைக்குரிய வசதிகளை அனைவரும் பெறுமாறு செய்தலும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், தாழ்நிலையில் உள்ளவரின் நிலையை உயர்த்தப் பாடுபடுவதும், தொழிலாளர், விவசாயிகள் ஆகிய இவர்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுதலும், பொதுநல பாதகமாகச் செல்வமும் உற்பத்தி வசதியும் ஒரு சிலரிடமே குவியாமல் பொருளாதார நிலையைச் சீர்படுத்தலும், உலக நன்மைக்குப் பாடுபடுதலும் அரசாங்கத்தின் குறிக்கோளாகும்.

(6) நமது நாட்டு அரசாங்கம் கூட்டாட்சி முறையில் நடக்கும். அகில இந்திய விவகாரங்கள் யூனியன் அரசாங்கத்தின் பொறுப்பிலும், உள் நாட்டு ராஜ்ஜியங்களின் விவகாரங்கள் அந்தந்த ராஜ்ஜிய அரசாங்கப் பொறுப்பிலும் இருக்கும்.

(7) நமது அரசாங்கம் ஜனநாயக முறைப்படி நடைபெறும். அரசியல் சட்டப்படி ஏற்படும் ஆட்சி ஜனநாயகக் குடியாட்சியாகும். மத்திய அரசாங்கத்திலும், ராஜ்ஜியங்களிலும் 21 வயதான ஆண் பெண்கள் அனைவராலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகள் ஏற்பட்டு, அவற்றுக்குப் பொறுப்பு வாய்ந்த மந்திரி சபைகளால் நிர்வாகம் நடைபெறும். நவீன இந்திய சரித்திரத்தில் முதற்கண் 21 வயதான ஆண் பெண் அனைவருக்கும் வாக்குரிமை ஏற்பட்டிருப்பது மிகவும் போற்றத்தக்க செய்தியாகும்.

(8) நமது குடியரசின் தலைவர் ஜனாதிபதி (President) என்றே அழைக்கப்படுவர். அவர் இந்திய யூனியனின் தலைவராவர். அவர் ஐந்தாண்டுகட் கொருமுறை தேர்ந்தெடுக்கப்படுவார்.

(9) நமது அரசியல் அமைப்புத் திட்டத்தினால் ஏற்படும் ஆட்சி உலகியல் ஆட்சியாகும் (Secular State). அது

எவ்வகையிலும் மதத்தை அடிப்படையாகக் கொண்ட தாகாது. சாதி, மதம், இனம், நிறம், பால் என்னும் வேற்றுமையின்றி, நாட்டு மக்கள் அனைவருக்கும் குடிமை உரிமை உண்டு. நாட்டுப் பணியில் அனைவருக்கும் சம மான பங்குண்டு.

(10) நமது அரசியல் அமைப்பு எஃகுப் போன்றதன்றி இளம்கொம்புபோல் இணங்குந் தன்மை வாய்ந்தது. மத்திய சட்ட சபையினர் பெரும்பாலோர் விரும்பினால் இதனை மாற்றியமைக்கலாம். அன்றியும் மத்திய சட்ட சபையினால் கொண்டு வரப்படும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

(11) முன்னேற்றமடையாத வகுப்பினருக்கும், பழங்குடி மக்கட்கும் சீர்திருத்தமடைய நல்ல பாதுகாப்புகள் அளிக் கப்பட்டிருக்கின்றது.

(12) அரசியல் அமைப்புத் திட்டப்படி ஹிந்தி (Hindi) அரசியல் பொது மொழியாகும். ராஜ்ஜியங்களின் அவ்வப் பிரதேச மொழியே முதன் மொழியாகும். ராஜ்ஜியங்களின் சட்ட சபைகளில் தாய்மொழியான பிரதேச மொழியைப் பயன்படுத்தலாம்.

## பகுதி 2

அரசியல் அமைப்பியலில், மாகாணங்கள் A பகுதி என் றும், சமஸ்தானங்கள் B பகுதி என்றும், லெப்டினென்ட் கவர்னர் அல்லது சீப் கமிஷனர் ராஜ்ஜியங்கள் C பகுதி என்றும், வேறு சில பாகங்கள் D பகுதி என்றும் வரையறுக் கப்பட்டிருந்தன.

இந்த அரசியல் பிரிவுகள் 1956 நவம்பர் 1-ஆம் தேதி முதல் கீழ்க்கண்டபடி திருத்தி அமைக்கப்பட்டுள்ளன :

**கவர்னரால் ஆளப்படும் ராஜ்ஜியங்கள் :—** (1) பஞ்சாப் (2) ராஜஸ்தான் (3) உத்தரப் பிரதேசம் (4) பீஹார் (5) மேற்கு வங்காளம் (6) அஸ்ஸாம் (7) ஒரிஸ்ஸா (8) மத்தியப் பிரதேசம்




படம் 17.

(9) ஆந்திரப் பிரதேசம் (10) சென்னை (11) மைசூர் (12) கேரளம் (13) பம்பாய் (14) ஜம்மு-காஷ்மீர்.

யூனியன் அரசாங்கத்தின் நேராட்சியிலுள்ள பிரதேசங்கள் :— (1) ஹிமாசலப் பிரதேசம் (2) டில்லி (3) திரிபுரா (4) மணிப்பூர் (5) அந்தமான், நிகோபர் தீவுகள் (6) லக்ஷத்தீவு, மினிகாய், அமிந்திவித் தீவுகள் (7) நாகர்மலைப் பிரதேசம்.

[Naga Hills—Tuensang area 6,298 sq. miles.] இவைகள் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் குறித்த பெயருடைய நிர்வாக அதிகாரியால் ஆளப்படும்.

இப்புதிய அரசியல் பிரிவுகள் (அந்தமான், நிகோபர் தீவுகள், லக்ஷத் தீவு, மினிகாய், அமிந்திவித் தீவுகள், நாகர் மலைப் பிரதேசம் நீங்கலாக) யூனியன் அரசாங்கத்தாரால் 5 **மண்டலங்களாகப்** (zones) பிரிக்கப்பட்டுள்ளன. அவை :—(1) பஞ்சாப், இராஜஸ்தான், ஜம்மு-காஷ்மீர், டில்லி, ஹிமாசலப் பிரதேசம் ஆகிய ராஜ்ஜியங்கள் அடங்கிய வட மண்டலம். (2) உத்தரப் பிரதேசமும் மத்தியப் பிரதேசமும் அடங்கிய மத்திய **மண்டலம்**. (3) பீஹார், மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா, அஸ்ஸாம், மணிபூர், திரிபுரா ஆகிய ராஜ்ஜியங்களைக் கொண்ட கிழக்கு மண்டலம். (4) பம்பாயும் மைசூரும் அடங்கிய மேற்கு மண்டலம். (5) கேரளம், சென்னை, ஆந்திரப் பிரதேசமாகிய ராஜ்ஜியங்களைக் கொண்ட தென் மண்டலம்.

ஒவ்வொரு மண்டலத்திற்கும் மண்டல சபை ஒன்று (zonal council) நிறுவப்பட்டுள்ளது. இம்மண்டல சபைகள் ஆலோசனை சபைகளாக விளங்குமேயன்றி நிர்வாக சபைகள் ஆகா. இவை அவ்வப்போது கூடிப் பொருளாதாரச் சமூக திட்டங்கள், எல்லை விவகாரங்கள், மொழியை ஒட்டிய சிறுபான்மையோர் பிரச்னைகள், ராஜ்ஜியங்களின் ஒன்றோடொன்றின் போக்குவரத்து முதலிய பொதுவாக உள்ள விஷயங்களைப்பற்றி விவாதித்து மத்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறும்.

ஒவ்வொரு மண்டல சபையும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட யூனியன் மந்திரி ஒருவரைத் தலைவராகவும் (chairman), அந்தந்த மண்டல ராஜ்ஜியங்களின் முதன் மந்திரிகளையும் ராஜ்ஜிய கவர்னர்களால் நியமிக்கப்பட்ட இரு மந்திரிகளையும் முக்கிய அங்கத்தினர்களாகக் கொண்டு விளங்கும். முதன் மந்திரிகள் சுழற்சி முறையில் உபதலைவர்களாக (vice-chairman) விளங்குவர்.

ஒவ்வொரு மண்டல சபைக்கும் ஒரு நிரந்தரக் காரியாலயமும் உண்டு. ஒவ்வொரு மண்டல சபையும் அந்தந்த மண்டலத்திலுள்ள ராஜ்ஜியங்களில் சுழற்சி முறையில் முறையே கூடும். வேண்டுமாயின் இம்மண்டல சபைகள் மத்திய அரசாங்க அனுமதியின்கீழ் கூட்டாகவும் கூடலாம்.

### பயிற்சி

1. நமது அரசியல் அமைப்புத் திட்டம் எப்பொழுது அமுலுக்கு வந்தது? தற்போது நம் நாட்டு அரசியலுக்குப் பெயர் யாது?
2. நமது அரசியலமைப்பின் முக்கியாம்சங்களுள் ஏதேனும் நான்கினைக் குறிப்பிடுக.
3. ஜீவாதார உரிமைகள் என்றால் என்ன? அவற்றுள் ஏதேனும் மூன்றினைக் குடுப்பிடுக.
4. இந்திய யூனியனின் ராஜ்ஜியங்களின் தலைவர் எப் பெயரால் அழைக்கப்படுகிறார்?

---

# அத்தியாயம் 7

# நமது யூனியன் அரசாங்கம்

## பகுதி 1

### மத்திய அரசாங்கம்

நமது இந்திய அரசியல் திட்டப்படி கிரேட் பிரிட்டனிலும் அதன் டொமினியன்களிலும் ஏற்பட்டுள்ளது போல் ஜனநாயக ஆட்சிமுறை நம் நாட்டிலும் ஏற்பட்டுள்ளது. இதன்படி நமது அரசியல் நிர்வாகம் தனியாகவும் கூட்டாகவும் எல்லாத் தீர்மானங்களிலும், செயல்களிலும் குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகளுக்குப் பொறுப்புடையதாய் விளங்குகிறது. எனவே, நமது அரசாங்கம் தேசிய அரசாங்கமாகும்.

நம் நாட்டின் ஆட்சிமுறை கூட்டாட்சி அல்லது சமஷ்டி முறையில் அமைந்துள்ளது. இந்தியக் குடியரசு பல ராஜ்ஜியங்களைக் கொண்ட (Union) ஐக்கியமாகும். அகில இந்திய விவகாரங்கள் அனைத்தையும் கவனிப்பது யூனியன் அரசாங்கம் அல்லது மத்திய அரசாங்கமாகும். யூனியன் உறுப்பான அந்தந்த ராஜ்ஜியம் தத்தம் விவகாரங்களைக் கவனிப்பது ராஜ்ஜிய அரசாங்கமாகும். இவ்விரு அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் நிர்வாகத் தொகுதி, சட்டத் தொகுதி, நீதிபதி தொகுதி ஆகியவற்றைக் கொண்டு நடை பெறும்.

மத்திய அரசாங்கத்தின் உறுப்புகள் ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி, மந்திரி சபை, மத்திய சட்ட சபை அல்லது பார்லிமென்ட் ஆவனவாம்.

## பகுதி 2

ஜனாதிபதி: இந்திய யூனியனின் தலைவர் ஜனாதிபதி ஆவர். இந்தியக் குடியரசின் ராஜாங்கத் தலைவரும் இவரேயாவர். இவர் ஐந்தாண்டுகட்கொருமுறை யூனியன் பார்லிமென்டின் இரு சபைகளாலும் ராஜ்ஜியங்களின் கீழ்ச் சட்ட சபைகளின் அங்கத்தினர்களாலும் தேர்ந்தெடுக்கபடுவார். நம் ஜனாதிபதி அமெரிக்கக் குடியரசின் தலைவர்போல் மக்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படாமல் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பாபு ராஜேந்திர பிரசாத் தற்சமயம் நமது ஜனாதிபதியாவர்.

ஜனாதிபதி பதவியை விரும்புவோர்க்கு அரசியல் அமைப்புத் திட்டப்படி சில தகுதிகள் இருத்தல் வேண்டும்: (1) அவர் இந்தியக் குடியரசின் பிரஜையாக இருத்தல் வேண்டும். (2) 35 வயது நிரம்பியவராய் இருத்தல் வேண்டும். (3) யூனியன் கீழ்ச் சபை அங்கத்தினர்க்குரிய தகுதி வேண்டும். (4) தேர்தலுக்கு நிற்கும்போது ஊதியம் பெறும்

அரசாங்கப் பதவி ஒன்றையும் வகிப்பவராய் இருத்தல் கூடாது.

புதியவராய்த் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதி, பதவி ஏற்குமுன் யூனியன் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியின் முன்னிலையில் விசுவாசப் பிரமாணம் செய்யவேண்டும். அவர் ஐந்தாண்டு பதவியில் இருப்பார்; இடையில் தாமே ராஜிநாமா செய்தாலன்றி, அல்லது குற்றச் சாட்டால் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலன்றி, ஜனாதிபதி குறித்த காலம் வரைப் பதவியில் இருக்கலாம். ஒரு முறை ஜனாதிபதியாக இருந்தவர் மீண்டும் அப்பதவிக்கு நிற்கலாம். இவர் மாதம் 6,000 ரூபாய் ஊதியத்துடன் தனி விடுதியும் தற்சமயம் பெற்றுவருகிறார். டில்லியில் அவர் இருப்பிடம் ராஷ்டிரபதி பவன் எனப்படும். ஹைதராபாத்திற்கு அருகிலுள்ள பொலாரத்திலுள்ள அவரது இருப்பிடம் ராஷ்டிரபதி நிலயம் எனப்படும்.

ஜனாதிபதியின் அதிகாரங்கள்: இந்திய யூனியனின் நிர்வாக அதிகாரம் அனைத்திற்கும் ஜனாதிபதியே நிலைக்களமாவர்.

(1) தேசத்தின் பாதுகாப்புப் படைகளின் தலைவர் ஜனாதிபதியாவர். (2) குற்றவாளிகளுக்கு மன்னிப்பு அளிக்கவும், தண்டனையைக் குறைக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு. (3) கவர்னர்கள், ராஜ தூதர்கள் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகள், உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள், யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் அங்கத்தினர்கள், அட்வகேட் ஜனரல், கணக்குப் பரிசீலனை அதிகாரி (ஆடிட்டர் ஜனரல்) போன்ற முக்கிய உத்தியோகஸ்தர்களை அவர் நியமிப்பார். (4) யூனியன் பிரதம மந்திரியை நியமிப்பவரும் ஜனாதிபதியேயாவர். (5) சட்ட சபைகள் இயற்றும் சட்டங்கள் எல்லாம் ஜனாதிபதியின் சம்மதத்தைப் பெறவேண்டும். (6) யூனியன் சட்ட சபை இயற்றிய மசோ

தாக்களை அவர் மீண்டும் புனர் ஆலோசனைக்குத் திருப்பி அனுப்பலாம். (7) அவர் இரு யூனியன் சட்ட சபைகளையும் ஒன்ருகக் கூட்டலாம்; ஏதேனும் ஒரு சபைக்குத் தம் விருப்பத்தை அறிவிக்கலாம். (8) யூனியன் கீழ்ச் சட்ட சபையை அவர் கலைக்கலாம். (9) ஜனதிபதியின் சிபாரிசு இல்லாமல் மந்திரிகளுக்கு மானியம் வழங்கப்படமாட்டாது; அன்றியும், அவரது சம்மதமின்றிச் செலவு நிதி மசோதா யாதொன்றும் பார்லிமெண்டில் கொண்டு வருவதற்கு இயலாது. (10) பார்லிமென்ட் கூடாத காலங்களில் அவசர மேற்பட்டால் நிர்வாகத்தை உத்தேசித்து ஜனதிபதி தனி ஆணைகளைப் பிறப்பிக்கலாம். (11) யுத்த நெருக்கடி அல்லது உள்நாட்டுக் கலவரம், ராஜ்ஜியங்களில் எதிலேனும் நிர்வாக முடக்கம், பொருளாதார நெருக்கடி போன்ற அரிய சந்தர்ப்பங்களில் ஜனதிபதி நெருக்கடிப் பிரகடனத்தை வெளியிட்டு நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தலாம்.

மேற்கூறியவற்றிலிருந்து ஜனதிபதி பல அதிகாரங்களை உடையவர்போல் தோன்றினும் அவர் சர்வாதிகாரி அல்லர்; பிரிட்டிஷ் முடியரசின் மன்னர்பிரான் செங்கோலின் சின்னமாய் விளங்குவதுபோல், ஜனதிபதி இந்தியக் குடியரசின் செங்கோற் சின்னமாவர். பெயரளவிற்ருன் ஜனதிபதி நிர்வாகத் தலைவர்; உண்மை நிர்வாகத் தலைமை சட்ட சபைக்குப் பொறுப்பு வாய்ந்த பிரதம மந்திரியினிடமும் அவர் மந்திரி சபையினிடமுமே உள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் ஜனதிபதியே உண்மை நிர்வாக அதிகாரியாவர்; அன்னரின் மந்திரி சபை அவரின் நிழலாகும். ஆனல், நம் ஜனதிபதி ஆங்கில அரசியலமைப்பின் கீழ் ஆங்கில மன்னரின் நிலையில் இருப்பவர்.

ஜனதிபதி நீக்கப்படுதல்: ஜனதிபதியும் சட்ட வரம்புக்கு உட்பட்டவரே ஆவர். அரசியல் அமைப்புத் திட்டத்திற்கு மாருக அவர் நடந்தால், துரோகக் குற்ற விசாரணை செய்யப்பட்டுப் பதவியிலிருந்து நீக்கப்படலாம்.

**உதவி ஜனாதிபதி:** ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் போது ஒரு உதவி ஜனாதிபதியும் அவருடன் தேர்ந்தெடுக்கப் படுவார். இப் பதவியின் தேர்தலில் ராஜ்ஜியங்களின் சட்ட-சபைகள் கலந்துகொள்வதில்லை. யூனியன் சட்டசபைகள் இரண்டும் ஒன்றுகூடி இவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இவரும் இந்தியக் குடிகளுள் ஒருவராக இருத்தல் வேண்டும்; 35 வயது நிரம்பியவராய் இருத்தல் வேண்டும். யூனியன் மேல் சட்ட சபையில் அங்கத்தினராதற்குரிய தகுதி இவருக்கு இருத்தல் வேண்டும். இவரும் ஐந்தாண்டு பதவியில் விளங்குவார். இவர் தாங்கும் பதவியால், யூனியன் மேல் சபையின் சபா நாயகராய் வீற்றிருப்பார். ஜனாதிபதி நோயுற்றாலும், ராஜி நாமா செய்தாலும், இறந்தாலும் அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டாலும் புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும்வரை உதவி ஜனாதிபதி, ஜனாதிபதி பதவியைத் தாங்கி நிற்பார். அரசியல் அமைப்புக்கு இவர் மாறுபட்டு நடந்தால் இவரும் நீக்கப்படுவர். (1957-ல் ஸ்ரீ சர்வபல்லி ராதாகிருஷ்ணன் மறு முறை உதவி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.)

## பகுதி 3

**பிரதம மந்திரியும் யூனியன் மந்திரியும்:** அரசியல் அமைப்புத் திட்டப்படி ஜனாதிபதிக்குத் தமது நிர்வாகக் கடமைகளை இயற்றுவதற்கு உதவி செய்யவும், ஆலோசனை கூறவும் ஒரு மந்திரி சபையுண்டு. அம் மந்திரி சபையில் பிரதம மந்திரியும் (Prime Minister) மற்ற மந்திரிகளும் அமர்ந்திருப்பர். பிரதம மந்திரி ஜனாதிபதியால் நியமிக்கப் படுவர். ஏனைய மந்திரிகள், பிரதம மந்திரியின் ஆலோசனைப்படி ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர்.

பொதுவாக, சட்ட சபையில் பெரும்பான்மைக் கட்சித் தலைவராக இருப்பவரே பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப் படுவர். பெரும்பான்மைக் கட்சியில்லாதபோது பல முக்கிய கட்சிகளின் ஆதரவைப் பெற்றவரே பிரதம மந்திரியாக

நியமிக்கப்படுவர். பிரதம மந்திரியே மந்திரி சபையின் தலைவராவர். மற்ற மந்திரிகளைத் தேர்ந்தெடுப்பவர் அவரே. மந்திரிகள் அனைவரும் பிரதம மந்திரியுடன் ஒத்துழைத்துக் கூட்டுப் பொறுப்புடன் செயலாற்றல் வேண்டும். தம்முடன் ஒத்துழையா மந்திரிகளைப் பிரதம மந்திரி (ஜனாதிபதியின் ஆதரவைப் பெற்று) வேலையிலிருந்து நீக்கிவிடலாம். இவர் ஜனாதிபதிக்கும் மந்திரி சபைக்கும் இடையில் இணைத்து நிற்கும் சங்கிலி போன்றவர்.

**மந்திரி சபை :** யூனியன் மந்திரிகள் பிரதம மந்திரியின் ஆலோசனைப்படி ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவார்கள். ஆனால், உண்மையில் இவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர் ஆவர். மந்திரி சபை கூட்டுப் பொறுப்புடன் யூனியன் கீழ்ச் சபை அல்லது லோக் சபைக்குப் பொறுப்புள்ளதாகும். அச்சபையின் நம்பிக்கை இழந்தாலும், நிர்வாகத்தில் தவறு நடந்தாலும் மந்திரி சபை கவிழ்ந்துவிடும். மந்திரிகள் யூனியன் சட்டசபைகள் இரண்டில் எதிலேனும் ஒன்றில் அங்கத்தினராக இருத்தல் வேண்டும். மந்திரி சபையின் எண்ணிக்கை நிர்வாக அவசியத்தை ஒட்டி இருக்கும். மந்திரிகள் பதவி ஏற்குமுன் ஜனாதிபதியின் முன்னிலையில் நெறி தவறாமல் கடமை புரிவதாகவும், அரசாங்க ரகசியங்களை வெளியிடுவதில்லை என்றும் விசுவாசப் பிரமாணம் செய்தல் வேண்டும். நாட்டின் நன்மையைக் கருதிப் பல திட்டங்களைச் சட்ட சபைகளால் நிறைவேற்றப்படுவதற்கு அவர்கள் கொண்டு வருவர். மந்திரிகள் அனைவரும் கூட்டுப் பொறுப்புடன் பிரதமரிடம் விசுவாசம் உடையவராய் அவருடன் ஒத்துழைத்தல் வேண்டும். பிரதமர் ராஜிநாமா செய்தால் இவர்களும் ராஜிநாமா செய்தல் வேண்டும். இதுவே ஜனநாயக ஆட்சிக்குகந்த பார்லிமென்டரி முறை ஆகும்.

பிரதமரும் அவருடைய மந்திரி சபையுமே உண்மையில் யூனியன் நிர்வாகத்தை நடத்துபவர்கள். பல பிரிவுள்ள நிர்வாகத்தை மந்திரிகள் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட

பிரிவு, அல்லது பிரிவுகளை ஏற்று நடத்துவர். தற்போது நிர்வாக இலாக்காக்கள் பல உள்ளன. அவ்வை வெளிநாட்டு விவகாரங்கள், பொது நல அரசுறவு, உள்நாட்டு விவகாரங்கள், கல்வி, செலவு நிதி, போக்குவரத்து, வர்த்தகம், கைத்தொழில், மராமத்து, உற்பத்தி — வினியோகம், இயற்கை வள விஞ்ஞான ஆராய்ச்சி, பாதுகாப்பு, உணவு, விவசாயம், செய்திப் போக்குவரத்து (தபால், தந்தி), சுகாதாரம், தொழில் துறை, சட்டம், பார்லிமென்டரி விவகாரம், விளம்பரம், குடியமைப்பு, சிறுபான்மையோர் முதலியனவாகும். 1957-ல் யூனியன் மந்திரி சபைப் (Cabinet) பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு ஆவர். அவர்தான் நம் அன்னிய நாட்டு விவகாரங்களைக் கவனிக்கிறார். ஸ்ரீ கோவிந்த வல்லப பந்த் உள்நாட்டு இலாக்கா மந்திரி ஆவர்; ஸ்ரீ அஜித் பிரசாத் ஜெயின் உணவு விவசாய மந்திரியாவர்; ஸ்ரீ மொரார்ஜி தேசாய் நிதி மந்திரியாவர்; ஸ்ரீ A. K. ஸென் சட்ட மந்திரியாவர்; ஸ்ரீ ஜகஜீவன்ராம் ரெயில்வே மந்திரியாவர்; ஸ்ரீ லால்பஹதூர் சாஸ்திரி வர்த்தகம், கைத்தொழில் மந்திரியாவர்; ஸ்ரீ நந்தா தொழில் துறை, திட்ட இலாக்கா மந்திரியாவர்; ஸ்ரீ பஞ்சாப் ராவ் தேஷ்முக் யூனியன் கூட்டுறவு மந்திரியாவர்; ஸ்ரீ கேஸ்கர் செய்தி, ஒலிபரப்பு இலாக்கா மந்திரியாவர்; ஸ்ரீ V. K. கிருஷ்ண மேனன் பாதுகாப்பு மந்திரியாவர்; ஸ்ரீ S. K. படீல் செய்திப் போக்கு வரவு மந்திரியாவர்; ஸ்ரீ கே. ஸி. ரெட்டி உற்பத்தி வினியோக மந்திரியாவர்; ஸ்ரீ முகம்மது இப்ரஹீம் நீர்ப்பாசனம், சக்தி மந்திரியாவர்; ஸ்ரீ ஸ்வரன் சிங் எஃகு, சுரங்கங்கள் மந்திரியாவர்; ஸ்ரீ D. P. கார்மார்க்கர் சுகாதார மந்திரி ஆவர்; ஸ்ரீ K. L. சிரிமாலி கல்வி மந்திரியாவர்; ஸ்ரீ ஹுமாயூன் கபீர் விஞ்ஞான ஆராய்ச்சி மந்திரியாவர்; ஸ்ரீ B. கோபால் ரெட்டி பொருளாதார விஷயங்கள் மந்திரியாவர்.

## பகுதி 4

யூனியன் பார்லிமென்ட்: இந்திய யூனியன் சட்ட சபை அல்லது பார்லிமென்ட் இரு சபைகளைக்கொண்டது. அவை:

(1) கீழ்ச் சபை அல்லது லோக் சபை, (2) மேல் சபை அல்லது ராஜ்ஜிய சபை. இவ்விரு சபைகளும் சேர்ந்து பார்லிமென்ட் என்று வழங்கப்படும்.

லோக் சபை: இது யூனியன் பார்லிமென்டின் கீழ்ச் சபையாகும். இது 520-க்கு மேற்படாத அங்கத்தினர்களைக் கொண்டு (ராஜ்ஜியங்களின் சார்பாக 500-ம், யூனியன் பிரதேசங்களின் சார்பாக 20-ம்) விளங்கும். இவர்கள் 21 வயது வந்தோர் வாக்குரிமை மூலம் இந்தியக் குடியரசில் வாழும் மக்கள் அனைவராலும் தொகுதிவாரியில் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப் படுவராவர். இவ்வகை வாக்குரிமையே ஜன நாயகத்தின் ஊற்றுகும். வாக்குரிமைக்குச் சொத்துரிமை வேண்டா; 21 வயதான ஆண் பெண் இரு பாலாரும் வாக்குரிமை அளிக்கத் தகுதி பெற்றவர். தனித் தொகுதிகள் இனி இல்லை; ஆயினும், தாழ் நிலையிலுள்ள வகுப்பினருக்கும், ஹரிஜனங்களுக்கும் சட்டசபையில் சில ஸ்தானங்கள் 10 ஆண்டு வரை உத்திரவாதம் செய்யப்பட்டுள்ளமை போற்றத் தக்கதாகும். லோக் சபைக்கு அபேட்சகராக நிற்பவர் இந்தியக் குடியரசின் பிரஜையாகவும், 25 வயது நிரம்பினவராகவும் இருத்தல் வேண்டும். பொதுவாக, இச்சபையின் ஆயுட்காலம் 5 வருடம். ஒரு சபாநாயகரும் (Speaker), உதவி சபா நாயகர் ஒருவரும் (Deputy Speaker) இச் சபையைத் தாங்கி நடத்துவர். இவர்கள் சபையின் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். (தற்சமயம் ஸ்ரீ அனந்தசயனம் அய்யங்கார் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்). சபாநாயகர் நடுநிலையுடன்—அனைவருடைய நலன்களையும் குறிக்கோளாகக் கொண்டு சபையின் அலுவல்களை நடத்துவார். ஆண்டிற்கு இருமுறையேனும் இச்சபை கூடுதல் முறையாகும். ஜனாதிபதி வேண்டியபோது இதனைக் கூட்டலாம்; அல்லது, தள்ளிப் போடலாம்; அன்றிக் கலைப்பவரும் அவரே. இச்சபையினருக்கு, ஆங்கிலப் பொதுமக்கட் சபை அங்கத்தினர்க்கு

உள்ள உரிமைகள் யாவும் உண்டு. மந்திரிகள் இச்சபைக் குத்தான் கடமைப் பட்டவர்கள். இது மிகவும் வன்மை வாய்ந்த சபையாகும்.

ராஜ்ஜிய சபை: இது யூனியன் பார்லிமென்டின் மேல் சபையாகும். இது 250-க்கு மேற்படாத அங்கத்தினர்களைக் கொண்டு விளங்குவதாகும். இச்சபையின் அங்கத்தினர்கள் நேர்முகமாக அன்றி மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்களுள் இலக்கியம், கலை, விஞ்ஞானம், சமூகத் தொண்டு ஆகியவற்றில் தலைசிறந்தவர்களாயுள்ள பன்னிருவர் ஜனாதி பதியால் நியமிக்கப்படுவர். எஞ்சியோர்களில் 238-க்கு மேற்படாதவர்கள் யூனியனில் அடங்கிய ராஜ்ஜியங்களின் கீழ்ச் சபைகளால் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொரு இராஜ்யத்திற்கும் சில ஸ்தானங்கள் வரையறுக்கப் பட்டுள்ளன. மேல் சபை நிரந்தரமானது. இரண்டாண்டுகட்கு ஒரு முறை இச் சபையின் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர் விலகுவதால் அந்த ஸ்தானங்களுக்கு மட்டுமே தேர்தல் அல்லது நியமனம் நடை பெறும். இச் சபைக்கு அபேட்சகராக நிற்பவர் இந்தியக் குடியரசின் பிரஜையாகவும், 30 வயதுக்குக் குறையாதவராகவும் இருத்தல் வேண்டும். யூனியனின் உதவி ஜனாதிபதி தமது பதவியால் ராஜ்ஜிய சபைக்குத் தலைவராவர் (Chairman). அன்றியும் அவருடன் சபையின் அங்கத்தினரால் ஒரு உதவித் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுவார். (1957-ல் ஸர் ராதாகிருஷ்ணன் மறுமுறை இச்சபையின் தலைவரானார்.) இச் சபை ஆண்டுக்கிருமுறையாகிலும் கூடுதல் வேண்டும்.

யூனியன் சட்டசபைகளின் அதிகாரங்களும் வேலையும்: நாட்டின் சீரிய நலன்களைக் கருதி யூனியன் அனைத்திற்கும் தொடர்பு கொண்ட விஷயங்களைக் குறித்துச் சட்டங்களை இயற்றுவதே யூனியன் சட்டசபையின் வேலையாகும். பண மசோதாவைத் தவிர மற்ற சாதாரண மசோதாக்களை இரு சபைகளுள் எதிலேனும் கொண்டுவரலாம். ஆனால்,

அது இரு சபைகளாலும் நிறைவேற்றப்படல் வேண்டும்; பின்னர், அது ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற்றுச் சட்டமாகி நடைமுறையில் வரும். இரு சபைகளுக்கும் ஒரு மசோதாவைப் பற்றிக் கருத்து வேற்றுமை ஏற்பட்டால் ஜனாதிபதியால் இரு சபைகளும் கூட்டப்படும்; அது-போது அக் கலப்புக் கூட்டத்தின் (Joint Sitting) பெரும் பான்மையோரின் கருத்துப்படி மசோதா நிறைவேறும். எத்தகைய மசோதாக்களும் ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற்றே வெளிவரும்.

**பண மசோதாக்கள்:** பண மசோதா விஷயத்தில் கீழ்ச் சபைக்கே எல்லா அதிகாரமும் உண்டு. பண மசோதா எதுவும் மேல் சபையில் கொண்டுவர இயலாது. அதைக் கீழ்ச் சபைதான் கொண்டுவரல் வேண்டும். கீழ்ச் சபையால் ஆமோதிக்கப்பட்ட பண மசோதா மேல் சபைக்கு அனுப்பப் படும்; மேல் சபையினர் அதில் ஏதேனும் திருத்தத்திற்குச் சிபார்சு செய்யலாம்; ஆனால், அச் சிபார்சை ஏற்கவும் மறுக்கவும் லோக் சபைக்கு அதிகாரம் உண்டு. இதனால் மேல் சபையின் சம்மதமின்றியே பண மசோதாக்கள் சட்டமாகலாம்; ஆனால், அது ஜனாதிபதியின் சம்மதத்தைப் பெறல் வேண்டும்.

பார்லிமென்டின் கூட்டங்களில் வரவு செலவுத் திட்டத்தின் கூட்டம் மிகவும் இன்றியமையாதது. இத்தகைய கூட்டம் ஆண்டிற் கொருமுறை கூடும். அப்போது அரசாங்க வரவு செலவுக் கணக்குகள் ஆராயப்படும். இக் கூட்டத்தில் நிர்வாகக் குறைபாடுகள் இருந்தால் அறிவிக்கப்பட்டு, மந்திரிகள் நாட்டின் நலன் கருதி ஒழுகவேண்டிய முறை அறிவுறுத்தப்படுவர்.

### பயிற்சி

1. *மத்திய அரசாங்கம், ஸ்டேட் அரசாங்கம் என்பவை யாவை?*
2. *நம் ஜனாதிபதி எங்ஙனம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்? அப் பதவிக்குரிய தகுதிகள் யாவை?*

3. ஜனதிபதியின் அதிகாரங்களுள் ஏதேனும் நான்கினைக் குறிப்பிடுக. அவர் தனித்துச் செய்யக்கூடியவை யாவை? அவர் எங்ஙனம் பதவியினின்று நீக்கப் படுகிறார்?

4. நெருக்கடிப் பிரகடனங்கள் எந்தச் சந்தர்ப்பங்களில் எவரால் வெளியிடப்படுகின்றன?

5. உதவி ஜனதிபதியின் கடமைகள் யாவை?

6. யூனியன் நிர்வாகத் தலைவர் யார்? உண்மையில் நிர்வாகத்தை நடத்துபவர் யார்?

7. யூனியன் மந்திரி சபையின் தலைவர் யார்? அவர் எப்படி நியமிக்கப்படுகிறார்? அவருடைய முக்கியக் கடமைகள் யாவை?

8. கூட்டுப் பொறுப்பு என்றால் என்ன? மந்திரி சபையின் சில முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக.

9. யூனியன் பார்லிமென்டின் சபைகள் யாவை? ஒவ்வொன்றின் எண்ணிக்கையும், ஒவ்வொன்றின் அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்படும் வகையும் யாவை? பார்லிமென்டின் இரு சபைகளுள் எது வன்மை வாய்ந்தது? எப்படி?

10. அடைப்புக்களுள் கொடுத்துள்ளவற்றில் தக்க விடையின் கீழ்க் கோடிடுக:

(a) உத்தியோகத்தில் நெறி தவறி நடந்த நிர்வாக அதிகாரியின் மீது பார்லிமென்டில் பழி சுமத்துதலுக்குப் பெயர் (நாடு கடத்தல், வாக்குரிமை பறித்தல், துரோகக் குற்றச் சாட்டு, அவசரப் பிரேரணை).

(b) 21 வயதுக்கு மேற்பட்ட மக்கள் அனைவரும் வாக்குரிமைப் பதிவு செய்யும் உரிமைக்குப் பெயர் (சுதந்திர வாக்குரிமை, முதியோர் வாக்குரிமை, இலவச வாக்குரிமை, கட்டாய வாக்குரிமை).

(c) பார்லிமென்ட் கூடாத காலங்களில் ஜனதிபதி அவசர நிலைமையை முன்னிட்டு வெளியிடும் சட்டங்களுக்குப் பெயர் (நிர்ப்பந்த சட்டங்கள், யூனியன் சட்டங்கள், தனி ஆணைகள், நிர்வாக முடக்கம்).

(d) சட்ட சபையில் ஆண்டிற் கொருமுறை பரிசீலிக்கப் படும் அரசாங்க வரவு செலவுக் கணக்குக்குப் பெயர் (நிதி மசோதா, தீர்வை விதித்தல், பணவீக்கம், பட்ஜெட்).

11. உங்கள் பள்ளியில் ஒவ்வொரு வகுப்பு மாணவர் களும் வகுப்பிற்கு ஆறு அங்கத்தினர்களைத் தேர்ந் தெடுத்துப் பள்ளிப் பார்லிமென்ட் ஒன்றை நிறுவுக. அவர்கள் ஒரு மந்திரி சபையை ஏற்படுத்திய பின்னர் பார்லிமென்டின் அலுவல் திட்டம் ஒன்றைத் தயாரித் திடுக. ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு தலைவ ரைத் தேர்ந்தெடுத்த பின்னர் அத் தலைவர்களின் மூல மாகப் பள்ளி ஜனாதிபதியையும் தேர்ந்தெடுத்திடுக.

---

# அத்தியாயம் 8

# நமது யூனியனில் அடங்கியுள்ள ராஜ்ஜியங்களின் ஆட்சியமைப்பு

## பகுதி 1

### ராஜ்ஜியங்களின் சுதந்திரம்

நமது இந்திய யூனியன் பல ராஜ்ஜியங்கள் இணைந்த ஒரு சிறந்த அரசியல் அமைப்பாகும் (Union of States). நம் அரசியல் இங்கிலாந்து, பிரான்ஸ் போன்று யூனிடரி அல்லது ஒற்றையரசியல் அன்று. அந்த நாடுகளில் நிர்வாக அதிகாரங்கள் அனைத்தும் ஒரு மத்திய அரசாங்கத்திடமே உள்ளன. இவ்வாறன்றிச் சில நாடுகளில் நாடனைத்திற்கும் நலந்தரும் பொது நிர்வாகத்தை மத்திய அரசாங்கமும், அவற்றிலடங்கிய அரசியல் பகுதிகள் தத்தம் நிர்வாகத்தை தாமே நடத்தியும் வருகின்றன. இத்தகைய அரசியலுக்குக் கூட்டாட்சி அமைப்பு (Federal Constitution) என்று பெயர். ஆஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்க நாடுகள் இத்தகைய

அரசியலைக் கொண்டு விளங்கி வருகின்றன. நமது இந்திய யூனியனும் இவற்றைப் போன்றே கூட்டாட்சி அரசியலைக் கொண்டு மிளிர்கின்றது. இந்தியக் குடியரசு, மாகாணங்கள் பலவற்றையும் சமஸ்தானங்கள் பலவற்றையும் கொண்ட ஒரு யூனியனாகும். மாகாணங்கள், சமஸ்தானங்கள் எல்லாம் ஸ்டேட்ஸ் (ராஜ்ஜியங்கள்) என்று வழங்கப்படுகின்றன. இதில் மத்திய அரசாங்கம், ராஜ்ஜிய அரசாங்கம் ஆகிய இவை இரண்டும் மக்களின் நலத்தைக் கூட்டாட்சி முறையில் கவனித்து வருகின்றன. அரசியல் அதிகாரங்களெல்லாம் யூனியன் அரசாங்கம் அல்லது மத்திய அரசாங்கத்தினிடம் மட்டும் இல்லை. நாடு முழுமைக்கும் நலந்தரும் பொது நிர்வாக அதிகாரம் மட்டுமே யூனியன் அரசாங்கத்தினிடமுள்ளது. அந்தந்த ராஜ்ஜியத்தின் நிர்வாகம் அந்தந்த ராஜ்ஜியத்தினிடம் இருந்து வருகிறது.

யூனியனில் சேர்ந்த ராஜ்ஜியங்கள் தனி நிலைமை பெற்றவை; ஒவ்வொன்றும் தம் எல்லைக்குள் தமக்கு வேண்டிய சட்டங்களை இயற்றி, நிர்வாகத்தை நடத்திக் கொள்ளும் சுதந்திரம் உடையவை. அரசாங்கத்தின் கடமைகள் யாவும் நம் அரசியல் திட்டப்படி மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ராஜாங்க அதிகாரங்களுள் ஒரு பகுதி இந்திய யூனியன் அரசாங்கத்தினிடமும், மற்றொரு பகுதி ஸ்டேட் அரசாங்கத்தினிடமும், இன்னொரு பகுதி இரு சர்க்காரிடமும் உள்ளன. தேச பாதுகாப்பு, போக்குவரத்து வசதிகள், வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டு வர்த்தகம், பாங்கிகள், செலாவணி முதலியவற்றைக் கவனிப்பது யூனியன் அரசாங்கத்தின் பொறுப்பாகும். பொது ஜன அமைதி, போலீஸ், நீதி பரிபாலனம், சிறைச்சாலை, ஸ்தல ஸ்தாபனங்கள், சுகாதாரம், கல்வி, விவசாயம், ரஸ்தாக்கள் முதலியன ஸ்டேட் அரசாங்கப் பொறுப்பில் அடங்கியுள்ளன. கிரிமினல் சட்டம், சிவில் வழக்குகளின் நடைமுறை, பொருளாதாரச் சமூகத் திட்டங்கள், தொழிற் சங்கங்கள், சமூக நலப்

பாதுகாப்பு, இன்ஷியூரன்ஸ், மின்சாரம், ஜனன மரணக் கணக்கு முதலியன இரு அரசாங்கங்களுக்கும் பொதுவாக உள்ள பொறுப்புகளாகும்.

ராஜ்ஜியங்கள் பல வழிகளில் சுதந்திரம் உடையனவாகக் காணப்படினும், அவை யூனியன் அரசாங்கத்தை மீறி நடப்பதற்கு இயலாதனவாயுள்ளன. ஜனாதிபதிக்கு ராஜ்ஜியங்களின் அரசாங்கக் கொள்கையைக் கட்டுப்படுத்த அதிகாரம் உண்டு. தேசத்துக்குப் பேராபத்து, பொருளாதார நெருக்கடி, ராஜ்ஜியங்களில் நிர்வாக முடக்கம் முதலிய நெருக்கடிக் காலங்களில் ராஜ்ஜியங்கள் மத்திய அரசாங்கத்தின் முழு அதிகாரத்தின் கீழ் இருக்கும்.

## பகுதி 2

### ராஜ்ஜியங்கள்

ராஜ்ஜிய நிர்வாகமும் யூனியன் நிர்வாகத்தை ஒத்து விளங்குகின்றது. ராஜ்ஜிய அரசாங்கத்தின் உறுப்புக்களாவன:— க்வர்னர், மந்திரி சபை, சட்டசபை முதலியனவாம். இந்த ராஜ்ஜிய நிர்வாகத் தலைவர் கவர்னர் ஆவர். அவர் தம் நிர்வாக அதிகாரத்தை நேர் முகமாக அல்லது தனக்குக் கீழ்பட்ட அதிகாரிகளின் மூலமாய்ச் செலுத்தலாம். கவர்னர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார். அவரின் பதவியின் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் ஆகும். 35 வயது நிரம்பிய இந்தியப் பிரஜையாகவும், மத்திய அல்லது ராஜ்ஜிய சட்ட சபைகள் எவற்றிலும் அங்கத்தினர் அல்லாதவராகவும் இருத்தலே கவர்னராதற்குரிய தகுதிகளாகும். தற்சமயம் சென்னை கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி ஆவர்.

அதிகாரங்கள்: தலைமை அமைச்சரை கவர்னர் நியமிக்கிறார். பின்னர், தலைமை அமைச்சரின் ஆலோசனைப்படி ஏனைய மந்திரிகளையும் கவர்னர் நியமிக்கிறார். ராஜ்ஜிய நிர்வாகத்தின் பொருட்டு தக்க விதிகளை அவர் இயற்றலாம். சிற்சில சந்தர்ப்பங்களில் குற்றவாளிகட்குத் தண்டனையைக்

குறைக்கவும், மன்னிப்பளிக்கவும் அவருக்கு அதிகாரமுண்டு. சட்ட சபைகளுள் ஏதேனும் ஒன்றைக் கூட்டலாம் அல்லது ஒத்திப்போடலாம். கீழ்ச் சட்ட சபையைக் கலைப்பவரும் அவரே. சட்டசபை இயற்றிய மசோதாக்கள் சட்டமாவதற்கு அவரது அங்கீகாரத்தைப் பெறவேண்டும்; அவர் வேண்டுமானுல் ஜனுதிபதியின் இசைவுக்கு அவற்றை அனுப்பலாம்; சட்ட சபைகள் இயற்றிய மசோதாவை மீண்டும் புனராலோசனைக்கு அனுப்பலாம்; கவர்னர் இரு சபைகளுக்கும் வேண்டும்போது தம் நல்லுரையை வழங்குவதுண்டு. ஜனுதிபதியைப்போல் இவரும் சட்டசபை கூடாத காலங்களில் தம் தனியாணைகளைப் பிறப்பிக்கலாம். பண மசோதா கொண்டு வருவதானுலும், நிர்வாகச் செலவிற்கு மானியம் விரும்பினுலும் அவரது சம்மதம் வேண்டும். பொதுவாக, அவர் எல்லா விவகாரங்களிலும் மந்திரி சபையின் கருத்துப்படியே நடப்பார். யுக்தானுசாரமாக நடக்கவேண்டிய விஷயங்களில் கவர்னரின் தீர்ப்பே முடிவானது.

**மந்திரி சபை:** மத்திய அரசாங்கத்திலுள்ளது போலவே ராஜ்ஜியத்திலும் கவர்னருக்குத் தமது நிர்வாகக் கடமைகளைச் செலுத்துவதற்கு உதவி புரியவும், ஆலோசனை கூறவும் ஒரு மந்திரி சபை உண்டு. இம் மந்திரிகள் பொதுவாகச் சட்டசபையில் பெரும்பான்மைக் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பர். மந்திரி சபையின் தலைவர் முதல் அமைச்சராவர் (Chief Minister). இவர் கவர்னரால் நியமிக்கப்படுகிருர். ஏனைய மந்திரிகள் முதல் அமைச்சரின் ஆலோசனைப்படி நியமிக்கப்படுகின்றனர். மந்திரிகள் கீழ்ச் சட்டசபைக்குக் கூட்டாகப் பொறுப்புடையவர்கள். கீழ்ச் சட்டசபையின் விசுவாசம் உள்ள வரையிற்ருன் மந்திரிசபை உயிர் பெற்றிருக்கும். சட்டமாகக் கருதிய தீர்மானங்களைப்பற்றி முதல் அமைச்சர் மந்திரி சபையின் முடிவுகளைக் கவர்னருக்கு அறிவிப்பார். ராஜ்ஜிய மந்திரிகளும் யூனியன் மந்திரிகளைப் போன்று நிர்வாக இலாக்காக்கள் பலவற்றையும் தம்முள்

பாகுபடுத்திக் கொண்டு அரசாங்க யந்திரத்தைச் செலுத்தி வருகின்றனர்.

ஸ்டேட் சட்டசபை: இது இரு பிரிவுகளுடையது. அவை கீழ்ச் சபை அல்லது லெஜிஸ்லேடிவ் அசெம்பிளியும் மேல்சபை அல்லது லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலும் ஆகும். லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளியின் ஆயுட்காலம் ஐந்தாண்டுகளாகும். அதன் அங்கத்தினர்கள், அந்தந்த ராஜ்ஜியங்களிலுள்ள 21 வயது நிரம்பியோரான இந்தியக் குடிகள் அனைவராலும் தேர்ந்தெடுக்கப்படுவர். அது 500-க்கு மேற்படாமலும் 60-க்குக் கீழ்ப்படாமலும் உள்ள அங்கத்தினர்களைக் கொண்டுள்ளது. தனித்தொகுதி கிடையாது. முன்னேற்றமடையாத தாழ்நிலையிலுள்ள ஹரிஜனங்கள், மலைஜாதியினர் போன்றோர்க்கு மட்டுமே சட்டசபையில் சில ஸ்தானங்கள் உறுதி செய்யப்படும். அன்றியும், தேர்தலில் ஆங்கிலோ-இந்தியருக்குத் தக்க ஸ்தானங்கள் கிடைக்காவிடில் கவர்னர் அவ்வினத்தைச் சார்ந்த சிலரைக் கீழ்ச்சபை அங்கத்தினராக நியமிக்கலாம். அங்கத்தினராக நிற்பவருக்குச் சில தகுதிகள் உள்ளன. அவர்கள், (1) இந்தியப் பிரஜையாக இருத்தல் வேண்டும்; (2) 25 வயது நிரம்பியவராய் இருத்தல் வேண்டும்; (3) மத்திய சட்டசபை குறிப்பிடும் ஏதேனும் வேறு தகுதி உடையவராய் இருத்தல் வேண்டும். கீழ்ச் சட்டசபை அங்கத்தினர்கள் ஒரு சபாநாயகரையும் (Speaker), ஒரு உதவி சபாநாயகரையும் (Deputy Speaker) தம்முள் தேர்ந்தெடுத்துக் கொள்வர்.

ஸ்டேட் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில், அல்லது மேல்சபை 40 அங்கத்தினர்க்குக் குறைவுபடாமலும், கீழ்ச் சபையின் தொகையில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகப்படாமலும் இருத்தல் அவசியமாகும். இதன் அங்கத்தினர்கள் சர்வஜன வாக்குரிமை மூலம் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். அதன் அங்கத்தினர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் கீழ்ச் சபையாலும், மற்றொரு மூன்றில் ஒரு பங்கினர் ஜில்லா போர்டுகள்,

நகர சபைகள் போன்ற ஸ்தல ஸ்தாபனக் கழகங்களாலும், பன்னிரண்டில் ஒரு பங்கினர் பல்கலைக் கழகப் பட்டதாரிகளாலும், மற்றொருபன்னிரண்டில் ஒரு பங்கினர் பள்ளி ஆசிரியர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுவர். எஞ்சியுள்ளோர் இலக்கியம், விஞ்ஞானம், கலை, கூட்டுறவு இயக்கம், சமூக சேவை ஆகிய துறைகளில் சிறப்புப் பெற்றவர்களுள் தலையாயினோர் கவர்னரால் நியமிக்கப்படுவர். மேல்சபை நிரந்தரமானது. இரு ஆண்டுகட்கு ஒரு முறை அதன் அங்கத்தினர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் பதவியிலிருந்து விலகுவதால் அந்த ஸ்தானங்கட்கு மட்டும் தேர்தல் நடக்கும். மேல்சபைக்கு அபேட்சகராக நிற்பவர்கள் 30 வயது நிறைந்த இந்தியப் பிரஜையாக இருத்தல் வேண்டும். மேல் சபையினர் ஒரு தலைவரையும் (Chairman), ஒரு உபதலைவரையும் தம்முள் தேர்ந்தெடுத்துக் கொள்வர்.

**இரு சபைகளின் அதிகாரங்களும் வேலையும்:** ராஜ்ஜியத்துக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ராஜ்ஜிய சட்ட சபை சட்டங்கள் இயற்றலாம். பண மசோதா நீங்கலாக ஏனைய மசோதா யாதாயினும், எச்சபை மூலமேனும் கொண்டு வரலாம். ஆனால், இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்ட பின்னர்தான் அவை சட்டமாகும். கீழ்ச் சபையில் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதாவிற்கு மேல்சபையினர் திருத்தங்களைச் சிபார்சு செய்தாலும், அல்லது அம் மசோதாவை ஒப்புக்கொள்ளாவிட்டாலும், கீழ்ச் சபைக்கு மேல் சபையினரின் கருத்தை ஏற்கவும், மறுக்கவும் அதிகாரம் உண்டு. கீழ்ச் சபையின் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாகும். சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதாவானது சட்டமாவதற்கு கவர்னரின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

பண மசோதாக்கள் யாவும் முதலில் கீழ்ச் சபையிற்றான் கொண்டுவரப்படல் வேண்டும். அவ்வாறு கொண்டுவருங்கால் கவர்னரின் அனுமதியை பெற்றிருத்தல் வேண்டும். செலவு

இனங்கள் இரு சபைகளாலும் விவாதிக்கப்படும். ஆனால், இறுதித் தீர்ப்பு கீழ்ச் சபையினதே ஆகும்.

பகுதி 3

ஆட்சி இலாக்காக்கள்: ஸ்டேட்டுகளின் அரசாங்கம் செவ்வனே நடைபெறப் பல இலாக்காக்களாக வகுக்கப் பட்டுள்ளது. அவற்றுள் முக்கியமானவை செலவு நிதி, பொது நிதி, போலீஸ், பொதுச் சுகாதாரம், கல்வி, பொது மராமத்து, தல ஆட்சி, சட்டம், நீதி, சிறைச்சாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள், மது விலக்கு, விவசாயம், உணவு, நிலவரி, கைத்தொழில் முதலிய பலவாகும்.

ஆட்சி இலாக்காக்கள் யாவும் சட்டசபைக்குப் பொறுப்பு வாய்ந்த மந்திரிகளின் நிர்வாகத்தின்கீழ் இருந்து வரும். அரசாங்க இலாக்காக்கள் ஒவ்வொன்றையும் கவனித்துவரத் தனித்தனி மந்திரிகளை நியமித்தல் இயலாது. எனவே, ஒவ்வொரு மந்திரியும் சில குறிப்பிட்ட இலாக்காக்களைப் பார்த்து வரவேண்டியிருக்கிறது. மந்திரிகளுக்குத் தங்கள் இலாக்காக்களின் நிர்வாகத்தில் நிரந்தர சிவில் உத்தியோகஸ்தர்கள் உதவிபுரிந்து வருவார்கள். மந்திரிகள் அடிக்கடி மாறிவருவதால், இந்த நிரந்தர உத்தியோகஸ்தர் களே ஆட்சி இலாக்காக்களின் நடைமுறை நுட்பங்களில் நிறைந்த அனுபவம் பெற்றவராவர். ஒவ்வொரு இலாக்காவும் இத்தகைய உத்தியோகஸ்தரின் தலைமையின் கீழிருக்கும். இவர்களுக்குச் செகிரடரி என்று பெயர். செகிரடரி பார்த்து-வரும் பகுதிக்குச் செகிரடேரியட் என்று பெயர். இவர்கள் உயர்ந்த பட்டதாரிகளாகவும், யூனியன் அரசாங்கப் போட்டிப் பரீக்ஷைகளில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், அனுபவம் நிறைந்தவர்களாகவும் இருப்பர். ஒவ்வொரு செகிரடரியின் கீழும் டெபுடி செகிரிடரியும், துணை செகிரடரி களும் உள்ளனர். ஒவ்வொரு இலாக்காவிலும் துணை செகிரடரியின் கீழ்ப் பல அலுவலகங்கள் (Sections)

உள்ளன. ஒவ்வொரு அலுவலகத்திலும் ஒவ்வொரு சூபரின்டென்டென்ட் இருப்பார். அவர்களின் கண்காணிப்பில் பல குமாஸ்தாக்கள் இருப்பர். எல்லாச் செகிரடரிகளுக்கும் தலைமை செகிரடரி (Chief Secretary) ஒருவர் உள்ளார். ஒவ்வொரு இலாக்கா சம்பந்தமாக உள்ள விரிவான விஷயங்களைக் கவனிக்கத் தனி நிர்வாகக் கிளைகள் உள்ளன. ஒவ்வொரு கிளையும் திறமை மிக்க உத்தியோகஸ்தரின் கீழிருக்கும். இவ்வாறு முக்கியமானவர்கள் கல்வி அதிகாரி (Director of Public Instruction), கைத்தொழில் அதிகாரி (Director of Industries), பொதுச் சுகாதார அதிகாரி (Director of Public Health), விவசாய அதிகாரி (Director of Agriculture), விலங்குகட்கு நலம்புரி அதிகாரி (Director of Animal Husbandry) முதலியோர் ஆவர். ஒவ்வொரு அதிகாரியின் கீழ்ப் பல உத்தியோகஸ்தர்களும், குமாஸ்தாக்களும் உள்ளனர். இவர்கள்தான் நிர்வாக சம்பந்தமான அலுவல்களை நடைமுறையில் மக்களுடன் தொடர்புப் படுத்துவோராவர்.

அரசாங்க ஊழியர்கள் 'கெஜட் பதவி' பெற்றவர் (Gazetted Service) என்றும், நடுத்தர ஊழியர் (Subordinate Service) என்றும், கீழ்த்தர ஊழியர் (Inferior Service) என்றும் மூவகைப்படுவர். ஒவ்வொரு இலாக்காவிலும் சில உயர் பதவிகள், கெஜட் பதவிகள் என்று விதிக்கப்பட்டுள்ளன. குமாஸ்தாக்கள் அனைவரும் நடுத்தரப் பிரிவிற்குட் பட்டவர்கள். இப்பகுதியில் மேல் பிரிவு (Upper Division) என்றும், கீழ்ப்பிரிவு (Lower Division) என்றும் இரு பிரிவுகள் உள்ளன. இவர்கள் மினிஸ்டீரியல் சேவையில் அடங்கினவர் ஆவர். பணியாட்கள் அனைவரும் கீழ்த்தர சேவையில் அடங்கினோர் ஆவர்.

### பயிற்சி

1. *ஒற்றை அரசியல், கூட்டாட்சி அரசியல் என்றால் என்ன? இவற்றிற்கு ஏற்ற உதாரணங்களாகச் சில*

மேனுடுகளைக் கூறுக. நமது அரசியல் எவ்வகையில் சேர்ந்தது? அவ்வாறு கூறக் காரணம் என்ன?

2. நமது குடியரசு ஒரு யூனியன் என்று அழைக்கப் படுவானேன்? நமது யூனியனிலுள்ள ராஜ்ஜியங்கள் எவ்வாறு சுதந்திரம் பெற்றவை?

3. யூனியன் பொறுப்பிலுள்ள நிர்வாக விஷயங்கள் ராஜ்ஜியங்களின் பொறுப்பிலுள்ள நிர்வாக விஷயங்கள், இவ்விரண்டின் பொறுப்பிலுள்ள பொது நிர்வாக விஷயங்கள், ஆகிய ஒவ்வொன்றிற்கும் மூன்று உதாரணங்கள் தருக.

4. யூனியன் சட்டத்திற்கும் ராஜ்ஜியங்களின் சட்டத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

5. கவர்னர் என்பவர் யார்? அவர் எப்படி நியமிக்கப் படுகிறார்? அவருடைய முக்கிய அதிகாரங்கள் யாவை?

6. ராஜ்ஜியங்களின் மந்திரிகள் எப்படி நியமிக்கப்படுகின்றனர்? அவர்கள் யாருக்குப் பொறுப்புடையவர்கள்?

7. ராஜ்ஜியங்களில் கீழ்ச் சட்டசபை, மேல் சட்டசபை இவற்றின் அமைப்பு, அங்கத்தினர்களின் தொகை, அவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வகை, அதிகாரங்கள், முதலியன யாவை?

8. ராஜ்ஜியங்களின் ஆட்சி இலாக்காக்களில் சிலவற்றைக் குறிப்பிடுக. அரசாங்க செகிரடரிகள் யாவர்? அவர்கள் இருத்தலின் அவசியம் யாது?

9. சென்னை அசெம்பிளியும் கௌன்ஸிலும் கூடும் காலங்களில் அங்குச் சென்று, அலுவல்கள் நடைபெறும் முறையைக் கவனித்திடுக. அரசாங்கக் காரியாலயங்களுக்குச் சென்று நிர்வாக அலுவல்கள் நடைபெறுதலை ஊன்றிக் கவனித்திடுக. அரசாங்க செகிரடரியை உங்கள் பள்ளி மன்றத்திற்கு வரவழைத்து, அவரது வாயிலாக அவர் ஆட்சி இலாக்காவின் நிர்வாகத்தைப் பற்றித் தெரிந்து கொள்க.

# அத்தியாயம் 9

# ஸ்தல ஆட்சி

## பகுதி 1

### ஸ்தல ஆட்சியின் தன்மை

நாம் இதுகாறும் நாடு அனைத்திற்கும் பொதுவான விஷயங்களைக் கவனிக்கும் யூனியன் அரசாங்கத்தைப் பற்றியும், தத்தம் பகுதியை மட்டும் கவனிக்கும் ஸ்டேட் அரசாங்கத்தைப் பற்றியும் படித்தோம். இங்கு ஒவ்வொரு ராஜ்ஜியத்தின் உட் பகுதிகளில் நடைபெறும் ஆட்சி முறையை அறிவோமாக. ஒவ்வொரு ராஜ்ஜியமும் ஜில்லா, தாலூகா, கிராமம் எனப் பல பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுப் பலதரப்பட்ட அரசாங்க உத்தியோகஸ்தர்களின் மூலம் ஆட்சி செலுத்தப்படுகிறது. இம்முறை பண்டைக் காலத்தும் இருந்ததல்லவா? இங்ஙனம் ஒரு குறித்த பிரதேசத்தில் அரசாங்க உத்தியோகஸ்தரின் மூலமாக நடைபெறும் ஆட்சிக்கு ஸ்தல ஆட்சி (Local Government) என்று பெயர். அன்றியும் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் வாழும் மக்கள், தாங்களே தேர்ந்தெடுத்துக்கொண்ட பிரதிநிதிகளின் மூலமாய்த் தம் அரசாங்கத்தின் ஆதரவின் கீழ்த் தங்கள் நலத்தின் பொருட்டுச் சில விஷயங்களின் ஆட்சியை நடத்தி வரலாம். இதற்கு ஸ்தல சுய ஆட்சி (Local Self-Government) என்று பெயர்.

## பகுதி 2

### ஸ்தல ஆட்சி உத்தியோகஸ்தர்கள்

ஜில்லா கலெக்டர்: ராஜ்ஜிய நிர்வாகத்தைக் கருதி, ஒவ்வொரு ராஜ்ஜியமும் ஜில்லா, தாலுகா, நகரம், கிராமம் என்னும் பல பிரிவுகளாக அமைத்து ஆளப்பட்டு வருகிறது. ஸ்தல ஆட்சி புரியும் உத்தியோகஸ்தர்களுள் மிகவும் முக்கியமானவர் கலெக்டராவார். இவர்தான் ஜில்லாவின்

தலைமை நிர்வாக அதிகாரி. ஆங்கில ஆட்சி நம் நாட்டில் ஏற்பட்ட காலத்தில் வரி வசூலிப்பதற்காக ஒவ்வொரு ஜில்லாவிற்கும் கலெக்டர் என்னும் ஆங்கில அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். வரி வசூலிப்பதே ஜில்லா அதிகாரிகளின் முக்கியக் கடமை ஆனதால், அவர்கள் கலெக்டர் என்று அழைக்கப்பட்டனர். கலெக்டர்களை முதன் முதலில் நியமித்தவர் வாரன் ஹேஸ்டிங்ஸ் என்னும் முதற் கவர்னர் ஜனரல் ஆவர். நாளடைவில் ஜில்லாவில் நடக்க வேண்டிய எல்லா நிர்வாக அலுவல்களுக்கும் இவர்களே பொறுப்புள்ளவர்களாக ஆக்கப்பட்டனர். வரிவசூலைக் கவனிப்பதுடன் ஜில்லா மாஜிஸ்டிரேட் எனும் பெயருடன் ஜில்லாவின் அமைதியைக் காப்பதும் இவர்களின் மற்றொரு முக்கியக் கடமையாயிற்று. காந்தியடிகள் இந்த கலெக்டர்கள்தான் பிரிட்டிஷ் இந்தியாவின் உண்மை ஆட்சியாளர்கள் எனக் கூறியது மிகையன்று.

முதலில் கலெக்டர்கள் யாவரும் அப்போது ஆங்கிலேயர்களாகவே இருந்தனர். கி. பி. 1853 வரை இவர்களைக் கிழக்கிந்தியக் கம்பெனி தன் விருப்பப்படி நியமித்து வந்தது. ஆனல், அவ்வாண்டிற்குப் பின்னர் இங்கிலாந்தில் நடைபெற்ற போட்டிப் பரிக்ஷையில் வெற்றி பெற்றவர்களே கலெக்டர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் ஐ. ஸி. எஸ். (Indian Civil Service) உத்தியோகஸ்தர்கள் என்று அழைக்கப்படலாயினர். விக்டோரியா மகாராணியாரின் சாஸனத்துக்குப் பிறகு, இந்தியர்களும் ஐ. ஸி. எஸ். பரீக்ஷைக்குப் படித்துத் தகுதியுடையவராயினர். இங்ஙனம் ஐ. ஸி. எஸ் பரீக்ஷையில் முதன் முதலில் தேர்ச்சி பெற்றவர் புகழ்சேர் வங்கச் சிங்கமான சுரேந்திரநாத் பானர்ஜி ஆவர். முதற்கண் இந்தியர்கள் விரைவில் கலெக்டர்களாக நியமிக்கப்படவில்லை. தேசீய காங்கிரஸ் ஏற்பட்ட பின்னரும், கி. பி. 1909-ஆம் ஆண்டு மின்டோ-மார்லி சீர்திருத்தங்களுக்குப் பின்னருமேதான் இந்தியர்கள்

கலெக்டர்களாக நியமிக்கப்படலாயினர். இந்தியா உரிமை பெற்ற பின்னர், கலெக்டர்கள் யாவரும் நம் நாட்டினரே ஆயினர். இவர்கள் தற்போது ஐ. ஸி. எஸ். என்னும் பெயருக்குப் பதிலாக ஐ. ஏ. எஸ். (Indian Administrative Service) உத்தியோகஸ்தர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இதற்காக யூனியன் போட்டிப் பரீக்ஷை ஆண்டு தோறும் நடைபெறுகிறது.

தற்போதும் ஜில்லாவின் முக்கிய நிர்வாக அதிகாரி கலெக்டரே ஆவர். ஸ்டேட் அரசாங்கத்தின் எல்லா நிர்வாக அலுவல்களும் அவர் வாயிலாகத்தான் ஜில்லா முழுமைக்கும் சென்று நிறைவேற்றப்படுகிறது. நிலவரி வசூலைக் கவனிப்பதே இன்னும் கலெக்டரின் முக்கியக் கடமையாக இருந்து வருகிறது. கலெக்டருக்கு உதவி செய்ய அவர் கீழ் டெபுடி கலெக்டர், சப் கலெக்டர், துணைக் கலெக்டர் என்னும் உத்தியோகஸ்தர்கள் உள்ளனர். ஜில்லாவின் சிறு பகுதிகள் இவர்களின் கீழுள்ளன. சப் கலெக்டரும், துணைக் கலெக்டரும் I. A. S. உத்தியோகஸ்தர்கள் ஆவர். டெபுடி கலெக்டர் மினிஸ்டீரியல் பதவியிலிருந்து படிப்படியாக உயர்ந்து வந்தவர். அன்றியும் கலெக்டருக்குக் கீழ்ப்பட்ட தாசில்தார், டெபுடி தாசில்தார், ரெவின்யு இன்ஸ்பெக்டர் எனும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும், கிராம உத்தியோகஸ்தர்களும் உள்ளனர். தாசில்-தாரும் டெபுடி தாசில்தாரும் தாலூகாவின் அதிகாரிகள் ஆவர். கிராம உத்தியோகஸ்தர்கள் உட்பட மேற்கூறிய அனைவரும் கலெக்டருக்கு வரிவசூலைக் கவனிப்பதில் உதவி புரிபவராவர். தற்போதைய அரசியல் ஏற்பாட்டின்படி கலெக்டர்களும் தாசில்தார்களும் அமைதியைக் காக்கும் மாஜிஸ்டிரேட் அதிகாரங்களை இழப்பார்கள். இருப்பினும் ஜில்லாவின் பொதுநலனைப் பாதுகாத்து அதனை ராஜ்ஜிய அரசாங்கத்துடன் தொடர்புபடச் செய்பவர் கலெக்டரே ஆவர்.




படம் 18. ஸ்தல சுய ஆட்சி

ஜில்லா நிர்வாகத்தில் கலெக்டருக்கு உதவி செய்ய வேறு சில அரசாங்க நிர்வாக உத்தியோகஸ்தர்களும் ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ளனர். அவர்களுள் முக்கிய மானவர்கள் ஜில்லா கல்வியதிகாரி, போலீஸ் சூபரின்டென்டென்ட், பத்திரப் பதிவு செய்பவர் (Registrar), இன்ஜினியர், வைத்திய அதிகாரி, தொழில் அதிகாரி (Labour Officer), காட்டிலாக்கா அதிகாரி, கூட்டுறவு இலாக்கா அதிகாரி முதலிய பலராவர். இவர்கள் யாவரும் ராஜ்ஜிய அரசாங்கத் திட்டங்களை ஜில்லாவில் நிறைவேற்றுபவர் ஆவர். இவர்களின் வேலையைக் கலெக்டர் மேற்பார்வையிட்டு அனைவரும் ஜில்லாவின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்புடன் பாடுபடும்படிச் செய்வார்.

## பகுதி 3

### ஸ்தல சுய ஆட்சி

முனிசிபாலிடிகள், கிராமப் பஞ்சாயத்துக்கள் போன்ற ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்கள் பண்டைக் காலத்திலேயே விளங்கி வந்துள்ளதை நாம் நம் நாட்டுச் சரித்திர வாயிலாக அறிகின்றோம். பிரிட்டிஷ் ஆட்சியில் இவையாவும் நிலைகெட்டு அவர்களின் அதிகாரத்தின் கீழ் வந்தன. பரந்த நோக்கங் கொண்ட ரிப்பன் பிரபு இந்திய இராஜப் பிரதிநிதியாய் வந்த பின்னர் இந்நாட்டினருக்கு அரசியல் கல்வி பயிற்சி அளிக்க விரும்பினர். அதனல் அவர் கி. பி. 1883—84 ஆண்டிற்குள் நாட்டில் ஸ்தல சுய ஆட்சித் திட்டம் ஏற்படுத்தும் பொருட்டுப் பல சட்டங்களை இயற்றினர். அவற்றின்படி ஒவ்வொரு மாகாணத்திலும் ஜில்லா போர்டுகளும் முனிசிபாலிடிகளும் ஏற்பட்டன. ஜில்லா போர்டு ஜில்லாவுக்கும், தாலூகா போர்டு தாலூகாவுக்கும், முனிசிபாலிடி நகரத்திற்கும், தமக்குச் சம்பந்தப்பட்ட சில பொது விஷயங்களை அவை தனித்தனியே கவனிக்கலாயின. ஒவ்வொரு ஜில்லா போர்டும் பல தாலூகா போர்டுகளாகப் பிரிக்கப்பட்டது.

தாலூகா போர்டுகள் ஜில்லா போர்டின் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டன. இந்த ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கத்தினர்களுள் பலர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே. ஆனால், இவற்றின் தலைவர்கள் யாவரும் முதலில் அரசாங்க உத்தியோகஸ்தர்களாகவே இருந்து வந்தனர். பின்னர் அரசாங்கம் இவர்களுக்குப் பதிலாக உத்தியோகஸ்தர் அல்லாதாரை ஏற்படுத்தித் தனது அதிகாரத்தின் கீழ்ப் பணியாற்றும்படி செய்துள்ளது. கி. பி. 1919-ஆம் ஆண்டு மான்ட்-போர்டு சீர்திருத்தங்களினால் ஸ்தல ஸ்தாபனங்கள் மாகாண சட்டசபைக்குப் பொறுப்பு வாய்ந்த இந்திய மந்திரியின் கீழ் வந்தன. இந்த ஸ்தாபனங்களுக்குக் கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர், சாலைகள் அமைத்துக் காத்தல், பஞ்ச நிவாரணம், வைத்திய சாலைகள் ஏற்படுத்தல் முதலிய விஷயங்களைக் கவனிக்கும் பொறுப்புகள் அளிக்கப் பட்டன. இவற்றின் பொருட்டு ஸ்தல ஸ்தாபனங்கள் சில வரிகள் விதிக்கும் உரிமைகளையும் பெற்றன. சுதந்திர இந்தியாவில் ஜில்லா போர்டுகள், தாலூகா போர்டுகள், கார்ப்பரேஷன்கள், முனிசிபாலிடிகள், கிராமப் பஞ்சாயத்துக்கள் முதலியன மக்களுக்குப் பயன்தரும் முறையில் உரிமையுடன் பணியாற்றி வருகின்றன.

ஜில்லா போர்டுகள்: ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு ஜில்லா போர்டு உள்ளது. ஜில்லா ஸ்தல சுய ஆட்சி அனைத்தும் ஜில்லா போர்டின் மூலமாக நடைபெறுகிறது. ஜில்லா பேர்டு 52-க்கு மேற்படாமலும் 24-க்குக் குறைவு படாமலும் உள்ள அங்கத்தினர்களைக் கொண்டுள்ளது. இவ்வங்கத்தினர்கள் ஜில்லாவில் வாழும் குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஜில்லா போர்டுக்கும் ஒவ்வொரு தலைவரும் (President), உதவித் தலைவரும் (Vice President) அதன் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அங்கத்தினருக்கு ஊதியம் யாதொன்றும் இல்லை. கல்வி, நாட்டுப்புற முன்னேற்றம், பொதுச்

சுகாதாரம், மராமத்து வேலைகள், போக்கு வரத்துக்கள், குடிதண்ணீர் வசதிகள் முதலியவற்றைக் கவனிக்க ஜில்லா போர்டில் நிரந்தரக் கமிட்டிகள் (Standing Committees) உள்ளன. போர்டின் கூட்டத்திற்குப் பிரஸிடென்ட் அல்லது வைஸ் பிரஸிடென்ட் தலைமை வகிப்பார். தலைவருக்கும் போர்டுக்கும் ஏதாவது பலத்த விவாதம் ஏற்பட்டால் ஸ்தல சுய ஆட்சியில் தலையிட ஜில்லா கலெக்டருக்குச் சில அதிகாரங்கள் உள்ளன. அங்கத்தினர்களுக்குப் போர்டின் ரிகார்டுகளையும், அதன் வேலைகளையும், சொத்துக்களையும் பரிசீலிக்க உரிமை யுண்டு. அன்றியும், அவர்கள் தம் பகுதியில் வாழும் மக்களின் தேவைகளையும், ஜில்லாவின் முன்னேற்றத்திற்கு ஆவனவற்றையும் கவனித்து வருவார்கள். சென்னை ராஜ்ஜியத்தில் ஜில்லா போர்டுகளை எடுத்து விட்டு, அவைகளுக்குப் பதிலாக பஞ்சாயத்து சபைகளை ஏற்படுத்த நம் அரசாங்கம் ஏற்பாடுகள் செய்துவருகின்றது.

ஜில்லா போர்டு தன் கடமைகளை நிறைவேற்ற அதற்குப் பலவகை வருவாய்கள் உள்ளன. (1) லைசென்ஸ் வரி, தொழில்வரி, சொத்துவரி, சந்தைவரி முதலிய முக்கிய வரிகளும், குத்தகைக் கட்டணமும் முக்கிய வருவாய்களாம். (2) அரசாங்கத்தாரால் ஒவ்வொரு ஜில்லாவிலும் செஸ்ஸுகள் (Cess) எனும் தனி வரிகள் வசூலிக்கப்பட்டுப் போர்டுகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. (3) ஆண்டு தோறும் ஒவ்வொரு ஜில்லா போர்டும் ராஜ்ஜிய அரசாங்கத்தினிடமிருந்து பெருங் கொடை (Grant) பெறுகிறது.

முனிசிபாலிடிகள் : ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களின் மற்றொரு பகுதி நகரங்களிலுள்ள நகராண்மைக் கழகங்களாகும். இவற்றிற்கு முனிசிபாலிடிகள் என்று பெயர். இவற்றை ஏற்படுத்தவும், ஒழிக்கவும் ராஜ்ஜிய அரசாங்கத்திற்கு அதிகாரமுண்டு. ஒவ்வொரு முனிசிபாலிடியும் தனக்கென்று ஒரு சபையையும், தலைவர் ஒருவரையும், நிர்வாக அதிகாரிகள் சிலரையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு நகர-

மும் பல வார்டுகளாக வகுக்கப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அங்கத்தினர் மூன்றுண்டுகட்கு ஒரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ராஜ்ஜிய கீழ்ச் சட்ட சபையில் வாக்காளர்களே முனிசிபாலிடியின் வாக்காளராவர். முனிசிபல் சபையின் தலைவருக்கு சேர்மன் (Chairman) என்று பெயர். இவர் சபையின் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிருர். அன்றியும் ஒரு உபதலைவரும் (Vice-Chairman) தேர்ந்தெடுக்கப்படுகிருர். இவர்கட்கு யாதொரு ஊதியமும் இல்லை. சபையின் கூட்டத்திற்கு சேர்மன் தலைமை வகிப்பார். மேலும், சபையின் ஒவ்வொரு நிரந்தரக் கமிட்டியிலும் அவர் அங்கத்தினராக இருப்பார்.

முனிசிபாலிடிகள் மூன்று தரங்களாக அரசாங்கத்தாரால் வகுக்கபட்டுள்ளன. ஒவ்வொன்றுக்கும் **கமிஷனர் என்னும் மேலதிகாரி அரசாங்கத்தாரால் நியமிக்கபடுகிருர்.** அவர் முனிசிபாலிடியின் அன்றுட வேலையைப் பார்த்துக் கொண்டு மூன்றுண்டுகள் பதவியிலிருப்பார். நகரமும் நகர மக்களும் நலமுறத் திகழ்ந்திட நகரசபை நற்பணி புரியுமாறு செய்விப்பதே அவரின் முக்கியக் கடமையாகும். முனிசிபாலிடிகள் தோறும் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட வேறு சில உத்தியோகஸ்தர்களும் உள்ளனர். இவர்களுள் முக்கியமானவர்கள் சுகாதார அதிகாரி, மருத்துவ அதிகாரி, இன்ஜினீயர் அல்லது சூப்பிரவைசர் முதலிய பல்ராவர்.

மாதத்திற்கொரு முறையேனும் முனிசிபல் சபை கூடுதல் வேண்டும். நகர பரிபாலனம் இச் சபையிடம் இருப்பதால் நிர்வாக அதிகாரிகள் செய்யும் தவறுகளை அங்கத்தினர்கள் குறிப்பிடுவதற்குரியவராவர்; அன்றியும், அங்கத்தினர்கள் நகர அபிவிருத்திக்கேற்ற ஆலோசனைகளையும் கூறலாம்; நகர முன்னேற்றத்தைக் குறித்து வேண்டிய தீர்மானங்களைக் கொண்டுவரலாம்; நகர நிர்வாகத்தைக் குறித்துச் சேர்மனைக் கேள்விகள் கேட்கலாம். பரிபாலன செலவுக்காக வரி விதிக்கும் அதிகாரம் முனிசி-

பாலிடிக்கும் உண்டு. சொத்துவரி, தொழில்வரி, வாகன வரி, கைத்தொழில்வரி, சந்தைவரி, குத்தகைக் கட்டணம் முதலியன முனிசிபாலிடியின் முக்கிய வருவாய்களாம்.

நகரக் குடிதண்ணீர் வசதி, பொதுச் சுகாதாரம், மார்க்-கெட்டுகள், கொள்ளை நோய்த் தடை, பொதுச்சாலைகள் அமைத்தல், கல்வி முதலிய பலவற்றையும் முனிசிபாலிடிகள் சிறப்பாகக் கவனிக்கின்றன. கலெக்டர் மூலமாக ராஜ்ஜிய அரசாங்கத்திற்கு முனிசிபாலிடிகள் தம் நிர்வாக நிலைமைகளை அறிவித்தல் வேண்டும். கலெக்டருக்கு முனிசி-பாலிடியின் மீது கண்காணிக்கும் அதிகாரம் உண்டு. முனிசிபல் சபை நிறைவேற்றிய தீர்மானத்தைத் தாமதித்து வைத்தல், அல்லது தள்ளுதல் செய்வதற்கு ராஜ்ஜிய அர-சாங்கத்திற்கு அதிகாரம் உண்டு. சரிவரக் கடமைகளை ஆற்றத் தவறிய முனிசிபல் சபைகளை ராஜ்ஜிய அரசாங்கம் கலைத்தல், அல்லது சில காலம் நிறுத்தம் செய்யலாம்.

**கார்ப்பரேஷன்கள்:** சென்னை, பம்பாய், கல்கத்தா, பங்களூர் போன்ற பெரிய நகரங்களில் உள்ள நகராண்மைக் கழகங்களுக்கு கார்ப்பரேஷன்கள் என்று பெயர். ஒவ்வொரு கார்ப்பரேஷனும், ஒரு சபையையும், நிரந்தரக் கமிட்டிகளையும், கமிஷனர் ஒருவரையும், நிர்வாக உத்தியோகஸ்தர் பலரையும் கொண்டு விளங்கும். நகர பரிபாலனத்தைக் கவனிப்பது இதன் முக்கிய கடமையாகும். நகரத் தொகுதிகளுக்கேற்பவே கார்ப்பரேஷனின் அங்கத்தினர் எண்ணிக்கையும் உள்ளது. ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு அங்கத்தினர் உளர். அவர் தம் தொகுதியில் வாழும் மக்களால் மூன்றுண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப் படுவர். ராஜ்ஜியக் கீழ்ச்சட்ட சபையின் வாக்காளர் அனை வரும் நகர சபையின் வாக்காளராவர். நகர சபையில் தொழில் வர்க்கச் சார்பிலும், வாணிபச் சார்பிலும் சில ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அன்றியும் நகரத்தில் நற்பண்பு வாய்ந்திருக்கும் சிலர் ஆல்டர்மன் என்றழைக்கப்

படும் கௌரவ நகராளராக நியமிக்கப்படுகின்றனர். அங்கத்தினர் பதவிக்குரிய காலம் மூன்ருண்டாகும். மாதம் ஒரு முறையாவது சபை கூடுதல் வேண்டும். கார்ப்பரேஷன் தலைவர் மேயர் எனும் நகராண்மைத் தலைவராவர். மேயரும், உதவி மேயரும் ஆண்டிற் கொருமுறை அங்கத்தினரால் தேர்ந்தெடுக்கப்படுவர். யாதொரு ஊதியமும் இவர்கட்கு இல்லை.

கார்ப்பரேஷன் கூட்டங்களுக்கு மேயர் தலைமை வகிப்பார். அவரில்லாத காலத்தில் உதவி மேயர் தலைமை வகிப்பார். ஒவ்வொரு நிரந்தரக் கமிட்டியிலும் மேயர் வீற்றிருப்பார். அவர் சபையின் நிகழ்ச்சிகளில் பங்கு எடுத்துக் கொள்ளுவதற்குரியவர் ஆவர். ஆனுல், தீர்மானம் கொண்டு வருவதோ அல்லது ஓட்டுச் செய்தலோ அவரால் இயலாது. ராஜ்ஜிய அரசாங்கத்திற்கும் கார்ப்பரேஷனுக்கும் நடக்கும் கடிதப் போக்குவரத்து அவர் மூலமாகத்தான் நடைபெறல் வேண்டும்.

நகர சபையின் நல்வாழ்விற்கேற்ப நகர பரிபாலனத்தைக் கவனிப்பதே சபையோரின் முக்கிய பொறுப்பாகும். கார்ப்பரேஷனின் வரவு செலவுக் கணக்குகளைப் பரிசீலிக்க அங்கத்தினர்க்கு உரிமையுண்டு. சரிவர நடைபெருத முனிசிபல் வேலையைப் பற்றியும், முனிசிபல் சொத்து வீணுதல், நகரப்பகுதியின் தேவை முதலியவற்றைப் பற்றியும் அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் நன்கு கவனஞ் செலுத்துமாறு அங்கத்தினர்கள் தூண்டலாம்; நகர முன்னேற்றங் கருதித் தம் கருத்துகளைத் தெரிவிக்கலாம்; தீர்மானங்களும் கொண்டுவரலாம். நகராட்சியின் பொருட்டு சுகாதார அதிகாரி, இன்ஜினீயர், மின்சார இன்ஜினீயர், ரெவின்யு ஆபீஸர், கல்வி அதிகாரி முதலியோர் நகர சபையால் நியமிக்கப்படுகின்றனர். நகராட்சிச் செலவுக்காக கார்ப்பரேஷன் சொத்துவரி, தொழில் ஸ்தாபனவரி, தொழில் வரி, வாகனவரி, விளம்பரவரி, உல்லாசக் காட்சிவரி முதலிய

வரிகளை விதிக்கிறது. அது அரசாங்கத்தினிடமிருந்து பெருங் கொடையையும் (Grant) பெறுகிறது.

நிரந்தரக் கமிட்டிகள்: நகராட்சியின் ஒவ்வொரு அமிசத்தையும் சிறப்பாகக் கவனிக்க நகர சபையினர் தம்முள் நிரந்தரக் கமிட்டிகளை (Standing Committees) ஏற்படுத்தியுள்ளனர். வரவு செலவுக் கணக்குகள், கல்வி, சுகாதாரம், வரி விதித்தல், செலவு நிதி, நகர அமைப்புடன் அதன் முன்னேற்றம், மராமத்து முதலிய ஒவ்வொன்றிற்கும் நிரந்தரக் கமிட்டிகள் உள்ளன. ஒவ்வொரு கமிட்டியிலும் நகர சபையின் அங்கத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு அங்கத்தினர் உள்ளனர்.

கமிஷனர் (ஆணையாளர்): ஒவ்வொரு கார்ப்பரேஷனிலும் கமிஷனர் என்னும் மேலதிகாரி ஒருவர் உளர். அவர் ராஜ்ஜிய அரசாங்கத்தாரால் நியமிக்கப்படுகிறார். அவர் நகரசபையின் அங்கத்தினர் அல்லர். அவர் மூன்றாண்டுக்கொருமுறை நீடிக்கப்பட்டுப் பதவியில் இருப்பார். முனிசிபல் சட்டவிதிகளை நிறைவேற்றும் நிர்வாகப் பொறுப்பு அவரிடம் உள்ளது. நகரசபை அவரது கண்காணிப்பில் தம் பணிகளை ஆற்றிவரும். நெருக்கடி காலங்களில் எத்தகைய நிர்வாகச் செயலையும் நிறைவேற்றி வைக்கும் அதிகாரம் அவருக்குண்டு. 500 ரூபாய் மாதச் சம்பளத்திற்குக் கீழ்ப்பட்ட பணியாளர்களை அவர் நியமிப்பார். எல்லாப் பணியாளர்களும் அவர் அதிகாரத்திற்குட்பட்டுப் பணி புரிவர்.

கார்ப்பரேஷன் தன் தீர்மானங்கள், செயல்கள் முதலிய எல்லாவற்றையும் ராஜ்ஜிய அரசாங்கத்திற்கு அறிவித்தல் வேண்டும். வீதி விளக்கு, குடிநீர் வசதி, தெருச் சுத்தம், சாலையமைப்பு, கல்வி, அசுத்தக் கழிவிடங்கள், சுகாதாரம், மருத்துவச்சாலை, கட்டட அமைப்பு, விடுதிகள், உணவுச் சாலைகள், கண்காட்சிச் சாலைகள், பூங்கா, சந்தைகள், கொள்ளைநோய் தடுப்பு, சேரி முன்னேற்றம், சிசு கர்ப்பிணிப்

பாதுகாப்பு, முதியோர் கல்வி முதலியவற்றைக் கார்ப்பரேஷன் சிறப்பாகக் கவனிக்கும்.

மேனுடுகளைப் போல் இங்கும் நகரத்தின் ஒவ்வொரு பகுதியில் வாழும் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளப் பொது உறவு இலாக்கா ஒன்றிருத்தல் வேண்டும். அன்றியும் மேனுடுகளைப்போல் நமது கார்ப்பரேஷன்களும் அசுத்தக் கழிவுத் தண்ணீரை ஜல மின்சக்தி உற்பத்தி செய்வதற்கும், கழிவுப் பொருள்களை நல்ல எருக்களாகத் தயாரித்தலுக்கும் பயன்படுத்தினுல் அதிகப் பலன் கிடைக்கும். எழுத்தறிவின்மையைப் போக்கல், நல்ல குடிமை யுணர்ச்சி, ஒத்துழைப்பு, நகரசபை நல்ல வருவாய் பெறச் செய்தல் ஆகியவற்ருற்ருன் நகரபரிபாலனம் வெற்றிபெறும்.

**கிராமப் பஞ்சாயத்துக்கள் :** கிராமப் பஞ்சாயத்துக்கள் என்பவை கிராம சபைகள் ஆகும். நமது அரசியல் அமைப்பின் பொது நோக்கங்களுள் ஒன்று ஒவ்வொரு ராஜ்ஜியமும் கிராமப் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி, அவை அதிகாரத்துடன் நிர்வாகத்தின் சுய ஆட்சிப் பகுதிகளாக விளங்கும்படி செய்வதேயாகும். சென்னை அரசாங்கத்தின் பஞ்சாயத்துச் சட்டம் 1951 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. 500 மக்கள் வாழும் கிராமந்தோறும் பஞ்சாயத்துச் சபைகள் ஏற்படும். 500 பேருக்குக் குறைவாக வாழும் சிறிய கிராமங்கள் ஒன்ருகச் சேர்க்கப்பட்டு ஒரு பஞ்சாயத்து அமைக்கப்படும். அன்றியும் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்திக் கொள்ளக் கிராமங்கள் வற்புறுத்தப்படும். கிராம ஜனத்தொகைக்குத் தக்கபடி பஞ்சாயத்துக்களில் 5 முதல் 15-வரையுள்ள அங்கத்தினர் இருப்பர். இவர்களுக்குப் பஞ்சாயத்தார்கள் என்று பெயர். இவர்கள் ஸ்டேட் கீழ்ச் சட்டசபை வாக்காளர் தகுதிப்படி கிராமவாசிகளால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் ; ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் தலைவர் ஒருவர் (President) கிராமவாசிகளால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

கிராம நிர்வாகத்தைக் கவனிப்பது பஞ்சாயத்தின் முக்கிய பொறுப்பாகும். கிராமத்திலுள்ள ஸ்தாபனங்கள் யாவும் பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழிருக்கும். பொதுச் சாலைகளை அமைத்துக் காத்தல், வீதி விளக்குகள், கிராம சுகாதாரம், கொள்ளை நோய்த் தடை முதலியவற்றைக் கவனித்தல் பஞ்சாயத்தின் முக்கியப் பொறுப்பாகும். அன்றியும் சிவில், கிரிமினல் நீதி வழங்குதலும், தம் எல்லைக்குட்பட்ட பத்திரங்களைப் பதிவு செய்தலும், நீர்ப்பாசன வேலைகளைக் கவனித்தலும், உள்ளூர் தருமங்களைக் கவனித்தலும், ஆரம்பப் பாடசாலை நடத்தலும், பொது மேய்ச்சல் நிலங்களைக் கவனித்தலும், தோப்புகள், புறம்போக்கு நிலங்கள், களத்து மேடுகள் முதலியவற்றைக் கவனித்தலும் அச்சபையின் பிற கடமைகளாகும். பொறுப்புமிக்க பஞ்சாயத்துக்கள், சந்தைகள், திருவிழாக்கள், மாட்டுக் கொட்டகைகள், விவசாயம், குடிசைத் தொழில், நூல் நிலையம், வாசகசாலை, விளையாடுமிடம், சிசு கர்ப்பிணிப் பாதுகாப்பு முதலியவற்றை விழிப்புடன் கவனித்தல் வேண்டும்.

கிராம பரிபாலனத்திற்காகப் பஞ்சாயத்துக்கள் வீட்டு வரி, வாகனவரி, தொழில்வரி முதலிய வரிகளை விதிக்கலாம். அரசாங்கத்தினின்று கிராம நில செஸ் வசூலிலிருந்தும் அவை கால் பங்கு பெறும். அன்றியும் ராஜ்ஜிய அரசாங்கத்தினிடமிருந்து மொத்த நில வசூலிலிருந்து $12\frac{1}{2}\%$ கொடைத்தொகை பெறும். இவ்வாருகப் பஞ்சாயத்துக்கள் கிராம முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டுக் கிராமவாசிகளுக்கு நல்ல பயனை அளித்துவரும்.

**ஸ்தல சுய ஆட்சியால் பல நன்மைகள் ஏற்படுகின்றன.** இதில் பங்கெடுத்துக் கொள்வதால் நல்ல நிர்வாகப் பயிற்சி ஏற்படுகிறது; இப்பயிற்சி பின்னல் ராஜ்ஜிய, யூனியன் நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொள்ள மிகவும் பயன்படுகிறது. ஸ்தல சுய ஆட்சி யூனியன், ராஜ்ஜிய அரசாங்கங்களை அவ்வப் பகுதியில் வாழும் மக்களுடன் தொடர்புப் படுத்து

கிறது. மக்களின் தேவைகள் இடத்திற்கு இடம் வேறுபடும். அன்றியும், அவை அவ்வப்போது மாறும். எனவே, ஒவ்வொரு ஸ்தல சுய ஆட்சிப் பகுதியில் வாழும் மக்களும் தங்களுக்கு வேண்டிய நலன்களைத் தங்கள் பிரதிநிதிகளின் மூலம் நன்கு பெறலாம். இதனால் யூனியன், ராஜ்ஜிய அரசாங்கங்களுக்கு நிர்வாகச் சுமையும் சிறிது குறைகிறது. ஸ்தல சுய ஆட்சி முறையால் சமூகத் தொண்டில் ஆர்வம் கொண்டவர்களுக்கு நல்ல வாய்ப்பு ஏற்படுகிறது. அனைத்தையும்விட ஸ்தல சுய ஆட்சிமுறையால் உண்மை ஜனநாயகம் நன்கு வளர்கின்றது.

### பயிற்சி

1. ஸ்தல ஆட்சி, ஸ்தல சுய ஆட்சி என்பன யாவை?
2. ஜில்லாவின் நிர்வாக அதிகாரி யார்? அவர் ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறார்? தற்போது அவருடைய முக்கியக் கடமைகள் யாவை? அவருக்குக் கீழுள்ள உக்தியோகஸ்தர்கள் யாவர்?
3. ஜில்லாவின் வேறு முக்கிய உத்தியோகஸ்தர்கள் யாவர்?
4. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலும், தற்பொழுதும் ஜில்லா நிர்வாக அதிகாரிகளின் பதவிப் பெயர்கள் யாவை?
5. யாருடைய முயற்சியால் ஸ்தல ஸ்தாபனத் திட்டம் நாடு முழுவதும் நடைமுறையில் கொண்டுவரப் பட்டது? ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்கள் யாவை? ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களால் ஏற்படும் முக்கிய நன்மைகள் யாவை?
6. முனிசிபாலிடி, கார்ப்பரேஷன் என்பன யாவை? அவற்றின் தலைவர்கள், நிர்வாக அதிகாரிகள் இவர்களின் பெயர் என்ன? அவர்களின் முக்கியக் கடமைகள் யாவை?
7. ஜில்லா போர்டு, முனிசிபாலிடி, கார்ப்பரேஷன், ஆகிய இவை ஒவ்வொன்றும் ஆற்றிவரும் முக்கியப்

பணிகள் யாவை? அவற்றின் முக்கிய வருவாய்கள் யாவை?

8. நிரந்தரக் குழுக்கள் என்பன யாவை? கார்ப்பரேஷனுடைய நிரந்தரக் குழுக்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

9. சென்னைப் பஞ்சாயத்துச் சட்டப்படி கிராம பஞ்சாயத்துக்களின் அமைப்பையும் முக்கியக் கடமைகளையும் குறிப்பிடுக. இச் சட்டப்படி கிராமங்களின் அதிகாரம் எவ்வாறு மேன்மைப்படும்?

10. காலி இடங்களை நிரப்புக:

(1) ஜில்லா போர்டின் தலைவர்——என்றும், முனிசிபாலிடியின் தலைவர்——என்றும், கார்ப்பரேஷனின் தலைவர்——என்றும் அழைக்கப்படுவர்.

(2) கலெக்டர் தகுதிபெற்ற முதல் இந்தியர்———.

11. பள்ளி நிர்வாகத்தின் பொருட்டு ஒரு சபையை நிறுவி, அதற்குத் தலைவராக மேயர் அல்லது சேர்மன் ஒருவரைத் தேர்ந்தெடுத்திடுக. பள்ளியின் அலுவல்களைக் கவனிக்க, உங்கள் சபையின் மூலம் நிரந்தரக் குழுக்களை அமைத்திடுக.

---

# அத்தியாயம் 10

## நீதி பரிபாலனம்

### பகுதி 1

#### நீதி

மலர் தலையுலகத்து மன்னுயிரெல்லாம் மழையையே நோக்கி வாழ்வதுபோல் ஒரு நாட்டுக் குடி மக்கள் அனைவரும் தம்மரசனின் செங்கோலையே நோக்கி வாழ்கின்றனர் என்று செங்கோலின் ஒப்பற்ற மேன்மையை வள்ளுவனர் மகிழ்வுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். அக்குறள்:

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி"

என்பதாம். செங்கோலிற்கு ஒப்பற்ற உயிர் போன்றது நீதி. சமூக வாழ்வில் மக்கள் தமக்குள் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒழுங்கு முறையே நீதி என்றும் கூறப்படு கிறது. அந் நீதியை அனைவரும் கொண்டொழுகுமாறு அரசு செய்வதே நீதி பரிபாலனமாகும்.

நீதியை அனைவர்க்கும் ஒப்ப வழங்க நீதிமன்றங்கள் உள்ளன. சொத்துரிமை சம்பந்தமான வழக்குகளுக்குச் சிவில் கோர்ட்டுகளும், அடிதடி கொலை சம்பந்தமான வழக்குகளுக்குக் கிரிமினல் கோர்ட்டுகளும் இருக்கின்றன. நம் அரசாங்கத்தின் பிரிவுகளுள் முக்கியமானவற்றில் ஒன்று நீதிபதித் தொகுதி (Judiciary) ஆகும். அது மக்களின் உரிமைகளையும், நலன்களையும், சுதந்திரத்தையும் பாதுகாக்கிறது. அரசியல் அமைப்பு நிலைநிற்பதற்கு இதுவே ஆதாரமாய் உள்ளது. நீதிமன்றங்கள் நம் நாட்டில் ஏற்பட்டுள்ள சிவில், கிரிமினல் சட்ட விதிகளின்படி நீதியை வழங்குகின்றன. இவை பல-தரப்பட்டுப் படிப்படியாய் அமைந்துள்ளன.

## பகுதி 2

### நம் நாட்டு நீதி மன்றங்கள்

(1) தலைமை நீதிமன்றம் அல்லது யூனியன் நீதிமன்றம் (Supreme Court): நம் நாட்டு நீதி மன்றங்களுள் உயர்ந்தது தலைமை நீதிமன்றம் அல்லது யூனியன் நீதிமன்றம் ஆகும். இதுவே இந்திய நீதிபதித் தொகுதிக்குச் சிகரமாயுள்ளது. இதில் ஒரு தலைமை நீதிபதியும் அவருடன் ஒன்றுபட்ட வேறு பத்து நீதிபதிகளும் உள்ளனர். தலைமை நீதிபதி ‘சிப் ஜஸ்டிஸ் ஆப் இந்தியா’ என்று அழைக்கப்படுவார். முன்னரேயுள்ள சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளையும் ஹைகோர்ட்டு நீதிபதிகளையும் ஜனாதிபதி கலந்தாலோசித்து தலைமை நீதிபதியை நியமிக்கிறார். தலைமை நீதிபதியைக் கலந்தாலோசித்து ஜனாதிபதியால் ஏனைய சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் நியமிக்கப்படுகின்றனர். இந்தியப் பிரஜையாய்

உள்ள—5 ஆண்டு அனுபவம் பெற்ற—ஹைகோர்ட்டு நீதிபதிகளும், 10 ஆண்டு நல்ல அனுபவம் வாய்ந்த நியாயவாதிகளும், சட்ட தத்துவ நிபுணர்களும் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகளாக நியமிக்கத் தகுதியுடையவர்கள். நீதிபதிகளின் சுயேச்சையான அந்தஸ்து அரசியல் அமைப்பில் உத்திரவாதம் பெற்றுள்ளது. 65 வயதுவரை நீதிபதிகள் பதவியில் இருக்கலாம். திறமையற்ற காரணத்தாலும், அல்லது தவருக நடந்த காரணத்தாலும் நீதிபதிகள் பதவியிலிருந்து நீக்கப்படலாம். யூனியன் சட்ட சபைகளின் விண்ணப்பத்தின் காரணமாகத்தான் ஜனுதிபதி நீதிபதியை நீக்கலாம். தலைமை நீதிபதியின் மாத ஊதியம் ரூ. 5,000-மும் ஏனையோர்க்குத் தலைக்கு ரூ. 4,000-மும் ஆகும்.

தலைமை நீதிமன்றம், பொதுவாக, டில்லியில் அமைந்து விளங்கும். ஆனுல், ஜனுதிபதியின் இசைவு பெற்றுத் தலைமை நீதிபதியின் தீர்மானத்தினுல் அது வேறிடங்களிலும் கூடலாம்.

(1) அதிகாரங்கள்: தலைமை நீதிமன்றத்தின் முக்கியமான வேலை யாதெனில், ஒரு சட்டம் யூனியன் அரசியல் அமைப்பின்படி பொருந்துகிறதாவென்று ஆராய்ந்து முடிவு கூறுதலேயாம். அது யூனியன் அரசாங்கத்திற்கும் ஸ்டேட் அரசாங்கத்திற்கும் இடையே உண்டாகும் விவாதங்களையும் ஸ்டேட் அரசாங்கங்களுக்குள் ஏற்படும் விவாதங்களையும் நடுநின்று விசாரிக்கும். 20,000 ரூபாய்க்குக் குறையாத மதிப்புடைய சிவில் வழக்குகளிலும், கிரிமினல் வழக்குகளிற் சில சந்தர்ப்பங்களிலும், ராஜ்ஜியங்களின் ஹைகோர்ட்டுகளிலிருந்துவரும் அப்பீல்களையும் அது விசாரணை செய்யும். எவ்வகைச் சட்டத்தைப் பற்றியேனும், முக்கிய பொது விஷயங்களைப்பற்றியேனும், ஜனுதிபதி தலைமை நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தைக் கேட்கலாம். அரசியல் சட்டத்தில் கண்டுள்ள ஜீவாதார உரிமைகள் பறிபோகாவண்ணம் பாதுகாப்பது இதன் தலையாய பணியாகும். நம் நாட்டிலுள்ள

நீதிமன்றங்கட் கெல்லாம் தலைமை நீதிமன்றம் சிகரமாய் உள்ளதால் இதன் சட்டங்கள் ஏனைய நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும். இது தன் தீர்ப்புகளைத் தானே புனராலோசனை செய்து கொள்ளுதற்குரியது.

(2) உயர் நீதிக் கோர்ட்டுகள் (High Courts): ஸ்டேட்டுகளிலுள்ள உயர் நீதிக் கோர்ட்டுகளுக்கு ஹைகோர்ட்டுகள் என்று பெயர். பிரிட்டிஷ் ஆட்சியில் கானிங் பிரபு இராஜப் பிரதிநிதியாக இருந்தபோது சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் ஹைகோர்ட்டுகள் ஏற்பட்டன. நாளடைவில் பிற இடங்களிலும் ஹைகோர்ட்டுகள் ஏற்பட்டன. நமது அரசியல் திட்டப்படி ஒவ்வொரு ஸ்டேட்டிலும், ஒரு உயர் நீதிமன்றம் ஏற்படும். அது ஒரு பிரதம நீதிபதியையும் சில சாதாரண நீதிபதிகளையும் கொண்டிருக்கும். நீதிபதிகள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர். பத்தாண்டுகள் நீதி இலாக்காவில் பதவி வகித்தவர், அல்லது ஹைகோர்ட்டு நியாயவாதியாக அனுபவம் பெற்ற இந்தியப் பிரஜை நீதிபதி நியமனத்திற்குத் தகுதி உடையவராவர். பிரதம நீதிபதி ரூ. 4,000 மாதச் சம்பளமாகவும், ஏனைய நீதிபதிகள் ரூ. 3,000 மாதச் சம்பளமாகவும் பெறுவர். இவர்கள் 60 வயது வரை பதவியில் இருத்தற்குரியவர். இவர்களின் பதவி நீக்கமும் தலைமை நீதி மன்ற நிலையை ஒத்தது, ஹைகோர்ட்டு நீதிபதிகளின் அந்தஸ்தும் சுயேச்சையும் அரசியல் திட்டப்படி உத்திரவாதம் பெற்றுள்ளது. முன் போலவே ஹைகோர்ட்டுகள் சிவில், கிரிமினல் வழக்குகளையும், கீழ் நீதி மன்றங்களிலிருந்து வரும் அப்பீல்களையும் ஆராய்ந்து நீதி வழங்கும். அன்றியும் அவை ஜீவாதார உரிமைகள் பறிபோகாவண்ணம் கட்டளைகளையும் பிறப்பிக்கலாம்; சிவில் கோர்ட்டுகளையும், தற்காலிக ஸ்டேட் நீதி மன்றங்களையும் கண்காணிக்கலாம்; அரசியல் அமைப்புச் சட்ட விளக்கத்தைப் பற்றிக் கீழ் நீதி மன்றங்களிலிருந்து வரும் வழக்குகளையும் எடுத்து ஆராய்ந்து முடிவு கூறலாம்.

இந்திய யூனியனில் பெருந்தொகையான நீதிபதிகள் உள்ள நீதிக்கோர்ட்டு அலகாபாத்தில் உள்ளது.

**கீழ் நீதிமன்றங்கள் :** ஹைகோர்ட்டுகளுக்குக் கீழுள்ள ஜில்லா கோர்ட்டுகளும், சப் கோர்ட்டுகளும், முனிசிப் கோர்ட்டு களும் ஸ்டேட்டின் இதர நீதி மன்றங்களாகும். ஜில்லா ஜட்ஜுகள் அவருக்குத் துணையாயுள்ள உதவி ஜில்லா ஜட்ஜுகள், ஜாயின்ட் ஜில்லா ஜட்ஜுகள் ஆகியோர் ஜில்லா கோர்ட்டுகளின் நீதிபதிகள் ஆவர். இவர்களை ஸ்டேட் கவர்னர் ஹைகோர்ட்டுப் பிரதம நீதிபதியைக் கலந்து கொண்டு நியமிக்கிறார். ஸ்டேட் உத்தியோகத்தில் இருப்ப வரும், ஏழாண்டு ஹைகோர்ட்டு அல்லது கீழ்க்கோர்ட்டில் வக்கீல் தொழிலில் அனுபவம் பெற்றுவரும் அப் பதவிக்குத் தகுதியுடையோராவர். இவர்கள் ஹைகோர்ட்டினால் சிபார்சு செய்யப்படுதல் வேண்டும்.

ஜில்லா கோர்ட்டுகளில் சிவில் வழக்குகளும், கிரிமினல் வழக்குகளும் விசாரிக்கப்படும். மேலும் கீழ்க் கோர்ட்டுகளி லிருந்து வரும் அப்பீல்களும் இங்கு விசாரிக்கப்படும். ஜில்லா கோர்ட்டுகளின் கீழ் சப் கோர்ட்டுகள் உள்ளன. இவற்றின் நீதிபதிகள் சப் ஜட்ஜுகளாவர். சப் கோர்ட்டு களுக்கு அடுத்தபடியாக முனிசிப் கோர்ட்டுகள் உள்ளன. இவற்றின் நீதிபதிகள் ஜில்லா முனிசீப்புகள் ஆவர். இவ் விரு நீதி மன்றங்களிலும் சிவில் வழக்குகள் மட்டும் விசாரிக் கப்படுகின்றன. இவற்றின் நீதிபதிகள் பப்ளிக் சர்வீஸ் கமிஷனையும், ஹைகோர்ட்டு பிரதம நீதிபதியையும் கலந் தறிந்தபின் கவர்னரால் நியமிக்கப்படுவார்கள். ஜில்லா கோர்ட்டுகளும், கீழ்க் கோர்ட்டுகளும் ஹைகோர்ட்டின் அதி காரத்திற்குட்பட்டவை. ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் நீதி நிர்வாகச் சம்பந்தமான அலுவல்களைக் கவனிக்க ஒரு காரி யாலயம் உண்டு. அவ்வந் நீதி மன்றத்தின் நீதிபதியே அதன் அதிகாரியாவர்.

சட்டங்களின் விஷயமாக அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறவும், அதன் சார்பாக வழக்குகளை நடத்தவும் யூனியன் அரசாங்கத்திலும் ஸ்டேட் அரசாங்கத்திலும் அட்வகேட் ஜனரல் என்னும் தனி உத்தியோகஸ்தர் உளர். யூனியன் அட்வகேட் ஜனரல் ஜனாதிபதியாலும், ஸ்டேட் அட்வகேட் ஜனரல் கவர்னராலும் நியமிக்கப் படுகின்றனர்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் அரசாங்க நியாயவாதி ஒருவர் இருப்பர். அன்றியும் அரசாங்கத்தின் சார்பாகக் கிரிமினல் வழக்குகளை நடத்த பப்ளிக் ப்ராசிக்யூட்டர்ஸ் எனும் உத்தியோகஸ்தர்களும் உள்ளனர். இவர்கள் யாவரும் சட்ட நூற் பயிற்சியில் சிறந்தவராவர்.

## பகுதி 3

சட்டமும் ஒழுங்கும் : சமூகமாக வாழும் மக்கள் சில கட்டு திட்டங்களுக்கு அடங்கி நடந்தாலன்றி அவர்கள் அமைதியான வாழ்வில் வாழ இயலாது; நாடும் நன்னிலை எய்திடாது. அமைதியையும் ஒழுங்கையும் காக்கும் கட்டு திட்டங்களே சட்டங்களாகும். இச்சட்டங்கள் நம் போன்ற ஜனநாயக ஆட்சி ஏற்பட்டுள்ள நாடுகளில் சட்டசபைகளால் உண்டாக்கப் படுகின்றன. சொத்துரிமையைக் காக்கும் சட்டங்கள் சிவில் சட்டங்கள் என்றும், சண்டை சச்சரவு, அமைதிப் பங்கம், கேடு சூழ்தல், கொலை முதலியவற்றைக் கவனிக்கும் சட்டம் கிரிமினல் சட்டம் என்றும் வழங்கப்படும். இராஜப் பிரதிநிதியான கானிங் பிரபு காலத்தில் இந்தியன் சிவில் சட்டமும், மெக்காலே பிரபுவால் தொகுக்கப்பெற்ற இந்தியன் பீனல் கோடு எனும் தண்டனை விதிகளும், கிரிமினல் புரொசீஜர் கோடு எனும் சட்டங்களும் வெளியிடப்பட்டன. இவையே இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றன. சட்டங்களுக்கு உட்பட்டு வாழ்வதே ஒழுங்கெனப்படுவதாகும். ஒழுங்கிற்குக் கட்டுபட்டு வாழுமாறு செய்யப் போலீஸ் இலாக்காவும், சட்டத்தை மீறினவர்களைத் தண்டிக்க மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் எனும் தனி நீதி மன்றங்களும் உள்ளன.

ஒழுங்குப் பாதுகாப்பு; போலீஸ் இலாக்கா : சமூகத்திலுள்ள அனைவரும் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு ஒழுங்குடன் வாழுமாறு செய்வதும், ஒழுங்கு சிதையுமாறு சட்டத்தை மீறுகின்ற குற்றவாளிகளைத் தண்டனைக்கு உட்படுமாறு செய்வதும் போலீஸ் இலாக்காவின் முக்கியப் பொறுப்பாகும். ஸ்டேட்டுகள் தோறும் உள்ள போலீஸ் இலாக்கா, ஆட்சி நிர்வாகத்தின் விரிவான ஒரு பகுதியாகும். இவ்விலாக்கா ஸ்டேட்மந்திரி ஒருவரின் கீழிருக்கும். போலீஸ்இலாக்காவின் தலைவர் இன்ஸ்பெக்டர் ஜனரல் ஆப் போலீஸ் என்பவர் ஆவர். ஒவ்வொரு ஸ்டேட்டும் பல வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அவை இன்ஸ்பெக்டர் ஜனரலின் கீழுள்ள டெபுடி இன்ஸ்பெக்டர் ஜனரலின் கண்காணிப்பில் இருக்கும். டெபுடி இன்ஸ்பெக்டர் ஜனரலுக்கு அடுத்துள்ளவர்கள் ஜில்லா போலீஸ் சூப்பரின்டென்டென்டுகளும், உதவி ஜில்லா சூப்பரின்டென்டென்டுகளும் ஆவர். ஒவ்வொரு ஜில்லாவும் பல சர்க்கிள்களாகப் பிரிக்கப்பட்டு சர்க்கிள் இன்ஸ்பெக்டரின் கீழுள்ளன. இவர்களுக்கு அடுத்துள்ளவர்கள் சப் இன்ஸ்பெக்டர்கள். ஒவ்வொரு சப் இன்ஸ்பெக்டரும் ஒரு ஸ்டேஷன் அதிகாரியாவார். சப் இன்ஸ்பெக்டர்களின் கீழ் கான்ஸ்டேபிள்கள் உள்ளனர். இவர்கள் தான் நேர் முகத்தில் ஒழுங்கை நிலவுமாறு செய்யும் பாதுகாப்பாளர். உயிரையும் சொத்தையும் பாதுகாத்தல், பாதைகளில் போக்குவரத்தை கண்காணித்தல், திருவிழா, மாநாடுகள் முதலியவற்றின் ஒழுங்கைக் கவனித்தல், குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனைக்கு உட்படுத்துதல் முதலியன போலீஸாரின் முக்கியக் கடமைகளாகும். சென்னை போன்ற பெரிய நகரங்களில் கமிஷனர் ஆப் போலீஸ் என்பவர் அங்குத் தலைமையதிகாரி ஆவர்.

போலீஸ் இலாக்காவில் ரெயில்வே போலீஸ் இலாக்கா, வேவு பார்க்கும் போலீஸ் இலாக்கா, போக்குவரவு கவனிக்கும் இலாக்கா எனப் பல பிரிவுகள் உள்ளன. நமது ஸ்டேட்-

டில் நிரந்திரப் போலீஸ் படை, தனி ஆயுதந்தாங்கியபோலீஸ் படை, மலபார் ஸ்பெஷல் படை என்று மூவகைப் போலீஸ் படையுள்ளன. போலீஸ் அதிகாரிகள் அமைதியைக் காக்கும் பொருட்டுச் சில வேளைகளில் கலெக்டர் அல்லது மாஜிஸ்டிரேட்டுகளிடமிருந்து கட்டளை வந்தால் அதனை நிறைவேற்றுவர்.

சட்ட பாதுகாப்பு ; மாஜிஸ்டிரேட்டுகள் : சட்டத்தை மீறி ஒழுங்கைக் குலைத்த குற்றவாளிகளைத் தண்டிக்கத் தனி நீதி மன்றங்கள் உள்ளன. குற்றவாளிகள் போலீசாரால் தண்டனைக்கு இந் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப் படுகின்றனர். இந்தியன் கிரிமினல் கோடு, இந்தியன் பீனல் கோடு ஆகிய சட்டங்களின்படி குற்றவாளிகள் விசாரிக்கப்படுகின்றனர். இந் நீதி மன்றங்களின் நீதிபதிகளுக்கு மாஜிஸ்டிரேட்டுகள் என்று பெயர். ஒவ்வொரு ஜில்லாவுக்கும், ஒரு ஜில்லா மாஜிஸ்டிரேட்டும், அவர் கீழ்ப் பல சப் மாஜிஸ்டிரேட்டுகளும் உள்ளனர். ஜில்லா மாஜிஸ்ட்டிரேட்டு ஜில்லாவின் கிரிமினல் ஜட்ஜு ஆவர். வரி வசூலைக் கவனித்துவந்த கலெக்டர்களே நீண்டகாலமாக ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளாகவும் இருந்து வந்தனர். அவர் கீழிருந்த தாசில்தார்கள் சப் மாஜிஸ்டிரேட்களாகவும் இருந்தனர். இனி அவர்கள் அவ்வதிகாரங்களை இழப்பார்கள். தனி மாஜிஸ்டிரேட்டுகள் நியமிக்கப் படுவர். நமது அரசியல் அமைப்பின் பொது லட்சியங்களுள் நிர்வாகமும் நீதிபதித் தொகுதியும் தனித்தனியாகப் பிரிந்திருத்தல் வேண்டும் என்ற ஒரு நியதி ஏற்பட்டுள்ளது. இதனல் சென்னை ஆந்திரப் பிரதேச ராஜ்ஜியங்களில் இம் முறை நடைமுறைக்கு வந்துள்ளது.

ஒவ்வொரு தாலூக்காவிலும் ஒரு சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டு உண்டு. கிராமப் பஞ்சாயத்துச் சட்டப்படி கிராமப் பஞ்சாயத்துக்கள் குற்றவிசாரணை செய்யும் அதிகாரம் பெற்றுள்ளன. சென்னை போன்ற தலைநகரங்களில் ஒரு பிரதம பிரசிடென்ஸி மாஜிஸ்டிரேட்டும், அவருக்குக் கீழ்ச் சில

மாஜிஸ்டிரேட்டுகளும் உள்ளனர். அன்றியும் நகரங்களில் கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளும் இருக்கின்றனர்.

குற்றம் செய்ததற்காக தண்டிக்கப்பட்டவர்கள் சிறைச் சாலைகளுக்கு அனுப்பப்படுவர். ஸ்டேட்டிலுள்ள சிறைச் சாலைகளுக்கெல்லாம் தலைவர் இன்ஸ்பெக்டர் ஜனரல் ஆப் பிரிசன்ஸ் எனப்படுவார். அவருக்கு பல உதவி உத்தியோ கஸ்தர்கள் இருப்பர். ஒவ்வொரு சிறைச்சாலைக்கும் ஒரு ஜெயில் சூப்பரின்டென்டென்ட் இருப்பர். அவருக்குக் கீழ்ப் பல வார்டர்கள் இருப்பர். கைதிகளின் நலனைக் கவனிக்க கௌரவப் பார்வையாளர் உள்ளனர். இளங் குற்ற வாளிகளுக்கு ஜுவனைல் கோர்ட்டுகள் எனும் தனி நீதி மன்றங்கள் உள்ளன. இங்கு தண்டிக்கப்படும் இளையோர் தனிப் பாடசாலைக்கு அனுப்பப்படுவர். தற்போது சிறைச் சாலைகளில் கைதிகளைச் சீர்திருத்தும் முயற்சி நடந்து வருகிறது. விடுதலை பெற்றவர்களின் நலனைக் கவனிக்கத் தனி ஸ்தாபனம் ஒன்று இருக்கிறது (Discharged Prisoners' Society).

நமது நீதி நிர்வாக முறையும், சட்டமும், ஒழுங்கு காக்கும் முறையும் மிகச் சிறந்தனவாகும். எக் குற்றவாளி யும் உடனே சிறையில் வைக்கப்படுவதில்லை; விசாரணை நடைபெறும் வரை நல்ல பாதுகாப்பில் வைக்கப்படுவர், அல்லது ஜாமீனில் விடுதலை செய்யப்படுவர். குற்றவாளி எனக் குற்றஞ் சாட்டப்பெற்ற எத்தகையோரும் சட்டப்படி நீதி பெற உரிமையுடையவராவர். குற்றவாளி தன்னை நீதி மன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்துமாறு அரசாங்கத்தை வற்புறுத்தலாம். குற்றவாளிகள் தம்மைக் காத்துக்கொள்ள அவர்கட்கு அரசாங்கம் ஜூரி முறை போன்ற சலுகை களையும் கொடுக்கிறது. கீழ்க் கோர்ட்டின் தீர்ப்பின்மீது மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம்.

### பயிற்சி

1. *நீதிபதித் தொகுதியின் சிறப்பு யாது?*

2. நம் நாட்டு நீதி மன்றங்களுள் மிகவும் உயர்ந்தது யாது? அதன் நீதிபதிகள் எவ்வாறு நியமிக்கப்படு கின்றனர்? அதன் தலைமை நீதிபதி யார்?
3. யூனியன் நீதிமன்றத்தின் அலுவல்கள் யாவை?
4. ஹைகோர்ட்டு நீதிபதிகளும் ஜில்லா கோர்ட்டு நீதிபதி களும் எங்ஙனம் நியமிக்கப்படுகின்றனர்.
5. யூனியன் நீதி மன்றம், ஹைகோர்ட்டு, ஜில்லா கோர்ட்டு ஆகிய இவற்றின் நீதிபதிகளின் தகுதிகள் எவை?
6. சட்டம், ஒழுங்கு என்பன யாவை? இவற்றைக் கவனிக்கும் நிர்வாக ஸ்தாபனங்கள் எவை?
7. ஸ்டேட் போலீஸ் இலாக்காவின் தலைமை அதிகாரியும் ஜில்லா போலீஸ் அதிகாரியும் யாவர்?
8. அட்வகேட் ஜனரல் செய்யும் வேலை என்ன?
9. சரியான விடையின் எண்ணை மட்டும் குறித்திடுக. குற்றவாளிகளை முதலில் விசாரிக்கும் நீதி மன்றங் கள் :— (1) முன்சீப்புக் கோர்ட்டுகள். (2) சப் கோர்ட்டுகள். (3) மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள். (4) ஜில்லா கோர்ட்டுகள்.
10. தற்சமயம் தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி யார்? சென்னை உயர்நீதிக் கோர்ட்டின் தலைமை நீதிபதி யார்?

---

# அத்தியாயம் 11

## நம் நாட்டின் பாதுகாப்பு

### பகுதி 1

#### பாதுகாப்பின் அவசியமும் அதன் முக்கிய அம்சங்களும்

ஓர் அரசின் அங்கங்களுள் படையும் ஒன்று. படைப் பலமே ஒரு நாட்டிற்குரிய வன்மையும், பகைவர் அஞ்சுதற் குரிய திண்மையும் ஆகும். படையே அரச செல்வங் களுள் முதன்மை வாய்ந்ததென்று வள்ளுவர் கூறியுள்ளார். அக் குறள் :

" உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை "

என்பதாம். நாட்டு மக்களைப் பகைவர்களிடமிருந்து காப்பதற்கும், உள்நாட்டுக் குழப்பங்களை அடக்கி அமைதியை நிலவச் செய்வதற்கும் படை இன்றியமையாததாகும். அரசியல் சச்சரவுகளும் குழப்பங்களும் அலைமேல் அலை போல் புரண்டுவரும் தற்காலத்தில் நாட்டின் பாதுகாப்பிற்காகத் தக்க படைகள் இருத்தல் வேண்டும் என்று கூறத் தேவையில்லை.

கி. பி. 1947, ஆகஸ்டு 15-க்குப் பின்னர் நிகழ்ந்த நாட்டுப் பிரிவினையினால் நம் நாட்டுப் படையமைப்பில் பெரிய மாறுதல் ஏற்பட்டுள்ளது. நமது சுதந்திர இந்திய ராணுவம் தற்கால உலக நிலைக்கேற்பத் தரைப்படை, கப்பற் படை, விமானப் படை என மூன்று பிரிவுகளை யுடையது. ஜனாதிபதியே யூனியனின் எல்லாப் படைகளுக்கும் தலைமைச் சேனாதிபதி (Supreme Commander) ஆவர். அவருக்குக்கீழ் யூனியன் மந்திரி சபையில் ஒருவர் பாதுகாப்பிலாக்காவின் தலைவராய் இருப்பார். இவர் யூனியன் பாதுகாப்பு மந்திரி எனப்படுவார். மூவிதப் படைகளும் தனித்தனிப் படைத்தலைவரின் கீழிருந்து பணிபுரிந்து வருகின்றன. இப் படைத்தலைவர்கள் தலைமை நிர்வாகிகள் (Chiefs of Staff) என்று அழைக்கப்படுவர். அவர்கள் முறையே Chief of the Army Staff, Chief of the Naval Staff, Chief of the Air Staff எனப்படுவர்.

## பகுதி 2

### யூனியன் படைகள்

தரைப்படை : நம் தேசத்தின் தரைப் படை மிகப் புகழ் பெற்ற படையாகும். கி. பி. 1857-க்குப் பின்னர் இந்தியத் தரைப்படை திருத்தி யமைக்கப்பட்டது. அன்றியும் கி. பி. 1904-ல் கிச்சனர் பிரபுவாலும், 1938-ல் சாட்பீல்டு



படம் 19. ஸ்ரீ வி. கே. கிருஷ்ணமேனன்.

குழுவின் அறிக்கையைப் பின்பற்றியும் இந்தியத் தரைப் படை மேலும் திருத்தியமைக்கப்பட்டது. தரைப்படையும் அதன் பகுதிகளும் சேனாதிபதியின் ஆணைக்குக்கட்டுப்பட்டு நடக்கும். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அந்நியரான ங்கிலேயர்கள் சேனைத் தலைவர்களாக இருந்த நிலை போய், தற்போது நம் நாட்டு மக்களே சேனைத் தலைவர்களாக இருப்பது நாம் பெருமிதங் கொள்ளுதற்குரியதாகும். சுதந்திர இந்தியாவில் முதல் சேனைத் தலைவராய் வந்த இந்தியர்-குடகு ராஜ்ஜியத்தில் பிறந்த ஸ்ரீ கரியப்பா ஆவர். தற்போது நம் சேனைத் தலைவர் ஸ்ரீ திம்மையா என்பவராவர்.

தரைப் படை பல இலாக்காக்களை யுடையது. அவை, (1) படை பரிமாறுதலும் பயிற்சியும் கவனிக்கும் பொது உத்தியோகஸ்தரின் பிரிவு (General Staff Branch); (2) படை திரட்டுதலும் சம்பளமளித்தலும் கவனிக்கும் உதவி தளகர்த்தரின் பிரிவு (Adjutant General's Branch); (3) படையினரின் ஊண், உடை கவனிக்கும் பிரிவு (Quarter Master General's Branch); (4) போர்க் கருவிகள், வெடி மருந்துகள் முதலியவற்றைக் கவனிக்கும் பிரிவு (Master General of Ordinance); (5) இஞ்சினீயரிங் பிரிவு ; (6) இராணுவக் காரியதரிசியின்



படம் 20. இராணுவ அணிவகுப்புக் கோலம்.

பிரிவு என்பன. தலைமைத் தரைப் படைக் காரியாலயத்தின் கீழ்சேனை, கிழக்கு, தெற்கு, மேற்கென மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் லெப்டினென்ட் ஜனரல் எனும் பதவி பெற்ற ஒரு இராணுவ உத்தியோகஸ்தரின் (General Officer Commanding-in-Chief) கீழ் இருக்கும். இப்பெரும் பகுதி ஒவ்வொன்றும் பல சிறிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சிறு பகுதியின் அதிகாரி மேஜர் ஜனரல்

ஆவர். இவருக்குக் கீழ்ப் பிரிகேடியர் எனும் இராணுவ அதிகாரியைக் கொண்ட பல சிறிய பிரிவுகள் உள்ளன. சேனைக்குத் தேவையான பல அங்கங்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை காலாட் படை, குதிரைப் படை, கவசமணிந்த படை, பீரங்கிப் படை, டாங்கிப் படை, கடற்கரை காக்கும் படை, இஞ்சினீரியங் படை, வெடிமருந்துத் தளம், போக்குவரவைக் கண்காணிக்கும் படை, ஒற்றர் தளம், மருத்துவத் தளம், படையின் வரவு செலவுகளைக் குறிக்கும் படை முதலியனவாம். நம் படை மிகத் திறமை வாய்ந்தது. இதிலுள்ள வீரர் பலர் 2-ஆம் உலகப் போரில் பர்மா, வட ஆப்ரிக்கா முதலிய பல விடங்களில் நல்ல திறமையுடன் போரிட்டுச் சிறந்த அனுபவம் பெற்றவராவர். அன்றியும் நம் படை சமீபத்தில் நடந்த காஷ்மீர் போரிலும், ஹைதராபாத் போலீஸ் நடவடிக்கைகளிலும் நல்ல திறமையைக் காட்டியுள்ளது.

**கடற்படை:** கி. பி. 1613-ல் கிழக்கிந்திய கம்பெனியின் பொருட்டு ஏற்பட்ட சிறு கடற்படையே இந்தியப் படைக்கு வித்தாகும். நீண்ட காலமாகவே கப்பற்படை நன்கு இங்கு அமைக்கப்படவில்லை. கி. பி. 1934-ல் இந்திய அரசாங்கத்தாரால் உத்தியோக வாயிலாக இந்தியக் கப்பற்படை ஒன்று நிறுவப்பட்டது. அது 'ராயல் இந்தியன் நேவி' எனப்படுவதாகும். அது முதற்கொண்டு இந்தியக் கப்பற்படை சிறிது சிறிதாக வளர்ச்சியுறலாயிற்று. நமது அரசாங்கம் சுதந்திர இந்தியக் கப்பற்படையைப் பெரிதாக்கப் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. போர்க் கப்பல்கள் சிலவற்றைப் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து வாங்கியுள்ளது. நம் கப்பற்படையில் சிறந்த கொடிக்கப்பல் (Flag Ship) மைசூர் ஆகும். ராஜ்புத், ரஞ்சித், ராணா, கோதாவரி, கோமதி, கங்கா ஆகியவை நாசகாரிக் கப்பல்கள் ஆகும். மேற்குக் கரையில் பம்பாய், கொச்சி, லொனவ்லா, ஜாம் நகர், கிழக்குக்கரையில் விசாகப்பட்டினம் போன்ற துறைமுகங்கள் சிறந்த கப்பற்றளங்களாக ஆக்கப்பட்டுள்ளன.



படம் 21. கப்பற் படையினரின் அணிவகுப்புக்கோலம்.

இந்தியக் கப்பற்படை உத்தியோகஸ்தர்களுக்கும் கப்பற்படைக்கும் ஒரு தனிப்படைத் தலைவர் இருக்கிறார். தற்போது நம் கடற் படைத் தலைமை நிர்வாகி காப்டன் காடாரி எனும் நம் நாட்டினராவர். இப் புதுப் பதவியைப் பெற்ற முதல் இந்தியர் இவரேயாவர். கப்பற்படையின் உத்தி யோகஸ்தர்கள் ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அவை: (1) நிர்வாகப் பிரிவு, (2) இஞ்சினீயரிங் பிரிவு, (3) வினியோகமும் அலுவலகமும், (4) மின்சாரப் பகுதி, (5) பரி மாறுதல் பகுதி, (6) பள்ளி ஆசிரியரின் பகுதி என்பன வாகும்.

**விமானப் படை:** கி. பி. 1926-ல் இந்திய விமானப் படை ஒன்றை நிறுவ முதற்கண் திட்டம் வகுக்கப்பட்டது. கி. பி.

1933-ல் கராச்சியில் முதல் விமானத் தளம் ஒன்று நிறுவப்பட்டது. கி. பி. 1939-க்குள் இந்திய விமான முதற்படை திறம் பெற்றதாயிற்று. வடமேற்கெல்லையில் அது நல்ல அனுபவம் பெற்றது. உடனடியாகக் கடற்கரை காக்கும் விமானத் தளம் ஒன்று பம்பாயில் நிறுவப்பட்டது. 2-ஆம் உலகப் போரில் இந்திய விமானப் படை வளர்ச்சியுற்றது. இந்தியர் பலர் அதிற் சேர்ந்து போரில் சேவை செய்து நல்ல அனுபவம் பெற்றனர். கல்கத்தா, சென்னை, கொச்சி, கராச்சி ஆகிய முக்கிய இடங்கள் விமானத் தளங்களாக ஆக்கப்பட்டன. 1946-ல் இந்தியர்களையே கொண்ட விமானத் தளம் ஒன்று ஏற்பட்டது. ஏழு போர் விமானங்களும் ஒரு போக்கு வரவு தளமும் கொண்ட சுதந்திர இந்திய விமானப் படை பாகிஸ்தானிலிருந்து தனியாகப் பிரிந்து விட்டது. நமது விமானப் படை நாளொரு மேனியாய் வளர்ச்சியுற்று வருகிறது. பங்களூர் போன்ற இடங்களில் விமானங்கள் கட்டப்பட்டு வருகின்றன. நமது அரசாங்கம் விமானப் போக்கு வரவுகளைப் பெருக்கிப் பல விமானத் துறைகளை ஏற்படுத்தியுள்ளது. அகதிகளுக்கு உதவி புரிதலும், ஹைதராபாத் போலீஸ் நடவடிக்கையிலும், காஷ்மீர் கலவரத்திலும் நம் விமானப் படை செய்த சேவை மிகவும் பாராட்டுதற் குரியதாகும். தற்போது நம் விமானப் படைத் தலைவர் S. முகர்ஜி ஆவர். விமானப் படையில் ஏழு இலாக்காக்கள் உள்ளன. அவை: (1) பொதுக் கடமைகள் பகுதி, (2) தொழில் திறமைப் பகுதி, (3) தேவைகளைச் சேகரிக்கும் பகுதி, (4) நிர்வாகப்



படம் 22. S. முகர்ஜி.

பகுதி, (5) வானிலை அறிபகுதி, (6) கல்விப் பயிற்சிப் பகுதி, (7) சட்டப் பகுதி என்பனவாம். டில்லிக்கு அருகிலுள்ள பாலம் என்ற இடத்தில் முக்கிய விமானப் படைக் காரியாலயம் உள்ளது.

பகுதி 3

## தேசிய இளைஞர் படை (National Cadet Corps)

கி. பி. 1948, ஏப்ரல் 8-ஆம் தேதி யூனியன் பார்லிமென்ட் இந்திய தேசீய தொண்டர் படைச் சட்டம் ஒன்றை இயற்றியது. அதன் நோக்கங்கள்: (1) இந்நாட்டு இளைஞர்களின் நடத்தை, நட்புணர்ச்சி, தொண்டில் ஊக்கம், தலைமை தாங்கல் முதலியவற்றை வளர்ப்பதும், (2) மூவகைப் படைகளும் திறன் பெற்றவர்களைக்கொண்டு விளங்க நம் நாட்டிளைஞர்களுக்கு அடிப்படை இராணுவப் பயிற்சியும், போர்க்கருவிகளைப் பயன்படுத்தப் பயிற்சி அளித்தலும், (3) நாட்டின் பாதுகாப்பில் ஊக்கத்தைத் தூண்டுதலும், (4) தேசீய நெருக்கடிக் காலத்தில் படைகளை விரைவில் பெருக்கவும், தலைமை தாங்கி அவற்றை நடத்தவும், ஏற்ற தலைவர்களை முன்னதாகத் தயார் செய்தலும் ஆகும்.

இச் சட்டப்படி எல்லா ஸ்டேட்டுகளிலும் உள்ள இளைஞர்களைக் கொண்ட ஒரு தேசீயத் தொண்டர் படை நிறுவப்பட்டது. அது ஜூனியர், சீனியர் என இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ஜூனியர் படையிலும், கல்லூரி மாணவர்கள் சீனியர் படையிலும் சேர்க்கப்படுகின்றனர். இதற்காக ஊதியம் ஒன்றுமில்லை. விருப்பமுள்ள மாணவர்கள் அனைவரும் இதில் சேரலாம். இதில் பயிற்சி பெற்றவர்கள் பின்னர்க் கட்டாய இராணுவ சேவை செய்தல் வேண்டும் என்ற நியதி இல்லை. தரை, கடல், விமானப் படைகளுக்குச் சம்பந்தமான போர்ப்பயிற்சி இவர்கட்கு அளிக்கப்படுகிறது. மாணவிகள் பயிலுதற்கென்று தனித்தளம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. 1957-ல் 1,09,807 கேடெட்டுகள் இருந்தனர்.

**பிரதேசப் படை :** கி. பி. 1948 யூனியன் பார்லிமெண்டுச் சட்டப்படி பிரதேசப் படை எனும் தனிப் படை கி. பி. 1949 அக்டோபரில் நிறுவப்பட்டது. நாட்டின் 2-ஆம் பாதுகாப்பு அரணாக விளங்குதற்கும், தேசீய நெருக்கடிக் காலங்களில் யுத்த சேவை செய்ய நாட்டின் இளைஞர்கட்கு முன் கூட்டியே தக்க இராணுவப் பயிற்சி அளிப்பதற்கும் அது ஏற்பட்டுள்ளது.

போர்க் காலங்களில் நிரந்தரப் படையின் கஷ்டத்தைக் குறைத்து உள்நாட்டு அமைதியைப் பாதுகாத்தலும், எதிர் விமான நடவடிக்கை எடுத்தலும், கடற்கரையைப் பாது காத்தலும், நிரந்தர படையின் தேவைக்கு உதவுதலும், போக்குவரத்து முறியாமல் பாதுகாத்தலும், சிவில் நிர்வா கத்துடன் ஒத்துழைத்தலும் ஆகிய இவை யெல்லாம் பிரதேசப் படையினரின் முக்கியக் கடமைகளாகும். நம் நாடு எட்டுப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றினின்று இப்படை திரட்டப்படுகிறது. இதில் சேருவோர் 3 மாதம் நல்ல பயிற்சி பெறுவர். அன்றியும் மாதந்தோறும் இவர் களின் அணிவகுப்புக் கோலம் நடைபெறும். 18 முதல் 35 வயதிற்குள் உள்ள இந்தியக் குடிகள் அனைவரும் இதில் சேரலாம்.

**தேசீய வாலன்டியர் படை** (National Volunteer Force). 1955 முதல் இதில் சேருவோருக்கு வருஷத்தில் 30 நாள் இராணுவப் பயிற்சி அளிக்கப்படும். நமது யூனியன் அர சாங்கம் 5 வருஷத்தில் 5 லட்சம் வாலன்டியர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளது. இது லோக் ஸஹாயக் சேனை என்று அழைக்கப்படுகிறது.

## பகுதி 4

### இராணுவப் பயிற்சிக் கல்லூரிகள்

மூவகைப் படைகளுக்கும் ஏற்ற போர்ப்பயிற்சி அளிக் கப் பல போர்ப்பயிற்சிக் கல்லூரிகளும், பயிற்சி தரும் இடங்

களும் நமது அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. (1) கி. பி. 1932-ல் முதன் முதலாக டேராடூனில் போர்ப்பயிற்சி தரும் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. (2) புதிதாக நீலகிரியில் உள்ள வெல்லிங்டனில் இராணுவ உத்தியோகஸ்தரின் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. (3) பூனுவில் படைக்குரிய மருத்துவக் கல்லூரி ஒன்றுள்ளது. (4) கர்கி போன்ற சில இடங்களில் மிலிட்டரி இஞ்சீனீயரிங் கல்லூரிகள் உள்ளன. (5) கி. பி. 1949-ல் படை வீரர் கட்கு அயல்நாட்டு மொழிகளைக் கற்பிக்க டில்லியில் பன்மொழிக் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. (6) ஜலந்தர், ஆஜ்மீர், பெல்காம், பங்களூர் முதலிய இடங்களில் படை வீரர்களின் புதல்வர்களுக்கென கிங் ஜார்ஜ் மிலிட்டரி கல்லூரிகளும், சிம்லா, நீலகிரி, ஆபுமலே முதலிய இடங்களில் தரைப்படை வீரர்களின் மக்களுக்குப் பயிற்சி அளிக்கும் லாரென்ஸ் பள்ளிக்கூடங்களும் உள்ளன.

### கடற்படைப் பயிற்சி

(1) கொச்சியிலும், விசாகப்பட்டினத்திலும் கடற்போர்ப் பயிற்சிக் கல்லூரிகள் ஏற்பட்டுள்ளன. இவ் விடங்களில் டார்பிடோக்களையும், நீர்மூழ்கிகளையும் எதிர்த்துப் போரிடும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. (2) ஜாம் நகரில் சமிக்ஞைப் பயிற்சி அளிக்கும் கல்லூரி ஒன்று உள்ளது. (3) லொனவ்லாவில் (பம்பாய்) கடற்படை இயந்திரப் பயிற்சி நிலையம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. (4) கல்கத்தாவுக்கு அருகிலுள்ள பெஹெலாவில் கடற்படை பொரி இயல் கல்லூரி (Marine College of Engineering) ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இங்குக் கப்பல் இஞ்சினீயர்கள் பயிற்சி பெறுவர்.

### விமானப் பயிற்சி

(1) கோயம்புத்தூரில் விமானத்தைப் பற்றிய ஆரம்பப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

(2) பங்களூரில் விமானப் படையினருக்கு நல்ல பயிற்சி அளிக்கப்படுகிறது.

(3) ஜோதிபுரியில் வான விமானப் படைக் கழகம் ஒன்று உள்ளது. அதன் மூலமாக விமானிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.



படம் 23. விமானப்படையினரின் அணிவகுப்புக் கோலம்.

(4) அம்பாலாவில் விமானிகளுக்கு உயர்தரப் பயிற்சி அளிக்கும் கல்லூரி ஒன்றுள்ளது.

(5) கொச்சியில் போர் விமானப்படை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(6) பங்களூருக்கு அருகிலுள்ள ஜலஹல்லியில் ராடார் பயிற்சி தரும் நிலையம் ஏற்பட்டுள்ளது.

(7) கான்பூரில் விமானங்களை ஒன்று சேர்ப்பதற்கும், அவற்றைப் பழுது பார்ப்பதற்கும் நிலையம் ஒன்று ஏற்பட்டுள்ளது. ஏற்ற வசதிகள் நம் நாட்டில் இல்லாமையால்

விமானத்தைப் பற்றிய நுட்ப அறிவுப் பயிற்சி பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில உத்தியோகஸ்தர்கள் இங்கிலாந்திற்கு அனுப்பப் படுகின்றனர்.

மூவகைப் படைகளுக்கும் தேவையான உத்தியோகஸ்தர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பூனுவுக்கு அருகிலுள்ள காதக்வாஸ்லா என்னுமிடத்தில் 1955-ல் தேசியப் பாதுகாப்புக் கழகம் (National Defence Academy) ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இங்கு 14 வயது முதல் 17½ வயது வரை உள்ள 1,500 தொண்டர்களுக்கு (Cadets) 3 வருஷகாலம் பயிற்சி அளிக்கப்படும். ஆயுதங்கள் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யும்பொருட்டு அரசாங்கம் பல தொழிற்சாலைகளைக் கர்கி, அருவங்காடு, அம்பர்நாத், கான்பூர், ஜபல்பூர் முதலிய இடங்களில் நிறுவி வருகின்றது. போரில் திறமை காட்டிய வீரர்களுக்கு (a) பரம்வீர் சக்ரா, (b) மஹாவீர் சக்ரா, (c) வீர் சக்ரா என்ற பட்டங்கள் அளிக்கப்படுகின்றன.

### பயிற்சி

1. மூவகைப் படைகள் யாவை? படைகள் அனைத்திற்கும் தலைமை தாங்கி நிற்போர் யார்? ஒவ்வொரு படைக்கும் தலைவர் யார்?
2. நமது யூனியன் பாதுகாப்பு அமைப்பு மந்திரி யார்? அவருக்கு இராணுவ விஷயமாக உதவி செய்வோர் யார்?
3. தரைப் படையின் முக்கிய இராணுவ அதிகாரிகளை வரிசைப்படுத்திக் கூறுக.
4. இந்தியக் கப்பற்படை முதன் முதலாக எப்போது நிறுவப்பட்டது? நமது கடற்படையுள் சிறந்த போர்க் கப்பல் யாது? நமது கப்பற்படையின் தலைவர் யார்?
5. இந்திய விமானப்படை எப்பொழுது முதன் முதலாக நிறுவப்பட்டது? விமானப் படையின் தலைமைக் காரியாலயம் எங்குள்ளது?
6. நாஷனல் கேடெட் கோர், பிரதேசப் படை எனும் இவை எப்போது, ஏன் நிறுவப்பட்டன?

7. மூவகைப் படைகட்குப் பயிற்சி அளிக்கும் இரு இடங்களைக் கூறுக.
8. பொருத்தமான விடையின் எண்ணைக் குறித்திடுக. படைகளைத் திரட்டும் பொறுப்புள்ள அதிகாரி :— (1) தலைமை இராணுவ இஞ்சினீயர், (2) அட்ஜுடன்ட் ஜனரல், (3) லெப்டினன்ட் ஜனரல், (4) குவார்டர் மாஸ்டர் ஜனரல்.

---

# அத்தியாயம் 12

## சமூக நல்வாழ்வு

### பகுதி 1

#### பொதுச் சுகாதாரமும், மருத்துவ உதவியும்

பொதுச் சுகாதாரம் : நோயற்ற வாழ்க்கையும், வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளைப் பெறுதலுமே நல்வாழ்க்கையின் சிறந்த அமிசங்களாகும். மேனுடுகளுடன் ஒப்பிடும் போது நாம் இவ்விரு அம்சங்களிலும் பிற்பட்டுள்ளோம். வறுமை, சரிவிகித உணவு உண்ணுமை, தக்க நடைமுறைக் குறைவால் நோய்கள் ஏற்படுதல், குடிமையுணர்ச்சி இல்லாமை, சுகாதார அமைப்புக்கேற்ற விளம்பரம் இல்லாமை, தக்க மருத்துவ வசதிகள் குறைவு முதலியன நம்நாட்டுப் பொதுச் சுகாதாரக் குறைவுக்குக் காரணங்களாகும்.

பிரிட்டிஷ் ஆட்சியில், கி. பி. 1859-ல் சென்னை, பம்பாய், வங்காள மாகாணங்களில் பொதுச் சுகாதாரக் குழுக்கள் முதன் முதலாக நிறுவப்பட்டன. பின்னர் மக்களின் ஆரோக்கிய வாழ்க்கையைக் கவனிக்க கி. பி. 1864-ல் மத்திய அரசாங்கத்திலும், மாகாண அரசாங்கங்களிலும் சானிடரி கமிஷனர்கள் எனும் சுகாதார அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். கி. பி. 1919-ஆம் ஆண்டுச் சட்டப்படி ஒவ்வொரு மாகாணத்திலும் சுகாதார இலாக்கா ஒன்று நிறுவப்பட்டது. மேலும், கி. பி. 1935-ஆம் ஆண்டுச் சட்டப்படி சுகாதாரக்

கடமைகள் மத்திய, மாகாண அரசாங்கத்தாரால் பங்கிட்டுக் கொள்ளப்பட்டன. கி. பி. 1937-ல் மத்திய அரசாங்கத்திற்குச் சுகாதார விஷயமாக ஆலோசனை கூற மத்திய சுகாதார ஆலோசனைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அவ்வாண்டில் மாகாண சுகாதார இலாக்காக்கள் திருத்தி அமைக்கப்பட்டன. தற்போது சுதந்திர இந்தியாவில் யூனியன் அரசாங்கத்தில் ஒரு தனி மந்திரியின் கீழ்ச் சுகாதார இலாக்கா ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்விலாக்கா யூனியனின் அரசாங்கத்தின் நேராட்சிக்குட்பட்ட ராஜ்ஜியங்களின் பொதுச் சுகாதாரத்தைக் கவனித்து வரும். அன்றியும் அது ஸ்டேட்டுகளிலுள்ள சுகாதார இலாக்காக்கள் தம் கடமைகளைச் சரிவரச் செய்யுமாறும் ஏவும். பன்னாட்டுச் சுகாதார உறவு, மருந்து இறக்குமதியில் கண்காணிப்பு, சில மத்தியப் பயிற்சி ஆராய்ச்சி நிலையங்களின் நிர்வாகம் ஆகியவற்றைக் கவனித்தலும் அதன் பொறுப்புக்களாகும். மேலும் மருத்துவத் தொழில் சம்பந்தமான விஷயங்கள், தொத்து நோய்த் தடை, மருந்து உற்பத்தி முதலியவற்றை யூனியன் அரசாங்கமும், ஸ்டேட் அரசாங்கமும் கலந்து கவனிக்கின்றன. யூனியன் அரசாங்கத்திற்கு பொதுச் சுகாதாரத்தைப் பற்றி யோசனை கூறப் பொதுச் சுகாதாரக் கமிஷனர் ஒருவரும் இருக்கிறார்.

தற்போது பொதுச் சுகாதாரக் கவனிப்பு ஸ்டேட் அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ளது. ஒவ்வொரு ஸ்டேட்டிலும் பொதுச் சுகாதாரத்தைக் கவனிக்க மந்திரி ஒருவர் இருக்கிறார். அன்றியும் பொதுச் சுகாதார அதிகாரி (Director of Public Health) ஒருவரும் இருந்து வருகிறார். கொள்ளை நோய்களும், பிற நோய்களும் நாட்டில் பரவாமல் தடுப்பதே அன்னாரின் கடமைகளாகும். அவராணைக்கு அடங்கிப் பொதுச் சுகாதார இலாக்கா தொழிலாற்றிவரும். வீதிகள், கழிவு நீரோடைகள், உணவுப் பண்டங்கள், குடிதண்ணீர் ஆகிய இவற்றின் சுத்தத்தைக் கவனித்தல், தொத்து

நோய் பரவாமல் தடுத்தல், கர்ப்பிணி, குழந்தைகளின் பாதுகாப்பு, பொதுவிடங்களின் சுத்தம் ஆகியவற்றைக் கவனித்தலும் இச் சுகாதார இலாக்காவின் முக்கியக் கடமைகளாகும்.

வியாதிகள் : பொதுச் சுகாதாரத்தின் கொடிய பகையாக இருப்பவை வியாதிகளேயாம். கொள்ளை நோய்களான அம்மை, காலரா, பிளேகு, டைபாயிடு என்னும் விஷசுரமும், ஏனைய குஷ்டம், க்ஷயம், புற்று நோய் முதலியனவும் நமது நாட்டு மக்களைப் பீடிக்கும் கொடிய நோய்கள் ஆகும். இக் கொடிய நோய்களுக்கு ஆயிரக் கணக்கில் மக்கள் இரையாகி வருகின்றனர். இந்நோய்களைப் போக்க நம் அரசாங்கம் தீவிர முயற்சிகளைக் கைக்கொண்டு வருகிறது.

மலேரியா சுரத்தைப் போக்க டில்லியில் மலேரியாக் கழகம் ஒன்று யூனியன் அரசாங்கத்தாரால் நிறுவப்பட்டிருக்கிறது. ஸ்டேட் அரசாங்கங்கள் இக் கொடிய நோயைப் போக்கும் பொருட்டு அதற்குக் காரணமான கொசுக்களைத் தொலைக்கும் வழிகளை மேற்கொண்டு வருகின்றன. 1952-ல் நம் மத்திய அரசாங்கம் டில்லியில் ஒரு D. D. T. தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளது. அம்மை நோயைப் போக்க அம்மை குத்துவதோடு, காலரா, பிளேகு இவற்றைத் தடுக்க இனுகுலேஷன் என்னும் மருந்தூசியும் குத்தப்படுகிறது. குஷ்ட நோயைத் தடுக்கத் தக்க மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. இந் நோய் கொண்டோர் ஒதுக்கிடங்களில் விடப்படுகின்றனர். அன்றியும், ஒவ்வொரு ஸ்டேட்டிலும் குஷ்ட நிவாரணச் சங்கம் ஏற்பட்டுள்ளது. க்ஷய நோயைப் போக்க அரசாங்கம் B. C. G. என்னும் ஊசி குத்தல் முறையைக் கையாண்டு வருகிறது.[B. C. G. மருந்து செய்யும் சாலை 1948-இல் கிண்டி (மதருஸ்) யில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.] இந் நோயாளர்களும் தனி மருத்துவச் சாலைகளில் ஒதுக்கப்பட்டு உதவி பெறுகின்றனர். இக்கொடிய நோய்களைப் போக்க நாம் மேனாட்டு அறிஞர்களின் ஆராய்ச்சிகளைப் பயன்படுத்தி வருகிறோம்.

**மருத்துவ உதவி:** நோய்களைப் போக்க மக்களுக்குத் தக்க மருத்துவ உதவி இருத்தல் வேண்டும். இதற்கென வைத்தியர்கள், மருத்துவப் பணிப் பெண்கள், மருந்துகள் நவீன மருத்துவச் சாதனங்கள் எல்லாம் இருத்தல் வேண்டுமன்றோ? மருத்துவ உதவி வெற்றிதர வேண்டின் நல்ல முறைகளும் கையாளப்படல் வேண்டும். ஆயுர் வேதம், சித்த வைத்தியம், யூனுனி ஆகிய இம்மூன்றும் நம் நாட்டு மருத்துவ முறைகளாகும். நம் நாடு ஆங்கில ஆட்சியின் கீழ் வந்தபோது மேனுட்டு வைத்திய முறைகள் இங்குக் கைக் கொள்ளப்பட்டன. நாட்டிலுள்ளோர் அனைவரும் நல்ல மருத்துவ உதவியைப் பெற நமது அரசாங்கத்தாரால் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**தற்போதைய நிலை:** மருத்துவ விஷயமாக யூனியன் அரசாங்க சுகாதார இலாக்காவிற்கு ஆலோசனை கூற டைரக்டர் ஜனரல் என்னும் மேலதிகாரி ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். யூனியன் முழுவதற்கும் பொதுவான மருத்துவப் பொதுச் சுகாதார விஷயங்களைப்பற்றி யூனியன் அரசாங்கத்திற்கு ஆலோசனைகூற 1952-ல் மத்திய சுகாதாரச் சபை ஒன்று யூனியன் அரசாங்கத்தாரால் நிறுவப்பட்டுள்ளது. அது யூனியன் சுகாதார மந்திரியைத் தலைவராகவும், ஏனைய ராஜ்ஜிய சுகாதார மந்திரிகளை அங்கத்தினர்களாகவும் கொண்டொழுகும். பொதுச் சுகாதார விஷயங்களில் ராஜ்ஜியங்கள் யூனியன் அரசாங்கத்துடன் ஒத்துழைக்குமாறு இச்சபை பார்த்துவரும். பம்பாய், மேற்கு வங்காள ராஜ்ஜியங்களில் சர்ஜன் ஜனரல் என்னும் தலைமை வைத்திய அதிகாரியின் கீழும், சென்னை ஆந்திர ராஜ்ஜியங்களில் மருத்துவ இலாக்கா டைரெக்டர் கீழும் (Director of Medical Services) சிகிச்சை மருத்துவ உதவி ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. ஏனைய ஸ்டேட்டுகளில் இன்ஸ்பெக்டர் ஜனரல் எனும் மருத்துவ அதிகாரியின் கீழ்

அவை அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு சிவில் சர்ஜன் என்னும் மருத்துவ அதிகாரியைத் தலைவராகக் கொண்ட மருத்துவச்சாலை ஒன்று உள்ளது.

கொள்ளை நோய்கட்கெனத் தனி மருத்துவச்சாலைகள் உள்ளன. க்ஷய ரோகம், குஷ்டம் போன்ற கொடிய நோய்களுக்குத் தனி மருத்துவச் சாலைகள் உண்டு. உதாரணமாக, நமது ராஜ்ஜியத்தில் தாம்பரத்திலும், பெருந்துறையிலும், ஆந்திரா ராஜ்ஜியத்தில் மதனபல்லியிலும் க்ஷய ரோக வைத்தியசாலைகள் உள்ளன. கண் சிகிச்சை, மூளைக் கோளாறு முதலியவற்றிற்கும் தனி மருத்துவச்சாலைகள் உண்டு. பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் தனி மருத்துவச் சாலைகள் உள்ளன. மேற் கூறிய நோய்களைக் கவனிக்க இங்குத் தனி மருத்துவ நிபுணர்கள் உள்ளனர்.

மருத்துவக் கல்விப் பயிற்சி அளிக்க அரசாங்கத்தாரால் ஒவ்வொரு ஸ்டேட்டிலும் பயிற்சிக்கல்லூரிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அன்றியும் மருந்துகள் சம்பந்தமான சில ஆராய்ச்சி நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நமது ராஜ்ஜியத்தில் சென்னைக்கு அருகில் கிண்டியிலுள்ள நோய் ஆராய்ச்சி நிலையம் குறிப்பிடத் தக்கது. 1952-ல் பூனுவுக்கு அருகில் பிம்ப்ரி என்னும் இடத்தில் பெனிஸிலின் உற்பத்திசெய்யும் சாலை நிறுவப்பட்டுள்ளது. நம் நாட்டின் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு வைத்தியர்களும் மருத்துவப் பணிமாதரும் இல்லை. ஐக்கிய அமெரிக்காவில் 750 மக்களுக்கு ஒரு டாக்டரும், பிரிட்டனில் 1,000 பேருக்கு ஒரு மருத்துவரும் இருக்க, நமது நாட்டில் 8,000 பேருக்கு ஒரு வைத்தியர் கிடைப்பதே அருமையாய் இருக்கிறது. இது மிகவும் வருந்தத் தக்கதாகும்.

## பகுதி 2

முன் பாதுகாப்பு (Safety First): அபாயம் ஏற்பட்ட பின்னர் அதனல் உண்டான கஷ்டங்களைப் போக்க

முயற்சிப்பதைவிட அபாயம் ஏற்படாமல் முற்கூட்டியே விழிப்புடன் நடந்துகொள்ளுதல் அறிவுடைமை ஆகும். இவ்வாறு நடந்துகொள்ளுதல்தான் முன் பாதுகாப்பு எனப் படுவதாம். போக்குவரத்து வசதிகள் பெருகிவரும் இந் நாளில் சாலைகளைப் பயன்படுத்தும் மக்களும் வண்டிகளும் சில விதிகளை அனுசரித்தல் வேண்டும். நகரங்களிலும், பெரிய பட்டணங்களிலும் செல்லும் மக்கள் நடைபாதைகள் மீதே நடத்தல் வேண்டும். நடை பாதைகள் இல்லாவிட்டால் வலது பக்கமாகவே நடத்தல் வேண்டும்; ஒருவருக்கொருவர் கைகளைக் கோர்த்துக்கொண்டு ஒருபொழுதும் உல்லாசமாக நடத்தல் கூடாது; பாதைகளைக் கடக்கும் இடங்களில் இரு புறங்களிலும் கவனித்து நடத்தல் நன்று; போக்குவரத்துக்-களைக் கண்காணிக்கும் போலீசாரின் ஏவல்களை மீறுதல் கூடாது; பஸ், டிராம் வண்டிகள் நகரும் போது அவற்றில் ஏறுதலோ அன்றி இறங்குதலோ செய்யின் ஆபத்து ஏற் படும். சாலைகளில் விரைந்து செல்லும் வண்டிகள் எப் பொழுதும் போக்குவரத்துப் போலீசாரின் ஏவுதலின்படி செல்லுதல் வேண்டும்; அவை தமக்குக் குறிப்பிட்டுள்ள பக்கமாகவே போதல் வேண்டும்; அவை ஒன்று மற்றொன்றை முந்த முயற்சித்தல் கூடாது. சிறப்பாக மோட்டார்வண்டிகள் வேக விதிகளைக் கண்டிப்பாய்க் கவனித்தல் வேண்டும். துவிச்சக்கர வண்டிக்காரர் அலட்சியமாகச் செல்லுதல் கூடாது. சுருங்கக் கூறினல் சாலைகளைப் பயன்படுத்தும் அனைவரும் சாலை விதிகளைப் பொன் போல் மதித்து ஒழுக வேண்டும்; ஒழுகாவிடில் பல்வகை அபாயங்கள் நேரிடும். போலீஸ் இலாக்கா போக்குவரத்தைக் குறித்துச் செய்து வரும் பிரசாரமும், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவ மாணவிகட்குப் போதிக்கும் சாலை விதிகளும் போற்றத் தக்கனவாகும்.

கி. பி. 1932-ல் இந்திய முன் பாதுகாப்புச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டது. தொழிற்சாலைகள், சுரங்கங்கள், வீடுகள்,

பள்ளிக்கூடங்கள், சாலேகள் போன்ற இடங்களில் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்க முன் பாதுகாப்பு விதிகளேயும் திட்டங்களேயும் மக்களுக்குப் போதிப்பதும், சாலேகளேப் பயன் படுத்தும் பல்வகைப் பகுதியினரிடையே ஒத்துழைப்பை ஊக்குவதும் அதன் நோக்கமாகும்.

## பகுதி 3

### முதற் சிகிச்சை

நீர், நெருப்பு, அடிதடிக்காயம், பாதை விபத்து, இயந்திர விபத்து, விஷக்கடி விபத்து போன்ற விபத்துக்களில் உள்ளானவர்களுக்கு மருத்துவ உதவி கிடைக்குமுன் அவர்களின் உயிரைக் காப்பதற்குச் செய்யும் தொண்டிற்கு முதற் சிகிச்சை என்று பெயர். விபத்துக்குள்ளானேருடைய துன்பத்தைக் குறைத்தலும், உயிரைப் பாதுகாத்தலும் இம் முதலுதவியின் நோக்கமாகும். முதல் உதவி புரிவோர் முதல் உதவி முறைகள் நன்கு அறிந்தவராய் இருத்தலோடு தம்மை முதலுதவி புரிபவராகக் கருதிக் கொள்ள வேண்டுமேயன்றி ஒரு மருத்துவராகக் கருதுதல் கூடாது. விபத்தின் காரணத்தின் நிலேமையையும் நன்கு அறிதல் வேண்டும்; நோயாளியின் நம்பிக்கையையும் சூழ நிற்போரின் நம்பிக்கையையும் பெறுதல் வேண்டும்; சமயோசித அறிவும், திறமையும் உடையவராய் இருத்தல் வேண்டும்; விபத்துக்குள்ளானேர்க்கு முன் செய்வதை அறிதலும், கருணேயும், நல்ல ஊக்கமும் உடையவராய் இருத்தல் வேண்டும். கிரைமியப் போரில் (1853—55) புண்பட்டோர்க்கும் நோயுண்டோர்க்கும் மருத்துவப் பணிமகளாய்த் தாமே இருந்து உலகிற்குத் தாமே ஒரு எடுத்துக்காட்டாய் விளங்கினவர் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்னும் செல்வச் சீமாட்டி என்ருல் அம் முதல் உதவியின் இன்றியமையாமையை என்னென்று சொல்வது.

## பகுதி 4

செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross Society): போர்க்களத்தில் துன்பப்படுவோரின் துயரைக் கண்டிரங்கி சுவிட்

ஜர்லாந்து தேசத்தவரான ஹென்றி டியூனன்ட் என்னும் அருள் வள்ளலே இச்சங்கம் தோன்றுவதற்குக் காரணமாய் இருந்தார். அப் பெரியாரின் நன் முயற்சியால் ஜினிவாவில் கி. பி. 1864-ல் பல தேசத்தின் பிரதிநிதிகள் அடங்கிய சர்வதேச சங்கம் ஒன்று போரில் வருந்துவோரின் வருத்தம் தவிர்க்கக் கூட்டப்பட்டது. இதன் விளைவாக செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பட்டது. போரில் நோயும், புண்ணும் கொண்டோர்க்குப் பணி புரிதலும், போரினல் சிறைபட்டவரை மீட்பதும் இச் சங்கத்தின் சிறந்த நோக்கமாகும். இது சாதி, மத, நிற, அரசியல் வேறுபாடுகளின்றித் தொண்டு புரியும் சர்வ தேச சங்கமாகும்.

சுவிட்ஜர்லாந்து தேசத்தில் இது தோன்றினமையால் அந்நாட்டைச் சிறப்பிக்கும் வண்ணம் அந்நாட்டுத் தேசீயக் கொடியே நிறம் மாற்றப்பட்டு "வெண்புறத்தில் செஞ்சிலுவைக் குறி" செஞ்சிலுவைச் சங்கத்தின் அடையாளக் கொடியாய் அமையலாயிற்று. போர்க் காலங்களில் கட்சி வேற்றுமையின்றி இரு பிரிவினர்க்கும் இது தொண்டு செய்யும். உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் இச் சங்கத்திற்குக் கிளைகள் உண்டு. போரில் தொண்டு புரியும் ஒவ்வொரு நாட்டின் செஞ்சிலுவைச் சங்கமும் அந்நாட்டுத் தேசீயக் கொடியுடன் சங்கத்தின் கொடியையும் இரு கட்சியினரும் நன்கு தெரிந்து கொள்ளுமாறு பறக்கவிடும். நம் நாட்டில் கி. பி. 1920-ல் இந்திய செஞ்சிலுவைச் சங்கம் நிறுவப்பட்டது. இதன் தலைமைக் காரியாலயம் டில்லியில் இருக்கிறது.

செஞ்சிலுவைச் சங்கம் கடந்த இரு உலகப் போர்களிலும் ஆற்றிய தொண்டு மிகவும் போற்றுதற் குரியது. போர்க் காலத்தன்றி இச்சங்கம் அமைதிக் காலத்திலும் தொண்டு புரிந்து வருகிறது. பொதுச் சுகாதாரம், கர்ப்பிணி, குழந்தைகள் பாதுகாப்பு, முதலுதவி, மருத்துவச் சாலைகட்கு உதவி, கொள்ளை நோய்த் தடை முதலியவற்றுடன் மருத்-

துவப் பணிக்கு மாதர்களைப் பயிற்றுதலும், புயல்காற்று, பூகம்பம், நெருப்பு முதலியவற்றால் ஏற்படும் இயற்கை விபத்துக்களிலிருந்து மக்களைக் காப்பதும் இது அமைதிக் காலத்தில் ஆற்றும் தொண்டுகளாகும்.

சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம் (Junior Red Cross Society): முதல் உலகப் போரின் காரணமாக செஞ்சிலுவைச் சங்கத்தினின்று சிறுவர்க்குரிய செஞ்சிலுவைச் சங்கம் தோன்றலாயிற்று. இது முதற்கண் கனடாவில் தோன்றிற்று; பின்னர், உலகெங்கும் ஏற்படலாயிற்று. பள்ளி மாணவர்கள் இச் சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்த்து தொண்டாற்றுதற்குரியர். பள்ளிக்கூட சுகாதாரம், சிறுவர்களின் ஆரோக்கிய வளர்ச்சி, சமூக சேவையுணர்ச்சி, பன்னாட்டு இளைஞருடைய நட்புணர்ச்சியை வளர்த்தல் போன்றவற்றைக் கவனித்தலே சிறுவர் சங்கத்தின் சீரிய நோக்கங்களாகும். இவற்றைக் கருதிச் சிறுவர்கள் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். நம் நாட்டில் கி. பி. 1926-ல் இந்தியச் சிறுவர் சேஞ்சிலுவைச் சங்கம் ஏற்பட்டுள்ளது. இதன் தலைமைக் காரியாலயமும் டில்லியிலேதான் இருக்கிறது.

செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் சங்கமும் தளமும் (St. John's Ambulance Association and Brigade): இச் சங்கங்களும் சமூகத் தொண்டு புரியும் சங்கங்களே. கி. பி. 1877-ல் இங்கிலாந்திலுள்ள எருசலேம் செயின்ட் ஜான் வைத்தியசாலையாரால் செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. முதலுதவிப் பயிற்சியளித்தல், மருத்துவப் பணிப்பெண்களைப் பயிற்றல், சுகாதார ஆரோக்கிய விதிகளை மக்களிடையே பரப்புதல், முதலுதவிக்கேற்ற சாதனங்களை இலவசமாக அளித்தல் அல்லது விற்றல், முதல் உதவித் தளம் அமைத்தல், சாதி மத இன வேறுபாடின்றிப் போர் அமைதிக் காலங்களில் நோயுற்றோர்க்கும், காயம் பட்டோர்க்கும் உதவி புரிதல் முதலியன இச்சங்கத்தின்

சீரிய நோக்கங்களாகும். நம் நாட்டில் இதற்குக் கிளைச் சங்கங்கள் பல விடங்களிலுள்ளன.

செயின்ட் ஜான் தளம் (St. John Brigade): ஒரே விதமான உடையும் நல்லொழுங்கும் வாய்ந்த ஆண், பெண்கள் அடங்கிய தளமாகும் இது. இதன் அங்கத்தினர் யாவரும் முதற் சிகிச்சையில் தேர்ச்சி பெற்றவர்கள். இத்தளம் நம் நாட்டில் எல்லா ஜில்லாக்களிலும் உள்ளது. ஒவ்வொரு ஜில்லாவிலும் இத்தளத்தைச் சேர்ந்த கமிஷனர் அல்லது உதவிக் கமிஷனர் ஒருவர் உள்ளார். முதல் உதவி, மருத்துவப் பணி முதலியவற்றில் ஜில்லாக்கள் தோறுமுள்ள அங்கத்தினர்களைத் தேர்ந்தவராக்கித் தக்க காலங்களில் பொதுமக்களுக்கு அவர்களைப் பயன்படுத்துவதே அவர்களின் பணியாகும். இந்திய செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் சங்கமும், பிரிகேடும் (brigade) இங்கிலாந்திலுள்ள தாய் ஸ்தாபனத்தின் ஆதரவின்கீழ் நின்று பணிபுரிகின்றன.

செஞ்சிலுவைச் சங்கமும், செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் சங்கமும் ஒரேவிதமான சமூகத் தொண்டாற்றுவதால்அவை இரண்டிற்கும் நெருங்கிய ஒத்துழைப்பு உள்ளது. மேற்கூறிய ஸ்தாபனங்களைத் தவிர ராஜாராம் மோகன்ராய் என்னும் வங்கப் பெரியோரால் ஏற்படுத்தப்பட்ட பிரம்ம சமாஜமும், கோபால கிருஷ்ண கோகலே அவர்களால் நிறுவப்பட்ட இந்திய ஊழியர் சங்கமும், விவேகாநந்தரால் நிறுவப்பட்ட இராமகிருஷ்ண சேவா சங்கமும் சமூக நலனை நாடிச் சிறப்பாகத் தொண்டாற்றி வருகின்றன. அன்றியும் கிறிஸ்தவப் பாதிரிமார்களால் ஏற்படுத்தப்பட்ட பல சேவா சங்கங்களும், இளங் கிறிஸ்தவ ஆண்களின் சங்கமும், (Y. M. C. A.), இளங் கிறிஸ்தவ பெண்களின் சங்கமும், (Y. W. C. A.), பாரத சேவா சங்கமும் தொண்டாற்றும் இயல்பில் தோன்றியுள்ளனவே. நமது தேசீய அரசாங்கமும் சமூக நலனைப் பெருக்கப் பல வழிகளிலும் தீவிரமாக முயன்று வருகிறது.

## பகுதி 5

### தொழிலாளரின் நலனுக்கான சமூக முன்னேற்றத் திட்டங்கள் (Social Betterment Schemes for Labour Welfare)

தொழிற் புரட்சியின் விளைவாகப் பொருளுற்பத்தியிலும் தொழிலாளரின் நிலைமையிலும் மாறுதல்கள் ஏற்பட்டன. தொழிலாளரிடையே ஏற்பட்ட விழிப்பினாலும், அரசாங்கம் தொழிலாளரின் நலனைக் காக்கக் கடமைப்பட்டதாலும், நம் நாடு பன்னாட்டுத் தொழிற் சங்கத்தில் சேர்ந்திருப்பதாலும் தொழிலாளரின் நலன்களைக் குறித்து அரசாங்கம் பல சட்டங்களை இயற்றலாயிற்று.

தொழிலாளரின் நலன் என்பது அவர்களின் சுகாதாரம், பாதுகாப்பு, பொதுநலம், தொழில் திறமை ஆகியவற்றின் வளர்ச்சியே ஆகும். முதலாளிகளாலாவது, அரசாங்கத்தாராலாவது, அல்லது தொழிலாளரின் மூலமாகவோவாவது, அல்லது சமூகத்தாராலாவது இத்தகைய நலம் உருப் பெறலாம். எவ்வாறாயினும் தொழிலாளரின் நலன்களைக் கருதி மருத்துவ உதவி, பிரசவ உதவி, கல்வி, விளையாட்டு, வீட்டு வசதி, கூட்டுறவுச் சங்கம், சிற்றுண்டிச் சாலை, குழந்தைகள் பராமரிப்பு, உணவு விடுதிகள், ஓய்விடங்கள், தண்ணீர் வசதி முதலியவற்றை அவர்கட்கு அளித்து அவர்கள் தன்மானங்கொண்ட குடிகளாக ஆகுமாறு செய்தல் வேண்டும்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கி. பி. 1881 முதலாகத் தொழிலாளரின் நலங் குறித்து வேலை நேரம், ஊதியத் திட்டம், சுகாதாரம், குடியிருப்பு வசதி முதலியவற்றைப் பற்றிப் பல சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன. முதல் உலகப் போரின் பின்னர், பன்னாட்டுத் தொழில் ஸ்தாபனத் தொடர்பினால் இந்தியத் தொழிலாளரின் நலனைக் கவனிக்க அரசாங்கம் தீவிர முயற்சியை மேற்கொள்ளலாயிற்று. கி. பி. 1920-ல் அகில இந்திய தொழிற்சங்கம் ஏற்பட்டது. தொழி

லாளரின் நலனைக் கவனிக்கத் தொழில் இலாக்கா ஒன்றுடன் தொழில் அதிகாரி ஒருவரும் மத்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டனர்.

சுதந்திரம் எய்திய பின்னர் யூனியன் அரசாங்கம் தொழிலாளர் நலனில் பேரூக்கம் கொண்டது. 1948-ல் இயற்றப்பட்ட தொழிற்சாலைச் சட்டம் இந்தியத் தொழிலாளரின் உரிமைச் சாசனமாகும். இது தொழிலாளிகளின் பாதுகாப்பு, சுகாதாரம், பொது நலம், நல் வாழ்க்கை வசதிகள் முதலியவற்றைப் பாதுகாக்கிறது. அதன்படி தொழிற்சாலைகள் சுகாதார வசதியுள்ளனவாக இருத்தல் வேண்டும்; தினம் 8 மணி வீதம் வாரத்திற்கு 48 மணிக்கு மேல் தொழிலாளர் வேலை செய்தல் கூடாது; 13 வயதுக்குக் குறைவான சிறுவர்களிடமிருந்து வேலை வாங்குதல் கூடாது; தொழிலாளர்கட்கு ஓய்வு நேரங்களும் விடுமுறை நாட்களும் நிர்ணயிக்கப்படல் வேண்டும்; வேலை செய்கையில் தொழிலாளர்கட்கு ஏற்படும் ஆபத்தின் பொருட்டு அவர்கட்கு நஷ்ட ஈடு செய்தல் வேண்டும்; தொழிலாளர்கட்கு ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுக் குறித்த காலங்களில் தரப்படல் வேண்டும்; இச்சட்டம் விவசாயத் தொழிலாளர்கட்குப் பயன்படாது போனது அதன் ஒரு குறைபாடாகும்.

சமீப காலத்தில் சுரங்கத் தொழிலாளரின் நலனைக் கவனிக்கப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. சுரங்கத் தொழிலாளரின் சுகாதாரத்தைக் கவனிக்கச் சுரங்கச் சுகாதாரக் குழுக்கள் (Mine Boards of Health) ஏற்பட்டுள்ளன. இவை தொழிலாளர்கட்கு வீட்டு வசதி, குடி தண்ணீர் வசதி, சுகாதார வசதி, மருத்துவ வசதி முதலியவற்றை அளிக்குமாறு முதலாளிகளை வற்புறுத்தலாம். 1951-ல் தொழிலாளர் மிச்சப் படுத்தும் சட்டம் (Provident Fund) ஏற்படுத்தப்பட்டது.

தொழிற்சாலைகள் அன்றிக் கடைகள், பெரிய வர்த்தக ஸ்தாபனங்கள், உணவுச் சாலைகள், சிற்றுண்டிச் சாலைகள்,

நாடக மேடைகள் போன்ற பல துறைகளில் வேலை செய்யும் வேலைக்காரரின் வேலை நேரம், விடுமுறை முதலியவற்றைப் பற்றியும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. 1951-ல் தொழிலாளிகளின் நலனையும் முன்னேற்றத்தையும் கருதி ஒரு நிதி ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது. எல்லாவற்றையும் விடத் தொழிலாளர்கட்கு நோய்க்கால உதவி, பெண்களாயின் பிரசவகால உதவி, வேலை பார்க்கையில் காயமுண்டோர்க்குதவி, மருத்துவ உதவி, குடும்பப் பாதுகாப்பிற்குதவி ஆகிய பல வசதிகளை அளிக்க கி. பி. 1948-ல் நமது அரசாங்கம் இயற்றிய தொழிலாளரின் அரசாங்க க்ஷேமநிதிச்சட்டம் (Employees' State Insurance Act) மிகவும் போற்றத்தக்கதாகும். இதற்குரிய நிதிப் பொறுப்பு தொழிலாளிகள், முதலாளிகள், அரசாங்கம் ஆகிய மூன்று திறத்தினராலும் பங்கிட்டுக் கொள்ளப்படுகிறது. இத் திட்டமும், தொழிலாளரின் மிச்சப்படுத்தும் திட்டமும் 1952-ல் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டன.

பம்பாய், சென்னை, நாகபுரி, டாடா நகர், கான்பூர் போன்ற இடங்களில் உள்ள ஆலை முதலாளிகள், தொழிலாளரின் நன்மையைக் கருதிச் சில பொதுநலத் திட்டங்களை நிறைவேற்றி யுள்ளனர். நாகபுரியில் எம்பிரஸ் ஆலையினர் தங்களுடைய தொழிலாளரின் நலனைக் கவனிக்கும் பொறுப்பை Y. M. C. A.-யிடம் அளித்துள்ளனர். டாடா இரும்பு எஃகு தொழிற்சாலை முதலாளிகள் தம் தொழிலாளருக்கு வீடு, குடி தண்ணீர், கல்வி, பொது நலம், சுகாதாரம், மருத்துவ உதவி முதலிய வசதிகளைச் செய்து கொடுத்துள்ளனர். சென்னை, பம்பாய், கல்கத்தா கார்ப்பரேஷன்களும், துறைமுக இலாக்கா அதிகாரிகளும், ரயில்வே அதிகாரிகளும் தங்கள் தொழிலாளரின் பொது நலனைக் கருதிப் பல ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். அன்றியும், இந்திய ஊழியர் சங்கம், பம்பாய், சென்னை, வங்காளத்திலுள்ள சமூக சேவா சங்கங்கள், சேவாசதனம்,

சிசு கர்ப்பிணி பாதுகாப்புச் சங்கங்கள், கிறிஸ்தவ இளைஞர் சங்கம் போன்ற சமூக சேவையில் ஊக்கங் கொண்ட பல சங்கங்கள் தொழிலாளரின் பொதுநலத்தின் பொருட்டுப் பாடுபடுகின்றன. ஸ்டேட் அரசாங்கங்களும் தொழிலாளருக்குக் கல்வி, சுகாதார வசதி முதலிய வசதிகளை அளிக்கின்றன. ஒவ்வொரு ஸ்டேட்டிலும் தொழிலாளரின் பொதுநல நிலையங்கள் (Labour Welfare Centres) ஏற்பட்டுள்ளன. அன்றியும் ஸ்டேட் அரசாங்கங்கள் தொழிலாளரின் பொது நல சேவைக்கு ஆதரவும் அளிக்கின்றன.

## பகுதி 6

### வேலையற்றோர்க்குதவி (Unemployment Relief):

தற்போது பல அயல் நாடுகளில் இருப்பதைப்போல் நம் நாட்டிலும் வேலையில்லாமை எனும் கொடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சமூகப் பொதுநலத்திற்கு பேராபத்து ஏற்படும் என்பதில் ஐயமின்று. நம் நாட்டில் வேலை இல்லாமைக்குப் பல காரணங்கள் உள்ளன.

நம் நாடு விவசாய நாடு. மக்களில் பெரும்பாலோருக்கு விவசாயமே முக்கியத் தொழில். அடிக்கடி மழை பெய்யாது போவதாலும், விவசாயத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தின் பற்றுக் குறையாலும், ஓய்வு காலங்களில் செய்தற்குரிய துணைத் தொழில்கள் இல்லாமையாலும் விவசாயத் தொழிலாளர்கள் வேலையின்றித் தவிக்கின்றனர். கிராமங்களை விட்டு நகரங்களில் நன்கு வாழ நினைத்து அவர்கள் இங்குக் குடியேறுகின்றனர். இதனால் நகரங்களில் ஜன நெருக்கம் பெருகுவதால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது. நம் நாட்டில் சாதிப் பாகு-பாட்டின் சார்பில் ஒரு தொழிலை ஒரு சாதியினரே செய்வதாலும், ஒரு சாதியாரின் தொழிலைப் பல சாதியார் பகிர்ந்து நடத்துவதாலும், ஐக்கியக் குடும்ப வாழ்க்கை முதலிய சமூகக் குறைபாடுகளாலும் வேலை இல்லாமை ஏற்படு

கிறது. மேலும், தொழிற்புரட்சியின் விளைவால் பல குடிசைத் தொழில்கள் மறைந்துவிட்டன. அதனால் பலர் வேலையின்றி வருந்துகின்றனர். அன்றியும் நம் நாட்டில் யந்திரத் தொழில்கள் நன்கு வளர்ச்சியுறாமையால் வேலை யில்லாதவர்க்கு வேலை கொடுத்துதவ முடியவில்லை.

வேலையின்மைக்கு நம் நாட்டுக் கல்வித் திட்டமும் ஒரு முக்கியக் காரணமாகும். நமது கல்வி எதிர்கால வாழ்க்கை முறைக்கு ஒத்ததாக இல்லை; அன்றியும் அது தொழில் வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் இல்லை. உத்தியோகம் பெறு வதே நம் கல்வியின் முக்கிய நோக்கமாகக் கருதப்படு கிறது.

வேலையில்லா நெருக்கடியைப் போக்க அரசாங்கம் நமது கல்வி முறையைத் திருத்தி அமைக்க வேண்டும். படித்தவர்கள் விவசாயம், உடல் வலிமையால் ஆற்றலிய லும் இதர வேலைகள் முதலியவற்றையும் ஏற்க முன்வர வேண்டும். அரசாங்கமும் சமூகமும் பேரளவைப் பொருள் உற்பத்தித் தொழில், சிற்றளவைப் பொருள் உற்பத்தித் தொழில், குடிசைத் தொழில் முதலியவற்றிலும் நன்கு ஊக் கம் கொள்ளவேண்டும். கிராமங்களில் கூட்டுறவு சங்கங் கள், கூட்டுப் பண்ணைகள், நல்ல நீர்ப்பாசனத் திட்டங்கள் முதலியவற்றை ஏற்படுத்த வேண்டும். அன்றியும் நல்ல ரஸ்தாக்கள், கல்வி, சுகாதாரம் முதலிய வசதிகளையும் அரசாங்கம் செவ்வனே அளித்துக் கிராமப் புனரமைப் புக்கும், கிராமப் பொருளாதார முன்னேற்றத்துக்கும் பாடு பட வேண்டும். சுருங்கக்கூறின், மனித உழைப்பும், நாட்டின் பொருள் உற்பத்திப் பெருக்கமும், திட்டமிட்ட கல்வி முறையும், தொழிற் பயிற்சியும், மக்களின் சிக்கன வாழ்க்கையும் வேலையில்லா நெருக்கடியைத் தீர்க்கப் பெரிதும் உதவும்.

நமது அரசாங்கம் வேலையின்மையைப் போக்கப் பலவழி களைப் பின்பற்றி வருகின்றது. சுதந்திர இந்தியாவில்

ஒவ்வொரு ஸ்டேட் அரசாங்கத்திலும், யூனியன் அரசாங்கத்திலும் வேலையற்றோர்க்கு வேலை தேடித்தரும் பொருட்டுத் "தொழில் தேடித்தரும் நிலையம்" (Employment Exchange) எனும் ஸ்தாபனம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பதிவு செய்து கொள்கின்றவர்களுக்கு வேலை தேடித் தரப் படுகிறது. பதிவு செய்பவர்கள், வேலை தேடித் தரப்பட்டோர் ஆகியோரின் புள்ளி விவரங்கள் அவ்வப்போது வெளியிடப் படுகின்றன. படித்தவர்கட்கு மட்டுமின்றி படிக்காதவர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் வேலை தேடிக் கொடுக்கப் படுகிறது.

நாட்டின் தேசீய செல்வத்திற்கு முக்கிய காரணமான நம் விவசாயத்தை நவீன முறையில் வளரச் செய்ய புதிய நீர்ப்பாசனத் திட்டங்களையும், மேனாட்டு முறைகளையும் நம் அரசாங்கம் நடைமுறையில் கொண்டுவர அரும்பாடு படுகிறது. அன்றியும் விவசாயிகளுக்குத் துணை வருவாய் அளிக்க அரசாங்கம் குடிசைத் தொழில்களையும், சிறுவிதத் தொழில்களையும் பெருக்கப் பாடுபடுகின்றது. வேலையின்மையைப் போக்கப் பெரிதும் உதவுவதற்காகக் கைத்தறி நெசவுத் தொழிலில் அரசாங்கம் அதிக ஊக்கம் காட்டி வருகின்றது.

தொழில் பெருக்கால் பலருக்கு வேலை ஏற்பட நமது அரசாங்கம் தொழிற் கல்வியை பரவச் செய்யவும், தொழில் நிபுணர்களைத் தயாரிக்கவும் பயிற்சி நிலையங்கள் பலவற்றை ஏற்படுத்தி வருகின்றது.

தொழில் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டதும் எதிர்காலத்தில் பிழைப்புக்கு உதவக்கூடிய ஏதேனும் ஒரு தொழிலை அடைப்படையாகக் கொண்டு விளங்கும்படிச் செய்யவும் அரசாங்கம் கல்வி முறையை மாற்றி அமைத்து வருகின்றது.

நாட்டின் முன்னேற்றத்திற்காக நம் யூனியன் அரசாங்கத்தாரால் வகுக்கப்பட்டுள்ள முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வேலையின்மையைப் போக்க பெருந்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. வேலையற்ற பட்டதாரிகளுக்கு யூனியன் அனைத்திலும் பள்ளி ஆசிரியர் வேலை தர யூனியன் அரசாங்கம் மாபெரும் மூவாண்டுத் திட்டமொன்றை வகுத்துள்ளது. அன்றியும் நடுத்தர குடும்பங்களில் குடும்ப சம்பாதனையைப் பெருக்கப் பெண்களுக்கென ஒரு வேலைத் திட்டத்தை யூனியன் அரசாங்கம் வகுத்துள்ளது.

### பயிற்சி

1. சமூக நல்வாழ்வு என்பது யாது?
2. நம் நாட்டில் பொதுச் சுகாதாரக் குறைவுக்குக் காரணங்கள் என்ன? பொதுச் சுகாதாரத்தை முன்னிட்டு மத்திய அரசாங்கத்திலும், ஸ்டேட்டுகளிலும் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் யாவை? தற்போது நம் யூனியன் சுகாதார மந்திரி யார்?
3. நம் நாட்டு மக்களைப் பீடிக்கும் முக்கிய கொடிய நோய்கள் எவை? அவற்றைப் போக்க நீ கூறும் யோசனைகள் எவை?
4. நம் ராஜ்ஜியத்தின் தலைமை மருத்துவ அதிகாரிக்கும் பொதுச் சுகாதார அதிகாரிக்கும் வழங்கும் பெயர்கள் யாவை?
5. முன் பாதுகாப்பின் சிறப்பு யாது? பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையின் தொண்டு யாது? செஞ்சிலுவைச் சங்கத்தின் நோக்கங்கள் யாவை? இளஞ் செஞ்சிலுவைச் சங்கம் ஏன் ஏற்பட்டது? செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் சங்கத்தாரின் சேவை யாது?
6. தொழிலாளியின் நலம் என்பது யாது? தொழிலாளியின் நலனைக் கருதி யூனியன் அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள திட்டங்களுள் நான்கினைக் குறிப்பிடுக.

7. நம் நாட்டில் வேலையின்மைக்கு ஏதேனும் மூன்று காரணங்களையும், அதனைப்போக்க அரசாங்கத்தார் செய்துள்ள ஏற்பாடுகளில் இரண்டினையும் குறிப்பிடுக.
8. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க:
(a) மத்திய அரசாங்கத்திற்குப் பொதுச் சுகாதாரம் சம்பந்தமாக ஆலோசனை கூறுபவருக்குப் பெயர்— (b) சென்னை ஸ்டேட்டின் தலைமை மருத்துவ அதிகாரிக்கு—என்று பெயர். (c) நம் மத்திய அரசாங்கத்தின் தொழில் இலாக்கா மந்திரி——ஆவர். (d) க்ஷய ரோகிகளின் மருத்துவச் சாலைகள் உள்ள இரு இடங்கள்——, ——ஆகும்.
9. செஞ்சிலுவைச் சங்கத்திலும், செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் சங்கத்திலும் சேர்ந்து சமூக சேவை புரிந்திடுக. உங்கள் பள்ளியில் முன்பாதுகாப்புத் தளம் ஒன்றும், முதல் உதவித் தளம் ஒன்றும் அமைத்திடுக.

---

# அத்தியாயம் 13

## பஞ்சமும் பஞ்ச நிவாரணமும்

### பகுதி 1

#### நம் நாட்டுப் பஞ்சங்கள்

நம் நாடு ஒரு சிறந்த விவசாய நாடு என்பது யாவரும் அறிந்ததே. பஞ்சம் என்பது விவசாய நாடுகளின் ஒரு பெருங் கொடுநோய் போன்றது. பஞ்சங்கள் அளவற்ற உயிர்க் கேட்டையும் பொருட்கேட்டையும் உண்டாக்கி இருக்கின்றன.

பஞ்சத்திற்கு முக்கிய காரணங்கள்: (1) நம் நாடு பருவக் காற்று நாடு. நம் நாட்டுப் பயிர்த்தொழில் இங்கு வீசும் பருவக்காற்று மழையையே பெரிதும் நம்பியுள்ளது. பருவக் காற்று மழை பெய்யும் என்பது நிச்சயமில்லை. அவ்வப் போது மழை பெய்யத் தவறி விடுகிறது. அதனால் விளைவு

குன்றி விடுகிறது. சில சமயங்களில் வெள்ளப் பெருக்கெடுத்தோடுமாறு சோனை மழை பொழிந்துவிடுகிறது; அதுகாலை சாலப் பயிர்கள் பாழாகின்றன.

(2) ஆண்டு தோறும் மக்கட் தொகை பெருகி வருதல் காரணமாகவும், நம் நாட்டு நிலங்களையே நாம் நம்பி இருப்பதாலும் உணவுப் பற்றுக் குறைவு ஏற்படுகிறது.

(3) நீண்ட காலமாகப் பயிரிட்டு வருவதால் நிலங்கள் சத்துக் குறைவுபடுவதாலும், விவசாய முறைகள் யாவும் மிகப் பழமையாகவே இருப்பதாலும் நல்ல விளைவு பலிதமாதலில்லை.

(4) நம் நாட்டுப் பயிர்களுக்கு அடிக்கடி வரும் பல வகை நோய்களினுலும், வெட்டுக் கிளி போன்ற பூச்சிகளினுலும் பலத்த நஷ்டம் ஏற்படுகின்றது,

(5) விரைந்து செல்லும் போக்கு வரவு சாதனங்கள் நம் நாட்டில் குறைவு.

நம் நாட்டில் முன்னர் ஏற்பட்ட பெரிய பஞ்சங்கள் சிலவற்றை நாம் அறிந்துகொள்ளுதல் அவசியமாகும். கி. பி. 1838-ல் உத்தரப் பிரதேசத்தில் கொடிய பஞ்சம் ஒன்று ஏற்பட்டதால் 8 லக்ஷம் மக்கள் மாண்டனர். பின்னர், கி. பி. 1865-67-ல் ஒரிஸ்ஸாவில் வறட்சியினுல் கொடும் பஞ்சம் உண்டானதால் 5 கோடி மக்கள் அவதிக்குள்ளாயினர். சிறிது காலத்திற்குப் பிறகு, கி. பி. 1876-78-ல் தென்னிந்தியாவானது நஞ்சனைய பஞ்சத்துக்குள்ளாயிற்று; அதனுல் எல்லையற்ற சேதமும் துன்பமும் விளைந்தன. இதுவே தாது வருடக் கருப்பு எனப்படுவது. மேலும் அரசாங்கம் 15 கோடி ரூபாய் செலவு செய்யும்படியாக, கி. பி. 1899-1900-ல் இந்தியாவில் பல பாகங்களிலும் ஒரு பஞ்சம் ஏற்பட்டது. இந் நூற்றுண்டில் கி. பி. 1943-ல் வங்காளத்தில் உலகம் கண்டு கலங்கும்படி மிகக் கொடிய பஞ்சம் ஒன்று ஏற்பட்டது; அதனுல் லக்ஷக்கணக்கில்

மக்கள் மாண்டனர். 1951-ல் ராயல சீமையிலும் மற்றும் சில சென்னை ஜில்லாக்களிலும் கொடிய பஞ்சம் தோன்றியது.

## பகுதி 2

**பஞ்ச நிவாரணம் :** பஞ்சக் கொடுமைகளைக் கண்டு அரசாங்கம் நிவாரணத் திட்டங்களை ஏற்படுத்துவதன் அவசியத்தை நன்குணர்ந்தது. கி. பி. 1865-67-ல் ஒரிஸ்ஸாவில் பஞ்சம் ஏற்பட்டபோது அதுகாலை இராஜப் பிரதிநிதியாக இருந்த **லாரென்ஸ் பிரபு** நீர்ப்பாசனக் கால்வாய்கள் போக்குவரத்துச் சாலைகள், புதிய இருப்புப் பாதைகள் முதலியவற்றை ஏற்படுத்தினர். பயன்தரும் மராமத்து வேலைகளின் பொருட்டுப் பெருந்தொகையைச் செலவிட்டார். இதற்குப் பின்னர் இந்திய மந்திரியாக இருந்த **சர் ஸ்டாபோர்டு நார்த்கோட்** என்பார் இந்தியாவின் பஞ்ச நிவாரணத்தைப் பற்றிப் பார்லிமென்டில் பேசுகையில் "பஞ்சக் கொடுமையை நீக்கத் தவறுவது பிரிட்டிஷாருக்கும், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும், அவ் வரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட இந்திய ஆட்சியாளருக்கும் அவமான" மென்று இடித்துக் கூறினர். இதன் விளைவால் இந்தியாவில் பஞ்ச நிவாரணையின் பொருட்டுத் தொடர்ந்து பல பஞ்சக் கமிஷன்கள் (Famine Commissions) நியமிக்கப்பட்டன. இக் கமிஷன்கள் நல்ல பயன் தரும் சில திட்டங்களைச் சிபார்சு செய்தன.

இராஜப் பிரதிநிதி லிட்டன் பிரபு காலத்தில், கி. பி. 1878-ல் **ஸர் ரிச்சர்டு ஸ்டிரேஸி** என்பவரின் தலைமையின் கீழ் முதற் பஞ்சக் கமிஷன் கூடியது. அது அரசாங்கம் திட்டமிட்ட பஞ்ச நிவாரண வேலைகளை ஆரம்பித்து வேலையாட்களுக்கு நல்ல ஊதியங் கொடுக்கவேண்டும் என்றும், சக்தியற்றவர்கட்கும், முடவர்கட்கும் இலவச உதவி புரிதல் வேண்டும் என்றும், உணவுப்பொருள் வினியோகத்தைத் தனியாட்களிடம் விட்டுவிடல் வேண்டும் என்றும், நிலச்

சொந்தக்காரர்களுக்கு அரசாங்கம் கடன் கொடுத்தும், நில வரியை வஜா செய்தும் உதவி புரிதல் வேண்டும் என்றும், தடையின்றி உள்நாட்டு வர்த்தகம் நடைபெற வேண்டும் என்றும், நீர்ப்பாசனத்திட்டங்கள் பெருக்கப்படல் வேண்டும் என்றும், பஞ்ச நிவாரண நிதி யொன்று ஏற்படுத்தல் வேண்டும் என்றும், குறைந்த செலவில் இருப்புப் பாதைகள் அமைக்கப்படல் வேண்டும் என்றும் சிபார்சு செய்தது. இச் சிபார்சுகளே மாகாணப் பஞ்ச நிவாரண விதிகளாயின.

கி. பி. 1945-ல் வங்காளப் பஞ்சத்திற்குப் பின்னர் உட்ஹெட் பஞ்ச விசாரணைக் குழுவினர் குடிகள் அனைவருக்கும் உணவு அளிப்பது தம் கடமை என்பதை அரசாங்கம் உணர்தல் வேண்டும் என்றும், தேசத்தின் உணவு நிலையைக் கவனிக்க அகில இந்திய உணவுச் சபை ஒன்று ஏற்படல் வேண்டும் என்றும், உணவுத் தானியங்களைச் சேகரிப்பதும் அவற்றைப் பரிமாறுதலும் அரசாங்கத்தின் தனி உரிமையாக இருத்தல் வேண்டும் என்றும், விவசாயிகள் உணவுத் தானியங்களை நியாய விலைக்கு விற்கச் செய்யவேண்டும் என்றும், மத்திய அரசாங்கத்தில் தனி உணவு விவசாய இலாக்கா ஏற்படல் வேண்டும் என்றும் எடுத்துக் கூறியது.

பஞ்சத்தைப் போக்க அரசாங்கம் பல முறைகளைக் கையாண்டு வருகிறது. அரசாங்கம் வான நிலையை அறிந்து தக்க முன்னேற்பாடுகள் செய்து வருகிறது. பயிர்கள் நோயினால் சேதமடைவதை அறிந்து, பயிர்களை அவற்றினின்று காப்பாற்றும் வழிகளை எடுத்துக் கூறி வருகிறது. பொதுமக்களுக்குத் தனது கொள்கைகளைப் பிரசாரத்தின் மூலம் விளக்கிக் கூறி உத்தியோகஸ்தர் அல்லாதாரின் அன்பைப் பெற்று வருகிறது. மழை பெய்தவுடன் விவசாயிகளை உழவுத் தொழிலைத் தொடங்குமாறு தூண்டி, அவர்கட்கு வேண்டிய விவசாயக் கருவிகளையும் பண உதவியையும் அளித்துதவுகிறது. குடிசைத் தொழில்களை ஊக்கி வருவ

துடன் மரஞ் செடி கொடி முதலியவற்றைப் பயிராக்க மக்கட்கு உற்சாகத்தையும் தூண்டி வருகிறது.

மேலும் நம் நாட்டு மக்களின் வாழ்க்கை நிலைமையைப் பற்றியும், நாட்டின் பொருளாதார மாறுதல்களைப் பற்றியும் நாட்டில் அனைவரும் அறிந்துகொள்ளுமாறு தக்க புள்ளி விவரங்களுடன் விளம்பரம் செய்து வருகிறது அரசாங்கம். கி. பி. 1919-ஆம் ஆண்டுச் சீர்திருத்தங்களுக்குப் பின்னர் ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்பட்ட பஞ்ச நிவாரணத் தனி நிதியிலிருந்து அரசாங்கம் மக்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்துதவுகிறது. பொதுமக்கள் கொடுத்துதவும் நன்கொடையும் அரசாங்கம் பெற்று அதனை நன்கு பயன்படுத்துகிறது. அன்றியும் நாட்டில் இருப்புப் பாதைகளைப் பெருக்கியும், விவசாய நெருக்கடிக் காலங்களில் நிலவரியைக் குறைத்தும், கஞ்சி வார்த்தும், கடன் கொடுத்தும் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தும், பயிர்த்தொழில் குறைவின்றி நடைபெற நீர்ப்பாசனத்திட்டங்களைப் பெருக்கியும், நிலவரித் திட்டத்தை அவ்வப்போது திருத்தியும், பிறவற்றாலும் அரசாங்கம் பஞ்ச ஒழிப்பு அலுவலை ஆற்றிவருகின்றது. எல்லாவற்றையும்விட நாடு முழுவதிற்கும் உகந்த பொருளாதார நிலையினால் மக்கள் வறுமை நீங்கி வாழ யூனியன் அரசாங்கம் திட்டம் வகுத்துவருதல் போற்றத் தக்கதாகும்.

## பகுதி 3

**உணவுப் பொருள்களின் பங்கீடும் கட்டுப்பாடுகளும்:** இரண்டாம் உலகப் போரினால் உலகெங்கும் ஏற்பட்டதைப் போல் நம் நாட்டிலும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. போரின் விளைவால், பர்மா, ஜாவா, தாய்லாந்து முதலியநாடுகளிலிருந்து வரும் உணவு இறக்குமதிகள் நின்றமையாலும் மழை பொய்த்தமையாலும் நம் நாட்டில் உணவுப் பொருள் பற்றுக்குறை ஏற்பட்டது. எனவே, மக்கள் அனைவருக்கும் நியாயமாகவும் சமமாகவும் உணவுப் பொருள் கிடைக்குமாறும் சுயநலக்காரரின் பதுக்கலைத் தடுப்பதற்கும்,

நாட்டின் அமைதியும், பாதுகாப்பும் குலையாவண்ணம் இருத்தற்கும் நமது அரசாங்கம் உணவுப் பொருள் பங்கீட்டு முறையையும் கட்டுப்பாடுகளையும் கைக்கொள்ள வேண்டியதாயிற்று. தற்போது உணவுப் பங்கீட்டு முறையும் கட்டுப்பாடுகளும் இந்திய யூனியன் முழுவதிலும் எடுக்கப்பட்டுள்ளன.

நமது அரசாங்கம், நம் நாடு அயல்நாட்டு உணவுப் பொருளை நம்பி வாழ்வதை விட்டுத் தன் சுயத் தேவையைத் தானே பூர்த்தி செய்து கொண்டு பொருளாதார நிலையில் உயர்ந்தோங்க முயன்று வருகிறது. தரிசு நிலங்கள் யாவும் விளை நிலங்களாக்கப்பட்டு வருகின்றன. அதிக உணவு உற்பத்தி இயக்கத்தின் மூலமாக "உணவுப் பொருள்களைப் பெருக்குக" (Grow More Food) என்ற ஆரவாரத்தினல் மக்கள் ஊக்கப்படுகின்றனர். விவசாயிகட்குக் கிணறு வெட்டுதற்கும், பிறவற்றிற்கும் அரசாங்கம் பொருள் தந்து உதவுகிறது. அடிக்கடி யூனியன் அரசாங்கம் எல்லா ஸ்டேட்டுகளின் உணவு மந்திரிகளையும் கொண்ட மாநாடுகளைக் கூட்டி, உணவு நிலைமையை ஆராய்ந்து வருகின்றது. மழையின் பொருட்டுக் காடுகளை வளர்க்க 'வன மகோற்சவம்' என்னும் விழாவை நாடெங்கும் சிறப்பாக நடத்தி வருகிறது. இத்துணையும் செய்துவரும் அரசாங்கத்துடன் குடிமக்கள் அனைவரும் ஒத்துழைத்தல் அவசியமன்றோ!

### பயிற்சி

1. *நம் நாட்டில் பஞ்சங்கள் ஏற்பட முக்கியக் காரணங்கள் என்ன? நம் நாட்டில் ஏற்பட்டுள்ள ஏதேனும் மூன்று பெரிய பஞ்சங்களைக் குறிப்பிடுக.*
2. *பஞ்சக் கமிஷன்கள் யாவை? அவைகளின் முக்கிய சிபார்சுகள் யாவை?*
3. *அரசாங்கத்தின் பஞ்ச நிவாரண முறைகளுள் ஏதேனும் நான்கினைக் குறிப்பிடுக.*

———

# அத்தியாயம் 14

## குடிமை (Citizenship)

### பகுதி 1

#### எழுத்தறிவின்மையைப் போக்கல்

கடவுளின் படைப்புக்களுள் மனிதன் மிகவும் உயர்ந்த படைப்பாகக் கருதப்படுவதற்குக் காரணம் அவன் பெற்றுள்ள ஒப்புயர்வற்ற பகுத்தறிவே. இத்தகைய பகுத்தறிவை நன்கு வளர்ப்பது எழுத்தறிவுதான். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்னும் மெய்யுரையும் எழுத்தறிவின் மேன்மையை வலியுறுத்தவே எழுந்தது. எழுத்தறிவின் மூலம் ஏற்படுவது நல்ல கல்வியறிவு; கல்விச் செல்வமே கேடிலா விழுச்செல்வம். அது மனிதனுக்குத் தன்னடக்கம், தன்னம்பிக்கை, தன்னைச் சூழ்ந்துள்ளவற்றைப் பற்றிய அறிவு, நல்வாழ்க்கைக்குரிய வழி முதலிய அனைத்தையும் கற்பகம்போல் அளிக்க வல்லது.

தற்காலத்தில் நம் நாடுபோல் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டுள்ள நாடுகளில் மக்கள் அரசியலில் பங்கெடுத்துக் கொள்ள அவர்கட்கு எழுத்தறிவே வேண்டற்பாலது. எழுத்தறிவின்றி நம் உரிமைகளையும், கடமைகளையும் உணர்ந்த நல்ல குடிமக்களாக நம்மால் வாழ்தல் இயலாது. எனவே, **ஜனநாயக வெற்றிக்கு எழுத்தறிவின்மையைப் போக்குவது மிகவும் இன்றியமையாததாகும்.**

இன்று நாம் அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபட்டுள்ளோமாயினும் எழுத்தறியாமையினின்று இன்னும் விடுபட்டோமில்லை. பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் நம் நாட்டில் எழுத்தறிவுடையோரின் தொகை மிகவும் குறைவாய் உள்ளது. தற்போது நம் நாட்டில் எழுத்தறிவுடையோரின் தொகை 16.6 சத விகிதம்தான் (6 கோடி மக்கள்). பாகிஸ்தானில் எழுத்தறிவுடையோரின் தொகை 13.8 சத

விகிதமாகும். நம் நாடு 36 கோடி மக்களையுடையது என்பதை விட, சுதந்திர இந்தியா 36 கோடி எழுத்தறிவுடையோரைப் பெற்றுள்ளது என்றால் அது பெருமை யன்றோ? இதனால் எழுத்தறிவின்மையை நாம் முதற்கண் ஒழித்தல் வேண்டும்.

**கட்டாயக் கல்வி :** சமூகம் மேன்மையுற நாடு சீர் பெற அரசாங்கம் எழுத்தறிவின்மையைப் போக்கக் கடமைப் பட்டுள்ளது. அசோகர் போன்ற நம் நாட்டு வேந்தர் களும் பண்டைக் காலத்தில் எழுத்தறியாமையைப் போக்க முயன்றதைச் சரித்திர வாயிலாக அறிகின்றோம். நம் நாடு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டபோது எழுத்தறி வின்மைக்கும் நாம் அடிமையானோம். பிரிட்டிஷ் ஆட்சி இங்கு வேரூன்றிய பின்னர் அவர்களின் ஆட்சிக்கு உதவியாக எழுத்தாளர்களும் உத்தியோகஸ்தர்களும் தேவை ஆயினர். எனவே, பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியர்களிடையே எழுத் தறிவைப் பரவச் செய்யத் தொடங்கியது.

இந்திய அறிஞர் பலரிடையே விழிப்பு ஏற்பட, இந்திய அரசியல் விடுதலைக்கு எழுத்தறிவின் தேவையை உணர்ந்து, அவர்கள் அதை மக்கட்குதவ முன்வந்தனர். இத்தகை யோரில் முதன்மையானவர் 18-ஆம் நூற்றாண்டில் தோன் றிய ராஜாராம் மோகன்ராய் எனும் வங்கப் பெரியாராவர். இவருக்குப் பின்னர் சென்ற நூற்றாண்டில் சுரேந்திரநாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி போன்ற பல தேச பக்தர் கள் எழுத்தறியாமையைப் போக்க அரும்பாடுபட்டனர். இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் விளங்கிய கோபால கிருஷ்ண கோகலே ஓரளவு ஆரம்பக் கல்வியேனும் பெறுதல் ஒவ்வொருவரின் பிறப்புரிமையாகும் என்றும் அதைக் கட்டாயம் பெற்றே தீரவேண்டும் என்றும் அரசாங்கத்துடன் அவர் போராடினார். நம் தேசப் பிதா காந்தியடிகள் மக்களை எழுத்தறியாதவர்களாக வைத்திருப்பது அரசாங்கத்திற்குப் பாவம் என்றும், ஆரம்பக் கல்விமட்டுமன்றி எல்லாவிதமான கல்வி அறிவையுமே இந்நாட்டு மக்கள் இலவசமாகப் பெறு

தல் வேண்டும் என்னும் வாய்ப்பறை அறைந்தார். அன்னூர் ஊக்கிய தேசீயத்தினுல் எழுத்தறியாமையைப் போக்க தனி ஸ்தாபனங்களும் தோன்றின.

பிரிட்டிஷ் அரசாங்கமும் எழுத்தறியாமையைப் போக்கப் பல சீர்திருத்தங்களை இயற்றியது. சிறப்பாக, கி. பி. 1919-ல் ஏற்பட்ட மான்ட்-போர்டு சீர்திருத்தங்களினுல் ஆரம்பக் கல்வி மேலும் பரவத் தொடங்கியது. பல ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் கட்டாய ஆரம்பக் கல்வி முறையைப் பின்பற்றும் அதிகாரம் கிடைத்தது. ஆயினும், நம் நாட்டில் எழுத்தறியாமை ஒழிந்தபாடில்லை.

நமது அரசியல் அமைப்புத் திட்டப்படி பதினுன்கு வயது வரையிலுள்ள குழந்தைகள் அனைவருக்கும் இலவசமாகக் கட்டாயக்கல்வி அளிக்கப்படவேண்டுமெனக் கண்டுள்ளது. எனவே, நம் சுதந்திர இந்தியாவில் இலவச ஆரம்பக் கல்வி எல்லா ஸ்டேட்டுகளிலும் போதிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அன்றியும் எழுத்தறிவற்ற முதியோர்களுக்கும் எழுத்தறிவுண்டாக்க முதியோர் கல்வித் திட்டம் என்ற ஒன்று எங்கும் நிறைவேற்றப்படுகிறது. இதற்கெனத் தனிக் கல்வி நிலையங்கள் எங்கும் ஏற்பட்டு வருகின்றன. ஆயிரக் கணக்கில் ஆசிரியர்களுக்குத் தனிப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அரசாங்கத்தினர் எழுத்தறியாமையை முற்றிலும் போக்கக் கற்றவர் யாவரும், "ஒருவர் மற்றொருவர்க்குக் கற்பித்திடுக" என்னும் மெய்யுரையை முழக்கிச் செய்து வரும் சேவை பாராட்டுதற்குரியது.

## பகுதி 2

நமது வாக்குரிமை (Our Right to vote): வாக்குரிமையென்பது நாட்டாட்சி முறையில் மக்கள் பங்கெடுத்துக் கொள்ள ஏற்பட்ட ஓரரிய அரசியல் உரிமையாகும். நமது ஆட்சி ஜனநாயக ஆட்சியாதலின் நாமே நம் நாட்டு ஆட்சியாளர் ஆவோம். நாம் சில பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து

அவர்களின் மூலம் நம் ஆட்சியை நடத்தி வருகிறோம். நம்மை நாமே ஆள நாம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமைக்கே வாக்குரிமை என்று பெயர். நமது கட்டளைப்படி நடக்கத் தகுதி வாய்ந்தோரையே நாம் தேர்ந்தெடுக்கின்றோம். சட்ட சபை எனப்படும் ஆட்சி மன்றங்களில் நாம் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் நேராக ஆட்சியாளரிடம் வாதாடி நமது உரிமைகளைக் காக்கின்றனர். ஆதலின், வாக்குரிமை என்பது ஜனநாயகத்தின் வித்தாகும்.

நமது அரசியல் திட்டப்படி 21-வயது நிரம்பிய ஆண் பெண்களாகிய இந்தியக் குடிகள் அனைவருக்கும் வாக்குரிமையுண்டு. வாக்குரிமைக்குச் சொத்துத் தகுதியோ அல்லது கல்வித் தகுதியோ இல்லை. சாதி மத வேறுபாடின்றி அனைவருக்கும் வாக்குரிமையுண்டு.

இவ்வரிய உரிமை கிடைத்துள்ளமையைக் குறித்து நாம் பெருமிதங்கொள்ள வேண்டும். இதனை நாம் எளிதில் பெறவில்லை. ஜனநாயகத்திற்கே எடுத்துக்காட்டாக உள்ள இங்கிலாந்திலும் இவ்வுரிமையைப் பெற மக்கள் பலவாண்டுகள் போராடினர். கி. பி. 1928-ல் தான் இங்கிலாந்தில் 21-வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை ஏற்பட்டது. நம் நாட்டிலோ, பிரிட்டிஷ் ஆட்சியில் நமக்கு முதலில் வாக்குரிமை என்பது யாதொன்றுமில்லை. நாம் அடிமைகளாகவே கருதப்பட்டோம். கி. பி. 1909-க்குப் பின்னர்தான் மக்கள் வாக்குரிமையைப் படிப்படியாகப் பெறலாயினர். கி. பி. 1935 வரைச் சொத்துரிமை யுடையவர்க்கே வாக்குரிமை இருந்தது. கி. பி. 1935-ஆம் ஆண்டுச் சட்டப்படி எழுத்தறிவுடையோர்க் கெல்லாம் வாக்குரிமை ஏற்பட்டது. ஆனால், இந்திய தேசீய காங்கிரஸ் மகா சபை மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை வேண்டுமென்று அரசாங்கத்துடன் முன்னர்ப் போராடியது. நாம் விடுதலை பெற்ற பின்னர் காங்கிரஸின் கருத்துப்படியே அனைவருக்கும் வாக்குரிமை கிடைத்த செய்தி போற்றுதற்குரியது.

**பெண்களின் வாக்குரிமை:** நம் நாட்டுப் பெண் மக்கள் வாக்குரிமை பெற நடத்திய இயக்கம் வெற்றி பெற்றதற்கு, இங்கிலாந்து, அமெரிக்காவிலுள்ள பெண்கள் வாக்குரிமைக்காகப் போராடி வெற்றி பெற்றதும், மேனாட்டுக் கல்வி முறை நம் நாட்டில் பரவியதும், பெண்களுக்குத் தம் உரிமையைப் பாதிக்கும் சமூகக் கொடுமைகளை ஒழிக்க ஏற்பட்ட விழிப்பும் காரணங்களாகும்.

பெண்களின் அரசியல் முன்னேற்றத்தில் பம்பாய் மாகாணம் முன்னணியில் நிற்கலாயிற்று. அதற்கு உயர் திரு. ராமாபாய் ரானடே காரணமாவர். பம்பாய் கார்ப்பரேஷன் தேர்தலில் பங்கெடுத்துக்கொள்ள 21 வயதான பெண்கள் யாவருக்கும் வாக்குரிமை தரப்பட்டது. இதனால் பம்பாய் கார்ப்பரேஷன் சபையில் பெண்கள் அங்கத்தினராயினர். பம்பாய் மாகாணத்திலடங்கிய ஏனைய நகர முனிசிபல் தேர்தல்களிலும் தங்களுடைய வாக்குரிமையைப் பெண்கள் அறிவுடன் பயன்படுத்தினர். பெண்கள் பலர் ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் வகிக்கலாயினர்.

கி. பி. 1916—1917-ல் நடந்த ஹோம் ரூல் இயக்கந்தான் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் துணை செய்தது. பெண்களின் திலகமாய் வந்த அன்னி பெஸன்ட் அம்மையாரின் சிறைவாசத்தால் பெண்களிடையே பெரிய அரசியல் விழிப்பு ஏற்பட்டது. கி. பி. 1917 மார்ச்சில் சென்னையில் 'இந்திய மாதர் சங்கம்' நிறுவப்பட்டது. அதுகாலை இந்திய அரசில் நிலைமையை அறிய இந்திய மந்திரியான மாண்டேகுவின் வருகை இந்தியப் பெண்மணிகளின் அரசியல் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியது. கி. பி. 1917 டிசம்பர் 18-ந் தேதி சென்னையில் அகில இந்திய மாதர்களின் பிரதிநிதிகள் மாண்டேகுவிற்கு விண்ணப்பம் ஒன்றைக் கொடுத்தனர். அதில் குறித்த செய்தி யாதெனில், இந்திய மக்களின் வாக்குரிமை விஸ்தரிக்கப்படும்போது அரசாங்கத்தினர் பெண்களும், இந்நாட்டு ஜனத்

தொகையில் பாதியாகவுள்ளவர்கள் என்று மதித்து, அதற்கேற்றவாறு அவர்களுக்கு அரசியலில் பங்கு அளிக்க வேண்டும் என்பதுதான்.

கி. பி. 1919-ல் பார்லிமெண்டில் ஒரு சீர்திருத்த மசோதா உருவாயிற்று; ஆனால், அதில் பெண்ணினத்தின் உரிமை பற்றி யாதொன்றும் குறிப்பிடவில்லை. பின்னர் பெஸன்ட், சரோஜினி, ஹேராபாய் டாடா ஆகியோர் அகில இந்திய மாதர்களின் சார்பில் பிரதிநிதிகளாக இங்கிலாந்திற்குச் சென்று, பார்லிமென்ட் கூட்டுக் கமிட்டிமுன் சாட்சியம் கூறினர். பார்லிமென்ட் இந்திய மாகாண சட்டசபை பெண்களின் வாக்குரிமையை நிர்ணயிக்க அனுமதித்தது. இதன்படி, சென்னை மாகாணம் பெண்மணிகளுக்கு சட்டசபைத் தேர்தல்களுக்கான வாக்குரிமையை அளித்து, மற்ற மாகாணங்களுக்கு வழிகாட்டியாயிற்று. கி. பி. 1927-க்குள் 9 மாகாணங்களுள் 7 மாகாணங்களில் பெண்களுக்கு வாக்குரிமை ஏற்பட்டது.

நம் நாட்டுப் பெண்மணிகள், அவர்களது அகில இந்திய மாதர் சங்கத்தினுல் பல துறைகளில் முன்னேற்றம் பெற்றுள்ளனர். 1927-ஆம் ஆண்டு முதற்கொண்டு அகில இந்தியர் மாதர் மாநாடு ஆண்டுதோறும் கூடலாயிற்று. அது பெண்களின் அரசியல் முன்னேற்றத்தை ஊக்கியது. இந்தியாவின் எதிர்கால அரசியலை ஒழுங்குபடுத்த லண்டனில் கூடிய வட்டமேஜை மகாநாடுகளிலும் பெண்கள் கலந்து கொண்டனர். எனவே, கி. பி. 1935-ஆம் ஆண்டுச் சட்டம் அவர்களுக்கு முன்னைவிட அதிகமான அரசியல் செல்வாக்குகளை அளித்தது. சமஷ்டி ராஜாங்க சபையிலும், மாகாண சட்டசபைகளிலும் தனி ஸ்தானங்களைப் பெற்றனர். சென்னை சட்டசபையில் பெண்களுக்கு 6 ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டன. எழுத்தறிவுத் தகுதியின் விளைவாகப் பெண்களின் வாக்குரிமை பெரிதும் விஸ்தரிக்கப்பட்டது. கி. பி. 1919-ஆம் ஆண்டுச் சீர்திருத்தச் சட்டத்தினுல்

வந்ததைவிட 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தால் 60 லக்ஷம் பெண்கள் அதிகமாக வாக்குரிமை பெற்றனர்.

கி. பி. 1935-க்குப் பின்னர், பெண்கள் காந்தியடிகளின் தலைமையின் கீழ் நடந்த தீவிரப் போராட்டத்தில் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டனர். இதனால் பெண்களின் சேவையைப் பாராட்டி, 1950-ல் உருவாக்கப்பட்ட நமது புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்குச் சமமாக, யாதொரு தகுதியும் கருதாமல், 21 வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இங்ஙனம் பெண்களின் வாக்குரிமை இயக்கம் பூரண வெற்றி பெற்றுள்ளது. அன்றியும் பெண்களுக்குப் பெரிய அரசியல் உத்தியோகங்களைத் தாங்கும் உரிமையும் கிடைத்துள்ளது. இன்றையப் பெண்களின் வாக்குரிமை வெற்றிக்கு பெஸன்ட் அம்மையார், சரோஜினி தேவி, டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி அம்மையார், ருக்மணி லக்ஷ்மீபதி அம்மையார், சகோதரி சுப்புலக்ஷ்மி, கஸின்ஸ் அம்மையார் முதலியோரின் சேவைகளை நாம் என்றும் மறத்தல் முடியாது.

## பகுதி 3

**நமது உரிமைகளும் கடமைகளும்:** சுதந்திரம் பெற்ற குடிமக்களாகிய நமக்கு நாம் நலமுற வாழ பல உரிமைகளும் கடமைகளும் இருக்கின்றன. கி. பி. 1950 ஜனவரி 26-ந் தேதி வந்த புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தில் நமக்குப் பல உரிமைகள் தரப்பட்டுள்ளன; கடமைகளும் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில முக்கியமானவற்றை நாம் இங்கு அறிந்துகொள்வோம்.

(a) **சம அந்தஸ்து உரிமை:** நம் சட்டத்தின் முன் சாதி மத இன வேற்றுமையின்றி இந்தியக் குடிகள் அனைவரும் சமமாவர். அரசாங்க உத்தியோகங்களைப் பெற அனைவருக்கும் வாய்ப்பு உண்டு. கடைகள், சிற்றுண்டிச் சாலைகள், குளம் முதலிய நீர் நிலைகள், கோயில்கள் ஆகிய பொது

இடங்களை அனைவரும் பயன்படுத்தலாம். இதுகாறும் நம் நாட்டில் பின்பற்றப்பட்டு வந்த தீண்டாமை எனும் பேய் தொலைந்தது. தீண்டாமையை இனி கைக் கொண்டொழுகுவது சட்ட விரோதமாகும்.

(b) தனிச் சுதந்திரம்: இந்தியக் குடிகள் அனைவருக்கும் பேச்சு, எழுத்துரிமைகள் உண்டு. சங்கங்கள் அமைத்தற்கும், நாடு முழுவதும் தடையின்றி சென்று வருதற்கும், எவ்விடத்திலும் வாழுவதற்கும், எவ்விடத்திலேனும் சொத்துக்களை வாங்கல், அனுபவித்தல், விற்றல் முதலியவற்றிற்கும், விருப்பமான தொழில் அல்லது வர்த்தகத்தைச் செய்தற்கும் சுதந்திரம் உண்டு. குற்றம் சாட்டப்படும் எவரும் விசாரணையின்றித் தண்டிக்கப்படமாட்டார்; குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொரு குற்றவாளியும் விசாரணை பெறும் உரிமையை வற்புறுத்துதற்குரியவர்.

(c) சமய உரிமை: இந்தியக் குடிகள் அனைவரும் அவரவர் விருப்பத்திற்கேற்பக் கடவுளை வழிபடலாம். அவரவர் தத்தம் சமயக் கொள்கைகளை அமைதியாகப் பிரசாரம் செய்யலாம்.

(d) பண்பாடு கல்விச் சுதந்திரம்: அரசாங்கத்தின் நிதியால் நடைபெறும் கல்வி நிலையங்களில் மதபோதனை செய்தல் கூடாது. எல்லாக் கல்வி நிலையங்களிலும் இந்தியப் பிரஜைகள் அனைவரும் வேற்றுமையின்றிக் கல்வி கற்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் தாய் மொழி, அல்லது எழுத்து, அல்லது பண்பு முதலியவற்றை வளர்க்கும் உரிமை உடையவராவர்; கல்வி பெறுதல் ஒவ்வொருவரின் பிறப்புரிமையாகும்.

(e) சொத்துரிமை: சட்டத்தின் மூலமாகவன்றி எவருடைய சொத்தும் பறிக்கப்படலாகாது.

(f) சட்ட நிவாரணம் பெற உரிமை: ஜீவாதார உரிமைகளைக் குறித்துச் சுப்ரீம் கோர்ட்டின் உதவியையும் மற்ற

நீதி மன்றங்களின் உதவியையும் நாட எல்லாக் குடிமக்கட்கும் உரிமையுண்டு.

பொது நோக்கங்களை முன்னிட்டு வழங்கப்பட்டுள்ள சில உரிமைகள் : (a) ஒவ்வொருவருக்கும் வாழ்வதற்கு போதிய வசதிகள் இருத்தல் வேண்டும். (b) சமூக நலனுக்கு விரோதமாகச் செல்வம் தனி மனிதனிடங் குவியா வகையில் பொருளாதார அமைப்பு இருத்தல் வேண்டும். (c) ஆணுக்கும் பெண்ணுக்கும் எல்லா வேலையிலும் ஊதியத்தில் சமம் இருத்தல் வேண்டும். (d) பதினான்கு வயது வரையிலுள்ள குழந்தைகள் அனைவருக்கும் இலவசமாகக் கட்டாயக் கல்வி அளிக்கப்படல் வேண்டும். (e) மக்களின் கீழான உணவு உண்ணும் நிலையை உயர்த்துதலும், சுகாதார வசதியைப் பெருக்குதலும் அரசாங்கம் கவனித்தல் வேண்டும். (f) கிராமப் பஞ்சாயத்துக்களை அரசாங்கம் அமைத்தல் வேண்டும். (g) இந்தியா முழுதும் உள்ள குடிகளுக்கு ஒரே விதமான சிவில் சட்டங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

மக்களாய்ப் பிறந்த அனைவருக்கும் உரிமைகளைத் தொடர்ந்து பல கடமைகளும் உள்ளன. ஒவ்வொருவருக்கும், தத்தமக்குற்ற கடமைகள் என்றும் சமூகக் கடமைகள் என்றும் கூறுவதையே, பிள்ளைகட்கும் பெற்றோர்கட்கும் உள்ள கடமை, தொழிலாளிகட்கும் முதலாளிகட்கும் உள்ள கடமை, மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும் உள்ள கடமை, ஆள்வோருக்கும் ஆளப்படுவோர்க்கும் ஏற்ற கடமைகள் என்றும் கூறலாம். எவ் வகையாயினும் மனிதன் தன் கடமையை உணர்வதாற்றான் தன்னையும், தன் குடும்பத்தையும், தன்னாட்டையும் மேன்மையுறச் செய்கிறான் என்பதில் ஐயமில்லை.

ஜனநாயக ஆட்சி பயன் தரவேண்டுமானால் தலைவர்களுடன் மக்களும் ஒத்துழைத்தல் வேண்டும். குடிமக்கள் அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு அடங்கி ஒழுகினாற்றான் நல்லாட்சி நடைபெறும். உடலிலுள்ள ஒவ்வொரு

உறுப்பும் அதன் அமைப்பிற்கு முக்கியமாய் இருத்தல் போல மக்கள் அனைவரும் தம்மை அரசாங்கத்தின் முக்கிய உறுப்பென்று நினைத்துத் தம் கடமையை ஆற்றுதல் வேண்டும்.

**இந்தியப் பிரஜை:** யார் இந்தியப் பிரஜை ஆதற்குரியவர் என்று அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். இந்தியாவின் எல்லைக்குள் பிறந்த அனைவரும் இந்தியப் பிரஜைகளே. ஒருவருடைய தாய் அல்லது தந்தை இந்திய எல்லைக்குள் பிறந்தவராயினும், 1950 ஜனவரிக்கு முன் 5 ஆண்டுகள் இந்தியாவில் வாழ்ந்தவராயின் அவரும் இந்தியப் பிரஜை ஆதற்குரியவர். ஒருவர், தான் இந்திய எல்லைக்குள் பிறக்காவிட்டாலும், அவருடைய பெற்றோர் ஒருவர் பிரிவினைக்கு முன்னர் இந்தியாவில் பிறந்தவராய், 1948 ஜூலை 19-ந் தேதிக்கு முன்னரே இந்தியாவிற்கு வந்து குடியேறினவராய் இருந்தால் அவரும் இந்தியப் பிரஜையாகவே கருதப்படுவர். அயல் நாடுகளில் பிறந்து வாழும் இந்தியர்கள் தம் பெற்றோர்கள் இந்தியாவில் பிறந்தவராக இருந்தால் ஸ்தானீகரின் அனுமதியைப்பெற்று இந்தியப் பிரஜை ஆதற்குரியவர். இப் பிரஜா உரிமையால்தான் நாம் பல அரசியல் உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவித்தற்கியலும்.

### பயிற்சி

1. கட்டாய ஆரம்பக் கல்வியை நம் நாட்டில் பரவச் செய்ய அரும் பாடுபட்ட பெரியார் யார்? எப்பொழுது ஆரம்பக் கல்வி மாகாண மந்திரிகளின் பொறுப்பின் கீழ் வந்தது? எழுத்தறிவின்மையைப் போக்க, அரசாங்கம் செய்துள்ள ஏற்பாடுகளில் சிலவற்றைக் குறிப்பிடுக.
2. வாக்குரிமை என்பது யாது? நாம் தற்போது பெற்றுள்ள வாக்குரிமையின் சிறப்பு யாது? வாக்குரிமையைப் பயன்படுத்துவதில் கவனிக்கவேண்டிய சில விதிகளைக் கூறுக.

3. அகில இந்திய மாதர் சங்கம் எப்பொழுது ஏற்பட்டது? எவ்விடத்தில் மாதர் முதலாக முதியோர் வாக்குரிமை பெற்றனர்? மாதர்களின் வாக்குரிமைக்குப் பெரிதும் உழைத்த மூன்று மாதர்களைக் குறிப்பிடுக. தற்போது மாதர்கள் எத்தகைய வாக்குரிமையைப் பெற்றுள்ளனர்?
4. நமது அரசியல் ஜனநாயகத்திற்கும் பொருளாதார ஜனநாயகத்திற்கும் ஏற்றவாறு பெற்றுள்ள உரிமைகளுள் ஒவ்வொன்றுக்கும் நன்னுன்கு குறிப்பிடுக. நமது கடமைகளுள் ஏதேனும் மூன்றைக் குறிப்பிடுக.
5. இந்தியப் பிரஜா உரிமைக்குரிய தகுதிகள் யாவை?

---

# அத்தியாயம் 15

## ஐக்கிய தேசத்தினர் அமைப்பு

## (The United Nations)

### பகுதி 1

#### ஐக்கிய தேச அமைப்பும், பணியும்

இரண்டாம் உலகப் போர் நடக்கையில் ஐக்கிய தேசத்தினரின் முக்கிய தலைவர்கள் கி. பி. 1944-ல் வாஷிங்டனிற்கு அருகிலுள்ள டம்பார்ட்டன் ஓக்ஸ் என்னுமிடத்தில் ஒன்று-கூடி, உலக அமைதிக்காக ஒரு சங்கம் நிறுவப்படுதற்குரிய அவசியத்தைப் பற்றிக் கலந்து பேசினர். பின்னர், 1945-ல் ஸான் பிரான்ஸிஸ்கோ நகரத்தில் 50 பிரதிநிதிகள் கொண்ட ஐக்கிய தேச மாநாடு ஒன்று கூட்டப்பட்டு, அதன் வாயிலாக அவ்வாண்டு, அக்டோபர் 24-ந் தேதி ஐக்கிய தேசத்தினர் அமைப்பு நிறுவப்பட்டது. அதன் தலைமைக் காரியாலயம் நியூ யார்க்கைச் சேர்ந்த மான்ஹாட்டன் வானுயர் மாளிகையிலுள்ளது.

ஐக்கிய தேசத்தினர் அமைப்பின் கொள்கைகள்: அங்கமாய் உள்ள எல்லா நாடுகளும் சம அந்தஸ்தும் சுய-

ஆதிபத்தியமும் பெற்று விளங்கவேண்டும். அங்கத்தினர் அனைவரும் தங்கள் விவாதங்களை அமைதியாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும். இந்த அமைப்பின் முக்கிய நோக்கங்கள், உலக அமைதியையும் பாதுகாப்பையும் நிறுவுதலும், பன்னாட்டுக் கூட்டுறவை வளர்ப்பதும், பன்னாட்டுச் சமூகப் பொருளாதாரப் பண்பாடு ஜீவகாருண்யப் பிரச்னைகளை அமைதியாகத் தீர்க்க முயற்சிப்பதும் ஆகும். எந்த அங்கத்தினரும் மற்றொரு அங்கத்தினர்மீது பலாத்காரத்தைச் செலுத்தவோ, அல்லது அச்சுறுத்தவோ கூடாது. ஐக்கிய தேசத்தினர் அமைப்பு அத்து மீறிய நாட்டின் மீது நடவடிக்கை எடுக்கும்போது அங்கமான ஏனைய நாடுகளும் அமைப்பிற்குப் பலவகையிலும் துணைபுரிதல் வேண்டும். அமைதிக்குக் கேடு நேரிட்டாலன்றி அங்கமான நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் ஐ. தே. தலையிடுதல் கூடாது.

ஐ. தே. அமைப்பு: இது 6 அங்கங்களைக் கொண்டுள்ளது. அவை: (1) பொதுச் சபை (General Assembly), (2) பந்தோபஸ்துச் சபை (Security Council), (3) பொருளாதார சமூக சபை (Economic and Social Council), (4) தருமகர்த்தா சபை (Trusteeship Council), (5) சர்வதேச நீதி மன்றம் (International Court of Justice) (6) காரியாலயம் (Secretariat) என்பனவாம்.

1. பொதுச் சபை: ஒவ்வொரு அங்கத்தினர் நாட்டின் சார்பிலும் பிரதிநிதிகள் இதில் இருப்பர். 1958-ல் இச் சபையில் 81 அங்கத்தினர் உள்ளனர். இதில் அங்கத்தினராவதற்கு மேலும் சில நாடுகள் விண்ணப்பம் செய்திருக்கின்றன. இதன் முக்கிய அங்கமாயுள்ளவை ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், U. S. S. R., சீனா, இந்தியா, பாகிஸ்தான் இந்தோனேஷியா முதலியனவாகும். இவற்றுள் முற்கூறப்பட்டுள்ள ஐந்து நாடுகளும் ஐம்பெரும் வல்லரசுகள் (Big Five) எனப்படும். ஐக்கிய தேசத்தினர் விஷயங்கள் எல்லாம் முக்கியமாய் ஆராயுமிடம் இப் பொதுச் சபைதான். பொதுச்

சபை ஆண்டுக்கொரு முறை செப்டம்பரில் கூடும். பொதுச் சபையில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேறச் சர்வதேச சங்கத்தைப் போல் ஒரு மன நிர்ப்பந்தமின்றி $\frac{2}{3}$ பெரும்பான்மையும், மற்ற தீர்மானங்களுக்குச் சாதாரண பெரும்பான்மையும் இருத்தல் தக்கதாம். அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டும் பொருட்டுப் பன்னாட்டுக் கூட்டுறவிற்கான விஷயங்களை சிந்தித்துச் சிபார்சு செய்வதே அதன் முக்கியக் கடமையாகும். அங்கத்தினர்களை நீக்குவதும், புதிய அங்கத்தினர்களைச் சேர்ப்பதும், வரவு செலவு விஷயங்களைத் தீர்மானிப்பதும், இச்சபையினரிடம் ஒப்படைக்கப்பட்ட சுயாதிபத்தியமற்ற நாடுகளின் நலனைக் கவனிப்பதும் இதனுடைய மற்றும் சில கடமைகளாவன. ஒவ்வொரு அங்கமாயுள்ள நாட்டிற்கும் ஒரு வோட்டுதான் உண்டு. இச்சபையில் நடைமுறையில் அங்கத்தினர்கள் பேசும் பாஷைகள் சைனீஸ், ஆங்கிலம், பிரெஞ்சு, ருஷ்யன், ஸ்பானிஷ் ஆவன. சர்வதேச சங்கத்தைப் போல் அன்றி, அக்கிரம நாட்டைத் தண்டிக்க இது படை பலமும் திரட்டலாம்.

2. பந்தோபஸ்து சபை: இது பதினொரு அங்கத்தினர்களைக் கொண்டதாகும். 5 நிரந்தர அங்கத்தினர்களும் (ஐம்பெரும் வல்லரசுகள்), இரண்டாண்டிற்கொரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு வேறு தேச அங்கத்தினர்களும் அதில் இருப்பர்.

உலக அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நிறுத்தல், இரு நாடுகளுக்கிடையே ஏற்படும் விவாதத்தை ஆராய்தல், அக்கிரமத்தைத் தடுத்தல் அல்லது பொருளாதாரம், இராணுவத் தண்டனைத் திறன் (Sanctions) எடுத்தல் முதலியன அதன் முக்கியக் கடமைகளாகும். இச் சபையின் தீர்மானங்கள் நிறைவேற $\frac{2}{3}$ பங்கு (ஏழு) ஓட்டுகள் இருத்தல் வேண்டும். இச்சபைக்குக் கொண்டுவரப்படும் எத்தீர்மானத்தையும் தடை செய்ய நிரந்தர அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் தனித்த தடையதிகாரம் உண்டு. இது

சங்கத்தின் ஒரு முறையாகும். இச் சபை இரு வாரங்கட்கு ஒரு முறை கூடும். இதற்கு ஆலோசனை கூற 5 உதவி அங்கங்கள் உள்ளன.

**உலக அமைதிக்காக ஐக்கிய தேசத்தினர் ஸ்தாபனம் பணியாற்றும் வகை**




படம். 24

3. பொருளாதார சமூக சபை: பொதுச் சபையால் தேர்ந்தெடுத்தனுப்பப்பட்ட 18 அங்கத்தினர் இச் சபையில் உள்ளனர். அங்கத்தினர் நாடுகளின் பொருளாதார சமூக முன்னேற்றத்தைக் கவனிப்பது இதன் பொறுப்பாகும்; இது பல கமிஷன்களின் மூலமாகத் தன் பணியை ஆற்றி வருகிறது.

4. தருமகர்த்தா சபை: பழைய சர்வதேச சங்கத்தின் மாண்டேட்டின் கீழ் உள்ள சுயாதிபத்தியமற்ற நாடுகளின் நலனையும், தாமாகவே இச் சபை அதிகாரத்தின் கீழ்வரும் நாடுகளின் நலனையும், அவற்றின் பொருளாதார, சமூக, பண்பாடு, அரசியல் முன்னேற்றத்தையும் கவனித்து அவை சுயாட்சி பெறும்படி இது உதவிபுரியும். மேலும், இதன் அங்கத்தினர்கள் மேற்கூறிய நாடுகட்குச் சென்று பார்வையிடுவதற் குரியவராவர். அத்தகைய நாடுகளுள் முக்கியமானவை நியூகினி, ஆப்பிரிக்காவில் டாங்கனிக்கா, காமரூன்ஸ் பிரதேசங்கள், பசிபிக் பெருங்கடலில் மார்ஷல் தீவுகள் முதலியனவாம்.

5. சர்வதேச நீதிமன்றம்: இதுதான் ஐக்கிய தேச சங்கத்தின் சட்ட நீதி மன்றம். அங்கத்தினர் நாடுகட்கிடையே ஏற்படும் சட்ட சம்பந்தமான விஷயங்களைப் பற்றி இது ஆலோசனை கூறும். இதில் பதினைந்து நீதிபதிகள் உள்ளனர். இது ஹாலண்டு தேசத்தின் தலைநகரான தி ஹேக் எனும் இடத்திலுள்ளது. இந்த நீதி மன்றத்தின் தலைவர் நார்வே தேசத்தைச் சேர்ந்த ஹெல்ஜ் க்ளாஸஸ்டாட் (Helge Klasestad) ஆவர்.

6. காரியாலயம்: பொதுச் சபையாரால் நியமிக்கப்பட்ட பொதுச் செயலாளரையும் (Secretary-General) அவருக்குத் துணையான பன்னாட்டைச் சார்ந்த உத்தியோகஸ்தர்களையும் இது கொண்டுள்ளது. இதில் பல அலுவல் துறைகள் உள்ளன. பொதுச் செயலாளரே சங்கத்தின் முக்கிய நிர்வாக அதிகாரியாவர். இவர் ஐந் தாண்டுகளுக்கு நியமிக்கப்படுகிறார். தற்போதுள்ள பொதுச் செயலாளர் ஹேமர்ஷெல்ட் என்பவராவர்.

குறிப்பிட்ட சில பணிகளை ஆற்றச் சங்கத்தின் கீழ்ப் பல கிளை ஸ்தாபனங்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை: (1) உலகத் தொழிலாளியின் நலத்தைக் கவனிக்கும் பன்னாட்டுத் தொழில் ஸ்தாபனம் (I. L. O.)

இது ஐரோப்பாவிலுள்ள ஜினிவாவில் உள்ளது. (2) வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், போஷாக்கை வளர்க்கவும், உழவர்களின் நிலையை உயர்த்தி உணவுப் பொருள்களைப் பெருக்கச் செய்யவும், நாட்டுப்புறச் சூழ்நிலைகளை முன்னேற்றஞ் செய்யவும், பன்னாடுகட்கும் உதவி செய்யும் உணவு விவசாய ஸ்தாபனம் (F. A. O.). இதன் தலைமைக் காரியாலயம் ரோம். (3) ஐக்கிய தேசக் கல்வி, விஞ்ஞான, பண்பாடு ஸ்தாபனம் (U.N.E.S.C.O.). இதன் தலைமைக் காரியாலயம் பாரிஸ். (4) புனர் உத்தாரணத்திற்கு உதவி புரியும் பன்னாட்டுப் பாங்கி. (5) அங்கத்தினர் நாட்டுக்குக் கடன் தரும் பன்னாட்டுச் செல்வநிதி (I. M. F.). இதன் தலைமைக் காரியாலயம் வாஷிங்டன். (6) உலகநாடுகளின் சுகாதாரத்தை வளர்க்கப் பாடுபடும் உலகச் சுகாதார ஸ்தாபனம் (W. H. O.) இதன் தலைமைக் காரியாலயம் ஜினிவா.

## பகுதி 2

உலகக் குடிமை: உலகில் வாழும் அனைவரும் கடவுளால் படைக்கப்பட்ட ஒரு பெரும் சமூகத்தைச் சேர்ந்தவர் ஆவர். இப் பரந்த உலகமனைத்துமே அப்பெருஞ் சமூகம் வாழும் இல்லமாகும். எந்நாடு எச்சாதி எவ்வினத்தவராயினும் மக்கள் அனைவரும் மானிடச் சமுதாயத்தைச் சார்ந்தவரே யாவர். இதுகாலை உலகில் எப் பகுதியிலுள்ளவரும் கிணற்றுத் தவளைகளைப்போல் தனித்து வாழ்வதற்குரியரல்லர். ஒவ்வொரு நாட்டினரும் இப்போது எவ் வகையிலேனும் வேறு நாடுகளின் ஒத்துழைப்பையும் உதவியையும் நாடவேண்டி இருக்கிறது. வியக்கத் தக்க விஞ்ஞான முன்னேற்றத்தினாலும், போக்குவரவு சாதனங்களின் பெருக்கினாலும், பரந்து கிடந்துள்ள இவ்வுலகம் சுருங்கியுள்ளது. அண்மையில் நடந்த 2-ஆம் உலகப் போரின் கொடுமைக்கு இரையான நாடுகள் தம்மைக் காத்துக் கொள்ளவும், உலகில்

ஒழுங்கும் அமைதியும் நிலவும் பொருட்டும் பன்னாடு களின் ஒத்துழைப்பு எங்ஙனம் தேவையாய் இருந்ததென் பதை அப் போரே நமக்கு விளக்கிக் காட்டியதன்றோ! எனவே, நாம் குறுகிய தேசீய மனப்பான்மையை நீக்கிப் பரந்த பன்னாட்டு நோக்கங் கொண்டவராக வாழ்தல் வேண்டும். நாம் அனைவரும் பண்பு வாய்ந்த உலகக் குடி மக்களாக இருந்து நம் கடமைகளைப் புரிந்தாலன்றி உலகில் அமைதி, ஒழுங்கு, பண்பாடு முதலியன நிலைபெறுதல் இல்லை. இவ்வுணர்ச்சி சிறு பருவத்திலிருந்தே மக்களிடை வளரவேண்டும். எல்லா நாட்டுச் சிறுவர் சிறுமியரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்த சகோதர சகோதரிகள் என்று உணர்தல் வேண்டும். இதற்கெனவே பன்னாட்டுச் சிறுவர் சிறுமியர் உறவாடும் ஸ்தாபனங்கள் பல உள. இவற்றின் மூலம் ஒரு நாட்டுச் சிறுவர் வேறு நாட்டுச் சிறுவருடன் தொடர்பு கொண்டு நட்பை வளர்த்தல் வேண்டும். அப் பொழுதுதான் "யாதும் ஊரே, யாவரும் கேளீர்!" என்று பாடிய கணியன் பூங்குன்றன், "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்றிசைத்த திருமூலர், "ஆருயிர்கட் கெல் லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்" என்று சமரசம் பகர்ந்த இராமலிங்க வள்ளல், அமரகவி ரவீந்திரர், காந்தி அடிகள், ஜான் கால்ஸ்வர்த்தி, ஹெச். ஜி. வெல்ஸ் போன்ற பேரறிஞர்கள் கண்ட உலகக் குடிமை ஏற்படும்.

## பகுதி 3

**உலக அமைதி** : உலக அமைதியை முற்றிலும் குலைக்கும் வண்ணம் ஏற்பட்ட முதல் உலகப் போருக்குப் பின்னர் உலக அமைதியைக் காக்கும் பொருட்டு ஸ்விட்ஜர்லாந்தி லுள்ள ஜினிவா என்னுமிடத்தில் **சர்வதேச சங்கம்** என்னும் பன்னாட்டு ஸ்தாபனம் ஒன்று 1920-ல் நிறுவப்பட்டது. இதற்குக் காரணமாய் விளங்கியவர் ஐக்கிய அமெரிக்கத் தலைவரான **உட்ரோ வில்ஸன்** என்னும் பெரியாராவர். ஆனால் சங்கத்தின் நோக்கம் ஈடேறவில்லை. அதன் நிர்வாகத்தினர்

தம் கடமைகளைச் செம்மையாகச் செய்யவில்லை. சங்கம் தோன்றிய 20 ஆண்டுகளுக்குள் உலகத்தையே நடுங்க வைத்த வேறொரு கொடிய போர் கி. பி. 1939-ல் ஏற்பட்டு, 1945 வரை நடந்தது. இதனால் ஏற்பட்ட தீமைகளும் பொருட் சேதங்களும் உயிர்ச்சேதங்களும் எண்ணுதற் கரியன. இவ்விரண்டாம் உலக யுத்தம் நடக்கையில் முக்கிய ஐக்கிய தேசத் தலைவர்களான அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும், ஆங்கிலப் பிரதமர் சர்ச்சிலும் கி. பி. 1941-ல் அட்லாண்டிக் பெருங்கடலில் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் என்னும் கப்பலிற்கூடி, உலக அமைதியின் பொருட்டுக் கீர்த்தி மிக்க சாஸனம் ஒன்றை வெளியிட்டனர். அதில், உலகில் வாழும் ஒவ்வொரு நாட்டினருக்கும் தாங்கள் விரும்பிய அரசியலை ஏற்படுத்திக்கொள்ளும் சுய நிர்ணய உரிமை, ஆக்கிரமிப்பு, அச்சமற்று வாழும் உரிமை, வாழ்க்கைத் தேவைகளைக் குறைவின்றிப் பெற்று வாழுமுரிமை, வழிபாட்டுரிமை, பேச்சுரிமை முதலிய உரிமைகள் கண்டிருந்தன.

2-ஆம் உலகப் போர் முடிந்ததும் உலக அறிஞர்கள் எவ்வகையிலேனும் உலக அமைதியைக் காக்கும் பொருட்டு மீண்டும் 1945-ல் ஐக்கிய தேசத்தினர் அமைப்பு என்னும் அரிய ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தினர். அது பல நாடு களுக்கிடையே ஏற்படும் வேற்றுமைகளைச் சமரசமாகத் தீர்த்து வருகிறது. பாலஸ்தீன் விஷயமாகவும், இந்தோ-னேஷியா விஷயமாகவும், டுனீஷியா விஷயமாகவும், கொரியா விஷயமாகவும் இது ஆற்றிய பணி போற்றத் தக்கது. தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் தலைவிரித் தாடும் நிறவெறித் திமிரை ஒழிக்க இது அரும்பாடு படு கிறது; பொருளாதாரத் துயரங்களுக்கு இரையாகியுள்ள நாடுகளுக்கு உதவுகிறது; எங்கும் சுரண்டல் கொள்கை ஒழியுமாறு போரிட்டு வருகிறது.



படம் 25.
ஸர். எஸ். இராதாகிருஷ்ணன்.



படம் 26.
திருமதி விஜயலக்ஷ்மி பண்டிட்.

இவ்வமைப்பில் சேர்ந்து நம் நாடு ஆற்றிவரும் அருந் தொண்டு மிகவும் போற்றுதற்குரியது. சிறப்பாகத் திருமதி விஜயலட்சுமி பண்டிட், ஸர். எஸ். இராதாகிருஷ்ணன், ஸர். ஏ. இராமஸ்வாமி முதலியார், ஸர். பி. என். ராவ் ஆகியோரின் சேவைகள் பொன் போன்றதாகும். உலக அமைதியைக் கெடுக்க முயலும் எத்தகைய வல்லரசும் எக் கொடிய ஆயுதம் பெற்றிருப்பினும் அஞ்சாமல் நமது நாடு அமைதியைக் காக்கப் பாடுபடுகிறது.

உலக அமைதி நிலவ அனுசரிக்கப் படவேண்டிய சில முறைகள் : வல்லரசுகள் ஏகாதிபத்திய மனப்பான்மையை விட்டொழித்தல் வேண்டும் ; ஒவ்வொரு நாட்டினரும் குறுகிய தேசீய மனப்பான்மையை விட்டுப் பரந்த பன்னுட்டு நோக்கத்தை வளர்த்தல் வேண்டும். வல்லரசுகள் தேசீயப் பிணக்குகள் யாவற்றையும் சமரசமாக ஐக்கிய தேசத்தினர் அமைப்பின் மூலமாகவே தீர்த்துக் கொள்ளல் வேண்டும்.

நாடுகள் யுத்த தளவாட உற்பத்திப் பெருக்கலை நிறுத்துதல் வேண்டும். அன்றியும் அணுகுண்டு போன்ற கொடிய ஆயுதங்களை ஐ. தே. அமைப்பின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல் வேண்டும். உலக அமைதியைக் காக்க ஐக்கிய தேசத்தினரின் போலீஸ் படையொன்றும், இராணுவப் படையொன்றும், இருத்தல் நலம். கடல்கள் அனைத்தும் எல்லா நாட்டினர்க்கும் உரிமை உடையதாயிருத்தல் வேண்டும். ஐ. தே. அமைப்பு, பிற்போக்கு நாடுகள் முன்னேற்றமடைய உதவி செய்தல் வேண்டும். நிறவெறி, மதப்பூசல், சுரண்டல் கொள்கை முதலிய அநீதிகளை அகற்றல் வேண்டும். ஐ. தே. அமைப்பில் உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் கட்டாய அங்கத்தினராகச் சேர்தல் வேண்டும். அமைதியைக் கெடுக்க முயலும் நாட்டைத் தண்டிக்கும் பொருட்டு ஐ. தே. எதிர் நடவடிக்கை எடுப்பதில் தயங்குதல் கூடாது. உலகில் எல்லா நாடுகளின் தலைவர்களும் ஒன்று கூடி உலக அமைதிக்காகப் பாடுபட வேண்டும்.

"பஞ்ச சீலம்" என்னும் கீழ்க்கண்ட ஐந்து கொள்கைகளை நாடுகள் பின்பற்ற வேண்டும் :—(1) நாடுகளிடையே நம்பிக்கையும் கௌரவ புத்தியும் விருத்தியடைய வேண்டும். (2) அச்சுறுத்தல், பலாத்கார முறைகளைக் கையாளக் கூடாது. (3) உள் நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது. (4) சம அந்தஸ்தையும், பரஸ்பர உதவியையும் பொருளாதார, சமூக, பண்பாட்டு கூட்டுறவையும் வளர்க்க வேண்டும். (5) அரசியல் கொள்கைகளில் குறுகிய மனப்பான்மையை விட்டு அமைதியான கூட்டுறவு நோக்கத்தை வளர்த்தல் வேண்டும் (Peaceful Co-existence). இக் கொள்கைகளை 1955-ல் பாண்டுங் (Indonesia) என்னுமிடத்தில், 29 ஆசிய ஆப்பிரிக்கா தேசங்கள் ஒப்புக்கொண்டன. சிறப்பாக இதை ஒப்புக்கொண்ட நாடுகள் சீனு, இந்தியா, பர்மா, இந்தோனேஷியா ஆவன. இக் கொள்கைகள்

மற்றக் கண்டங்களிடையே பரவியதால் யுகோஸ்லேவியா, போலந்து, U. S. S. R. ஆகிய நாடுகளும் இவைகளை ஒப்புக் கொண்டன.

## பயிற்சி

1. ஐக்கிய தேசத்தினர் அமைப்பு எப்பொழுது ஏற்பட்டது? அதன் நோக்கங்கள் யாவை? அதன் தலைமைக் காரியா-லயம் எங்குள்ளது?
2. ஐ. தே. யின் முக்கிய அங்கங்கள் யாவை? ஒவ்வொன்றும் ஆற்றி வரும் பணி யாது?
3. ஐம்பெரும் வல்லரசுகள் யாவை? I. L. O.; F. A. O.; UNESCO; W. H. O. என்பவை யாவை?
4. 'அட்லாண்டிக் சாஸனம்' என்பது யாது? அதன் முக்கிய அம்சங்கள் யாவை?
5. உலக அமைதிக்காக இதுகாறும் U. N. O. ஆற்றியுள்ள பணிகளுள் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.
6. U. N. O. வின் பெருங்குறை யாது?
7. பஞ்ச சீலம் என்பது என்ன? இதைப் பின்பற்றிய நாடுகள் எவை?
8. கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரு வார்த்தையில் விடை அளிக்க :—
   (a) தற்சமயம் பொதுச் சபையின் தலைவர் யார்?
   (b) தருமகர்த்தா சபையின் அதிகாரத்தின் கீழ் உள்ள ஒரு நாட்டைக் கூறுக.
   (c) சர்வதேச நீதிமன்றத்தின் தலைவர் யார்?
   (d) காரியாலயத்தின் பொதுச் செயலாளர் தற்சமயம் யார்?
   (e) U. N. E. S. C. O-வின் தலைமைக் காரியாலயம் எங்குள்ளது?

## இரண்டாம் பாகம்

# பொருளாதாரம்

## அத்தியாயம் 16

## விவசாயம்

### பகுதி 1

#### நமது விவசாயம்

இந்தியா ஒரு விவசாய நாடு: பல காரணங்களை முன்னிட்டு இந்தியாவை ஒரு விவசாய நாடு என்று கூறலாம். "சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்; அதனுல் உழந்தும் உழவே தலை" என்ற குறட்பாவிற்கிணங்க நம் நாட்டில் பயிர்த்தொழிலே பண்பட்ட தொழிலாகத் தொன்று தொட்டு நடந்து வருகிறது. நம் நாட்டின் பொருளாதார நிலைக்கு கண்ணியம் அளித்து வருவது பயிர்த்தொழிலேயாகும். நம் நாட்டு மக்களில் 70 சத வீதம் உழவுத் தொழில் மூலமே பிழைக்கின்றனர். அவர்களின் செழுமையும் நலன்களுமே நாட்டின் செழுமையும் நலன்களுமாகும். நமது விழாக்கள், கொண்டாட்டங்கள், சடங்குகள் முதலியன பயிர்த்தொழிலின் மேன்மையை உள்ளுறுத்திக் காட்டுகின்றன. விவசாயமே நமது தேசியச் செல்வத்தின் மூல காரணமாயுள்ளது. நம் அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் 48 சத வீதம் விவசாயத்தின் மூலமாகவே வருகின்றது. நமது ஏற்றுமதிப் பொருள்களில் பெரும்பான்மைப் பொருள்கள் விவசாயப் பொருள்களே ஆகும். பருத்தி, சணல், அரக்கு, தேயிலை, புகையிலை, எண்ணெய் வித்துக்கள் முதலிய விவசாயப் பொருள்களின் ஏற்றுமதியால் கிடைக்கும் அயல் நாட்டு நாணயம் நமது பொருளாதார முன்னேற்றத்தை வளர்த்து வருகிறது. சர்க்கரை ஆலைத்தொழில், பருத்தி ஆலைத்தொழில் போன்ற

நமது சில பெரிய ஆக்கத் தொழில்களின் மூலப் பொருள் களுக்கு விவசாயமே ஆதாரமாக உள்ளது. நம்நாட்டு மக்களுக்கு விவசாயப் பொருள்களே முக்கிய உணவுப் பொருள்களாகவும் உள்ளன. மேலும் நம் நாட்டில் வாழ்வோர்களில் சுமார் 83 சத வீதத்தினர் கிராமங்களிலே வாழ்கின்றனர். மேற்கூறிய கார-ணங்களால் நம் நாட்டை விவசாய நாடு என்று கூறுதல் தக்கதன்றோ ?

நிலத்தின் செழிப்பு: பயிர்களுக்கேற்ற சீதோஷ்ண மும், நீர்வளமும் அமைவதுடன் நிலவளமும் முக்கியமாய் வேண்டற்பாலதாம். இந்தியாவை, நான்கு வகை மண்-களைக் கொண்ட நிலங்களாகப் பிரிக்கலாம். அவை சிந்து கங்கைச் சமவெளிகளிலும், மேற்குக் கிழக்குச் சமவெளி களிலும் காணப்படும் செழித்த வண்டல் மண்ணும், தட்சிண பீடபூமியில் வடமேற்குப் பாகத்தில் காணப்படும் கரிசல் மண்ணும், ஏனைய பகுதிகளில் காணப்படும் சரளை மண்ணும், செம்மண்ணும் ஆகும். இப் பிரதேசங்களின் மண் வளத்திற் கேற்ப விளை பொருள்களும் வேறுபட்டுள்ளன. இம் மண் வகைகள் அனைத்தும் உலரும் தன்மை வாய்ந்தவை; ஆகையால், இங்குப் பயிராகும் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் வேண்டியதாயிருக்கிறது.

இந்தியாவின் நிலச் செழுமை மிகவும் தாழ்நிலைக்கு வந்துள்ளது. நிலச்சத்திற்குக் காரணமான நைட்டிர-ஜனும், ஏனைய இயற்கைச் சத்துக்களும், நம் நாட்டு நிலங்களில் குறைவு. பொதுவாக, ஒரு ஏக்கர் நிலத்தின் விளைவிற்கு 25 பவுண்டு நைட்டிரஜன் செலவாகிறது. இந் நிலையில் இந்நாட்டு நிலங்களில் நீண்டகாலமாகப் பயிர்த் தொழிலே நடந்து வருவதாலும், இழந்த சத்தை நவீன முறையில் ஈடு செய்யாமையாலும் நிலங்கள் வளத்தில் குறைந்திருக்கின்றன. சத்துக் குறைவினால் நல்ல விளைவும் இல்லை.

நிலங்களை நல்ல வளமாக்குவன எருக்களும் நல்ல உரங்களுமே ஆகும். இயற்கை எருக்களில் சிறந்த ஒன்று சாணம். அது சத்து நிறைந்ததும், எளிதில் கிடைப்பதும், மலிவானதும் ஆகும். இதை நிலவளத்திற்குப் பயன் படுத்துதல் நல்லது. அன்றியும் குப்பைக் கூளங்கள், பச்சைத் தழைகள், பிண்ணாக்கு, எலும்புத் தூள், மீன் எரு முதலியனவும் பிற சத்துள்ள எருக்களாகும். சீனாவிலும், ஜப்பானிலும் தெருக் குப்பைகள், அழுகிய தாவர வகைகள், பிராணிகளின் கழிவுப் பொருள்கள் முதலியவை நிலங்களை வளப்படுத்த மிகவும் பயன்பட்டு வருகின்றன. இத்தகைய கலப்பு எருக்கள் நம் நாட்டிலும் பயன்பட முனிசிபாலிடிகள் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தல் வேண்டும். கலப்பு எருக்களின் மூலமாக நிலங்களை வளப்படுத்த நம் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. தற்காலத்தில் மேனாடுகளில் மிகுதியும் பயன்பட்டு வரும் இரசாயன எருக்கள் நம் நாட்டில் பயன்பட அரசாங்கம் பாடுபட்டுவருகிறது. இரசாயன எருக்களைத் தயார் செய்ய நமது யூனியன் அரசாங்கம் பீஹாரில் சிந்திரி என்னுமிடத்தில் 1952-ல் ஒரு ரசாயன எரு உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவியுள்ளது. இத்தொழிற்சாலை ஆசியாவிலேயே மிகப் பெரியதாகக் கருதப்படுகிறது.

சில இயற்கைக் காரணங்களால் ஏற்படும் நிலவள அழிவையும் நாம் தடுத்தல் வேண்டும். நீரினால் நிலம் அரிக்கப்படுதல், மேட்டு நிலங்களிலுள்ள காடுகளின் அழிவினால் வெள்ளப் பெருக்கெடுத்தல் முதலியவற்றால் நில வளம் குறைகிறது. இக்குறைகளைப் போக்க வரப்புகளை உயர்த்தல், மேட்டு நிலங்களில் காடுகளை வளர்த்தல், நல்ல பாதுகாப்பு முறைகள் முதவியவற்றைச் செய்தல் வேண்டும். கி. பி. 1928-ல் ஏற்பட்ட ராயல் விவசாயக் கமிஷன், நிலத்தின் மண் வகைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்தல் வேண்டுமென்றும், ஆராயும் திறம் படைத்த

உத்தியோகஸ்தர்களை நியமித்தல் வேண்டும் என்றும் வற்புறுத்தியது.

பயிர்த் தொழிலாளர் கிட்டுதல் : நிலவளத்திற்கு அடுத்த படியாக நம் நாட்டில் விவசாய வெற்றிக்குக் காரணமாய் இருந்து வருபவர் பயிர்த் தொழிலாளர் ஆவர். ஓராண்டில் விதைத்தல், அறுவடை செய்தல் போன்ற சில குறுகிய காலங்களிற்றான் பயிர்த்தொழிலாளர் மிகுதியும் வேண்டப் படுகின்றனர். ஏனைய காலங்களில் வேலையின்றி அவர்கள் சோம்பிக் கிடக்கின்றனர். எனவே, நகரங்களை யடுத்துள்ள விவசாயப் பகுதிகளிலுள்ள விவசாய வேலையாட்கள் வேலை நாடி நகரங்களுக்குக் குடியேறி விடுகின்றனர். ஆதலின், நம் நாட்டில் பல பாகங்களில் உள்ள சிறு குடி உழவர் களுக்கு வேலையாட்கள் கிடைப்பது அரிதாக இருக்கின் றது. வாழையடி வாழையாகத் தாமே பயிர்த்தொழில் செய்து வந்த குடியானவர்களில் சிலர் செல்வக் களிப்பினால் தங்கள் நிலங்களை உழுதலை விட்டுவிடுவதால் கூலியாட் களை அமர்த்த வேண்டி வருகிறது. தக்க கூலியாட்கள் கிட்டாமையால் அவர்கள் நிலங்களும் பாழாகின்றன. கிராமங்களில் வாழும் பயிரிடுவோரிற் பலர் வறுமை யினாலும், கல்வியறிவின்மையாலும் இன்னல்களுக்குள்ளாகி யுள்ளனர், ஆதரவில்லாமையால் அவர்கள் பிழைப்பதற்கு வேறு தொழிலை நாடி நகரங்களுக்கு வந்துவிடுகின்றனர். பயிர்த் தொழிலாளிக்குத் தம் தொழிலில் மதிப்பும் ஊக்கமும் ஏற்படச் சமூகமும் அரசாங்கமும் பாடுபடுதல் வேண்டும். ஆலைத் தொழிலாளிகளின் நிலைபோல் பயிர்த்தொழிலாளி களின் நிலைமையும் நல்ல வருவாய் தருவதாகவும், கண்ணியம் வாய்ந்ததாகவும் ஆக்குவதே அரசாங்கத்தின் பொது நோக்கமாய் உள்ளது.

## பகுதி 2

### முக்கியமான சில நிலவுரிமைத் திட்டங்கள்

ஜமீன்தாரி முறையும் ரயத்துவாரி முறையும்: நிலச் சொந்தக்காரர்கள், மானியதார்கள் ஆகியோரின் உரிமைகளும், கடமைகளும் அரசாங்கத்திற்குச் சம்பந்தப்பட்டு அமைந்திருப்பதே நில உரிமைத் திட்டமாகும். நிலவரித் தீர்மானம் அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ளது. வர்த்தகம் செய்ய இங்குவந்த கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆளும் அதிபர்களாக மாறியபோது அவர்கள் நில உரிமையாளராயினர். நில வருமானத்தைக் கருதி ஆங்கிலேயர் ஆட்சியில் நம் நாட்டில் பலவகை நில உரிமைத் திட்டங்கள் ஏற்பட்டன. சிறப்பாக இரு வகையான நில உரிமைத் திட்டங்கள் பிரிட்டிஷ் ஆட்சியில் ஏற்பட்டன. அவை: (1) ஜமீன்தாரி உரிமைத் திட்டம், (2) ரயத்துவாரி உரிமைத் திட்டம் என்பனவாகும்.

ஜமீன்தாரி உரிமைத் திட்டம்: அரசாங்கத்தினிடமிருந்து நேரே சில உரிமை பெற்ற பெருநிலக் கிழவரே ஜமீன்தார் ஆவர். அரசாங்கத்திற்கு நிலவரி செலுத்தும் பொறுப்புடையவர் இவரே. அவர் கீழ் மானியதார்கள் பலர் நிலங்களை குத்தகைக்குப் பயிரிடுவர். இவர் அரசாங்கத்திற்கும் விவசாயிகட்கும் இடையில் நின்று குத்தகைபெற்று அரசாங்கத்திற்குரிய நிலவரியைச் செலுத்தி வருவர். ஜமீன்தாரி முறையில் சாசுவத ஜமீன்தாரி முறை என்றும், தற்காலிக ஜமீன்தாரி முறை என்றும் இரு வகைகள் உள்ளன. சாசுவத ஜமீன்தாரி முறை கி. பி. 1793-ல் வங்காளத்தில் காரன்வாலிஸ் பிரபு அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. இம் முறையில் ஜமீன்தார்கள் செலுத்த வேண்டிய வரி என்றும் மாருதவாறு அமைக்கப்பட்டதால் இதற்குச் சாசுவத நில வரித் தீர்மானம் என்று பெயர் ஏற்பட்டது. இந்த நிலவரித் தீர்மானம் வங்காளமின்றி பீஹார், ஒரிஸ்ஸா, காசி, சென்னையின் வடகிழக்குப் பகுதி முதலிய இடங்களிலும் ஏற்பட்டது.

அன்றியும் ஜமீன்தாரி முறை ஆக்ரா, அயோத்தி, மத்தியப் பிரதேசம் முதலிய இடங்களிலும் விஸ்தரிக்கப்பட்டது. ஆயினும், இங்கு நிலவரித் தீர்மானம் சாசுவதமாக இல்லாமல் அவ்வப்போது அரசாங்கத்தாரால் மாற்றப்பட்டு வந்தது. ஆதலின், இதற்குத் தற்காலிக ஜமீன்தாரி முறை என்று பெயர் வந்தது.

ஜமீன்தாரி முறைகளில் சில நன்மைகளும் சில தீமைகளும் ஏற்பட்டன. அரசாங்கத்திற்கு வரையறுக்கப்பட்ட வருவாய் வந்துகொண்டே இருந்தது. ஜமீன்தார்கள் ஏகாதிபத்தியத் தூண்களானதோடு விவசாயிகளுக்கும் தலைவராயினர்; அவர்கள் விவசாயிகளை ஊக்கி விவசாயத்தைப் பெருக்கினர். இதனால் வங்காளம் போன்ற இடங்கள் தானியக் களஞ்சியங்களாகவும் செல்வச் செழிப்பு மிக்கவையாகவும் விளங்கலாயின. ஜமீன்தார்கள் செழித்த செல்வராயினர். இத்துணை நன்மை காணப்படினும் இதிலுண்டான தீமைகள் இன்று அதன் ஒழிப்பிற்குக் காரணமாயின. ஜமீன்தார்கள் செலுத்தவேண்டிய நிலவரி வரையறுக்கப்பட்டதே ஒழியக் குடியானவர்கள் ஜமீன்தார்களுக்குச் செலுத்தவேண்டிய தொகை வரையறுக்கப்படவில்லை. உதாரணமாக, பீஹாரில் ஜமீன்தார்கள் அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வருஷ நிலவரி 1·03 கோடி ரூபாயாகும். இத் தொகை 1795 முதல் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஜமீன்தார்கள் 16 கோடி ரூபாய்க்குமேல் நிலவருமானத்தைக் குடியானவர்களிடமிருந்து வருஷந்தோறும் அடைந்திருக்கிறார்கள். குடியானவர்கள் ஜமீன்தார்களின் கொடுமைகளுக்கு இரையாயினர். செல்வக் களிப்பினால் ஜமீன்தார்களுக்கும், நிலவுரிமை இல்லாமையால் குடியானவர்களுக்கும் நிலத்தைப்பற்றிய பொறுப்புக் குறைந்துவிட்டது. அதனால் விவசாயம் குன்ற, கிராம வாழ்க்கை சீர்கெட்டது. விலைவாசிகளின் உயர்வுக்கேற்றபடி நிலத்தின் விலையும் ஏறிய போது அரசாங்கத்திற்கு யாதொரு பங்கும் இல்லை. அரசாங்-

கத்திற்குப் பெருத்த நஷ்டமும் ஏற்பட்டது. இந்த நஷ்டத்தை ஈடு செய்யப் பிற மாகாணங்களின் வரியை அரசாங்கம் உயர்த்தியது. இக்குறைகளை உணர்ந்த நமது தேசீய அரசாங்கம் ஜமீன்தாரி முறையை ஒழித்து வருகின்றது.

**ரயத்வாரி முறை : இம்முறையில் நிலங்கள் யாவும் அரசாங்கத்திற்கே உரியவை. குடிகள் அரசாங்கத்திடமிருந்து நேராக நிலத்தைப் பெற்றுக் குறிப்பிட்ட வரியைத் தாமே நேராகச் செலுத்தி வருவர்.** வரியைத் தவருமல் செலுத்துகிற வரையில் குடியானவர்கள் நிலத்தை அநுபவிக்கவும், மாற்றவும், விற்கவும் உரிமையுடையவராவர். பயிரிடும் நிலங்கள் யாவும் அளக்கப்பட்டு 20 அல்லது 30 ஆண்டுகளுக்கு ஒரு முறை மீண்டும் நிலத்தீர்வை நிச்சயிக்கப்படும்.

**ஸர். தாமஸ் மன்ரோ** என்னும் சென்னைக் கவர்னர் இதனை நமது ராஜ்ஜியத்தில் நடைமுறைக்குக் கொண்டு வந்தார். ரயத்வாரி முறை இரு வகைப்படும். குடியானவர்கள் தாமே நேரில் அரசாங்கத்திற்கு வரி செலுத்தலாம். அல்லது கிராமக் குடியானவர்கள் மொத்தமாகத் தாம் சேர்ந்து பயிர் செய்யும் நிலங்களுக்கு கிராமத் தலைவர் மூலமாகவும் அரசாங்கத்திற்கு வரியைச் செலுத்தலாம். இவ்வாறு கிராமத்தார் மொத்தமாக சேர்த்துச் செலுத்தும் நிலவரி முறை **மகல்வாரி** முறை என்றும் அழைக்கப்படுவதுண்டு. உத்தரப் பிரதேசம், பஞ்சாப், மத்தியப் பிரதேசம் முதலிய இடங்களில் இம்முறை உள்ளது. **ரயத்வாரி முறையினுல் பல நன்மைகள் ஏற்படுகின்றன.** இம் முறையில் நிலவரி வரையறுக்கப்படுகிறது. குடியானவர்களுக்கு நில உரிமையும், பாதுகாப்பும் இருப்பதால் அவர்களுக்குப் பயிரிடுவதில் ஊக்கம் ஏற்படுகிறது; அரசாங்கத்திற்கும் நஷ்டம் ஒன்றுமில்லை. நமது தேசீய அரசாங்கம் எங்கும் ரயத்வாரி முறையையே ஏற்படுத்த முயன்று வருகிறது.

பகுதி 3

**கிராமக் குடியானவன்—இந்தியப் பயிர்த்தொழிலின் குறைபாடுகளும், பரிகாரங்களும்:** "உழுவோர் உலகத்தார்க்காணி" என்ற மெய்யுரைக் கிணங்க கிராம விவசாயிதான் இந்தியப் பொருளாதாரத் தேருக்கு அச்சாணி ஆவான். மேனுட்டறிஞர்கள் சிலர் இந்திய விவசாயியை நம் நாட்டின் 'முதுகெலும்பு' என்று புகழ்ந்து பாராட்டுவர். அறிவுடைமை, உலகியல் அறிவு, உழைப்பு, பொறுமை, எளிய வாழ்க்கை, ஊக்கம் முதலிய நற்குணங்களை நமது விவசாயிகள் பெற்றிருந்தும், நவீன மேனுட்டு விவசாயிகளை விடக் குறைந்த திறமையுடையவராகவே உள்ளனர். இன்று நம் நாட்டு விவசாயி பல துயரங்களுக்கு இரையாகி ஊக்கந் தளர்ந்து மிக்க ஏழ்மை நிலையில் வாடி வருந்துகின்ருன்; வறுமை, போதிய உணவில்லாமை, சுகாதாரமற்ற சூழ்நிலை, வீட்டு வசதிக் குறைவு முதலியவற்ருல் ஆரோக்கியம் குன்றியுள்ளான். அவனுடைய ஆடுமாடுகள் கொள்ளை நோய்கட்கு இரையாகி மடிகின்றன. எழுத்தறிவில்லாமையால் விதிவசத்தாலும், பழைய விவசாய முறையிலும் நம்பிக்கையுள்ளவனுகவும், முன்னேற்றத்தில் ஊக்கமற்றவனுகவும் இருக்கிருன். அவன் உழும் நிலம் போதிய வருவாயற்ற சிறு துண்டே ஆகும். அன்றியும் தொழிலை விருத்தி செய்ய அவனிடம் போதிய பணமுமில்லை; வருவாய்க்குதவும் துணைத்தொழில்களையும் அவன் செய்வதில்லை. அதிக வட்டிக்குக் கடன் வாங்கிவிட்டு அதனைத் தீர்க்க வழியில்லாமல் எல்லையில்லாத துயரக் கடலுள் அமிழ்ந்து விடுகின்ருன்.

நமது விவசாய முன்னேற்றத்திற்குத் தடைகள்

1. விவசாயமே நம் நாட்டின் முக்கியத் தொழிலாயிருப்பினும், அதன் நிலை மிகவும் பிற்போக்காயுள்ளது. பிறநாடுகளை நோக்க நம் நாட்டின் பயிர்களின் விளைச்சல்

மிகவும் குறைவே. இதனைக் கீழ்க்காணும் அட்டவணையி லிருந்து அறியலாம்.

ஓர் ஏக்கருக்குக் காணும் விளைவு
(பவுண்டு கணக்கில்)

| தேசம் | கோதுமை | நெல் | சோளம் | கரும்பு | பருத்தி | புகையிலை |
|---|---|---|---|---|---|---|
| எகிப்து | 1,918 | 2,998 | 1,891 | 70,302 | 535 | — |
| ஜப்பான் | 1,713 | 3,444 | 1,392 | 47,534 | 196 | 1,665 |
| சீனா | 898 | 2,433 | 1,284 | — | 204 | 1,288 |
| ஜாவா | — | — | — | 113,570 | — | — |
| ஐக்கிய அமெரிக்கா | 812 | 2,185 | 1,579 | 43,270 | 268 | 882 |
| இந்தியா | 700 | 1,240 | 803 | 34,944 | 89 | 987 |

இவ் வட்டவணையிலிருந்து குறைவான விளைவால் நாம் அதிக நஷ்டம் அடைகிறோம் என்று அறிகிறோம்.

2. நம் நாட்டில் விளைவு உற்பத்திக்குக் குடும்பப் போஷணையே முக்கிய நோக்கமாய் உள்ளது. ஒவ்வொரு குடியானவனும் தன் குடும்பத்திற்கு வேண்டிய உணவுத் தானியத்தை மட்டுமே பயிரிடுகிறான். எஞ்சிய உணவுத் தானியமே விற்பனைக்குப் பயன்படுகிறது. நகரவாசிகள், பயிர்த் தொழில் நடைபெறாத பகுதிகளிலுள்ளோர் முதலியோர்க்கு அவ்வெஞ்சிய உணவுப் பொருள்கள் தேவைக்குப் போதியன அல்ல. இதனால் உணவுப் பற்றுக்குறை ஏற்படுகிறது.

3. நம் நாட்டு விவசாயியின் விவசாயக் கருவிகளும், பயிரிடும் முறையும் மிகவும் பழங்காலத்தனவாம். சாஸ்திர விவசாய முறை, நவீன விவசாயக் கருவிகள், எருக்கள் முதலியவற்றை அவன் பயன்படுத்துவதில்லை. எந்திரக் கலப்பைகளும், பலவகை விவசாயக் கருவிகளும் பெருகி

வரும் இக்காலத்தில் மரக் கலப்பைகளும், கட்டைவண்டிகளும், வேறு பழைய கருவிகளும் இங்குப் பயன்பட்டு வருகின்றன. நம் குடியானவன் விதைக்கும் விதைகளோ செழுமையும் முதிர்ச்சியும் பெற்றனவல்ல; அவனுக்கு உதவியான கால்நடைகளோ மிக மெலிந்தும் நலிந்தும் உள்ளன.

4. நம் நாட்டு நிலங்கள் நாளடைவில் சிறுசிறு துண்டு நிலங்களாகப் பிரிக்கப்பட்டு வருகின்றன. இச் சிறு பகுதியின் விவசாயத்தினால் குடியானவனுக்கு வருஷச் சராசரி வருமானம் 42 ரூபாய்க்கும் குறைவாக இருக்கிறது. இந்தியக் குடியானவன் உழும் நிலப்பரப்பு சராசரி ஒரு ஏக்கருக்கும் குறைந்துள்ளமையால் நவீன யந்திரக் கருவிகளைப் பயன்படுத்தல் முடியாது.

5. நம் நாட்டு விவசாயம் பருவக்காற்று மழையையே நம்பியுள்ளது. தக்க நீர்வசதி யில்லாமல் விவசாயம் பாதிக்கப்படுகிறது.

6. இந்தியக் குடியானவரின் வறுமை விவசாய முன்னேற்றத்திற்குப் பெருந் தடையாயுள்ளது. நவீன விவசாயக் கருவிகளையும் இரசாயன எருக்களையும் அவன் வாங்க முடியாத நிலையிலுள்ளான். குறைந்த வட்டியில் கடன் வாங்க வசதியின்றி, அதிக வட்டிக்குப் பணம் வாங்கிக் கடனாளியாகி, ஊக்கந் தளர்கிறான்.

7. இன்னும் சுமார் 8 கோடி ஏக்கர் தரிசு நிலங்கள் பயிரிடப்படாமல் கிடக்கின்றன. செழுமையின் குறைவால் பயிரிடும் நிலங்களிலும் விளைச்சல் குறைவு. அன்றியும் பயிரையழிக்கும் பூச்சிகளாலும் நோய்களாலும் $\frac{1}{10}$ பங்கு விளைவு பாழாகின்றது. இக்காரணங்கள் யாவும் நம் நாட்டு விவசாயத்திற்குத் தடையாக இருப்பனவாகும்.

**விவசாயக் குறைகளை நீக்கப் பரிகாரங்கள்:** (a) செழும் விளைச்சலுக்கு முதல் தரமான விதைகளைப் பயன்படுத்தல்

வேண்டும். தற்போது ஸ்டேட் அரசாங்கங்கள் ஸ்தல விவசாயத் தேவைகளுக்கேற்பப் பலவகை விதைகளைத் தயாரிக்கவும், அவற்றின் உபயோகத்தை உழவர்களிடையே விளம்பரஞ் செய்யவும் ஆராய்ச்சிப் பண்ணைகளை நடத்தி வருகின்றன. (b) நிலவளத்தைப் பெருக்க நல்ல எருக்கள், நவீன இரசாயன எருக்கள் போன்றவற்றைப் பயன்படுத்துதலோடு பயிர்ச் சுழற்சி முறையையும் (Rotation of crops) கையாளுதல் வேண்டும். (c) நீர்ப்பாசன வசதிகளை மேலும் பெருக்குதல் வேண்டும். இதன் அவசியத்தை யுணர்ந்தே யூனியன் அரசாங்கமும் ஸ்டேட் அரசாங்கங்களும் பல நீர்ப்பாசனத் திட்டங்களை அமைத்து வருகின்றனர். பஞ்சாப்பில் பக்ரா-நங்கல் அணைத்திட்டம், மேற்கு வங்காளத்தில் தாமோதர் அணைத்திட்டம் முதலிய திட்டங்கள் எதிர்கால விவசாய முன்னேற்றத்திற்குத் துணைபுரிவனவாம். (d) பயிரை அழிக்கும் பூச்சிகளையும் நோய்களையும் தொலைக்க நல்லவழிகளைக் காணல் வேண்டும். இவற்றை ஒழிப்பதற்கு அரசாங்கத்தினர் ஆராய்ச்சிசாலைகளை நிறுவி வருகின்றனர். (e) செலவையும் உழைப்பையும் மிச்சப் படுத்தும் எந்திரக் கலப்பைகள், நீர் இறைக்கும் எந்திரங்கள் போன்ற நவீன சாதனங்களைப் பயன்படுத்தி நல்ல விவசாயப் பலனடைய முயலுதல் வேண்டும். (f) துண்டு நில விவசாய முறையைப் போக்கி இங்கிலாந்து, ருஷ்யா, அமெரிக்கா முதலிய மேனாடுகளைப் போல பரந்த பண்ணை முறையைப் பின்பற்றுதல் வேண்டும். (g) பயிரிடப்படாத தரிசு நிலங்களைப் பயிரிடுவதற்கு ஏற்றதாக்கி, விவசாயத்தைப் பெருக்குதல் நன்று. நமது தேசீய அரசாங்கம் இத்துறையில் தீவிரமாக முயன்று, பல லட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றியுள்ள செய்தி போற்றத்தக்கதாகும். (h) பல்வகைக் காலங்களில் பயிரிடுவதற்கேற்ப பலவகைப் பயிர்களைப் பற்றி ஆராயும் நவீன ஆராய்ச்சி நிலையங்கள் பல ஏற்படுதல் வேண்டும். நவீன விவசாய

முறைகளை உழவர்களிடையே தீவிரமாக பிரசாரம் செய்தல் வேண்டும். தற்போது நம் நாட்டில் நவீன ஆராய்ச்சி நிலையங்கள் பல ஏற்பட்டு வருகின்றன. (i) நம் நாட்டு விவசாயியின் வறுமையைப் போக்கவும், அவனைக் கடன் பிணியிலிருந்து மீட்கவும் அரசாங்கம் பாடுபடுதல் வேண்டும். தற்போது கூட்டுறவுச் சங்கங்களும், அடமான பாங்கிகளும் விவசாயிக்கு உதவி செய்து வருகின்றன. மேலும், இவை பெருகுதல் நன்று. இவ்வாறு செய்தால் அந்நிய நாட்டு உணவுத் தானிய இறக்குமதியைத் தடுத்து, உணவுப் பற்றுக் குறையைப் போக்கி, மக்களுக்கு நல்லுண வுப் பொருள்கள் கிடைக்க ஏதுவாகும். அன்றியும் நம் நாட்டிலமைந்துள்ள இயற்கைச் சாதனங்கள் அனைத்தையும் பயன்படுத்தி, வாழ்க்கைத் தரத்தையும் தேசீய வருமானத்தையும் நாம் உயர்த்துதல் வேண்டும்.

## பரந்த பண்ணை முறையும் கூட்டுறவு விவசாயமும்

நம் நாட்டைப்போல் சிறு துண்டு நிலங்களைப் பயிரிடுதல் அன்றி, பிரிட்டன், ருஷ்யா, கானடா, ஐக்கிய அமெரிக்கா முதலிய நாடுகளில் பரந்த நிலப் பரப்புகள் பயிரிடப் படுகின்றன. நம் நாட்டில் ஒரு குடியானவனால் உழப்படும் நிலத்தின் பெரிய பரப்பு 5 ஏக்கருக்கும் குறைவாயுள்ளது. ஆனால், இங்கிலாந்தில் உழுநிலப் பரப்பு 21 ஏக்கராகவும், அமெரிக்காவில் 145 ஏக்கராகவும் உள்ளன. பரந்த அளவுள்ள நிலத்தைப் பயிரிடுவதே பரந்த பண்ணை முறையாகும். தனியாகவும் கூட்டுறவு மூலமாகவும் இவ்வாறு நிலங்களைப் பயிரிடலாம்.

**கூட்டுறவுப் பண்ணை முறையின் நன்மைகள் :** கூட்டுறவுப் பண்ணை முறையில் பல நன்மைகள் ஏற்படுகின்றன ; செலவும் உழைப்பும் மிச்சப்படுகின்றன. எல்லா நிலங்களுக்கும் எளிதாகப் பொதுவில் நீர் பாயும்படி செய்யலாம் பயிருக்கு வரும் நோய்கள், பூச்சி முதலியவற்றால் ஏற்படும்



படம் 27. ட்ராக்டரின் மூலம் நவீன விவசாயம்.

தொல்லைகளைத் தடுப்பது எளிது. நவீன இரசாயன எருக்கள், எந்திரக் கருவிகள், ஏற்ற விதைகள் முதலியவற்றை வாங்கிப் பயன்படுத்துவதற்கும், நீர்ப்பாசன வசதிகளைப் பொதுவில் அமைப்பதற்கும் சுலபமாகும். நிலப்பரப்பு அதிகமாய்ப் பரந்து கிடந்தால் பயிர்வேலை ஒவ்வொன்றினுக்கும் பலவகை எந்திரங்களை உபயோகிப்பதற்கு வசதியாயிருக்கும். இவற்றை வாங்கிப் பயன்படுத்த அரசாங்க உதவியும் எளிதில் பெறலாம். இம்முறையில் பயிர்ச் சுழற்சி முறையையும் கையாண்டு நல்ல பயனை அடையலாம். குறைந்த காலத்தில் நல்ல பலனைப் பெறலாம். கூட்டுப் பண்ணை முறையில் விளைந்த பொருள்களை நல்ல விலைக்கு எளிதில் விற்று, அனைவரும் இலாபம் பெறலாம். இம்முறையைக்

கையாளுவதால் நிலம் வளம் பெறுவதுடன் விவசாயியின் ஏழ்மையும் வறுமையும் ஒழியும்.

இக் கூட்டுப் பண்ணை முறை நம் நாட்டில் கையாளப் பல இடையூறுகள் உள்ளன. குறைந்த பட்சம் 100 ஏக்கர் பரப்பேனும் இம் முறைக்கு இருத்தல் வேண்டும். நிலங்கள் சிறுசிறு துண்டுகளாகவும் வேறு பல இடங்களிலும் சிதறிக் கிடக்கின்றன. நம் நாட்டு விவசாயிகள் பழங் கொள்கை களிலே நம்பிக்கை கொண்டுள்ளனர்; படிப்பின்மையினுல் நவீன விவசாய முறையில் அவர்கட்கு நம்பிக்கை உண்டா தல் இல்லை; சுய நலத்தாலும் அவநம்பிக்கையாலும் பலர் ஒன்று சேர மறுக்கின்றனர்; வறுமையினுல் கூட்டுறவுப் பண்ணை முறைக்கேற்ற விலைமிக்க நவீன விவசாயக் கருவிகளை வாங்கச் சக்தியற்றவர்களாய் உள்ளனர்; நம் நாட்டில் நீர்ப்பாசன வசதியும் குறைவு. நம் யூனியன் அரசாங்க ஆதரவின் கீழ் இம்முறை பல ராஜ்ஜியங்களில் சிறப்பாகக் கையாளப்பட்டு வருகிறது.

பகுதி 4

விவசாய இலாக்கா: விவசாயத்தின் சிறப்பை நன் குணர்ந்து அரசாங்கத்தினர் அதன் முன்னேற்றத்திற்குப் பல வழிகளிலும் பாடுபட்டு வருகின்றனர். கி. பி. 1894-ல் **மத்திய விவசாயக் காரியாலயம்** ஒன்று மத்திய அரசாங்கத்தில் ஏற்பட்டது. அதை யொட்டி மாகாணங்களில் விவசாய இலாக்காக்கள் ஏற்பட்டன. இராஜப் பிரதிநிதி கர்ஸன் பிரபு நாட்டின் விவசாயத்தைக் கவனிக்க கி. பி. 1901-ல் **விவசாய இன்ஸ்பெக்டர் ஜெனரல்** என்னும் உத்தியோகஸ்தரை நியமித் தார். பீஹாரிலுள்ள **பூசாவில் மத்திய விவசாய ஆராய்ச்சி நிலையம்** ஒன்று கி. பி. 1903-ல் அவரால் ஏற்படுத்தப்பட்டது; அதனுடன் மாதிரி விவசாயப் பண்ணைகளும் ஏற்படுத்தப் பட்டன. (பீஹாரில் ஏற்பட்ட பூகம்பத்தினுல் பூசா நிலையம் கி. பி. 1936-ல் **டில்லிக்கு** மாற்றப்பட்டது.) விவசாயிகளுக் குக் குறைந்த வட்டியில் கடனுதவி செய்து கடும் வட்டிக்

கொடுமையினின்று மீட்க, கர்ஸன் பிரபு கி. பி. 1904-ல் கூட்டுறவு நாணயச் சங்கங்களை ஏற்படுத்தினுர். மாகாண விவசாய இலாக்காக்கள் நாடனைத்திற்கும் பொதுவான விவசாய விஷயங்களைப் பற்றிய ஆலோசனைகளை அறிவிக்க, கி. பி. 1905-ல் மத்திய அரசாங்கத்தில் அகில இந்திய விவசாய போர்டு ஒன்று ஏற்பட்டது. கி. பி. 1908-ல் பூனுவிலும் அதன் பின்னர், கான்பூர், நாகபுரி, கோயம்புத்தூர் முதலிய இடங்களிலும் விவசாயக் கல்லூரிகள் ஏற்பட்டன. கி. பி. 1919-ஆம் ஆண்டுச் சட்டப்படி மாகாண விவசாய இலாக்கா, சட்ட சபைக்குப் பொறுப்பு வாய்ந்த இந்திய மந்திரி அதிகாரத்தின் கீழ் மாற்றப்பட்டது. கி. பி. 1929-ல் சாம்ராஜ்ஜிய விவசாய ஆராய்ச்சி சபை (The Imperial Council of Agricultural Research) ஒன்று மத்திய அரசாங்கத்தாரால் நிறுவப்பட்டது. மாகாண விவசாய ஆராய்ச்சிகளைத் தொகுத்து நாடனைத்திற்கும் பொதுவான திட்டங்களை வகுத்தல், விவசாய விளம்பரங்களை வெளியீடு செய்தல், மத்திய விற்பனை இலாக்கா (Central Marketing Section) ஒன்றமைத்தல் முதலியன இதன் கடமைகளாகும்.

இந்திய யூனியனில் ஒவ்வொரு ஸ்டேட்டிலும் விவசாய இலாக்கா ஒரு தனி மந்திரியின் பொறுப்பிலுள்ளது. அவர்கீழ் ராஜ்ஜிய விவசாய இலாக்காவின் தலைமை அதிகாரியான டைரக்டர் (Director of Agriculture) ஒருவரும், கால்நடை அபிவிருத்தி அதிகாரி (Director of Animal Husbandry) ஒருவரும் உள்ளனர். இவர்களுக்கு உதவிசெய்யக் கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் பலர் உள்ளனர். ஒவ்வொரு ஜில்லாவிலும் விவசாய உத்தியோகஸ்தர்களும், விவசாயப் பிரசாரகர்களும் உள்ளனர்.

**ஸ்டேட் விவசாய இலாக்காவின் முக்கிய அலுவல்கள் :** இந்த இலாக்கா விவசாயப் பரிசோதனை ஆராய்ச்சிகளை நடத்தி, அவற்றின் பயனைப் பிரசாரம் செய்து வருகிறது. நவீன முறைகளையும், நவீன விவசாயக் கருவிகளின் பயனையும்

உழவர்களிடையே விளம்பரம் செய்கிறது. நீர் வசதியுள்ள இடங்களில் நவீன இரசாயன எருக்களையும், நவீனக் கருவிகளையும் உபயோகித்து ஜப்பானிய முறையைப் பின்பற்றும்படி அரசாங்கம் தூண்டுகிறது. பல்வகைப் பயிர்களின் தேர்ந்த விதைகள் உழவர்களுக்கு அளிக்கப் படுகின்றன. விவசாய உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவைகளின் மூலமாக விவசாயக் கல்வி அளிக்கப்படுகிறது. (சென்னை ராஜ்ஜியத்தில் கோயம்புத்தூரிலும், ஆந்திரப் பிரதேச ராஜ்ஜியத்தில் பாபட்லாவிலும் விவசாயக் கல்லூரிகள் உள்ளன.) நோய்கள், பூச்சிகள் இவற்றிலிருந்து பயிர்கள் காக்கப்படுகின்றன. விவசாய முன்னேற்றத்தின் பொருட்டுக் கால்நடைப் பொருட் காட்சிகளும் விவசாயப் பொருட்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. மாதிரி விவசாயப் பண்ணைகள், கால்நடைப் பண்ணைகள், கோழிப் பண்ணைகள் முதலியன நடத்தப்படுகின்றன. விவசாயிகளுக்கு உதவுமாறு வானிலை முன்கூட்டியே அறிவிக்கப்படுகிறது.

நீர்ப்பாசன வசதிக்குக் கிணறுகளை வெட்டவும், நீர் இறைக்க எந்திரங்களை வாங்கவும் விவசாயிகட்குப் பண உதவி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஸ்டேட் அரசாங்கமும் விவசாய முன்னேற்றத்தைக் கருதிப் பல நீர்ப்பாசனத் திட்டங்களை அமைத்து வருகிறது. கடும் வட்டிக் கொடுமையினின்று மீள்வதற்குக் கடன் நிவாரணச் சட்டம், கூட்டுறவு நாணயச் சங்கங்கள், நில அடமான பாங்கிகள், தவணைக் கடன் முதலியவற்றின் மூலமாக அரசாங்கம் விவசாயிகட்கு உதவுகிறது. கிராம விவசாயிகளின் கல்வியறிவு, நல்வாழ்வு, பொருளாதாரம் முதலியவற்றை வளர்க்க, ஸ்டேட் அரசாங்கங்கள் கிராம முன்னேற்ற இயக்கத்தை ஊக்கிவருகின்றன. யூனியன் அரசாங்கத்தில் உணவிற்கும் விவசாயத்திற்கும், தனி மந்திரிகள் உள்ளனர். அவர்கள் அவ்வப்போது நாடனைத்திற்கும் பொதுவான விவசாயப்

பிரச்னைகளைக் கவனிக்கவும், திட்டங்களை ஏற்படுத்தவும், ஸ்டேட் உணவு, விவசாய மந்திரிகளின் மகாநாட்டைக் கூட்டுகின்றனர். யூனியன் அரசாங்கத்தின் கீழ்ப் பல விவசாய, உணவு சம்பந்தமான ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை :

(1) டில்லியிலுள்ள மத்திய விவசாய ஆராய்ச்சி நிலையம்.

(2) டேராடூனிலுள்ள காட்டு ஆராய்ச்சி நிலையம் (உத்தரப் பிரதேசம்).

(3) கான்பூரிலுள்ள சர்க்கரை ஆராய்ச்சி நிலையம் (உத்தரப் பிரதேசம்).

(4) நைனிடால் தேரையில் உள்ள விவசாயப் பண்ணை (உத்தரப் பிரதேசம்).

(5) கார்னலிலுள்ள கால்நடை அபிவிருத்திப் பண்ணை (பஞ்சாப்).

(6) ஐஸாத் நகரிலுள்ள கால்நடை ஆராய்ச்சி நிலையம் (உத்தரப் பிரதேசம்).

(7) ராஞ்சியிலுள்ள அரக்கு ஆராய்ச்சி நிலையம் (பீஹார்).

(8) ஆனந்திலுள்ள பாலடைக்கட்டி நிலையம் (பம்பாய்).

(9) பூனாவிலுள்ள உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் (பம்பாய்).

(10) கோயம்புத்தூரிலுள்ள கால்நடை அபிவிருத்திப் பண்ணை (சென்னை).

(11) கட்டாக்கிலுள்ள நெல் ஆராய்ச்சி நிலையம் (ஒரிஸ்ஸா).

(12) குலுவிலுள்ள காய்கறி அபிவிருத்தி நிலையம் (பஞ்சாப்).

(13) பங்களூரிலுள்ள இந்தியப் பால்பண்ணை நிலையம் (மைசூர்).

(14) மீன்கள் ஆராய்ச்சி நிலையங்கள் (மேற்கு வங்காளத்திலுள்ள பாரக்பூர்; சென்னையிலுள்ள மண்டபம்; பம்பாய்).

## பகுதி 5

ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தி: நமது நாட்டு விவசாயப் பொருள்கள் உணவுப் பொருள்கள் என்றும் வர்த்தகப் பொருள்கள் என்றும் இரு வகைப்படும். நெல், கோதுமை, தினை வகைகள் உணவுப் பொருள் வகையைச் சேர்ந்தவை. புகையிலை, எண்ணெய் வித்துக்கள், ரப்பர், பருத்தி, சணல் முதலியன வர்த்தகப் பொருள்களாகும். நம் நாட்டில் உழும் நிலங்களில் $\frac{4}{5}$ பாகம் உணவுப் பொருள்கள் பயிரிடப்படுகின்றன.

வாணிபப் பொருள் உற்பத்தி செய்யும் முக்கிய நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. நம் நாட்டு மொத்த உழுநிலப் பரப்பில் $\frac{1}{5}$ பாகத்தில் வாணிபப் பொருள்கள் உற்பத்தியாகின்றன. இவையே நம் நாட்டின் பெரும்பான்மை ஏற்றுமதிப் பொருள்களாகும். எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியில் இந்தியாவே உலகில் முதன்மையானது. நாடெங்கும் அவை பயிராகின்றன. ஆளிவிதை, எள்ளு, கடுகு, நிலக்கடலை, கொப்பரை, ஆமணக்கு, பருத்தி விதை, தனியா முதலியன நாட்டின் உபயோகத்திற்கும் ஏற்றுமதிக்கும் பயிரிடப்படுகின்றன. நமது ஆளிவிதையும் நிலக்கடலையும் அயல் நாடுகளில் மிகவும் வேண்டப்படுகின்றன. சீனாவிற்கு அடுத்தபடியாக உலகில் தேயிலை மிகுதியாய் உற்பத்தி செய்யும் நாடு நம் நாடே. நம் நாட்டுத்

தேயிலையின் பெரும்பகுதி பிரிட்டனுக்கு ஏற்றுமதி ஆகின்றது. காப்பி உற்பத்தி குறைவேயாயினும் ஏற்றுமதி ஓரளவு நடந்து வருகிறது. புகையிலை நம் நாட்டிலிருந்து மிகுதியாய் ஏற்றுமதி ஆகிறது. அரக்கு உற்பத்தியிலும், சணல் உற்பத்தியிலும் நம் நாடு நிகரற்றது. இவை பெருவாரியாக பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்றுமதியாகின்றன. பருத்தி ஆடைகள் பர்மா, மலேயா, சிலோன், இந்தோனே-ஷியா, கிழக்காப்பிரிக்கா, பாகிஸ்தான், திபெத், நேபாளம் முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றன.

எண்ணெய் வித்துக்களைப் போலவே வாசனைப் பொருள்களும், நமது தேவைக்கும் ஏற்றுமதிக்கும் நம் நாட்டில் பயிரிடப்படுகின்றன. மிளகு, மிளகாய், இஞ்சி, ஏலம், இலவங்கம், இலவங்கப்பட்டை, பாக்கு முதலிய வாசனைப் பொருள்கள் பல அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. மூலதனம், தொழில், அரசாங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்பிருப்பின் மேனுட்டின் சிறந்த நவீன ஆக்கத்தொழில் சாதனத்தினுல் நம் மூலப் பொருள்கள் அனைத்தையும் ஜனத்தொகை பெருகிவரும் நம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கே பயன்படுத்திக் கொள்ளலாம்.

### பயிற்சி

1. ஆக்கத் தொழில் நாடு, விவசாய நாடு ஆகிய ஒவ்வொன்றினுக்கும் சிறந்த உதாரணம் இரண்டு தருக.
2. இந்தியாவை விவசாய நாடெனக் கூறுதல் எங்ஙனம் பொருந்தும்?
3. நம் நாட்டு மண் வகைகள் யாவை? நம் நாட்டு நிலங்களின் செழுமைக் குறைவுக்கு முக்கிய காரணங்கள் என்ன? நிலவளத்திற்கு ஏதேனும் நான்கு வழிகளைக் குறிப்பிடுக.

4. ஜமீன்தாரி நில உரிமைத் திட்டத்தின் தீமைகள் யாவை? ரயத்துவாரி முறையின் நன்மைகள் யாவை?

5. நம் நாட்டு விவசாய முன்னேற்றத்திற்கு முக்கியத் தடைகளுள் நான்கினைக் கூறி, அவற்றுக்குரிய பரிகாரங்களையும் குறிப்பிடுக.

6. இந்திய விவசாயியின் முக்கியத் துயரங்கள் எவை? அவற்றை நீக்க அரசாங்கம் செய்யும் முறைகளுள் நான்கைக் குறிப்பிடுக.

7. கூட்டுறவுப் பண்ணை முறையின் நன்மைகள் யாவை? நம் நாட்டில் அதற்குத் தடைகள் யாவை?

8. ஸ்டேட் விவசாய இலாக்காக்களின் முக்கிய அலுவல்கள் யாவை?

9. பூர்த்தி செய்க :—

(*a*) — என்பவரால் சாசுவத நிலவரித் தீர்மானம் ஏற்பட்டது.

(*b*) சென்னை ராஜ்ஜியத்தில் ரயத்துவாரி முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்தவர்—என்பவராவர்.

(*c*) — ஆண்டில் பூசா என்னுமிடத்தில் மத்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் — என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. அது தற்போதுள்ள இடம் —.

(*d*) தென்னிந்தியாவில் விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் உள்ள இரு முக்கிய இடங்கள் —— ஆகும்.

10. நம் நாட்டிலிருந்து அதிகமாய் ஏற்றுமதியாகும் பொருள்களில் இரண்டைக் கூறுக.

# அத்தியாயம் 17

## தொழில் அபிவிருத்தி

பகுதி 1

**நமது நாட்டுப் பழைய கைத்தொழில்கள் :** ஆங்கில ஆட்சி நம் நாட்டில் ஏற்படுவதற்கு முன்னர் விவசாய நாடாகிய நம் நாட்டில் 40 சத வீதம் மக்கள் கைத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், இன்று நம் நாட்டு மக்களுள் 20 சதவீதங் கூட கைத்தொழில்களில் ஈடுபட்டில்லாத செய்தி வருந்தத் தக்கதாகும். செல்வங்கொழித்த பண்டைக் காலத்தில் நம் நாட்டில் கைத்தொழில்கள் பல சிறந்து விளங்கினவென்று வரலாற்று வாயிலாக நாம் அறிகின்றோம். நவீன எந்திரத் தொழில் முறைக்குப் பிறப்பிடமாகிய மேற்கு ஐரோப்பா நாகரிகமற்ற நிலையிலிருந்தபோது நம் நாடு பல்வகைத் தொழில்கட்கும் நுண்ணிய கைவேலைப்பாடுகட்கும் புகழ் பெற்று விளங்கியது. பருத்தி, பட்டாடை நெய்தல், கம்பள வேலை, அணி வகைகள் புனைதல், தந்த வேலை, ஓவியம் வரைதல், உலோகப் பாத்திரங்கள் செய்தல், கப்பல் கட்டுதல், அழகிய பல்வகை மர வேலைகள் இன்னோரன்ன பிற கைத்தொழில்கள் தமிழகத்திலும், வட நாட்டிலும் பல இடங்களில் சிறப்பாக நடைபெற்று வந்தன. இவை அனைத்தும் குடிசைத் தொழில்களாகவே நடந்து வந்தன. சங்க நூல்களிலிருந்து, மெல்லிய பாலாவி போன்ற ஆடைகளைக் கிரீஸ், ரோம், எகிப்து முதலிய நாடுகள் நம்மிடமிருந்து பெருவாரியாக வாங்கிவந்தன என்று அறிகின்றோம்.

இத் தொழில்கள் யாவும் இந்து வேந்தர்களின் காலப் பகுதியின் இறுதியில் சற்று மங்கியபோதிலும், அவை மீண்டும் மொகலாயர் காலத்தில் தலையெடுத்தன. டாக்கா நகர் மஸ்லின் துணிகளுக்கும், டில்லி, ஆக்ரா பட்டாடைகளுக்கும், மூர்ஷிதாபாத் தந்த வேலைகளுக்கும், ஜெயபுரி சலவைக்கல் வேலைப்பாடுகளுக்கும், காஜிப்பூர் வாசனை

வகைகட்கும், லக்ஷ்மணபுரி வெல்வெட் வேலைகட்கும் அழியாப் புகழ் பெற்றன. நாடெங்கும் பருத்தி ஆடை நெய்தல் சிறந்த கைத்தொழிலாக விளங்கி வந்தது. ஐரோப்பியர்கள் நம் கைத்தொழிற் பொருள்களை மிகுதியும் வாங்கலாயினர். 19-ஆம் நூற்றுண்டில் ஆங்கிலேயர் ஆட்சி நம் நாட்டில் ஏற்பட்ட பின்னர், நமது கைத்தொழில்கள் எல்லாம் நசிக்கத் தலைப்பட்டன.

**பண்டைக் கைத்தொழில் அழிவிற்குக் காரணங்கள் :** 17-ஆம் நூற்றுண்டின் இறுதியில் மொகலாய சாம்ராஜ்ஜியம் குன்றத் தலைப்படவே நம் கைத்தொழில்களுக்கு அரசாங்கமும், செல்வர்களும் அளித்து வந்த ஆதரவு மறையலாயிற்று. இந்தியா ஆங்கில ஆட்சியின்கீழ் வந்த போது, நம் கைத்தொழில்களுக்கு சிற்றரசர்கள் காட்டி வந்த ஆதரவும் இல்லாமற் போயிற்று. இங்கிலாந்தில் தொழிற் புரட்சி ஏற்பட்டமையால் கிழக்கிந்தியக் கம்பெனியாரும், பிரிட்டிஷ் அரசாங்கமும் இந்தியாவை மூலப் பொருள்களுக்கு உறைவிடமாகவும், ஆங்கில செய்தொழிற் பொருள்களின் விற்பனைக்குச் சந்தையாகவும் கருதலாயினர்; இந்தியக் கைத்தொழில்கள் பல (சிறப்பாக நுண்ணிய பருத்தியாடை நெய்தல்) அநீதியாக அந்நிய ஆட்சியினரால் ஒடுக்கப்பட்டன. இந்தியாவில் நிலைபெற்ற ஆங்கில ஆட்சி தம் நாட்டின் செய்பொருள்கட்கே பேராதரவு காட்டி, நம் நாட்டின் வர்த்தகத்தையும் கைத்தொழில்களையும் தலை தூக்கா வண்ணம் செய்தது. அன்றியும் நம் நாட்டினர் மேனுட்டுப் பழக்க வழக்கங்களை மேற்கொண்டு, அந்நாட்டுக் கைத்தொழிற் பொருள்களையே ஆதரிக்கத் தொடங்கினர். இங்கிலாந்தில் பெருவாரியாகத் தயாரிக்கப்பட்ட எந்திரப் பொருள்களுடன் நம் நாட்டுக் குடிசைத் தொழிற் பண்டங்கள் போட்டியிட முடியவில்லை; லங்காஷயர் பருத்தி ஆலைகள் நமது நெசவுத் தொழிலின் சீர்கேட்டிற்குக் காரணமாயின.

## பகுதி 2

சுதேசி இயக்கம்: இந் நூற்றுண்டின் தொடக்கத்தில் தாதாபாய் நௌரோஜி, ரானடே போன்ற தேச பக்தர்கள் நம் நாட்டுத் தொழிலின் பிற்போக்கு நிலைமையைக் கண்டு வருந்தி, அதனை நன்னிலைக்குக் கொண்டுவர முற்பட்டனர். ஆங்கிலேயர் நம் நாட்டை அவர்களின் செய்பொருள்கள் விற்பனைச் சந்தையாக ஆக்கியதுமன்றி இங்குத் தொழிற் சாலைகளையும் ஏற்படுத்தலாயினர். 19-ஆம் நூற்றுண்டி னிறுதியில் தோன்றிய ஜப்பானின் விரைவான தொழில் எழுச்சி இந்தியர்களிடையே புதிய அரசியல் விழிப்பை உண்டாக்கியது. இந் நிலையில் இந்திய இராஜப் பிரதிநிதி யான கர்ஸன் பிரபு கி. பி. 1905-ல் ஏற்படுத்திய வங்கப் பிரிவினை தேசீயத் தீயைக் கொளுத்திவிட்டது. வங்கப் பிரிவினையை எதிர்த்துப் பலத்த அரசியல் கிளர்ச்சி ஏற்பட் டது. அதன் விளைவாக, "தாய்நாட்டுப் பொருள்களையும் கைத் தொழில்களையும் ஆதரியுங்கள், அயல் நாட்டுப் பொருள்களைப் பகிஷ்கரியுங்கள்," என்னும் இயக்கம் வங்காளத்தில் தோன்றி நாடெங்கும் காட்டுத் தீபோல் பரவியது. இதுவே சுதேசி இயக்கம் எனப்படும். இதனுல் தாய் நாட்டுக் கைத்தொழில் களுக்குப் பேராதரவு ஏற்பட்டது; இந்தியரின் மூலதனத்தி னுல் அவர்களாலேயே நடத்தப்பெறும் தொழில் ஸ்தாபனங் கள் பலவும், தொழில் துறைகள் பலவும் ஏற்பட்டன. சிறப்பாகப் பம்பாயில் பல பருத்தி ஆலைகள் ஏற்பட்டன. இந்தியக் கைத்தொழில்களுக்கு ஆதரவாக மேற்கிந்தியா, பஞ்சாப், உத்தரப் பிரதேசம் முதலிய இடங்களில் பாங்கி கள் பல ஏற்பட்டன. அரசாங்கமும் புதிய இந்தியக் கைத்தொழில்களுக்குச் சிறிது ஆதரவு காட்ட முன் வந்த தாயினும் வேரூன்றிய ஆங்கில நலன்கள் இதனைப் பல மாக எதிர்க்கலாயின. எனினும் இந்திய தேசீயக் காங் கிரசின் பேராதரவின் கீழ்ச் சுதேசி இயக்கம் வளரத் தொடங்கியது.

**கதர் இயக்கம்:** அயல் நாட்டு ஆலைத் துணியின் இறக்குமதியைத் தடுக்கவும், நம் நாட்டுப் பொருளாதார நிலைமையை உயர்த்தவும், காந்தி அடிகள் ஒரு புதிய ஆயுதத்தைக் கண்டார். இதுவே கை ராட்டினமும் கதர் இயக்கமும் ஆகும். அயல்நாட்டை நம்பியிராமல், தங்களுக்கு வேண்டிய ஆடைகளைக் கைராட்டினங்களில் நூற்ற நூல்களைக் கொண்டு கைத் தறிகளில் தயாரிக்கப்பட்ட ஆடைகளை இந்தியர்கள் அனைவரும் அணியுமாறு செய்வதே கதர் இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும். இது தோன்றி வளர்வதற்குச் சுதேசி இயக்கம் பெரிதும் ஊக்கியது. இவ்வியக்கம் வெற்றிபெற கி. பி. 1921-ல் காந்தியடிகளால் அகில இந்திய நூற்போர் சங்கம் தோன்றியது. அது பல கிளை ஸ்தாபனங்களுடன் இன்னும் வேலை செய்து வருகிறது.

சர்க்காவை மக்கள் விரும்பிய பொழுது இலகுவில் பெற்றுப் பயன்படுத்துவதற்கு அது மிகவும் எளிது. அதற்கு மூலதனமும் விலையுயர்ந்த கருவிகளும் தேவையில்லை. அதற்கேற்ற கருவிகள் அவரவர் வாழுமிடங்களிலே பெறலாம். தொழிற் திறமை குறைந்த முதியோர்களும், குழந்தைகளும்கூடச் சர்க்காவைச் சுழற்றலாம். இதனால் தயாரிக்கப்படும் பொருள்கள் எளிதில் விற்பனைக்குரியதாகும். இது ஏழைகளின் ஏழ்மையைப் போக்குவதுடன் பல குடும்பங்களுக்குத் துணைவருவாயும் அளிக்கிறது. இத் தொழில் எக்காலத்திலும் செய்தற்கேற்றது. சீர்கேடுற்ற கிராமங்களை முன்னேறச் செய்வதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் இது பெரிதும் உதவுகிறது. கிராம மக்கள் ஓய்வுக் காலங்களில் சோம்பித் திரியாமல் இருக்க இது செய்கிறது. நமது சுதந்திரப் போராட்டத்தின்போது மகத்தான ஆயுதமாக விளங்கிய இது நம் நாட்டுச் செல்வம் அயல் நாடுகட்குச் செல்லாமல் இருக்கவும், கிராமப் பொருளாதாரத்தை உயர்த்தவும் உதவுகிறது.

மக்களுக்கு விலை மலிவில் மெல்லிய எந்திர ஆடை கிடைப்பதாலும், நம் நாட்டில் எந்திர ஆலைகள் பல நிறுவப் பட்டு வருவதாலும் இவ்வியக்கம் காந்தியடிகள் விரும்பிய வாறு முன்னேற்றமடையவில்லை. ஆயினும், அன்னாரின் நினைவிற்குப் பேரடையாளமாக இது விளங்கிவருதல் விரும் பத் தக்கதாகும். நாம் சுதந்திரம் பெற்றிருப்பினும் நமது ஆடை வகைகளின் சுய தேவைப் பூர்த்தியின் பொருட்டும் நமது கிராமப் பொருளாதார முன்னேற்றத்தின் பொருட்டும் கதரியக்கத்தை நாம் வளர்த்தல் மிகவும் நன்று.

## பகுதி 3

குடிசைத் தொழில்: தொழில் திறமை பெற்ற தொழிலாளி யால் தம்மில்லத்திலேயே சொந்தக் கருவியைக் கொண்டு தன்னுழைப்பினாலும், குடும்பத்தாரின் உழைப்பினாலும் நடத்தப் படும் தொழிலே குடிசைத் தொழில் எனப்படும். இது சிறிய அளவில் செய்யும் தொழிலாகும். பொருள் உற்பத்திக்கு மட்டும் அன்றி விற்பனைக்கும் தொழிலாளியின் சொந்த உழைப்பும் முயற்சியும் வேண்டும். குடிசைத் தொழில் களின் பொருள்கள் அடுத்து வாழ்வோரின் தேவைகளுக்கு ஏற்பவே தயாரிக்கப்படுகின்றன.

குடிசைத் தொழில்களின் தற்கால நிலை: பண்டைக் காலத்தில் நம் நாட்டில் குடிசைத் தொழில்கள் பல சிறந்து விளங்கின. நாளடைவில் அவை குன்றத் தலைப்பட்டன. நம் நாட்டின் குடிசைத் தொழில்களின் அழிவுக்குக் கார ணங்கள் பலவாம். அன்னிய ஆட்சி, தொழிற்புரட்சியின் விளைவாக எந்திரப் பொருள்களின் தோற்றம், பிரிட்டிஷ் கைத்தொழில்களின் தீவிரப் போட்டி, அரசாங்கத்தின் ஆதரவின்மை, நம் குடிசைக் கைத்தொழிலாளியிடம் மாறிய சூழ்நிலைக்கேற்ப நடக்கும் திறமை இல்லாமை முதலிய காரணங்களினால் சென்ற நூற்றாண்டின் இடைக் காலத்தில் நமது குடிசைத் தொழில்கள் நசிக்கலாயின. இதனால் இந்தியா ஒரு முழு விவசாய நாடாயிற்று. எனவே, வேலை

யில்லாத் திண்டாட்டமும், வேலை பற்றுக் குறையும் நாட்டில் எங்கும் தோன்றலாயின. நாட்டின் பொருளாதார நிலை சீர் கெட்டது. கிராம மக்கள் வறுமைக்குள்ளானதுடன் சோம்பும் நிலைபெற்றனர். கிராமப் பொருளாதார நிலையை உயர்த்தக் கிராம விவசாயிகளுக்கு ஓய்வு நேரங்களில் ஊதியம் தரும் துணைத் தொழில்கள் ஏற்படல் வேண்டும்; எனவே, குடிசைத் தொழில்களை நன்னிலைக்குக் கொண்டு வருதல் வேண்டும்.

**குடிசைத் தொழில்களின் மறுமலர்ச்சிக்குத் தக்க வழிகள்:** குடிசைத் தொழில்களின் வளர்ச்சியின் பொருட்டு அரசாங்கத்தாரால் சந்தைகளும், பொருட்காட்சிச் சாலைகளும் நடத்தப்படல் வேண்டும். குடிசைத் தொழிற் பொருள்களின் விற்பனைக்கு மத்திய ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தல் வேண்டும். ராஜ்ஜியங்களின் அரசாங்கம் தொழிற் கல்வியைப் போதிக்கத் தொழிற் கல்லூரிகளை ஏற்படுத்தல் வேண்டும். அன்றியும் தொழிலாளர் வாழு மிடங்களில் தக்க பள்ளிகளில் பாடத் திட்டங்கள் அங்கு நடைபெறும் தொழில்களுக்கு ஏற்றாற்போல் அமைதல் நன்று. அரசாங்கத்தின் ஆதரவின்கீழ்த் தொழிலாளருக்கு தொழில் விளக்கக் காட்சிகள் நடைபெறுதல் வேண்டும். தொழிலாளர்களுக்கு நல்ல நவீனக் கருவிகள் கிடைக்குமாறு அரசாங்கம் செய்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக மூலதனம், மூலப்பொருள்கள், விற்பனை வசதி முதலியன தொழிலாளருக்குக் கிடைக்குமாறு அரசாங்கம் செய்தல் வேண்டும்.

நம் கிராமங்களிலேற்படும் குடிசைத் தொழில்கள் விவசாயிகளின் தொழிலுக்கு இடையூறு தராததாய் இருத்தல் வேண்டும். அவர்களின் சொந்தத் தொழில் திறமையினால் நடத்தப்படுவதாயும், தம்முழைப்பும் தம் குடும்பத்தாரின் உழைப்பினால் மட்டும் நடைபெறுதற் குரியதாயும், சிறிய மூலதனத்தினால் ஊதியந் தருவதாயும் அவை அமைதல் வேண்டும். குடிசைத் தொழில்களின் மறுமலர்ச்சியால்

எண்ணற்ற நன்மைகள் ஏற்படுகின்றன. விவசாயிகட்கு துணைவருவாய் வருகிறது; ஓய்வு நேரங்களில் சோம்பல் வாழ்க்கை அகற்றப்படுகிறது; நம் அரசாங்கத்திற்கு அதிக வருவாயை அளிக்கிறது; நம் பண்டைக் கைத்தொழிலின் திறமை வளர்க்கப் படுகிறது. நகரப் பகுதிக்கும் நாட்டுப் புறப் பகுதிகட்கும் தொடர்பு ஏற்படுகிறது. வாழ்க்கைத் தரம் உயர்ந்து சமூக நலம் பெருகுகின்றது. இவற்ருல் அரசியல் பொருளாதாரத் துறைகளில் நாடும் முன்னேற்றம் அடையும்.

கி. பி. 1935-ல் இந்திய தேசீய காங்கிரஸ் சபையால் நம் நாட்டுக் குடிசைத் தொழில்களின் வளர்ச்சியின் பொருட்டு அகில இந்திய கிராமக் கைத்தொழிற் சங்கம் ஏற்பட்டது. அதன் தலைமைக் காரியாலயம் மத்தியப் பிரதேசத்தில் வார்தாவிற்கு அருகிலுள்ள மகன்வாடியி லுள்ளது. அங்கு எண்ணெய் எடுத்தல், காகிதம் செய்தல், சவர்க்காரம் செய்தல், சாயங்கள் தயாரித்தல், நெல் குத்தல், தேனீ வளர்த்தல், மாவரைத்தல் முதலிய கைத்தொழில்கள் சிறப்பாக நடந்து வருகின்றன. நாட்டின் பொருளாதாரத்தின் பொருட்டு ஸ்ரீ நேருவின் தலைமையின்கீழ் தேசீய திட்டக்குழு 1939-ல் இந்திய தேசீய காங்கிரஸ் சபையால் ஏற்படுத்தப்பட்டது. விவசாயம், நெசவு, மரவேலை, உலோகத்தொழில், தோல்வேலை, குயத்தொழில், இரசாயனத் தொழில், பண்ணைத் தொழில் முதலியவற்றின் சம்பந்தமான குடிசைத் தொழில்களை வளர்க்கவேண்டிய அவசியத்தை அக் குழுவினர் அறிவுறுத்தியுள்ளனர். தற்போது நமது அரசாங்கம் குடிசைத்தொழில் வளர்ச்சியில் பேரூக்கங் காட்டி வருகிறது. நம் நாட்டுக் குடிசைத் தொழில்களைக் கவனிக்க குடிசைத் தொழில் போர்டு ஒன்று யூனியன் அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ளது. 1952-ல் அகில இந்திய கைத்தறி நெசவுத்தொழில் போர்டும் (All-India Handloom Industry Board), அகில இந்திய கைத்தொழில் போர்டும்

(All-India Handicrafts Board) நிறுவப்பட்டுள்ளன. 1953-ல் பம்பாயில் மத்திய அரசாங்கத்தால் அகில இந்திய காதி கிராம கைத்தொழில்கள் போர்டு நிறுவப்பட்டுள்ளது. (All-India Khadi and Village Industries Commission). சிற்றளவைத் தொழில் போர்டு (Small Scale Industries Board) 1955-ல் நிறுவப்பட்டுள்ளது.

**நம் நாட்டின் சில முக்கிய குடிசைத் தொழில்கள் :** காய்கறி பயிரிடுதல், நெசவுத் தொழில், வெல்லங் காய்ச்சுதல், கோழி வளர்த்தல், மரவேலை செய்தல், தேனீ வளர்த்தல், ஜவ்வரிசி தயார்செய்தல், கற்பலகை செய்தல், பட்டுப் பூச்சி வளர்த்தல், உலோகங்களால் செய்யப்படும் சிறு சாமான்கள், மிருகக் கொம்புகள், தந்தம் ஆகியவைகளால் செய்யப்படும் சாமான்கள் போன்ற சில முக்கிய தொழில்கள் நம் நாட்டில் பலவிடங்களிலும் நடைபெற்று வருகின்றன. நம் நாட்டில் குடிசைத்தொழில் எவ்வளவுக் கெவ்வளவு முன்னேற்றம் அடைகிறதோ அவ்வளவிற்கு நம் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரமும் உயரும் என்பதில் ஐயமில்லை.

## பகுதி 4

**கிராமப் புனரமைப்பும், பொருளாதாரமும் :** நம் நாடு சிறப்பாக பல கிராமங்களைக் கொண்டு விளங்கும் நாடாகும் ; கிராமங்களின் செழுமையே நம் நாட்டுச் செழுமைக்கு வித்தாகும். எனவே, நம் நாடு சுதந்திரம் பெற்றதும் நம் அரசாங்கத்தினர் கிராமத்தை நன்னிலைக்குக் கொண்டு வருவதையே தம் முதற் பணியாய்க் கொண்டுள்ளனர். "இந்தியா, கிராமங்களில் வாழ்ந்து வருகிறது" என்பது பழமொழியாய் விளங்கி வருகிறது. நம் நாட்டு மக்களில் 83 சதவீதம் கிராமங்களில் வாழ்கின்றனர். இங்கிலாந்தில் ஐவருள் நால்வர் பட்டணங்களில் வாழ, நம் நாட்டில் பதின்மரில் எண்மர் கிராமங்களில் வாழ்கின்றனர். நம் நாட்டுக்




படம் 28.

கிராமங்கள் சுமார் இரு நூற்றுண்டுகளாக ஆட்சி புரிந்த ஆங்கிலேயர் ஆட்சியிலே சீர்கேடுற்றன. எனவே, நம் நாட்டுக் கிராமங்களின் புனரமைப்பு எளிதன்று. பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், ஒழுக்கம் முதலிய துறைகளில் நம் கிராமங்கள் முன்னேறவேண்டும்.

நமது அரசாங்கம் தற்போது கிராம முன்னேற்றத்தைக் கருதிப் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. கிராமங்கள்தோறும் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன; சுகாதாரம், மருத்துவ உதவி, கல்வி, குடிநீர் வசதி, வீட்டு வசதி முதலிய நலன்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. மின்சாரத்தினுல் ஏற்படும் பயன்களும், வானொலி வசதிகளும் கிராமங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. கிராமங்கள் தோறும் தபாலாபீசுகளை நிறுவ அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகின்றது. கிராம உயர் கல்லூரிகளை அரசாங்கம் ஏற்படுத்தக் கருதியுள்ளமை மிகவும் போற்றத் தக்கதாகும். சென்னை ராஜ்ஜியத்தில் கிராமப் புனரமைப்பின் பொருட்டுப் பிர்க்கா அபிவிருத்தி இலாக்கா ஒன்று ஏற்பட்டுள்ளது. இதன் சேவை பாராட்டத் தக்கது. கிராம முன்னேற்றத்தைக் கருதி நமது யூனியன் அரசாங்கம் ரூ. 40 கோடி செலவில் வகுத்துள்ள சமுதாயத் திட்டங்கள் மிகப்போற்றத் தக்கனவாம்.

கிராம முன்னேற்றத்திற்குரிய முக்கிய விஷயங்கள் கீழ்க் கண்டவையாகும்:— 1. சுகாதாரமான சரி விகித உணவை கிராமவாசிகள் உண்ணும்படி செய்தல். 2. கிராம வாசிகள் ஆடைகட்குக் குறைவின்றி வாழும்படி செய்தல். 3. கிராமவாசிகள் அனைவருக்கும் வீட்டுவசதி அளித்தல், 4. கிராமச் சிறுவர் சிறுமியர்கட்குக் கட்டாய இலவசக் கல்வி அளித்தல். 5. கிராம முதியோர்கள் அனைவரும் எழுதப் படிக்க அறியும்படி செய்தல். 6. கிராமங்கட்கு மருத்துவ வசதி அளித்தல். 7. கிராமங்களில் பாங்கி, தபால், இன்ஷ்யூரன்ஸ் முதலிய பொது வசதிகள் ஏற்படும்

படிச் செய்தல். 8. விளையாட்டு வசதிகள், விவசாயம், கைத் தொழில்கள் முதலியன வளரும்படி செய்தல். 9. கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுதல்.

கிராமவாசிகள் தங்களது பழைய மனோநிலையை மாற்றிக்கொள்ளும்படி செய்ய பொதுமக்களின் அன்பும், ஊக்கமும், பேராதரவும் வேண்டற்பாலது. கிராமவாசிகளின் முன்னேற்றத்திற்குப் பொதுமக்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தல் வேண்டும். இடைவிடாத பிரசாரத்தின் மூலமாக அன்றிப் பலாத்காரத்தினால் கிராமவாசிகளின் பிற்போக்கான நிலையை உயர்த்தல் இயலாது. கிராம முன்னேற்றத்தின் பொருட்டு ராமகிருஷ்ண சேவா சங்கம், ஆரிய சமாஜம், தக்ஷிண கல்விச் சங்கம், இளங் கிறிஸ்தவ ஆண்களின் சங்கம் முதலிய பொது ஸ்தாபனங்கள் ஆற்றிவரும் தொண்டு மிகவும் போற்றுதற்குரியதாகும்.

கிராமப் பொருளாதாரம்: கிராமப் பொருளாதாரம் நன்னிலை எய்தினாலன்றிக் கிராமங்கள் சீர் பெறுதல் இல்லை. இன்று நம் கிராமங்களின் பொருளாதார நிலை மிகச் சீர்கேடாக உள்ளது. கிராம விவசாயிகட்குக் கிடைக்கும் ஊதியம் போதியதன்று. இங்கிலாந்தில் ஒரு விவசாயியின் சராசரி வருமானம் ஆண்டுக்குச் சுமார் £ 100 ஆக இருக்க, நம் கிராம விவசாயியின் வருமானம் சராசரி ஆண்டுக்கு ரூ. 42-க்கும் (சுமார் £ 3) குறைவாக உள்ளது. அவன் பயிரிடும் நிலம் போதிய வருவாயற்ற சிறு துண்டே ஆகும். பற்றுக் குறையைப் போக்கத் துணைத்தொழில்களும் நம் கிராம விவசாயிகட்கில்லை. நிலச் சம்பந்தமான வீண் கோர்ட்டு விவகாரங்களினாலும், வீண் ஆடம்பரச் செலவுகளினாலும் பல துயரங்களுக்கு அவர்கள் ஆளாகின்றனர். சராசரியில் ஒவ்வொரு கிராம விவசாயியும் சமயச் சமூகச் சடங்குகளுக்காகத் தனது வருஷ வருமானத்தில் $\frac{1}{14}$ பாகம் செலவு செய்கிறான். கொடுங்

கடன் சுமையினுல் அவர்கள் வறுமைக்கு இரையாகிப் பல இன்னல்களினுல் வருந்துகின்றனர். எனவே, அவர்களின் பொருளாதார நிலையை விரைவில் சீர்திருத்தல் முக்கியமாகும்.

கிராம விவசாயிகள் எளிதில் உதவிபெறக் கூட்டுறவுச் சங்கங்களும், நில அடமான பாங்கிகளும் நிறுவப்பட்டு வருகின்றன. கி. பி. 1937-ல் ஏற்பட்ட காங்கிரஸ் மாகாண மந்திரி சபைகள், கிராம விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கக் கடன் நிவாரண மசோதாவையும், கொடும் வட்டித் தடை மசோதாவையும் நிறைவேற்றினர்; அன்றியும் குடிவாரச் சீர்திருத்தமும் இயற்றப்பட்டது. காந்தியடிகள் கிராமவாசிகளின் பொருளாதார முன்னேற்றத்தைக் கருதிக் கிராமச் சூழ்நிலைக்கேற்றவாறு தொழில் அடிப்படைக் கல்வித்திட்டம் ஒன்று ஏற்படல் வேண்டும் என்றும், கிராமவாசிகள் தங்கள் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளக் கைராட்டினத்தில் நூல்நூற்றல், ஆடை நெய்தல், காய்கறி பயிரிடல் முதலிய குடிசைத் தொழில்களைப் பின்பற்றவேண்டுமென்றும், அவர்கள் பண்டங்களைப் பாழாக்காமல் சிக்கன முறையைக் கையாளவேண்டு மென்றும், அவர்கள் ஆடம்பரச் செலவுகளை ஒழிக்கவேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறியுள்ளார். தற்போது ஒவ்வொரு ஸ்டேட் அரசாங்கமும் கிராமப் பொருளாதாரம் நன்னிலை எய்திட விவசாயத்தை ஊக்கவும், குடிசைத் தொழில்களைப் பெருக்கவும், கிராம விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பல திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. கிராமப் பொருளாதாரம் முன்னேறினுலொழிய நாட்டுப் பொருளாதார நிலையும், மக்கள் வாழ்க்கைத்தரமும் உயர்தல் இல்லை.

### பயிற்சி

I. *இந்தியாவின் பண்டைக் கைத்தொழில்களுள் நான்கினைக் குறிப்பிடுக. நம் பண்டைக் கைத்தொழில்-*

கள் அழிந்ததற்கு ஏதேனும் மூன்று காரணங்களைக் கூறுக.

2. சுதேசி இயக்கம் எப்பொழுது, எப்படித் தோன்றியது? அதன் முக்கிய விளைவுகள் யாவை?

3. காதி இயக்கம் தோன்றக் காரணம் யாவர்? அதன் நோக்கம் யாது? அதன் முக்கிய நன்மைகளைக் குறிப்பிடுக.

4. குடிசைத் தொழில்கள் என்பவை யாவை? அவை புதுப்பிக்கப்பட வேண்டியதின் முக்கிய காரணங்கள் என்ன? நம் நாட்டின் முக்கிய குடிசைத் தொழில்களுள் ஏதேனும் நான்கினைக் குறிப்பிடுக.

5. கிராம முன்னேற்றத்திற்குரிய முக்கிய விஷயங்கள் யாவை? அதனைக் கருதி அரசாங்கம் செய்துவரும் ஏற்பாடுகளுள் சிலவற்றைக் குறிப்பிடுக.

6. நம் கிராமப் பொருளாதாரம் சீர்கெட்டிருக்க ஏதேனும் மூன்று காரணங்களைக் கூறுக. கிராமப் பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றிக் காந்தியடிகள் வற்புறுத்திக் கூறியது யாது? கிராமப் பொருளாதார முன்னேற்றத்தின் அவசியம் யாது?

7. உங்களுக் கருகிலுள்ள கிராமங்களில் நடக்கும் குடிசைக் கைத்தொழில்களையும், கிராம முன்னேற்றப் பரிசோதனைகளையும் கவனித்திடுக.

# அத்தியாயம் 18

## நம் நாட்டு ஆக்கத் தொழில்

### பகுதி 1

#### மேனாட்டுச் செய்தொழில் முறைகள் நம் நாட்டில் பரவுதல்

சென்ற நூற்றாண்டு மத்தியிற்றான் நம் நாட்டிலும் இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சி தோன்றலாயிற்று. அப்போது நம் நாட்டுச் செய்தொழில்களுள் இரு முக்கிய தொழில்கள் தோன்றலாயின. அவை பம்பாயில் தோன்றிய பருத்தி ஆலைத்தொழில் ஸ்தாபனமும், வங்காளத்தில் தோன்றிய சணல் ஆலைத்தொழில் ஸ்தாபனமும் ஆகும். பம்பாயில் பருத்தி ஆலைத்தொழில் இந்திய மூலதனத்தினாலும் முயற்சியினாலும் தோன்றி வளர்ந்தது. ஆனால், வங்காளத்தில் சணல் ஆலைத்தொழில் ஐரோப்பிய மூலதனத்தினாலும் முயற்சியினாலுமே தோன்றி வளர்ந்தது. நாளடைவில் தொழிற்புரட்சி நம் நாட்டில் பரவத் தொடங்கியது.

இந் நூற்றாண்டு ஆரம்பத்தில் 1905-ஆம் ஆண்டு தோன்றிய சுதேசி இயக்கத்தின் விளைவாக நம் நாட்டில் பல சுரங்கத் தொழிற்சாலைகளும் பிற தொழிற்சாலைகளும் ஏற்படலாயின. சிறிய எந்திரங்களைப் பயன்படுத்தும் முறை நம் நாட்டில் பரவலாயிற்று. மேனாடுகளைப்போல் எந்திர சக்தியை வாழ்க்கையில் பல வகையில் பயன்படுத்தும் அவா நம் நாட்டிலும் உண்டாயிற்று. கர்ஸன் பிரபு இராஜப் பிரதிநிதியாக இருந்தபோது 1905-ல் வாணிபக் கைத்தொழில் இலாக்கா ஒன்று அவரால் நிறுவப்பட்டது. கி. பி. 1914-18-ல் ஏற்பட்ட முதல் உலகப்போர் நம் செய்தொழில்களைப் பெரிதும் ஊக்கியது; சிறப்பாகப் பருத்தி, சணல், இரும்பு, எஃகு, தோல் முதலிய தொழில்கள் பெரிதும் வளர்ச்சியுற்றன. 1916-ல் நம் நாட்டுத் தொழிற் வளர்ச்சியை ஆராய மத்திய அரசாங்கத்தாரால் தொழில் கமிஷன் ஒன்று

நிறுவப்பட்டது. 1918-ல் தன் அறிக்கையில் இந்தியாவின் சுயதேவைப் பூர்த்தியின் பொருட்டு அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்றும், ரசாயனத் தொழிலில் நுட்ப அறிவு வளர்க்கப்படல் வேண்டும் என்றும், மாகாணத் தொழில் போர்டுகள் ஏற்படல் வேண்டும் என்றும் அது வற்புறுத்திக் கூறியது. முதல் உலகப்போர் முடிந்ததும் எல்லா மாகாணங்களிலும் தொழில் இலாக்காக்கள் ஏற்பட்டன. 1924 முதல் தொழில்கள் அரசாங்கப் பாதுகாப்பைப் பெறலாயின. அதனுல் நாட்டுத் தொழில்கள் ஓங்கி வளரலாயின. 1932-க்குப் பின்னர் நிலக்கரி தவிர, பிற தொழிலுற்பத்திகள் யாவும் மிகவும் மல்கின. இரண்டாம் உலகப்போர் நமது தொழில் வளர்ச்சியை மேலும் நன்கு ஊக்கிவிட்டது. தற்போது நம் நாடு உலகத் தொழில் நாடுகளுள் ஏழாவதாக விளங்குகிறது. இங்ஙனம் சுதேசி இயக்கம், அரசாங்க ஆதரவு, மலிந்த அயல்நாட்டு எந்திரங்கள், இரு உலகப் போர்கள் முதலியன நம் நாட்டு ஆக்கத் தொழில் வளர்ச்சிக்குச் சிறந்த காரணங்களாய் இருந்தன.

## பகுதி 2

### சில முக்கிய ஆக்கத் தொழில்களின் வளர்ச்சி

பருத்தி ஆலைத் தொழில்: நம் நாட்டுப் பெரிய செய்தொழில்களுள் மிகவும் முக்கியமானது பருத்தி ஆலைத் தொழிலாம். பருத்தி ஆலை முதன் முதலில் கி. பி. 1818-ல் கல்கத்தாவுக்கு அருகில் ஹூக்ளி நதிக்கரையிலுள்ள கூஸோரி (Ghoosery) என்னுமிடத்தில் நிறுவப்பட்டது. 1854-ல் பம்பாயில் பருத்தி ஆலை ஒன்று நிறுவப்பட்டது. அது முதற்கொண்டு உத்தரப் பிரதேசம், வங்காளம் முதலிய இடங்களில் பருத்தி ஆலைகள் பல ஏற்பட்ட போதிலும் பம்பாய் நகரமே இந்தியாவில் பருத்தி ஆலைத் தொழிலில் தனிச் சிறப்பும் முதன்மையும் பெறலாயிற்று. இந்தியரின் மூலதனத்தினுலும், முயற்சியினுலும் பம்பாயில் பல பருத்தி ஆலைகள் விரைவாகத் தோன்றலாயின.

தொடக்கத்திலிருந்தே நம் பருத்தி ஆலைகள் இங்கிலாந்தின் லங்காஷயர் பருத்தி ஆலையாளரின் பகையை எதிர்க்க வேண்டி நேர்ந்தன. 1905-ல் சுதேசி இயக்கமும், முதல் உலகப்போரும், 1927 முதல் பருத்தி நூல் இறக்குமதிகளின் மீதும், 1931 முதல் பருத்தியாடைகளின் இறக்குமதியின் மீதும் அரசாங்கத்தார் விதித்த காப்பு வரிகளும் நம் நாட்டுப் பருத்தித் தொழில் வளர்ச்சியைப் பெரிதும் ஊக்கின. இன்று நம் நாட்டுப் பருத்தி ஆலைகள் 165 கோடி பவுண்டு பருத்தி நூல்களையும், 509 கோடி கஜம் நீளம் பருத்தித் துணியையும் உற்பத்தி செய்கின்றன. நம் நாட்டு மக்களுக்குச் சராசரியில் 14 கஜம் துணி கிடைக்க அவை உதவுகின்றன. 60 கோடி ரூபாய் நிலையாக மூலதனமும், 100 கோடி ரூபாய்க்கு மேற்கொண்டே உற்பத்தி மூலதனத்தையுங் கொண்டு பருத்தித் தொழிலே நம் நாட்டில் மிக்க விரிவாக நடக்கும் பெரிய தொழிலாக விளங்கி வருகிறது. எட்டு லட்சம் தொழிலாளர்களுக்குமேல் வேலை செய்து வரும் 484 பருத்தி ஆலைகள் இன்று நம் நாட்டிலுள்ளன; பல ஆலைகள் மேலும் நிறுவப்பட்டு வருகின்றன. பம்பாய் ராஜ்ஜியத்தில் மட்டும் 200 ஆலைகளுக்குமேல் இருக்கின்றன.

நம் நாட்டில் பருத்தி ஆலைகள் உள்ள முக்கிய இடங்கள் பம்பாய், ஆமதாபாத், பூனா, ஷோலாப்பூர், டில்லி, கான்-பூர், மீரட், கல்கத்தா, நாகபுரி, ஹுப்லி, கோயம்புத்தூர், மதுரை, பாபநாசம், தூத்துக்குடி முதலியனவாம். பருத்தி ஆலைகளுள் பாதிக்குமேல் பம்பாய் ராஜ்ஜியத்திலேயுள்ளன; பம்பாய் நகரில் 65 ஆலைகள் உள்ளன. இதை இந்தியாவின் மான்செஸ்டர் என்று கூறுதல் மிகையன்று. பருத்தித் தொழில் ரசாயனசாலை பம்பாயில் நிறுவப்பட்டுள்ளது. ஆமதாபாத்தில் 74 ஆலைகள் உள்ளன. ஆனால், பம்பாயில் தான் தறிகள் அதிகமாக உள்ளன. பருத்தித் தொழில் வளர்ச்சியினால் அன்னிய நாட்டுப் பருத்தியாடை இறக்கு

மதி மிகவும் குறைந்துள்ளது; அன்றியும் நம் நாட்டுப் பருத்தி நூல்களும் ஆடைகளும் அதிகமாக ஏற்றுமதி ஆகி வருகின்றன.

சணற் தொழில்: இங்குப் பருத்தித் தொழிலுக்கு அடுத்துச் சிறப்பாக விளங்குவது சணல் தொழிலாகும். கி. பி. 1855-ல் வங்காளத்தில் சிராம்பூருக்கருகில் உள்ள ரிஷ்ராவில் முதற் சணற்றொழிற்சாலை ஏற்பட்டது. முதல் 30 ஆண்டுகள் வரை சணற்றொழில் வளர்ச்சி மந்தமாக இருந்தது. பின்னர் அது விரைவாக முன்னேறத் தொடங்கியது. முதல் உலகப்போரின் விளைவாக சணற் பைகளும், சணற் பாய்களும் இராணுவ அலுவல்களுக்கு மிகுதியும் வேண்டியிருந்தமையால் நம் சணற்றொழில் மிக்க முன்னேற்றம் அடைந்தது. இரண்டாம் உலகப்போர் அவ் வளர்ச்சியை மேலும் ஊக்கியது.

சணற்றொழில் ஆலைகள் பல சிறப்பாகக் கல்கத்தாவிலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசத்திலும் ஹூக்ளிக் கரையில் ஏற்பட்டுள்ளன. கல்கத்தாவைச் சேர்ந்த டம்டம் சணல் ஆலைகளுக்குப் பெயர் பெற்றது. இவ்வாலைகள் பல ஐரோப்பிய மூலதனத்தினால் ஏற்பட்டு அவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. சணற்றொழில் நாட்டில் நன்கு அமைக்கப்பட்டு நடந்துவரும் தொழிலாம்; மிக்க வளமானதும் நல்ல ஊதியந் தருவதும் இதுவே. இத்தொழிலில் உலகிலேயே நம் நாடுதான் தனிச்செங்கோல் ஓச்சி வருகிறது. நம்நாட்டு ஏற்றுமதிப் பொருள்களுள் சணலால் செய்த பொருள்களே மிகுதியாய் உள்ளன. 3 லட்சம் தொழிலாளர்கள் 112 ஆலைகளில் தொழில் செய்துவருகின்றனர். நாட்டுப் பிரிவினையால் சணற் றொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. 112 ஆலைகளுள் 110 ஆலைகள் நம் யூனியனைச் சார்ந்த மேற்கு வங்காளத்தி லிருக்க, சணல் பயிராகுமிடங்கள் பெருவாரியாகக் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ளன. சணற்

பயிரை நம் நாட்டில் அதிகமாய் வளர்க்க யூனியன் அரசாங்கம் தீவிர முயற்சி செய்து வருகிறது.

**இரும்பு, எஃகுத் தொழில் :** நம் நாட்டில் பெருகிவருவதும் எதிர்காலத்தில் நன்கு சிறந்து விளங்கக்கூடியதுமான மிகப் பெரிய தொழில் இரும்பு, எஃகுத் தொழிலாகும். இது நம் நாட்டின் அடிப்படைத் தொழில்களுள் மிகவும் முக்கியமானது. கி. பி. 1874-ல் வங்காளத்தில் பாராக்கர் எனுமிடத்தில் முதற்கண் இரும்புத் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டது. பின்னர், 1889-ல் வங்காள இரும்பு, எஃகுக் கம்பெனி ஏற்பட்டது. அடுத்தபடி இத்தொழில் வளர்ச்சி திரு. ஜே. என். டாடா என்பவரின் பெயருடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இப்பெரியாரின் முயற்சியால் 1907-ல் பீகார் ராஜ்ஜியத்தில் சிங்பும் ஜில்லாவில் ஜம்ஷட்பூர் என்னும் இடத்தில் இரும்பு, எஃகுத் தொழிற்சாலை ஏற்பட்டது. இதுவே டாடாநகர் ஆகும். இதன் பின்னர் வங்காளத்தில் அசன்சாலில் வங்காள எஃகுக் கார்ப்பரேஷனால் ஒரு இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டது, முதல் உலகப்போரும், 1920 முதற்கொண்டு ஏற்பட்ட அரசாங்கப் பாதுகாப்பும் இத்தொழில் வளர்ச்சியைப் பெரிதும் ஊக்கின. விரைவில் சிறு முயற்சியிலிருந்து இந்தியா 2-ஆம் உலகப் போருக்கு முன் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் மிகப் பெரிய 2-ஆம் இரும்பு, எஃகுத் உற்பத்தி நாடாக விளங்கலாயிற்று. 2-ஆம் உலகப் போரின் காரணமாக இத்தொழில் வியக்கத்தக்க வளர்ச்சியுற்றது.

நம் நாட்டில் நிலக்கரிச் சுரங்கங்களை அடுத்து உயர்ந்த ரக இரும்புத் தாதுக்கனிகள் உள்ள சிங்பும் ஜில்லாவில் இத்தொழில் சிறப்பாக வளர்ச்சியுற்றது. மைசூரில் உயர்ந்த ரக இரும்புத்தாது இருப்பதால் பத்திராவதியில் இரும்பு, எஃகு தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஆனால், அங்கு நிலக்கரி இல்லாமையால் இத்தொழில் வளர்ச்சியுற வில்லை. தற்போது ஜோக் ஜல மின்சக்தித் திட்டத்தினால்

இத்தொழில் இனி வளர்ச்சியுறும். இது மைசூர் அரசாங்கத் தாரால் நடத்தப்படுகிறது.

நம் நாட்டிலுள்ள இரும்பு, எஃகுத் தொழில் ஸ்தாபனங்கள் டாடா நகரிலுள்ள டாடா இரும்புக் கம்பெனி, ஹிராப்பூர், பர்ன்பூர், குல்டி முதலிய இடங்களிலுள்ள இந்திய இரும்பு, எஃகுத் தொழில் கம்பெனி, பத்திராவதியிலுள்ள மைசூர் இரும்பு, எஃகுத் தொழில் வேலைகளுமாம். இதுகாறும் மேற்கு வங்காளத்தில் தனித்தனியே விளங்கிய வங்காள எஃகுக் கார்ப்பொரேஷனும் இரும்புத்தொழில் எஃகுக் கம்பெனியும் 1953 ஆரம்ப முதல் இந்திய இரும்பு, எஃகுத் தொழில் கம்பெனி எனும் பெயரால் ஒன்ருக இணைந்துள்ளன. உலகத்திலுள்ள மிகப் பெரிய இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகளுள் ஜம்ஷெட்பூர் தொழிற்சாலை ஒன்ருகவும், ஆசியாவில் தலை சிறந்ததாகவும் விளங்கி வருகின்றது. இங்குச் சிறிய ஊசி முதற்கொண்டு பெரிய தூலங்கள் வரை தயார் செய்யப்படுவதுடன் எஃகுத் தொட்டிகள், தகரத் தகடுகள், எனுமல் சாமான்கள், கம்பிகள், திருகாணிகள், ரயில்வாகன்கள், பிற தொழில்களுக்கு வேண்டிய எந்திர வகைகள், இரும்புத் தகடுகள் இன்னேரன்ன பிறவும் தயாரிக்கப்படுகின்றன. இரும்பு, எஃகு உற்பத்தியைப் பெருக்க நமது அரசாங்கம் ஆண்டிற்கு 10 லட்சம் டன்களுக்கு மேலும் பெற வேண்டி, ஒரிஸ்ஸாவில் ரூர்கேலாவிலும், மத்தியப் பிரதேசத்தில் பிலாயிலும், மேற்கு வங்காளத்தில் துர்காபூரிலும் பீஹாரில் பொகாரோவிலும் புதிய தொழிற்சாலைகள் நிறுவத் திட்டமிட்டுள்ளது.

மேற்கூறிய முப்பெருந் தொழில்கள் அன்றிச் சர்க்கரை, காகிதம், கண்ணடி, தீப்பெட்டி செய்தல் முதலிய தொழில்களும் வளர்ந்து வருகின்றன. நம் நாட்டில் சர்க்கரைத் தொழில் நெசவுத்தொழிலுக்கு அடுத்த மிகப் பெரிய தொழில்களுள் ஒன்ருக உள்ளது. இத் தொழில் 1932 முதல் அரசாங்கப் பாதுகாப்பினுல் வளர்ச்சியுற்று வந்துள்ளது.



படம் 29. ஜம்ஷெட்பூர், டாடா இரும்பு, எஃகுத்தொழிற்சாலை.

இத்தொழில் உத்தரப் பிரதேசம், பீஹார் ராஜ்ஜியங்களில் பல இடங்களிலும், ஆந்திரப் பிரதேசத்தில் உய்யூர், சாமல் கோட்டை முதலிய சில இடங்களிலும், சென்னை ராஜ்ஜியத்தில் நெல்லிக்குப்பம், புகளூர், மேல்பட்டி, பாண்டிய ராஜபுரம் (மதுரை), திருவண்ணுமலை, நாமக்கல், பட்டவாத்தலை, திருவாரூர் முதலிய இடங்களிலும் நடைபெறுகின்றது. நம் நாட்டுச் சர்க்கரை உற்பத்தியில் 70% உத்தரப் பிரதேசத்திலும், பீஹார் ராஜ்ஜியத்திலும் கிடைக்கிறது. நம் நாடு கரும்பு உற்பத்தியில் தற்சமயம் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிலையிலுள்ளது. 1956-57-ல் நம் நாட்டில் 670 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப் பட்டது.

காகிதத் தொழில் சிறப்பாக டிட்டாகர் (மேற்கு வங்காளம்), லட்சுமணபுரி, பூனு, ராஜமகேந்திரம், ஹைதரா பாத் முதலிய இடங்களில் நடந்து வருகின்றது. 1956-ல், 1,93,404 டன்கள் காகிதம் உற்பத்தி செய்யப்பட்டது. கண்ணுடித் தொழில் சிறப்பாக உத்தரப் பிரதேசத்திலும், கல்கத்தா, பம்பாய், பெல்காம், மைசூர் ராஜ்ஜியம் முதலிய இடங்களிலும் நடக்கிறது. நம் நாட்டில் 225 கண்ணுடித் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றுள் வங்காளத்தில் 34-ம், உத்தரப் பிரதேசத்தில் 24-ம், சென்னையில் 10-ம் உள்ளன. உத்தரப் பிரதேசத்தில் பிரோஜபாத் என்னும் மிடத்தில் வளையல் தயார் செய்யும் தொழிற்சாலைகள் 86 உள்ளன. கல்கத்தாவில் கண்ணுடித் தொழில் ஆராய்ச்சி நிலையம் ஒன்று உள்ளது. தீக்குச்சித் தொழில் மேற்கு வங்காளத்திலும், சென்னையிலும் சிறப்பாக நடந்து வருகிறது. இந்திய யூனியனில் தீக்குச்சித் தொழில் மிக விசேஷமாக நடைபெறும் ராஜ்ஜியம் மேற்கு வங்காளமாகும். செயற்கைப் பட்டுவேலை (Rayon) திருவாங்கூரிலும், பம்பாயிலும் (Kalyan), ஹைதராபாத்திலும், குவாலியரிலும் நடைபெறுகிறது.

நம் நாட்டுச் சுரங்கச் சாதனங்கள்




படம். 30. தாதுப் பொருள்கள்.

## பகுதி 3

நிலக்கரி முதலிய பிற சுரங்கச் செல்வப் பொருள்களுள் அவற்றின் பயன்களும்:

நிலக்கரி: எந்திர சக்தி சாதனங்களுள் மிக முக்கிய மான நீராவி சக்தியைக் கொடுப்பது நிலக்கரியே ஆகும்.

இரும்பை உருக்கவும், சுத்தம் செய்யவும், எஃகு செய்யவும், வேறு ரசாயனப் பொருள்கள் செய்யவும் இது பெரிதும் பயன்படும். நம் நாட்டில் கிடைக்கும் நிலக்கரியில் 82% பீஹாரிலும், வங்காளத்திலும் (தாமோதர் நதிப் பள்ளத் தாக்கில்) கிடைக்கிறது. உலக நிலக்கரி உற்பத்தியில் நம் நாடு எட்டாவது தானத்தை வகிக்கின்றது.

**இரும்பு** : உயர்ந்த இரும்புத் தாது நம் நாட்டில் கிடைக் கிறது. இரும்புத் தாது உள்ள இடங்கள் ஒரிஸ்ஸா, பீஹார், மைசூர், சேலம், சாந்தூர் முதலியனவாகும்.

**பாக்ஸைட்** : இது அலுமினியம் செய்ய உதவும் உலோ கம். பீஹாரிலும், மத்தியப் பிரதேசத்திலும், பம்பாயிலும், காஷ்மீரிலும், இது விசேஷமாகக் கிடைக்கிறது.

**தங்கம்** : இது மைசூர் ராஜ்ஜியத்திலுள்ள கோலாரில் வெட்டி எடுக்கப்படுகிறது. உலகில் வெட்டி எடுக்கும் தங்கத்தில் 2 சதவீதங்கூட நம் நாட்டில் இல்லை.

**மங்கனீசு** : எஃகு செய்ய மிகவும் இது பயன்படுகிறது. மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், பீஹார், ஒரிஸ்ஸா, மைசூர் முதலிய ராஜ்ஜியங்களில் இது மிகுதியாகக் கிடைக் கிறது. உலகில் மங்கனீசு உற்பத்தியில் நம் நாடு மூன் றுவதாக உள்ளது.

**அப்ரகம் (காக்கைப் பொன்)** : பீஹார், இராஜஸ்தானம், ஆந்திரப் பிரதேசம் முதலிய ராஜ்ஜியங்களில் இது விசேஷ மாகக் கிடைக்கிறது.

**வெள்ளை மணல்** : இது கண்ணாடி உற்பத்திக்கு மிகவும் பயன்படுவது ; நம் நாட்டில் பல இடங்களில் கிடைக்கிறது.

**சுண்ணும்புக்கல்** : பஞ்சாப், உத்தரப் பிரதேசம், பீஹார், மத்தியப் பிரதேசம், சென்னை, ஆந்திரப் பிரதேசம் முதலிய பகுதிகளில் இது விசேஷமாக அகப்படுகிறது.

**மோனேசைட்** : இது அருமையான உலோகமாகும். அணுசக்தியை உண்டாக்க இது மிகவும் பயன்படுவதாம்.

திருவாங்கூர், கொச்சி கடற்கரை மணற் பிரதேசத்தில் இது விசேஷமாகக் கிடைக்கிறது. இம்மணற் பிரதேசத்தில் அகப்படும் அபூர்வ தாதுக்களைப் பயன்படுத்த 1952-ல், ஆல்வாயில் (திருவாங்கூர்) அபூர்வ தாது மண் தொழிற்சாலை (Rare Earth Works Factory) ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்டவை யன்றி மண்ணெண்ணெய் (அஸ்ஸாம்—டிக்பாய்), தாமிரம் (பீஹார், ஆந்திரப் பிரதேசம், மைசூர்), சலவைக்கல் (இராஜஸ்தான்),கல் உப்பு (பஞ்சாப்), மாக்னிஸைட் (சேலம்), உல்பிராம் (ஜோதிபுரி), அஸ்பெஸ்டாஸ் (கடப்பை, மைசூர்), உரேனியம் (பம்பாய்க்கு அருகிலுள்ள ட்ராம்பே), பழுப்புக்கரி, (Lignite - சென்னை தென் ஆர்க்காடு ஜில்லா), கந்தகம் (டில்லி, கார்வார், மைசூர், சென்னை), ஈயம், துத்தநாகம், மணற்பாறை, கருங்கல், கற்பலகை, ஸல்பேட், வெடியுப்பு முதலிய கணக்கற்ற சுரங்கப் பொருள்களும் நம் நாட்டில் கிடைக்கின்றன. ட்ராம்பேயிலும், விசாகப்பட்டினத்திலும் மண்ணெண்ணெய் சுத்தம் செய்யும் தொழில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பகுதி 4

நம் நாட்டு ஜல மின்சக்தித் திட்டங்கள்: நமது விவசாயம் கைத்தொழில்கள் முதலியவற்றின் வளர்ச்சிக்கும் நம் நாட்டில் சிறிதளவே கிடைக்கும் நிலக்கரியைச் சேமிக்கவும் நமக்கு மலிவான சக்திச் சாதனம் வேறொன்று வேண்டும். அதுவே நவீன காலத்து ஜல மின்சக்தியாகும். அது மலிவாக இருப்பதுடன், என்றும் வற்றாத சக்தியாம். இதனுதவியால் மிச்சப்படும் நிலக்கரியைத் தேசீய முக்கியத்துவம் வாய்ந்த வேறு அலுவல்களுக்குப் பயனுக்கலாம். நீர்வீழ்ச்சிகள் மூலம், அல்லது ஓடும் நதியை அணையால் தடுத்துப் பின்னர் விரையும் நீர் வேகத்தின் மூலம் மின்சக்தி உண்டாக்கப்படுகிறது. இதன் பயன் எல்லையற்றது. பெரிய தொழிற்சாலைகளில் எந்திரங்களை இயக்கவும், பல்வகைச் சிறு தொழில்-

களை நடத்தவும், விளக்குகள் ஒளிவிடவும், வீட்டு வேலை களுக்கும் இன்னோரன்ன பிறவற்றிற்கும் மின்சாரம் பயன் படுகிறது. எனவே, மின்சாரம் வெள்ளை நிலக்கரி எனும் சிறப்புப் பெயர் பெறுதல் மிகையன்று.

தென்னிந்தியா : (a) பைக்காரா ஜல மின்சக்தித் திட்டம்— இது 1932-ல் நீலகிரி மலையில் பைக்காரா ஆற்றில் நிறுவப் பட்டது. கோயம்புத்தூர், ஈரோடு, நாகப்பட்டினம், திருச்சி-ராப்பள்ளி, மதுரை முதலிய இடங்களுக்கு இச்சக்தி பயன் படுகிறது. (b) மேட்டூர் ஜல மின்சக்தித் திட்டம் — காவிரியாற்றில் சேலம் ஜில்லாவில் மேட்டூர் என்னும் இடத்தில் ஏற்பட் டுள்ளது. இது சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், வட ஆர்க்காடு, சித்தூர் ஜில்லாக்களுக்குப் பயன்படுகிறது. (c) பாபநாசம் ஜல மின்சக்தித் திட்டம் — தாமிரவருணியில் பாபநாசம் என்னுமிடத்தில் இது ஏற்பட்டுள்ளது. இதன் சக்தி திருநெல்வேலி ஜில்லாவிற்குப் பெரிதும் பயன்படு கின்றது. (d) சிவசமுத்திர ஜல மின்சக்தித் திட்டம்—காவிரி, மைசூர் பீடபூமியை விட்டுச் சமவெளியில் இறங்குமிடத் தில் சிவசமுத்திரம் என்னுமிடத்தில் இது ஏற்பட்டுள்ளது. இதன் சக்தி கோலார் தங்கச் சுரங்கங்களுக்கும், மைசூர், பெங்களூர் முதலிய இடங்களுக்கும் பயன்படுகிறது. (e) ஜோக் அல்லது மகாத்துமா காந்தி ஜல மின்சக்தித் திட்டம்— இது மைசூரில் சாராவதி ஆற்றில் ஜோக் அல்லது ஜெர்சொப்பா நீர்வீழ்ச்சியுள்ள இடத்தில் ஏற்பட்டுள்ளது. இது இந்திய யூனியனிலேயே அதிக உயரத்திலிருந்து (960 அடி) விழும் நீர்வீழ்ச்சியாகும். இதன் சக்தி மைசூர் ராஜ்ஜி-யத்தின் பெரும் பகுதிக்கும், பம்பாய், சென்னை ராஜ்ஜியங் களின் சில பகுதிகளுக்கும் பயன்படுகிறது. (f) பள்ளிவாசல் ஜல மின்சக்தித் திட்டம் — இது திருவாங்கூரின் மேற்குக் கரைப் பிரதேசத்திலுள்ள முதிரபுழா ஆற்றில் உள்ளது. (g) மச்சுகண்ட ஜல மின்சக்தித் திட்டம் — விசாகப்பட்டினம் ஒரிஸ்ஸா எல்லையில் ஏற்பட்டுள்ளது. (h) ஷிம்ஷா (மைசூர்).

துங்கபத்திரை (ஆந்திரப் பிரதேசம்), ஹீராகுட் (ஒரிஸ்ஸா), மோயார் (நீலகிரி), பெரியாற் ஜல மின்சக்தித் திட்டங்கள்.

வட இந்தியா: (a) பம்பாயில் டாடா ஜல மின்சக்தித் திட்டம் மிகவும் முக்கியமானது. இது மேற்கு மலைத் தொடர்ச்சிப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ளது. இச் சக்தி பம்பாய் பருத்தி ஆலைகட்கும், பம்பாய் முதல் பூனவரையுள்ள முக்கிய பட்டணங்கட்கும் பயன்படுகிறது. (b) பஞ்சாபில் மாண்டி ஜல மின்சக்தித் திட்டமும், நங்கல் திட்டங்களாகிய கங்குவாலும், கோட்லாவும், அமிர்தசரஸிற்கு அருகிலுள்ள ஒரு திட்டமும் கிழக்குப் பஞ்சாப் பிரதேசங்கட்குப் பயன்படுகின்றன. (c) மேற்கு வங்காளத்தில் டார்ஜிலிங் ஜல மின்சக்தித் திட்டம் முக்கியமான தொன்றாகும். இது நம் நாட்டில் முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும் (1897—1898). (d) கோசி திட்டம் (பீஹார்), தாமோதர் திட்டம், காடிமா (உத்தரப் பிரதேசம்), நீலகிரியில் குந்தா பள்ளத்தாக்குத் திட்டம், மைசூரில் மேகதாதுத் திட்டம் தற்சமயம் வேலை செய்யப்பட்டுவரும் திட்டங்களாவன.

## பகுதி 5

**சிறு தொழில்களும் அவற்றிற்கு ஏற்ற சூழ்நிலைகளும்:** நம் நாட்டில் பலவகைச் சிறு தொழில்கள் நடைபெறுகின்றன. இவை குடிசைத் தொழில்களாகவும், சிறிய தொழிற்சாலைகளில் நடப்பனவாகவும் விளங்கி வருகின்றன. ஆங்காங்கு வாழும் மக்களின் சூழ்நிலைக்கேற்ப பொருள்களைத் தயாரிக்கச் சிறு தொழில்கள் உதவுகின்றன. நுண்ணிய வேலைப்பாடுகளும் சிங்காரங்களும் பொருந்திய அழகிய பொருள்களுக்கு எக்காலத்திலும் எந்நாட்டிலும் தேவை இருந்து கொண்டிருப்பதால் அவை சிறு தொழில் மூலமாகவே செய்தற்குரியன. தொழிற் புரட்சியினுல் குடிசைத் தொழில்களின் அழிவு காரணமாக, வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தும் பெருந் தொழில் மூலமாகவே பெறுதல் முடியாது. தொழிற்

துறையில் மிகவும் முன்னேற்றமுற்ற மேனுடுகளில் சிறு தொழில்கள் வளர்க்கப்பட்டே வருகின்றன. ஜப்பானின் குடிசைத் தொழில் வளர்ச்சி யாவரும் அறிந்ததே. சிறு தொழில்கள் நடத்துவதின் மூலம் வரும் அனுபவம் பெருவித தொழில் நடத்தப் பெரிதும் பயன்படுகிறது. நாட்டின் சிறு தொழில் வளர்ச்சியின் மூலமாகத்தான் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படும். அப்பொழுதுதான் அரசாங்கம் எதிர்பார்க்கும் அதிக உற்பத்தி, மக்கள் அனே வருக்குந் தொழில், சமமான செல்வப் பங்கீடு முதலியன உண்டாதற்கியலும். இந்தியா போன்ற விவசாய நாட்டில் தேசீயப் பொருளாதார முன்னேற்றத்தைக் கருதி கிடைக்கும் வசதிகளைக்கொண்டு இங்கு வாழும் மக்களின் தேவைக்-கேற்றவாறு சிறுவிதத் தொழில்கள் ஏற்படல் வேண்டும். ஆனல், சிறு தொழில்கள் வெற்றிபெற மூலப் பொருள்கள், மலிவான சக்தி, தொழில் நுட்ப ஆலோசனை, தக்க விற்பனை வசதிகள் முதலியன கிடைத்தல் வேண்டும். அவை போட்டியினின்று காக்கப்படல் வேண்டும். தொழி-லாளர்க்கு நவீன முறை கற்பித்தல் வேண்டும். இவ்வாறு வளர்க்கப்படும் தொழில்கள் தனி முயற்சியையும், கூட்டுறவையும் ஊக்குவதுடன் ஆதரவற்றோர்கட்குப் புகலிடமாகவும் உள்ளன.

**நம் நாட்டில் நடக்கும் முக்கிய சிறு தொழில்கள்:** நம் நாட்டில் பழமையான தொழில்களுடன் நவீனச் சிறு தொழில்களுமாகப் பல சிறு தொழில்கள் நடைபெற்று வருகின்றன. பாத்திரங்கள், கண்ணுடிச் சாமான்கள், சிலேட்டு, காகிதம், தீக்குச்சி, ரப்பர் சாமான், சிறிய ரசாயனச் சாமான்கள், பொத்தான்கள், தொப்பி, வெட்டுக்-கருவிகள், மரச்சாமான்கள் செய்தல் முதலியவை நடை-பெறுகின்றன. அன்றியும் பருத்தி, கம்பளி, பட்டுத் தொழில்கள், பிரம்பு வேலை, மூங்கில் வேலை, கயிறு திரித்தல், எண்ணெய் எடுத்தல், சோப்பு செய்தல் பலவும் இங்கு நடந்துவரும் சிறு தொழில்களாகும்.

சிறு தொழில்களின் வளர்ச்சியின் பொருட்டு கைத்தறி நெசவுத் தொழில், கைத்தொழில்கள், காதியும் கிராமக் கைத்தொழில்களும் ஆகிய ஒவ்வொன்றின் அபிவிருத்தியைக் குறித்தும் ஆலோசனை கூறத் தனித் தனியே மூன்று போர்டுகள் யூனியன் அரசாங்கத்தாரால் நிறுவப்பட்டுள்ளன. நம் ராஜ்ஜியத்தில் கிண்டி, புதுச்சேரி, ராஜ-பாளையம், வேலூர் முதலிய இடங்களிலும், கேரளத்தில் கொல்லம், திருச்சூர், எட்டுமானூர் முதலிய இடங்களிலும், லக்ஷத்தீவுகளிலும் சிறுதொழில்கள் அபிவிருத்தி அடைய (Industrial Estates) ஸ்தாபனங்கள் ஏற்பட்டுள்ளன.

நம் நாட்டுச் சிறு தொழில்கள் வெற்றிகரமாக நடக்க ஜப்பானும், சீனுவும் நமக்கு எடுத்துக் காட்டுகளாக உள்ளன. சீனுவிலும், ஜப்பானிலும் குடிசைத் தொழில்கள் விஞ்ஞான முறைப்படி நடைபெறுகின்றன. அங்கு பட்டுப் பூச்சி வளர்த்தல், பட்டு உற்பத்தி, விளையாட்டுச் சாமான்-கள், கண்ணுடிச் சாமான்கள், பீங்கான் சாமான்கள், வர்ணக் காகிதச் சாமான்கள் செய்தல் ஆகிய குடிசைத் தொழில்கள் நல்லமைப்புடன் நடைபெற்று வருகின்றன. அத் தொழில்களுக்கு ஏற்ற நவீன கருவிகளும் தயாரிக்கப் பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. ஜப்பானில் பெருவிதத் தொழில்களும் குடிசைத் தொழில்களுடன் நன்கு இணைக்கப்பட்டுள்ளன. அவை நாட்டின் பொருளாதாரத்திற்கு உயிர் போன்றுள்ளன. பெண்களில் பெரும்பாலோர் அத் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கம் குடி-சைத் தொழில்களைப் பெரிதும் ஆதரித்துப் பலவகையில் ஊக்கி வருகின்றது. 1949-ல் நம் யூனியன் அரசாங்கம், குடிசைத் தொழில் முறைகளை அறிவதற்கும், குடிசைத் தொழிலுக்கு ஏற்ற எந்திரங்களை வாங்கி வருவதற்கும் ஜப்பானுக்கு ஒரு தூதுகோஷ்டியை அனுப்பியது. அதன் விளைவாக ஜப்பானிய முறைப்படி நம் குடிசைத் தொழில் களையும், சிறுவிதத் தொழில்களையும் வளர்க்க அரசாங்கம்

ஏற்பாடுகள் பல செய்து வருகின்றது. ஜப்பானிய நிபுணர்களுள் சிலரையும் அவர்கள் மூலம் பயிற்சிபெற நம் அரசாங்கம் அவர்களை வரவழைத்துள்ளது. நம் நாட்டில் அம்முறைப்படிப் பட்டுநூல் எடுத்தல், பட்டாடை செய்தல், ஜரிகை வேலை, தோல் வேலை, விளையாட்டுச் சாமான்கள், விவசாயக் கருவிகள் முதலியன செய்தற்குரியனவாம்.

### பயிற்சி

1. பருத்தித் தொழில், இரும்பு, எஃகுத் தொழில் ஆகிய இவை சிறப்பாக நடைபெறும் ஒவ்வோரிடத்தைக் குறிப்பிடுக. இத் தொழில்களின் வளர்ச்சிக்கு இரு முக்கிய காரணங்கள் யாவை?
2. நம் நாட்டில் ஜல மின்சக்திக் திட்ட வளர்ச்சிக்கு அவசியம் யாது? நம் ராஜ்ஜியத்திலுள்ள மூன்று முக்கிய ஜல மின்சக்தித் திட்டங்களைக் குறிப்பிட்டு, அவற்றால் பயன் பெறும் பிரதேசங்களையும் கூறுக.
3. நம் நாட்டுச் சுரங்கச் செல்வப் பொருள்களுள் முக்கியமானவற்றைக் குறிப்பிட்டு, அவை கிடைக்கும் இடங்களையும் கூறுக.
4. நம் நாட்டில் சிறிய தொழில்கள் வளர்ச்சியுற வேண்டியதின் அவசியம் யாது? அவற்றின் பொருட்டு மத்திய அரசாங்கத்தாரின் முக்கிய ஏற்பாடுகளைக் குறிப்பிடுக.
5. சீனா, ஜப்பான் - இவற்றின் குடிசைத் தொழில்களின் சிறப்பென்ன? அம்முறைப்படி நம் நாட்டில் வளர்க்கக் கூடிய குடிசைத் தொழில்களைக் குறிப்பிடுக.
6. காலி இடத்தை நிரப்புக :—
   (a) தென்னிந்தியாவில் பருத்தி ஆலைகள் உள்ள இரு முக்கிய இடங்கள்————.
   (b) நமது நாட்டு இரும்பு, எஃகுத் தொழிலுக்குக் காரணமானவர்———.
   (c) திருவாங்கூர் - கொச்சியில் கிடைக்கும் ஒரு அரிய உலோகம்———.

# அத்தியாயம் 19

## நம் தொழில் வளர்ச்சி

பகுதி 1

### காப்பு இயல் முறையும் தடையிலா வர்த்தகமும்

தடையிலா வர்த்தகமும் காப்புவரித் திட்டமும் இன்றைய வியாபார இயல்முறையின் இரு முக்கியாம்சங்களாகும். ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு யாதொரு தடையுமின்றி ஏற்றுமதி இறக்குமதி செய்யும் வாணிபமே தடையிலா வாணிபம் எனப்படுவதாகும். ஏதேனும் ஒரு நாடு இறக்குமதிப் பொருள்மீது வரி விதித்தால், அந்நாடு அதற்கு ஏற்பத் தன் உள்நாட்டுப் பொருள்மீதும் வரி விதிக்கும். இம் முறையால் அயல்நாட்டு வாணிபம் பாதிக்கப்படுவதில்லை. இம்முறை ஒரு நாட்டின் பொருள் பற்றுக் குறையை நீக்கி, மக்களுக்கு மன நிறைவு ஏற்படச் செய்கிறது. பொருள்கள் அதிகமாகவும் மலிவாகவும் கிடைக்கச் செய்கிறது. அன்னிய நாடுகளுடன் வாணிபத்தைப் பெருக்குகிறது. ஆனால், இம்முறையை அனுசரிக்கும் நாட்டின் பொருளாதார நிலை சீர்கெடும். உள்நாட்டுப் பொருள்களின் உற்பத்தி தடைப்படும்; சில தொழில்களின் அழிவும் ஏற்படும்.

சில நாடுகள் உள்நாட்டுத் தொழில்களின் பாதுகாப்பின் பொருட்டு அந்நிய இறக்குமதிப் பொருள்கள்மீது வரிகளை விதிக்கும். இதற்குக் காப்பு இயல் முறை (Protective Policy) என்று பெயர். இங்ஙனம் சரக்கு வரிகள் விதிக்கப்படுவதால் உள்நாட்டுத் தொழில்கள், சிறப்பாக வளரும் பருவத்திலுள்ள தொழில்கள் அரசாங்கத்தாரால் பாதுகாக்கப்பட்டு ஆதரிக்கப்படுகின்றன.

19-ஆம் நூற்றாண்டில் தடையிலா வர்த்தக முறையைப் பின்பற்றிவந்த ஆங்கில அரசாங்கத்தின் கட்டளைப்-

படி இந்திய அரசாங்கமும் முதல் உலகப் போர் வரை தடையிலா வர்த்தகத்தையே பின்பற்றி வந்தது. தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் அடைந்த இங்கிலாந்திற்கும் அம்முறை பெரிதும் சாதகமாயிருந்தது. ஆனால், அப் பொழுதுதான் பச்சிளங் குழந்தைப் பருவத்திலிருந்த இந்தியத் தொழில்களுக்கு அது பெருங் கேடாயிருந்தது. அந்நியரின் போட்டியால் நம் தொழில்கள் அழிந்துவிடும் போலிருந்தன. அங்ஙிலேயில் கி. பி. 1921-ல் இந்திய ராஜாங்க சபை உள்நாட்டுத் தொழில்களின் பாதுகாப்பிற்காக அந்நிய இறக்குமதிப் பொருள்களின்மீது வரி விதிக்கப்படல் :வேண்டுமென்று தீர்மானித்தது. அத் தீர்மானம் இந்திய மந்திரியால் ஒப்புக்கொள்ளப்படவே வரியைப் பற்றிய இந்தியக் கமிஷன் (Indian Fiscal Commission) ஒன்று நிறுவப்பட்டது. அக் கமிஷன் இந்தியாவின் தொழில் வளர்ச்சி, அதன் ஜனத்தொகை அளவிற்கேற்றவாறு இல்லை என்று உணர்ந்ததால், இந்தியத் தொழில் வளர்ச்சியின் பொருட்டு விவேகக் காப்பு இயல்பு முறையை (Discriminating Protection) அரசாங்கம் பின்பற்றவேண்டும் என்று சிபார்சு செய்தது. இதனை 1923-ல் இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. வளர்ச்சியுறும் தகுதியான இந்தியத் தொழில்களுக்கு அந்நியத் தொழில் போட்டியினின்று பாதுகாப்பு அளிக்கும். அரசாங்கத்தின் இப் புதிய கொள்கை விவேகக் காப்பு முறை என்று அழைக்கப்பட்டது. ஆனால், இப் பாதுகாப்பு சில நிபந்தனைகட்கு உட்பட்டு அளிக்கப் பட்டது. பாதுகாப்புப் பெருந்தொழில், வேண்டிய மூலப் பொருள்கள், மலிவான சக்தி சாதனத்துடன் கூடிய தொழில் சாதனம், விற்பனைக்குரிய உள்நாட்டுச் சந்தை முதலிய சௌகரியங்கள் பெற்றிருத்தல் வேண்டும். அதன் வளர்ச்சிக்குப் பாதுகாப்பு அவசியம் உள்ளதாக இருத்தல் வேண்டும். அது இறுதியில் பாதுகாப்பின் உதவியின்றி உலகப் போட்டியை எதிர்க்கக் கூடியதாக இருத்தல்

வேண்டும். தன்னலமின்றிப் பொதுநல நோக்கங்கள் கொண்டே அத்தொழில் இருத்தல் வேண்டும். வரியைப் பற்றிய கமிஷன் சிபார்சை நிறைவேற்ற, அரசாங்கம் 1923 மார்ச்சில் மூன்றங்கத்தினர்களைக் கொண்ட சரக்குவரி போர்டு (Tariff Board) ஒன்றை நிறுவியது. பாதுகாப்புப் பெற விரும்பும் தொழில்களின் கோரிக்கைகளை ஆராய்தல், விவேகக் காப்புக்காக ஏற்ற சட்டங்களை உண்டாக்குதல், அயல் நாட்டு இறக்குமதிச் சரக்குகளின் மீது வரி நிர்ணயித்தல் முதலியன அதன் கடமைகளாகும். பருத்தி ஆலைத் தொழில், இரும்பு, எஃகுத் தொழில், சர்க்கரைத் தொழில் முதலியன பாதுகாப்பு அளிக்கப்பட்டு மிக்க வளர்ச்சியுறுமாறு செய்யப்பட்டன.

சுதந்திர இந்தியாவில் 1949-ல் சைக்கிள், தையல் மிஷின், மண்ணெண்ணெய் விளக்கு, செயற்கைப் பட்டு, அலுமினியம், போட்டோ இரசாயனச் சாமான்கள் முதலிய 17 தொழில்களுக்குப் பாதுகாப்பளிக்கப்பட்டது. 1951 முதல் சரக்கு போர்டு, இந்தியச் சரக்குக் கமிஷன் (Indian Tariff Commission) என்ற பெயருடன் விசேஷ அதிகாரங்களுடன் விளங்கி வருகிறது. இதனுடைய தலைவர் ஸ்ரீ ஸி. ராமசுப்பன் ஆவார். 1953-ல் சரக்குக் கமிஷன் இரும்பு, எஃகுத் திருகாணிகள் உற்பத்தி, மின்சாரப் பித்தளை விளக்குத் தாங்கிகள் உற்பத்தி முதலிய தொழில்களுக்குப் பாதுகாப்பு அளித்துள்ளது.

தொழில் வளர்ச்சியில் பிற்போக்காக உள்ள நம் நாட்டைப்போன்ற நாடுகளில் தகுதியான இளந் தொழில்களின் வளர்ச்சியின் பொருட்டுக் காப்பு முறை அவசியமானதே. தொழில்கள் வளர்ச்சியுற்ற பின்னர், பாதுகாப்பை எடுத்து விடலாம். இரும்பு, எஃகுத் தொழிலுக்குப் பாதுகாப்பில்லை. ஆனால், இம்முறை நன்கு பின்பற்றப்பட்டாலொழிய நாட்டின் பொருளாதார நிலை உயர்தல் இல்லை.

## பகுதி 2

**பேரளவைப் பொருளுற்பத்தியும் சிற்றளவைப் பொருளுற்பத்தியும் :** நம் நாட்டுத் தொழில்கள் பேரளவைப் பொருள் உற்பத்தித் தொழில், சிற்றளவைப் பொருளுற்பத்தித் தொழில் என இரு வகைப்படும். இயங்கும் சக்திச் சாதனம் மூலமாகப் பெரிய எந்திரங்களினுதவியால், பெரிய தொழிற் சாலேகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் மூலமாக, பெரிய திட்டத்தில் பொருள்களே உற்பத்தி செய்யுந் தொழிலே பேரளவைத் தொழிலாகும். இது உற்பத்தியின் திட்டத்தைக் கொண்டதன்றி, உற்பத்தியின் அளவைக் கொண்டு அவ்வாறு அழைக்கப்படுகிறதில்லே என்று அறிதல் வேண்டும். உதாரணமாக, நம் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தக்ளி அல்லது சர்க்காவால் நூல் நூற்றுத் துணியை உற்பத்தி செய்தால் அதிகத் துணி கிடைக்கும். ஆயினும், அது பேரளவு உற்பத்தி ஆகாது. தொழில் வளர்ச்சி மிகுதியாயுள்ள பிரிட்டன், அமெரிக்க ஐக்கியநாடு, ருஷ்யா முதலிய நாடுகள் பேரளவு உற்பத்திக்குப் பெயர் பெற்றவை. நம் நாட்டில் தற்போது இவ்வகையில் இரும்பு, எஃகு, சணல், பருத்தி, தோல் பதனிடுதல், கம்பளி, சர்க்கரை, காகிதம் முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன.

**பேரளவை உற்பத்தியின் நன்மைகள் :** உற்பத்தியின் ஒவ்வொரு பகுதிக்கும் வேண்டிய தனி எந்திரத்தைப் பயன்படுத்தலாம். தொழிலின் ஒவ்வொரு பிரிவினேயும் கவனிக்கத் தனித் திறமையாளரை நியமிக்கலாம். பெரிய திட்டத்தில் பொருள்களே மலிவான விலேயில் உற்பத்தி செய்யலாம். சேதமான பொருள்களே வீணுக்காமல் பக்க வினேபொருளுற்பத்திக்குப் பயன்படுத்தலாம். நல்ல விளம்பரம் மூலமாகத் தக்க விற்பனே வசதிகளேப் பெறலாம். தொழில் வளர்ச்சியின் பொருட்டு விஞ்ஞான ஆராய்ச்சிகளே நடத்தலாம்.

குறைபாடுகள்: குறித்த ஓரளவுக்குமேல் தொழில் வளர்ச்சியுற்ருல் தொழிற் பிரிவினை, பெரிய எந்திரங்கள் ஆகியவற்ருல் ஏற்படும் சிக்கனங்கள் சிக்கல்களாக விளை-கின்றன. பல்வகை உற்பத்திக் கிளைகள் பெருகுவதால் அத்துணையையும் கவனிப்பதென்பது எளிதன்று. தொழில் பெருகுகையில் ஓர் பெரிய தொழில் ஸ்தாபனத்தின் பல்-வேறு கிளைகளையும் ஒன்று சேர்த்து ஒத்துழைக்குமாறு செய்தல் பெரிதும் கடினமாகின்றது. பேரளவைத் தொழிலுக்கு வேண்டிய மூலதனத்தைப் பெறுதல் எளிதன்று. பொருள்கள் விற்பனை ஆகாவிடில் பெருத்த நஷ்டம். நாகரிக வளர்ச்சிக்கேற்ப நுண்ணிய வேலைப்பாடு நிறைந்த அழகிய பொருள்களை உற்பத்தி செய்தல் எளிதன்று. பெரிய தொழிற்சாலைகளில் முதலாளி-தொழிலாளி வேறுபாட்டுத் தொல்லைகள் அடிக்கடி ஏற்படுகின்றன.

சிற்றளவைத் தொழில்: குடிசைகளில் அல்லது சிறிய தொழிற்சாலைகளில் கைகளின் உதவியினுலும், சிறிய எந்திரங்களின் மூலமாகவும் சிறிய திட்டத்தில் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிலுக்குச் சிற்றளவைத் தொழில் என்று பெயர். இதற்கு அதிக மூலதனம் வேண்டியதில்லை. உரியவரே தொழில் வளர்ச்சியை நன்கு கவனித்தல் இயலும். நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த அழகிய பொருள்களை உற்பத்தி செய்யலாம். சுற்றுப்புறத் தேவைகளுக்கு ஏற்பப் பொருள்களை உற்பத்தி ஆக்கலாம். விற்-பனைக்குத் தக்கவாறு பொருளுற்பத்தியை அமைத்துக் கொள்ளலாம். முதலாளி — தொழிலாளி வேறுபாட்டுத் தொல்லைகள் இங்கில்லை. விளையாட்டுச் சாமான்கள் உற்-பத்தி, கண்ணுடிச் சாமான்கள் உற்பத்தி, தோல் சாமான்-கள் உற்பத்தி, பூட்டுத் தயார் செய்தல், சைக்கிள் பாகங்கள் உற்பத்தி முதலிய பன்னிரண்டு சிற்றளவைத் தொழில்களை நன்கு வளரும்படி யூனியன் அரசாங்கம் ஏற்பாடுகள் செய்கிறது.

## பகுதி 3

### செய்தொழிற் செறிவு (Localisation of industry)

பல காரணங்களை முன்னிட்டுச் சில குறிப்பிட்ட செய்-தொழில்கள் சில இடங்களிலேயே நன்கு நிலைபெற்று விளங்குவதற்குச் செய்தொழிற் செறிவெனப்படும். மூலப் பொருள்கள் அருகில் எளிதாகக் கிடைத்தல், இயற்கையமைப்பு நலன், சீதோஷ்ண ஸ்திதியின் அனுகூலம், இயங்கும் சக்திச் சாதனம் எளிதில் கிடைத்தல், விற்பனைக்குரிய சந்தை வசதி, வேண்டிய தொழிலாளர் எளிதில் கிடைத்தல் இதற்கு முக்கிய காரணங்களாகும்.

சில முக்கிய உதாரணங்கள்: (1) பம்பாயின் பின்நிலம் பருத்திவிளையும் தட்சிணப் பீடபூமியின் ஈரத்தை வகிக்கும் கரிசல் மண் பிரதேசம் ஆகும். அது மேற்குக் கரையில் உள்ளமையால் பருத்தித் தொழிலுக்கு ஏற்ற ஈர சீதோஷ்ண நிலையை யுடையது. அது இயற்கைத் துறைமுகமாக இருப்பதுடன் ஐரோப்பாவிற்கு அருகிலுள்ள துறைமுகமாக இருப்பதாலும், மேனாட்டு எந்திரங்களின் இறக்குமதிக்கும் செய்பொருள்களின் ஏற்றுமதிக்கும் ஏற்றதாயுள்ளது. அது உள்நாட்டுடன் தால், போர்க் கணவாய்கள் மூலமாய் நல்ல போக்குவரவு வசதிகளையும் பெற்றிருக்கிறது. மேற்-குத் தொடர்ச்சி மலைப் பிரதேசத்தில் டாடா ஜல மின்சக்தித் திட்டத்தின்மூலம் இயங்கும் சக்தி எளிதில் கிடைத்திருக் கிறது. எனவே, பம்பாய் இந்தியாவிலேயே பருத்தி ஆலைத் தொழிலில் தலைசிறந்து விளங்குகிறது. பருத்தி விளைவ-தாலும், போக்குவரவுச் சாதனங்கள் உள்ளமையாலும் பம்பாய் துறைமுகப் பட்டினத்துடன் தொடர்புள்ளமை யாலும் ஆமதாபாத், பூனா, ஷோலாப்பூர் முதலிய இடங் களிலும் பம்பாய் ராஜ்ஜியத்தில் பருத்தி ஆலைத் தொழில் நன்கு நிலைபெற்றுள்ளது. (2) 1907-ல் ஜே. என். டாடா என்பவரால் ஏற்படுத்தப்பட்ட ஜம்ஷெட்பூர் இரும்பு, எஃகுத் தொழிற்சாலை (Tata Nagar) ஆசியாவிலேயே மிகப் பெரிய

எந்திர சாலையாகக் கருதப்படுறது. இது பீஹாரில் ஸிங்பும் ஜில்லாவில் உள்ளது. இத் தொழிற்சாலைக்கு தாமோதர் நதிப் பள்ளத்தாக்கு நீலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரியும், ஸிங்பும் ஜில்லாவிலிருந்து இரும்புத் தாதுவும், மாங்கனீசும், சுண்ணும்புக் கல்லும் அதிகமாய் அனுகூலமாகக் கிடைக்கின்றன. ஒரிஸ்ஸாவிலுள்ள ஜோடா என்னுமிடத்தில் பெர்ரோ — மங்கனீசு எடுக்கும் கம்பெனி ஒன்று டாடா கம்பெனியின் எஃகு உற்பத்தியை அதிகப்படுத்த ஏற்படுத்தப் பட்டுள்ளது. கல்கத்தாவுடனும் விசாகப்பட்டினத்துடனும் இருப்புப்பாதைகள் மூலமாய் இத் தொழிற்சாலைப் பட்டினம் இணைக்கப்பட்டிருக்கிறது. உணவுப் பொருள்கள் மிகுதியாய் விளையும் கங்கைச் சமவெளி அருகில் உள்ளதாலும், உள்நாட்டுத் தேவை பெருகுவதாலும், மலிவான தொழலாளர் கிட்டுவதாலும், டாடாவின் மூலதனத்தாலும், அரசாங்க ஆதரவாலும் இத்தொழில் இவ்விடத்தில் மேன்மை பெற்றுள்ளது. (3) கரும்பு பயிரிடச் செழிப்புள்ள வண்டல் மண்ணும், வெப்பமும், ஈரமான சீதோஷ்ணமும் வேண்டும். இந்நிலை நிரந்தர நீர்ப்பாசன வசதியுள்ள உத்தரப் பிரதேசம், பீஹார், பஞ்சாப் முதலிய வட ராஜ்ஜியங்களில் காணப்படுகிறது. நமது நாட்டில் பயிராகும் கரும்பில் 97 சதவீதம் இந்த ராஜ்ஜியங்களில் பயிராகிறது. தாமோதர் நிலக்கரிக் கனியிலிருந்து நிலக்கரியும், டாடா தொழிற்சாலையிலிருந்து எந்திரங்களும் கிடைப்பதாலும், மலிவான தொழிலாளர் கிட்டுவதாலும் பீஹார் உத்தரப் பிரதேசங்களில் சர்க்கரைத் தொழில் நடைபெறுகின்றது. (4) அதிக வெப்பமும், நல்ல மழையும், வெள்ளம் படிந்த செழிப்பான புது வண்டல் மண்ணும் சணல் பயிருக்குத் தேவை. இத்தகைய நிலை கங்கை, பிரம்மபுத்திரா டெல்ட்டாக்களிற்றான் காணப்படுகிறது. மேற்கு வங்காளத்தில் ஹூக்ளி நதிக்கரைப் பிரதேசத்தில் 112 ஆலைகள் சணல் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றன. சணல் எளிதில்

கொண்டுவரப் படுவதாலும், தாமோதர் பள்ளத்தாக்கு நிலக்கரிக் கனிகள் அருகிலுள்ளமையாலும், ஜனநெருக்க மிகுதியால் தொழிலாளர் எளிதில் கிடைப்பதாலும், கல்கத்தா வர்த்தகத்திற்கு ஏற்ற துறைமுகமாய் இருப்பதாலும், அது சணல் தொழிலுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது. (5) பெங்களூரில் ஆகாய விமானம் கட்டும் தொழிற்சாலை ஏற்பட்டிருப்பதற்கு அது தக்க வசதிகள் உள்ளதாயிருக்கிறது. உள் நாட்டின் மத்தியில் இருத்தல், அருகில் ஜல மின்சக்தி கிடைத்தல், மங்கனீசு அகப்படுதல், மத்திய விஞ்ஞான ஆராய்ச்சிச்சாலை அமைந்திருத்தல், பத்திராவதி இரும்புத் தொழிற்சாலை ஏற்பட்டிருத்தல், வேலைக்கேற்ற சீதோஷ்ண நிலையிலிருத்தல் முதலியன இத்தொழில் நன்கு விளங்குவதற்குச் சாதகமாயிருக்கின்றன. (6) விசாகப்பட்டினம் நம் நாட்டிலேயே கப்பற் கட்ட முக்கிய சாதனங்கள் உள்ளதாயிருக்கிறது. இது கிழக்குக் கரையில் சென்னைக்கும் கல்கத்தாவுக்கும் நடுவிலுள்ள இயற்கைத் துறைமுகமாகும். இதன் நீர்ப்பாகம் நல்ல ஆழமாக இருப்பதால் கப்பல் கட்டி ஜலத்தில் விடுவதற்கு ஏற்றதாக இருக்கிறது. டாடா நகரிலிருந்து எஃகுச் சாமான்களும், கான்ட்வானுப் பிரதேசத்திலிருந்து நிலக்கரியும், சோட்டா நாகபுரியிலிருந்து மரமும் இங்கு கொண்டு வரப்படுகின்றன. (7) 1954-ல் ஒரிஸ்ஸாவில் ரூர்கேலா என்னுமிடத்தில் 82 கோடி ரூபாய் செலவில் நமது யூனியன் அரசாங்கம் ஜெர்மன் தேசத்திய எஃகுத் தொழில் ஸ்தாபனத்தைச் சேர்ந்த நிபுணர்களின் உதவியைக் கொண்டு **ஹிந்துஸ்தான் தொழில் ஸ்தாபனம்** என்னும் ஒரு எஃகுத் தொழில் ஸ்தாபனத்தை நிறுவிக்கொண்டு வருகிறது. இத் தொழில் இங்கு ஏற்படத் தகுந்த சாதனங்கள் உள்ளன. அருகில் ஜாரியா, பொகாரோ, ராணிகஞ்ச் முதலிய நிலக்கரிச் சுரங்கங்களும், ஹிராகுட் ஜல மின்சக்தித் திட்டமும் இருக்கின்றன. ஸிங்பும், போனைச் சுரங்கங்களிலிருந்து இரும்புத்தாதுவும், அருகிலிருந்து மங்கனீசும் சுண்-

ணும்புக்கல்லும் இத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும். பிராமணி என்னும் ஆறு அருகில் ஓடுகிறது. சிமென்ட் தொழிற்சாலை ஒன்று அருகிலிருக்கிறது. மேலும், மலிவான தொழிலாளர் கிட்டுவதும், 60 மைல் தூரத்திலுள்ள டால்சர் என்னும் நிலக்கரி கனி ரெயில்வே ஸ்டேஷனுடன் இணைக்கப்படுவதும் மற்ற சாதனங்களாவன.

**தொழிற் செறிவின் நன்மைகள்:** (a) ஓரிடத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் தனிப் புகழ் பெறுகின்றன. (உதாரணம்:— மைசூர் சந்தன சோப்பு, டாடாநகர் இரும்பு, எஃகுச் சாமான்கள், டிடாகர் காகிதம், பம்பாய் ஆமதாபாத் ஆலைத் துணிகள்.) (b) அங்குத் தொழில் திறமை வளர்ச்சியுறுகின்றது. (c) தொழில் வளர்ச்சிக்குத் தனி எந்திர சாதனங்களைப் பயன்படுத்தலாம். (d) மூலப் பொருள்களை எளிதாகப் பெறலாம்.

**குறைபாடுகள்:** (a) ஆண் தொழிலாளர்கள் வேண்டப் படுமிடங்களில் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு வேலை கிடைப்பதில்லை. (b) ஓரிடத்தில் நடக்கும் தொழில்மீதே சார்ந்திருப்பதால் அவ்விடத்துத் தொழிலுக்கு இடையூறு ஏற்பட்டால், நாட்டின் பிற பாகங்கள் பாதிக்கப் படுகின்றன. (c) தொழில் தடைப்பட்டால் தொழிலாளர் பாதிக்கப் படுகின்றனர். (d) செல்வமும் ஓரிடத்திலேயே குவிகின்றது.

## பகுதி 4

### எதிர்காலத் தொழில் வளர்ச்சி

நமது யூனியன் அரசாங்கம் 1956-ல் தொழில் வளர்ச்சியின் பொருட்டு வெளியிட்டுள்ள புதிய திட்டம் போற்றத் தக்கதாகும். இத்திட்டத்தின்படி தொழில்கள் மூன்றுவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. (a) நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாகக் கருதப்படும் பதினேழு அடிப்படைத் தொழில்கள் அரசாங்கத்தின் ஏக

உரிமையில் நடத்தப்படும். இத் தொழில்கள்: (1) ஆயுத உற்பத்தி, (2) அனுசக்தி உற்பத்தி, (3) இரும்பு, எஃகு உற்பத்தி, (4) இரும்பு, எஃகு சம்பந்தமான கனரக உருக்கு வார்ப்படங்கள், (5) இரும்பு, எஃகு உற்பத்தி, சுரங்கத் தொழில், எந்திரக்கருவி உற்பத்தி, மற்றும் மத்திய அரசாங் கத்தாரால் குறிப்பிடப்படும் ஏனைய அடிப்படைத் தொழில்கள் ஆகியவற்றுக்குத் தேவையான கனரக எந்திரங்களின் உற்பத்தி, (6) பெரிய ஹைட்ராலிக், நீராவி டர்பைன்கள் உள்பட கனரக மின்சார எந்திரங்களின் உற்பத்தி, (7) நிலக்கரி, பழுப்பு நிலக்கரி ஆகியவற்றின் உற்பத்தி, (8) சுரங்க எண்ணெய்கள், (9) இரும்புத்தாது, மங்கனீசு, குரோம், ஜிப்ஸம், கந்தகம், தங்கம், வைரம் முதலிய சுரங்கச் செல்வங்களை வெட்டியெடுத்தல், (10) செம்பு, ஈயம், துத்தநாகம், வெள்ளீயம், மோலிடினம், உல்பிராம் முதலிய கனிப் பொருள்களை வெட்டியெடுத்து சுத்தம் செய்தல், (11) 1953-ஆம் ஆண்டு அணுசக்தி உற்பத்தி, உபயோகக் கட்டுப்பாடு உத்தரவின்கீழ் குறிப்பிட்டுள்ள உலோகங்கள், (12) ஆகாய விமான உற்பத்தி, (13) ஆகாய விமானப் போக்குவரவு, (14) ரெயில்வே போக்குவரவு, (15) கப்பல் கட்டுதல், (16) ரேடியோக் கருவிகள் நீங்கலாக ஏனைய டெலிபோன், டெலிபோன் கேபிள்கள், தந்தி, கம்பியில்லாத் தந்தி சாதனக் கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தி, (17) மின்சார உற்பத்தி, விநியோகம் முதலியனவாகும். (b) பன்னிரண்டு தொழில்கள் படிப்படியாக அரசாங்கத்தாரால் உரிமையாக்கிக் கொள்ளப்படும். இத் தொழில்கள்: (1) 1949-ஆம் ஆண்டு உலோகச் சலுகை விதிகளின் மூன்றுவது பிரிவின்கீழ் சிறிய உலோகங்கள் நீங்கலாகக் குறிப் பிட்டிருக்கும் மற்ற எல்லாவகை உலோகங்கள், (2) பிரிவில் சேர்க்கப்படாத அலுமினியமும் மற்ற இரும்பு கலப்படமற்ற உலோகங்களும், (3) எந்திரக் கருவிகளின் உற்பத்தி, (4) எஃகுக் கருவிகளும் இரும்பு சம்பந்தமான உலோகக் கலப்பு

களும், (5) மருந்துகள், சாய வகைகள், பிளாஸ்டிக் தயாரிப்புகள் முதலியவற்றைப் போன்ற ரசாயனத் தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களின் உற்பத்தி, (6) விஷத் தடை முதலிய இன்றியமையாத மருந்துகளின் உற்பத்தி, (7) ரசாயின எரு உற்பத்தி, (8) செயற்கை ரப்பர் உற்பத்தி, (9) நிலக்கரி வாயு உற்பத்தி, (10) ரசாயனக் கூழ் உற்பத்தி, (11) ரஸ்தா போக்கு வரவு, (12) கப்பல் போக்கு வரவு முதலியனவாகும். இத் தொழில்களை விரைவாக வளர்ச்சியுறும்படி செய்ய இவற்றுள் புதிய தொழில்களைப் பெரிய அளவில் அரசாங்கமே ஆரம்பிக்கும். இருப்பினும் தனிப்பட்டவரின் ஒத்துழைப்பையும் அரசாங்கம் பெறும். சுயமாகவோ அல்லது அரசாங்கத்தின் கூட்டுறவுடனே ஈடுபடத் தனியார் முயற்சிக்கு வாய்ப்பளிக்கப்படும். (c) பிற தொழில்கள் யாவும் அரசாங்க அனுமதி பெற்று மக்கள் தாமே நடத்துதற்குரியனவாகும். ஆனால், தேசிய நலனை உத்தேசித்து அவசியமெனக் கருதினால், எத் துறையிலும் இறங்குவதற்கு அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

இத் திட்டம் சமதர்ம சமுதாய அமைப்பை அடிப்படையாகக்கொண்டு வகுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பிரிவுகள் வரம்பிட்டு வகுக்கப் பட்டவையல்ல. முதற் பிரிவில் ஏற்கெனவே அரசாங்க அங்கீகாரம் பெற்று நடத்தப்பட்டு வரும் தொழில்களைத் தவிர மற்ற எல்லாப் புதிய தொழில்களையும் அரசாங்கம்தான் ஏற்படுத்தும். தற்போதுள்ள தனிப்பட்ட தொழில்களின் விஸ்தரிப்புக்கு அரசாங்கம் வாய்ப்பளிக்கும். அன்றியும் நாட்டின் நலனைக் கருதிப் புதிய தொழில்களை ஏற்படுத்துவதில் தனிப்பட்டோரின் ஒத்துழைப்பைப் பெறவும் அரசாங்கம் முயலும். ஒரே தொழில், அரசாங்கம், தனிப்பட்டவர் ஆகிய இரு தரப்பினராலும் நடத்தப்பட்டு வந்தால், இவை இரண்டையும் பாரபட்சமின்றி நியாயமாக நடத்துவதே அரசாங்கத்தின் கொள்கையாகும். தனிப்பட்டவர்களின் முயற்சிகளில் கூட்டுறவை

வளர்க்க அரசாங்கம் பெரிதும் பாடுபடும். தேசீய பொருளாதார வளர்ச்சிக்கு குடிசைத் தொழில்களும், கிராமத் தொழில்களும், சிறிய தொழில்களும் ஏற்றவாறு அமைய அரசாங்கம் முயலும். நாட்டின் பல்வேறு பிரதேசங்களின் தொழிலபிவிருத்தியில் தோன்றும் ஏற்றத் தாழ்வுகள் படிப் படியாகக் குறைக்கப்படும். தொழில் நிர்வாகத்தில் தொழி லாளிகள் பங்கு பெறுதலுக்கும் அரசாங்கம் முயற்சிக்கும். தொழில் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு எவ் வகையிலும் ஊக்கமளிக்கப்படும். விவசாய உற்பத்தி, தொழிலுற்பத்தி ஆகிய இரண்டும் தேசீய பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றவாறு அமையும்படி செய்ய அரசாங்கம் பெரிதும் முயலும். இப் புதிய தொழிற் கொள்கையை ஒட்டி அரசாங்கமே வர்த்தகம் நடத்துவதும் அதிக அளவில் மேற் கொள்ளப்படும். சுருங்கக் கூறுமின் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருகச் செய்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இப் புதிய கொள்கையின் சிறந்த நோக்கமாகும்.

தற்போது தேசீய மயமாக்கப்பட்டுள்ளவை ஆயுத உற்பத்தி, அணுசக்தி உற்பத்தி, ரெயில்வே போக்குவரவு, ஆகாய விமானப் போக்குவரத்து முதலியனவேயாம். நம் நாட்டில் தேசீயமாக்கப்பட்டுள்ள தொழில்களில் மிகப் பெரியது ரெயில்வே போக்குவரவே ஆகும். சிந்திரியில் (பீஹார்) ரசாயன எரு உற்பத்தித் தொழிற்சாலை, கல்கத்தாவில் கணித நூற் கருவிகள் செய்யும் சாலை, சித்தரஞ்சன் நகரில் (அஸன்சாலுக்கருகிலுள்ள மிகிஜம்)ரயில் இஞ்சின் உற்பத்தித் தொழிற்சாலை, கல்கத்தாவிற்கு அருகிலுள்ள பெஹெலாவில் (Behela) சணல் ஆராய்ச்சி ஸ்தாபனம், பங்களூரில் டெலிபோன் தொழிற்சாலை, பம்பாய்க்கருகில் தேசீய நெசவுத் தொழில் எந்திர உற்பத்தித் தொழிற்சாலை, அம்பர்நாத்தில் (பம்பாய் அருகில்) இயந்திரக் கருவி உற்பத்திச்சாலை, சென்னையைச் சேர்ந்த பெரம்பூரில் ரெயில் பெட்டிகளை உற்பத்தி

செய்யும் தொழிற்சாலை, ரூப் நாராயணப்பூரில் (மேற்கு வங்காளம்) Phone Cables உற்பத்தித் தொழிற்சாலை, பம்பாய்க்கு அருகில் டிராம்பே தீவில் அப்ஸரஸ் எனும் பெயர் கொண்ட அணுசக்தி ஆராய்ச்சி நிலையம் முதலியன மத்திய அரசாங்கத்தாரால் நிறுவப்பட்டுள்ளன.

**தொழில் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டியவை :** நம் நாட்டின் ஆறுகளை ஜல மின்சக்தி உற்பத்திக்குப் பயன் படுத்தல் வேண்டும். நவீனப் போக்குவரத்து சாதனங்களை நாடெங்கும் பெருக்குதல் வேண்டும். தொழிலாராய்ச்சி நன்கு நடத்தல் வேண்டும். தொழிற்கல்வி பெற்ற தொழிலாளர் கிடைக்குமாறு செய்தல் வேண்டும். தொழிலாளர் நலன் பாதுகாக்கப்படுதல் வேண்டும். தொழிற் கல்வி பயிற்சிபெற நம் நாட்டு அறிவுடையோரை மேனுட்டிற்கு அனுப்புதல் வேண்டும். அயல் நாட்டு எந்திரம், மூலதனம் பெறுதலுடன், முன்னர் ஜப்பான் செய்தது போல் தொழில் நிபுணர்களையும் அயல்நாடுகளிலிருந்து தருவித்தல் வேண்டும். மக்களைத் தொழில் வளர்ச்சிக்குத் துணையாகுமாறு ஊக்குதல் வேண்டும். நம் நாட்டுத் தொழில் துறைக்கு முதுகெலும்பு போலுள்ள குடிசைத் தொழில்கள் நன்கு வளர்க்கப்பட்டுப் பெருந் தொழில்களுடன் அவை இணையுமாறு செய்தல் வேண்டும். நமது நாட்டில் இயல்பாய் அமைந்த ஜந்து, தாவரம், சுரங்கம் முதலிய இயற்கைச் செல்வங்களைத் தொழில் வளர்ச்சிக்குப் பயன் படுத்தல் வேண்டும்.

**தொழிலின் எதிர்காலம் :** நம் நாட்டு இயற்கைச் சாதனங்களை நன்கு பயன்படுத்தித் தொழில் வளர்ச்சி செய்தற் பொருட்டு மத்திய கைத்தொழில் ஆலோசனைக் குழு ஒன்று 1948-ல் நிறுவப்பட்டது. அன்றியும் விஞ்ஞானத் தொழிலாராய்ச்சிக் குழு ஒன்றும் உள்ளது. இதன் மேற்பார்வையில் தேசீய ஆராய்ச்சி நிலையங்கள் பல பணியாற்றி வருகின்றன. அவை : (1) தேசீய பௌதிக ஆராய்ச்சி நிலையம் (டில்லி),



படம் 31. தேசீய பௌதிக ஆராய்ச்சி நிலையம், டில்லி.

(2) தேசீய ரசாயன ஆராய்ச்சி நிலையம் (பூனு), (3) தேசீய கனி தாது ஆராய்ச்சி நிலையம் (ஜம்ஷட்பூர்), (4) மத்திய கண்ணுடி ஆராய்ச்சி நிலையம் (ஜாதாவ்பூர், மேற்கு வங்காளம்), (5) தோல் ஆராய்ச்சி நிலையம் (கிண்டி, சென்னை), (6) மின்சார, ரசாயனத் தொழிலாராய்ச்சி நிலையம் (காரைக்குடி, சென்னை ராஜ்ஜியம்), (7) மத்திய எரி சக்தி (Fuel) ஆராய்ச்சி நிலையம் (தான்பாட், பீஹார்), (8) மத்திய உணவு ஆராய்ச்சி நிலையம் (மைசூர்), (9) மத்திய மருந்து (Drug) ஆராய்ச்சி நிலையம் (லட்சுமணபுரி, உத்தரப் பிரதேசம்), (10) மத்திய ரஸ்தா ஆராய்ச்சி நிலையம் (புது டில்லி), (11) மத்திய கட்டிட ஆராய்ச்சி நிலையம் (ரூர்க்கி, உத்தரப் பிரதேசம்), (12) மத்திய உப்பு ஆராய்ச்சி நிலையம் (பவநகர், பம்பாய்), இவையன்றித் தொழிற் கல்வியைப் போதிக்கப் பல தொழிற் பயிற்சி தரும் கல்லூரிகளும் இன்ஜினீயரிங் கல்லூரிகளும் நிறுவப்பட்டு வருகின்றன. அவற்றுள், டில்லியிலுள்ள தொழிற் கல்வி நிலையம், தான்பாட்டிலுள்ள சுரங்கத் தொழிற் கல்விச்சாலை, சென்னையில் அழகப்பா நெசவுத் தொழிற் கல்வி நிலையம், காரைக்குடியிலுள்ள மின்சாரத் தொழிற் கல்லூரி முதலியன சிறந்தனவாம். தொழில்

வளர்ச்சிக்குப் பண உதவி அளிக்கும் பொருட்டுத் தொழில் நிதி கார்ப்பரேஷன் ஒன்று 1948-ல் நிறுவப்பட்டுள்ளது. நாட்டில் தொழில்களை வளர்க்கவும் ஒழுங்குபடுத்தவும் 1952-ல் யூனியன் பார்லிமென்டால் தனிச்சட்டம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது (The Industries Development and Regulation Act). இச் சட்டத்தின்படி யூனியன் அரசாங்கத்தில் மத்திய ஆலோசனைத் தொழில் சபை ஒன்று ஏற்பட்டுள்ளது. தொழில் விருத்திக்கும் தேச பாதுகாப்புக்கும் அணுசக்தி உற்பத்தியைக் கவனிக்க பம்பாயில் தலைமைக் காரியாலயம் ஏற்பட்டுள்ளது.

### பயிற்சி

1, தடையிலா வர்த்தகம் என்றால் என்ன? அதன் நன்மை, தீமைகள் யாவை?
2. விவேகக் காப்பு முறை என்பது யாது? அது எந்த நிபந்தனைமீது அளிக்கப்படுகிறது? அதனால் பயனுற்ற நம் நாட்டுத் தொழில்களுள் நான்கினைக் குறிப்பிடுக.
3. சரக்குவரி போர்டு எப்பொழுது நாட்டில் ஏற்பட்டது? அதன் கடமைகள் யாவை? தற்பொழுது அதன் தலைவர் யார்? தற்பொழுது அதற்கு என்ன பெயர்? பேரளவை உற்பத்தித் தொழிலின் நன்மை, தீமைகள் யாவை? சிற்றளவைத் தொழிலின் நன்மைகள் யாவை?
4. செய்தொழிற் செறிவு என்றால் என்ன? இதை இரு சான்றுகள் காட்டி விளக்குக.
5. தொழில் வளர்ச்சியின் பொருட்டு நிறுவப்பட்டுள்ள சில ஆராய்ச்சி நிலையங்களையும், தொழிற் கல்லூரிகளையும் குறிப்பிடுக.

# அத்தியாயம் 20

## ஜனத் தொகை

உலகில் சீனுவிற்கு அடுத்தபடியாக மிக்க ஜனநெருக்க முள்ள நாடு நம் நாடேயாகும். பயிர்த் தொழிலேயே நம்பி வாழும் மக்களின் தொகை மிகுதியாகவும் கைத்தொழிலே நம்பி வாழும் மக்களின் தொகை குறைவாகவும் பெற்றுள்-ளது நம் நாடு.

நம் நாட்டில் ஜனநெருக்கம் எல்லா இடங்களிலும் ஒரே விதமாக இல்லே. சிறப்பாக விவசாயம் நன்கு நடைபெறு மிடங்களிலும் பெரிய தொழிற்சாலேகள் உள்ள இடங்களி லுமே ஜனநெருக்கம் அதிகமாயுள்ளது. கங்கைச் சம-வெளி, பஞ்சாப், மேற்குக் கிழக்குக் கடற்கரைப் பிர-தேசங்கள் முதலிய இடங்களிலும், பம்பாய், டாடா-நகர் முதலிய தொழிற்சாலே உள்ள இடங்களிலும் ஜனநெருக்கம் அதிகம். இந்தியாவில் ஒரு சதுர மைலுக்கு சராசரி 312 பேர் வாழ்கின்றனர். பாகிஸ்தானில் 208 பேர் வாழ்கின்ற னர். ஆக்கத் தொழில் மிகுந்த இங்கிலாந்தில் சதுர மைலுக்குச் சராசரி 536 பேர் வாழ்கின்றனர். நமது நாடு விவசாய நாடாக இருப்பதால் நம் நாட்டு ஜனநெருக்க விகிதம் குறைவாக உள்ளது. அன்றியும் நம் நாட்டில் ஜனநெருக்க நிலே நகரங்களிலும் கிராமங்களிலும் அடிக்கடி மாறுகிறது. நாட்டுப்புறங்களில் ஏற்படும் விவசாயக் கேட்டி-ஞல் அங்குள்ளோர் பிழைக்கத் தொழிற்சாலேகள் உள்ள நகரங்களுக்குக் குடியேறுகின்றனர். தொழிற்சாலேகளில் தொழில் நிறுத்தம் ஏற்படும் காலங்களில் நகரங்களிலிருந்து மீண்டும் மக்கள் நாட்டுப் புறங்கட்குச் செல்லுகின்றனர். இதனுல் நாட்டுப் பொருளாதார நிலே பெரிதும் பாதிக்கப்படு கிறது.

பத்தாண்டுகட்கு ஒரு முறை நாட்டின் ஜனத்தொகை, வாழ்க்கை விவரங்கள் முதலியன அரசாங்கத்தாரால்

கணக்கெடுக்கப் படுகின்றன. இதற்குப் பத்தாண்டு ஸென்ஸஸ் (ஜனத்தொகைக் கணக்கு) என்று பெயர். கி. பி. 1871 முதற்கொண்டு (மேயோ இராஜப் பிரதிநிதி) நம் நாட்டில் ஜனத்தொகைக் கணக்கு பத்தாண்டுக்கொருமுறை எடுக்கப்பட்டு வருகிறது. நாட்டின் ஜனப்பெருக்கு, ஜனநெருக்க நிலை, எழுத்தறிவு நிலை, ஜனன மரண விகிதம், சுகாதார நிலை, சராசரி ஆயுட்காலம், பொருளாதார நிலை முதலிய விவரங்களை இதனுல் நாம் அறியலாம். ஆண்டு தோறும் நம் நாட்டு ஜனத்தொகை 40 முதல் 50 லக்ஷம் வரை உயர்வதாகக் கூறப்படுகிறது. 1951-ல் இந்திய யூனியன் ஜனத்தொகை 35,68,79,304 என கணக்கிடப் பட்டிருக்கிறது. (காஷ்மீர், அஸ்ஸாம் மலை ஜாதிகள் ஜனத்தொகையுள்பட 3,618·2 லட்சமாகும்). இது 1941-ஐ விட 12·5 சதவீத உயர்வைக் காட்டுகிறது. இதில் 29,50,04,271 பேர் (82·7 சதவீதம் மேல்) கிராமங்களிலும், 6,18,72,123 பேர் நகரங்களிலும் வாழ்கின்றனர். நம் நாட்டில் (கிராமங்கள் 5,58,089; நகரங்கள் 3,018) கிராமங்களைவிட நகரங்களில் ஜன நெருக்கம் பெருகி வருகிறது. நம் நாட்டில் 75 நகரங்கள் ஒவ்வொன்றும் ஒரு லட்சத்திற்கு மேல் ஜனத்தொகையுள்ளதா யிருக்கின்றன. இந்தப் பட்டணங்களில் மட்டும் 43·8 சதவீதம் அதிகப் பட்டிருக்கிறது. விவசாயத்தையே தொழிலாக உள்ளவர்கள் 24,90,74,901; மற்றவர்கள் 10,75,53,411 ஆவர். 1,000 ஆண்களுக்கு 947 பெண்களிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. மொத்த ஜனத் தொகையில் ஹிந்துக்கள் 84·99 சத வீதமும், முஸ்லிம்கள் 9·93 சத வீதமும், கிறிஸ்தவர்கள் 2·3 சத வீதமும், சீக்கியர் 1·74 சத வீதமும், சமணர்கள் 0·45 சத வீதமும், புத்த மதத்தினர் 0·06 சத வீதமும், ஸோராஸ்டியர் 0·03 சத வீதமும், பிற மதத்தினர் 0·5 சத வீதமும் ஆவர். காஷ்மீரிலும் உத்தரப் பிரதேசத்திலும் முஸ்லிம்கள் அதிகமாகவும், திருவாங்கூர்-கொச்சியில்

கிறிஸ்தவர்கள் அதிகமாகவும் வாழ்கின்றனர். நம் நாட்டு மொத்த ஜனத்தொகையில் விவசாயத் தொழிலில் ஈடுபட்ட வர்கள் 70 சதவீதமும், இதர உற்பத்தித் தொழிலில் ஈடுபட்ட வர்கள் 10 சதவீதமும், வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் 6 சத வீதமும், போக்கு வரவில் ஈடுபட்டவர்கள் 2 சத வீதமும், உத்தியோகம், பிறவற்றில் ஈடுபட்டவர்கள் 11 சதவீதமும் ஆகும்.

(நம் நாட்டு மக்களின் சராசரி ஆயுட்காலம் ஏனைய நாடுகளில் உள்ளதைவிட மிகவும் குறைவாக உள்ளமை வருந்தத்தக்கது. இங்கிலாந்தில் ஆண், பெண்களின் சராசரி ஆயுட்காலம் முறையே 67-ம், 72-ம் இருக்க, நமது நாட்டின் இரு பாலரின் சராசரி ஆயுட்காலம் 32. நம் நாட்டின் ஜனன மரண விகிதம் பிற நாடுகளைவிட விபரீதமாகவே இருக்கிறது. நம் நாட்டில் 1955-ல் 1,000 பேருக்கு ஜனனம் 30·5, மரணம் 12·7 ஆகும்; இங்கிலாந்தில் 1,000-க்கு ஜனனம் 16-ம், மரணம் 12-ம் ஆகும்; ஐக்கிய அமெரிக்காவில் 1,000-க்கு ஜனனம் 25-ம், மரணம் 10-ம் ஆகும். நிற்க, சிசு, பெண்களின் மரணம் உலகிலேயே நம் நாட்டிற்றான் மிகவும் அதிகம். (நம் நாட்டில் சிசு மரணம் 1000-க்கு 175.) பொதுவாக, நம் நாட்டு மரண விகிதம் மேற்கூறிய நாடுகளைவிட அதிகமாய் உள்ளமை வருந்தத் தக்கதாகும். சுகாதார வசதிக்குறை, பிழைப்புக்குரிய வசதிக்குறை, உணவுப் பற்றுக்குறை, படிப்பின்மை முதலியன நம் நாட்டு அதிக மரண விகிதத்திற்குக் காரணங்களாகும்.)

நம் நாட்டில் ஜனத்தொகை விபரீதமாகப் பெருகுவதைத் தடை செய்தல் வேண்டும். வாழ்க்கை வசதி நிறைந்த உலகத்தின் இடமுள்ள பிற பாகங்கட்குக் குடியேறலாம். நம் நாட்டின் ஜன நெருக்கம் ஓரிடத்திலேயே ஏற்படாமல் சமமாகப் பரவியிருக்குமாறு செய்தல் வேண்டும். தேசீயச் செல்வப் பெருக்குக்கும் மக்களின்

வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சமூகமும் அரசாங்கமும் ஒத்துழைத்தல் வேண்டும். நம் நாட்டில் விவாக வயதைத் தள்ளிப் போடுதல் நன்று. குடும்ப அளவைக் கட்டுப்படுத்தலும் நலமாம். பொதுச் சுகாதார நிலை உயர்தல் வேண்டும். விவசாயமும் கைத்தொழில்களும் நம் நாட்டின் பொருளாதார நிலை உயருமாறு அமைதல் வேண்டும.

**பயிற்சி**

1. *நம் நாட்டில் ஜனநெருக்கமுள்ள பகுதிகள் யாவை? காரணங்கள் என்ன?*
2. *நம் நாட்டில் மரண விகிதம் ஏனைய நாடுகளைவிட அதிகமாயிருக்கக் காரணமென்ன?*
3. *பத்தாண்டு ஸென்ஸஸ் என்றால் என்ன? அதன் சிறப்பு யாது?*
4. *நம் நாட்டு ஜனத்தொகைத் தொல்லைகளைத் தீர்க்கச் சில வழிகளைக் குறிப்பிடுக.*

---

## அத்தியாயம் 21

## நமது பொருளாதாரப் போராட்டம்

### பகுதி 1

**விவசாயத் தொழிலாளியும் ஆலைத் தொழிலாளியும்:** நம் நாட்டுத் தொழில் பிரச்னை இரு வகைப்படும்; விவசாயத் தொழிலாளரைப் பற்றியதும், ஆலைத் தொழிலாளரைப்பற்றியதும் ஆகும். இதுகாறும் நம் நாட்டில் விவசாயத் தொழிலாளரின் நிலை சிறிதும் கவனிக்கப்படவில்லை. ஆனால், ஆலைத் தொழிலாளரைப் பற்றிய செய்திகளே அரசாங்கத்தினர் கவனத்திற் குரியதாயிற்று. விவசாயத் தொழிலாளர் ஓர் அமைப்பிற்குள் பொருந்தி விளங்கவில்லை. அவர்கள் நாடு முழுவதும், கிராமங்களில் ஆங்காங்குச் சிதறிக் கிடக்கின்றனர். இது போலன்றி ஆலைத் தொழில்

நல்ல அமைப்பிற்குள் பொருந்தி நடக்கிறது. அத் தொழிலாளர் பொதுவாக ஆக்கத் தொழிற் பிரதேசங்களில் குவிந்துள்ளனர். விவசாயத் தொழிலாளிகளின் நிலை மிகவும் இரங்கத்தக்கதாய் உள்ளது. ஆலைத் தொழிலாளி பெறுவது போல் அவர்கள் நிலையான ஊதியம் பெறுவதில்லை. விவசாயப் பிற்போக்கு நிலையினால் அவனுக்கு வேலை கிடைப்பது நிலையில்லை. வேலை கிடைத்தாலும் ஓராண்டில் எல்லா மாதங்களிலும் வேலை கிடைப்பதென்பது அரிதே. அதனால் அவன் வேலையை நாடி ஆங்காங்கு அலைய வேண்டியிருக்கிறது. ஆலைத் தொழிலாளரின் நிலையோ அவ்வாறின்றிப் பல வழியிலும் நலன் தருவதாயுள்ளது. இவர்கள் நிலையிலும் மேலும் பல கவனிக்க வேண்டியது இருப்பினும், சமுக நலனைக் கருதி விவசாயத் தொழிலாளரின் நிலையே முன்னர்க் கவனித்தற் குரியதாயுள்ளது.

## பகுதி 2

நிலச் சொந்தக்காரரும் மானியதாரும்: மானியதார், நிலச்சொந்தக்காரர், அரசாங்கம் ஆகிய மூவரும் நிலத்தில் சம்பந்தமுடையவர் ஆவர். நிலச் சொந்தக்காரர் விவசாய வளர்ச்சிக்குத் தன் மூலதனத்தையும், மானியதார் தம் உழைப்பையும் அளிக்க, அரசாங்கம் இவ்விரண்டையும் இணைத்து நிற்கிறது. நமது நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியில் ஏற்பட்ட ஜமீன்தாரி முறை, ரயத்வாரி முறை என்னும் நிலவரித் திட்டங்களுக்கேற்ப இரு வகையான மானியதார்கள் உள்ளனர். ஜமீன்தார்கள் தம் கீழுள்ள மானியதார்களைத் தம் செல்வப் பெருக்கத்திற்குக் கருவிகளாக ஆக்கி வந்தனர். இதனால் மானியதார்களின் நிலை மிகவும் வருந்தத் தக்கதாயிற்று. அவர்கள் செலுத்த வேண்டிய வரி ஜமீன்தாரின் விருப்பப்படி மாற்றப்பட்டு வந்தது. அவர்களின் துயரங்களைப்போக்க அரசாங்கம் பல சட்டங்களை இயற்ற வேண்டியதாயிற்று. ஜமீன்தாரி முறையில் அரசாங்கத்

திற்கும் மானியதார்களுக்குமிடையே யாதொரு தொடர்பும் இல்லை; ஆனால், ரயத்வாரி முறையில் இவ் விருவர்க்கு மிடையே நல்ல தொடர்பு உண்டு. இம்முறையில் விவசாயி கட்கு நிலம் பற்றிய உரிமைகள் யாவும் உண்டு. ஆயினும், நிலச் சொந்தக்காரர்கள் அனைவரும் தாமே நிலங்களை உழுவதில்லை. விவசாயத் தொழிலாளர் மூலம் அவர்கள் நில வருவாய் பெறுகின்றனர். சென்னை ராஜ்ஜியத்தில் குடிவார உரிமை என்றும், குத்தகை என்றும் இரு முறையில் நிலங்கள் பயிரிடப்படுகின்றன. தமக்குள் முன்னரே குறிப் பிட்டுக் கொண்டுள்ள விகிதத்தில் விளைச்சலைப் பிரித்துக் கொள்வது குடிவார உரிமையாகும். விளைபொருளோ, அல்லது பணமோ தமக்குள் வரையறுத்துக் கொண்டபடி செலுத்துதல் குத்தகையாகும்.

நிலச் சொந்தக்காரர்களுக்கும் மானியதார்களுக்கும் அடிக்கடி ஏற்படும் தகராறுகளைத் தீர்க்க அரசாங்கம் முயன்று வருகிறது. நிலச் சொந்தக்காரர்கள் நிலங்களை உழும்படி செய்யவும், உரிய நிலங்களின் அளவை ஓரள-வில் கட்டுப்படுத்தவும், நிலச் சொந்தக்காரர்கட்கும் மானிய-தாருக்கும் விளைச்சலில் சம பங்கு ஏற்படவேண்டுமென்றும் அரசாங்க விவசாயக் கமிஷன்கள் சிபார்சு செய்துள்ளன. நாடனைத்திற்கும் ஒரேவிதமான குடிவாரச் சட்ட மியற்ற நம் யூனியன் அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

## பகுதி 3

முதலாளியும் தொழிலாளியும்: தொழிற் புரட்சியின் விளைவாக ஆலைகளை வைத்து நடத்தும் முதலாளி வர்க்க மும், அவற்றில் வேலை செய்யும் தொழிலாளி வர்க்கமும் தோன்றலாயின. தொழிலாளரின் உழைப்பினால் முத-லாளிகட்குச் செல்வங் குவிந்தது. நாளடைவில் தொழி-லாளிகட்கும் முதலாளிகட்குமிடையில் பிளவு ஏற்பட லாயிற்று. தொழிலாளிகள் தம்முழைப்பிற்குத் தக்க ஊதிய-

மும் உரிமையும் வேண்டுமென்று போராடலாயினர். இவ்வாறு முதலாளி தொழிலாளிப் போராட்டம் தோன்றலாயிற்று.

இவ்விதப் போராட்டம் சென்ற நூற்றுண்டின் இறுதி வரை நம் நாட்டில் தோன்றவில்லை. விவசாய நாடாக உள்ள நம் நாட்டில் குடிசைத்தொழில்களே சிறப்பாக நாடெங்கும் நடைபெற்று வந்தன. தொழில்களுக்குள் போட்டிகளும் ஏற்படவில்லை; செல்வமும் தனிப்பட்டவர்கள்பால் குவியவில்லை. தொழிலாளர்கட்குத் தம் தொழில்களே வருவாய்க்கு ஆதாரமாய் இருந்தன. சுருங்கக் கூறின், அவர்களே பல தொழிலாளியாகவும் முதலாளியாகவும் இருந்தனர். இந்த நூற்றுண்டு ஆரம்ப முதற்கொண்டு தொழிற் புரட்சி நம் நாட்டிலும் பரவத் தொடங்கியது. இங்கும் முதலாளிகளிடம் செல்வம் குவியலாயிற்று. தொழிலாளிகள் அளவற்ற இன்னல்கட்கு உள்ளாயினர். நாளடைவில் இந்தியத் தொழிலாளிகளிடமும் விழிப்பு ஏற்பட்டது. முதல் உலகப் போருக்குப் பின்னர், பன்னுட்டுத் தொழில் ஸ்தாபனத் தொடர்பினுலும், தொழிலாளர் சங்க அமைப்பினுலும் இந்நாட்டுத் தொழிலாளர் தம்முரிமைக்குப் போராடலாயினர். நம் நாட்டுத் .தொழிலாளரிடையிலும் பொதுவுடைமைக் கருத்துக்களும் சமதர்மக் கருத்துக்களும் வேரூன்றலாயின. சமூகம் புதிய பொருளாதார அமைப்பில் சீர்திருத்தம் பெறவேண்டும் என்பதே தொழிலாளரின் சீரிய நோக்கமாயுள்ளது.

## பகுதி 4

**நம் தொழிலாளரின் இயல்பு:** மேனுட்டுச் செய்தொழில் முறை நம் நாட்டில் பரவத் தொடங்கிய பின்னர், தொழில் பிரச்னைகள் சில தோன்றலாயின. நம் நாட்டில் நிலையான தொழிலாளிகள் கிடைப்பதில்லை. கிராம வாழ்க்கையில் பற்றுக்கொண்டு, கையில் சிறிது பணஞ் சேர்ந்ததும் அவர்கள் கிராமங்கட்கே மீண்டுஞ் சென்று விடுகின்றனர். அன்-

றியும் அறுவடைக் காலங்களிலும் அவர்கள் கிராமங்கட்குச் சென்று விடுகின்றனர். நம் நாட்டில் தொழிற்சாலைகட்கு வேண்டிய தொழிலாளிகள் கிடைப்பதில்லை. அன்றியும் தொழில் திறமை பெற்ற தொழிலாளிகள் பலர் கிடைப்ப தில்லை. ஓரிடத்தில் வேலை செய்யும் தொழிலாளர் ஒரே வகையினராதலுமில்லை. பொதுவாக, நம் நாட்டுத் தொழிலாளரின் திறமை மேனாட்டுத் தொழிலாளரின் திறமையை விடக் குறைந்துள்ளதாகும்.

**நம் தொழிலாளரின் குறைபாடுகள்:** தொழிலாளரின் வாழ்க்கையும் சீவன வசதிகளும் மிக்கக் கேவலநிலையிலுள்ளன. வாழத் தக்க வீட்டு வசதிகள் அவர்கட்கு இல்லை; சுகாதாரமற்ற சூழ்நிலையிலுள்ளனர். அவர்க்ள் தொழிற் சாலைகளில் நீண்டநேரம் வேலைசெய்வதால் அவர்களின் உடல் நலனும் கெடுவதோடு வேலைத் திறமையும் குறைகிறது. அவர்கள் பெறும் ஊதியமோ வயிறார வாழப்போதியதன்று. வேலையில் உயர்வுபெற வசதிகளும் அவர்கட்கு இல்லை. படிப்பின்மை அவர்களின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் பெருந்தடையாக உள்ளது. வறுமையால் அவர்கள் தம் குழந்தைகளுக்குக் கல்வியளிக்க முடியாத நிலையிலுள்ளனர். இக் குறைகளே நம் தொழிலாளரின் திறமைக் குறைவுக்கு முக்கிய ஏதுக்களாகும்.

19-ஆம் நூற்றுண்டின் இறுதியிலிருந்து நம் நாட்டுத் தொழிலாளர்கள் உரிமைகளைப் பெறக் கிளர்ச்சி செய்யலாயினர். எனவே, அவர்களின் குறைகளைப் போக்க அரசாங்கம் பல சட்டங்களை இயற்றியது. தோட்டப் பயிர் வேலை, தொழிற்சாலைகள், சுரங்கங்கள், போக்குவரவு சம்பந்தமான தனித் தொழிற் சட்டங்கள் பல இயற்றப்பட்டன. அன்றியும் தொழிலாளரின் வேலை நேரம், ஊதியத் திட்டம், பொதுநலம், கல்வி, மருத்துவ உதவி, வீட்டு வசதி, தொழிற் சங்கங்கள், சமூக இன்ஷூரன்ஸ் முதலியவற்றைப்

பற்றியும் பல சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன. (முதற் பாகம் 12-ஆம் அத்தியாயத்தில் இதனைக் காண்க.)

விவசாயத் தொழிலாளரைக் குறித்து இதுகாறும் திட்டமான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. நமது ஸ்டேட் அரசாங்கங்கள் அவர்களின் நலன்களைக் கருதி ஏற்பாடுகள் பல செய்து வருகின்றன. ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டு ரயத்துவாரி முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. யூனியன் அரசாங்கத் திட்டப்படி விவசாயத் தொழிலாளரின் நிலைமை ஆராயப்பட்டு வருகிறது. அவர்களின் நிலைமையை நன்கு அறிய அண்மையில் யூனியன் தொழில் இலாக்கா ராஜ்ஜிய அரசாங்கங்களின் ஒத்துழைப்புடன் மிகப் பெரிய சமூகப் பொருளாதார ஆராய்ச்சி ஒன்றை நடத்தியது; 813 கிராமங்களில் இவ் வாராய்ச்சி நடைபெற்றது. இதன் விளைவாக கீழ்க்கண்ட முக்கியப் புள்ளி விவரங்கள் கிடைத்துள்ளன. இந்திய யூனியனில் உள்ள கிராமங்களில் வாழும் விவசாயத் தொழிலாளரின் குடும்பங்கள் 18·7 மில்லியன், அல்லது மொத்த கிராமக் குடும்பங்களின் எண்ணிக்கையில் 28 சதவீதமாகும். தரிசு நிலங்கள் விவசாயத் தொழிலாளர்க்கு அளிக்கப்பட்டு வருகின்றன. பெருநிலச் சொந்தக்காரர்களிடமிருந்து நிலம் இல்லாத விவசாயிகட்கு நிலங்களை வாங்கிக் கொடுக்க விநோபா பாவே என்னும் உத்தமரால் பூதான இயக்கம் எனும் ஒரு இயக்கம் அண்மையில் துவக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக நம் யூனியன் முழுவதிலும் நிலங்கள் வசூலிக்கப்பட்டு வருகின்றன. நிலச் சொந்தக்காரர்கட்கும் குடியானவர்கட்கும் ஏற்படும் தகராறுகளைத் தீர்க்க, தொழிற் சமரச உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். பொதுக் கல்வியும் விவசாயக் கல்வியும் அவர்கட்கு அளிக்கப்படுகின்றன. கடன் நிவாரண மசோதாக்கள் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் அவர்கள் உதவி பெறுகின்றனர். நமது யூனியன் அரசாங்கம் பயிர்த்தொழி

லாளரின் நலனைக் கருதி நாடெங்கும் ஒரே விதமான குடிவாரச் சட்டம் இயற்றவும், ஆலைத் தொழிலாளிகட்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை விவசாயத் தொழிலாளிகள் பெறவும் விரைவில் திட்டங்கள் வகுக்கக் கருதியுள்ளது.

## பகுதி 5

தொழிலாளர் சங்கம் (Trade Union): நம் நாட்டில் தொழிலாளர் சங்கம் சமீபகாலத்தில் ஏற்பட்டதாகும். முதல் உலகப் போர் இறுதியில் தொழிலாளர்களிடை ஏற்பட்ட புதிய உழைப்பினுலும், விலைவாசிகளின் உயர்வினுலும், தொழிலாளரின் குறைகளைப் போக்க முதலாளிகள் மறுத்தமையாலும் நம் நாட்டில் பல வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. அங்ஙிலையில் நாட்டிலுள்ள தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்தி ஓரமைப்பின் கீழ்க் கொண்டுவர முயற்சிகள் நடைபெற்றன. கி. பி. 1918-ல் B. P. வாடியா என்பவர் சென்னை நகரில் ஆலைத் தொழிலாளரின் பொருட்டுத் தொழிற் சங்கமொன்றை நிறுவினர். நம் நாட்டுத் தொழிற் சங்க இயக்கத்துக்கு இதுவே முதற் காரணமாகும். கி. பி. 1919—23 ஆண்டுகட்கு இடையில் நாடெங்கும் பல தொழிற் சங்கங்கள் ஏற்பட்டன. ரெயில்வே, தந்தி தபால் ஆபீஸ், கப்பல் தொழிலாளர், ஆலைத் தொழிலாளர் முதலியோர் தத்தமக்குரிய சங்கங்களை நிறுவலாயினர். 1920-ல் எல்லாத் தொழிற் சங்கங்களும் ஒன்றுபட்ட அகில இந்திய தொழிற் சங்க காங்கிரஸ் நிறுவப்பட்டது. இதற்குக் காரணமாயிருந்தவர் திவான் சமன்லால் என்னும் பெரியார் ஆவர். 1922-ல் எல்லா ரெயில்வே சங்கங்களையும் கொண்ட அகில இந்திய ரெயில்வே தொழிலாளர் கூட்டுச் சங்கம் நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து மத்திய மாகாணத் தந்தித் தபால் தொழிற் சங்கங்கள் ஏற்பட்டன.

க. 1926-ல் தொழிலாளர் சங்கச் சட்டம்: இச் சட்டம் நம் நாட்டுத் தொழிலாளர் சங்க வரலாற்றில் மிகவும் முக்கிய

மானது. இதன் மூலம் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்களை அமைத்துக் கொள்ளவும் அவற்றைப் பதிவு செய்து கொள்ளவும், அரசாங்கத்தாரால் அனுமதிக்கப்பட்டனர். முதலாளி, தொழிலாளிகளின் தகராறுகளை இச் சங்கங்களின் மூலம் ஒழுங்கு செய்துகொள்ளலாம். தொழிற் சங்கங்கள் தம் செலவிற்காக ஒரு நிதியைச் சேர்த்துக் கொள்ளவும், அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டன.

நம் நாட்டில் தொழிற் சங்க இயக்கம் நன்கு வளர்ச்சியுறவில்லை. ரெயில்வே, தந்தி தபால், அச்சுத் தொழில், ஆலைத் தொழிற் சங்கங்கள் (சிறப்பாக அகமதாபாத் ஆலைத் தொழிலாளர் சங்கம்) இவைகளே நன்கு கட்டுப்பாட்டுடன் அமைந்துள்ளன. அன்றியும் நம் நாட்டில் சில விவசாயத் தொழிலாளர் சங்கங்களும் தோன்றலாயின. அவற்றுள் முக்கியமானவை : (1) 1922-ல் உத்தரப் பிரதேசத்தில் ஏற்பட்ட கிசான் சபை, (2) 1926-ல் பேராரில் ஏற்பட்ட கிசான் சபை, (3) 1935-ல் பேராசிரியர் ரங்கா, திரு. வி.வி. கிரி ஆகியோரால் நிறுவப்பட்ட தென்னிந்திய மானியதார், தொழிலாளர் கூட்டுச் சங்கம், (4) அகில இந்திய கிசான் சபை முதலியனவாம். நம் நாட்டில் 1954-ல் தொழிற் சங்கங்கள் 1295 உள்ளன : (1) அகில இந்திய தேசீயத் தொழிலாளர் காங்கிரஸ் (587); (2) அகில இந்திய தொழிற் காங்கிரஸ் (334); (3) ஹிந்த்-மஸ்தூர் சபா (220); (4) ஐக்கியத் தொழில் யூனியன் காங்கிரஸ் (154).

அகில இந்தியத் தொழிற் சங்கம் ஏற்பட்ட பிறகு தொழிலாளர் நிலை ஓங்கலாயிற்று. அது பன்னாட்டுத் தொழில் ஸ்தாபன சங்கத்தில் இணைந்து தொழிலாளரின் நலனுக்கு நன்கு உழைக்கலாயிற்று. தொழிலாளர் ஒற்றுமையின் மூலம் தங்கள் உரிமைகளையும் நலன்களையும் சங்கங்களின் வாயிலாகப் பெறுகின்றனர். அவர்கள் தனிப்பட்ட முறையிலன்றி ஒருமுகமாக ஒற்றுமையுடன்

தங்கள் சங்கங்களின் மூலமாகக் **கூட்டுப் பேரத்தினுல்** (Collective Bargaining) தங்களது குறைகள் யாவற்றை யும் போக்கிக் கொள்கின்றனர். அவர்கள் அவசியமான போது வேலை நிறுத்தம் (Strike) எனும் பேராயுதத்தைப் பயன்படுத்துவர். இவ் வாயுதம் வெற்றிதர ஒற்றுமை அவ-சியம் வேண்டும். வேலை நிறுத்தக் காலங்களில் சமரசம் ஏற்படாவிடில் முதலாளிகள் ஆலைகளை மூடிவிடுவர். இதுவே கதவடைப்பாம் (Lock out).

**தொழில் தகராறு தீர்க்கச் சில வழிகள் :** கி. பி. 1929-ல் தொழில் சச்சரவுகளைச் சமரசக் குழுக்களின் மூலமாகத் தீர்த்துக் கொள்ள மத்திய அரசாங்கத்தால் தொழில் தகராறு தீர்ச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. 1947-ல் சமரசக் குழுக்-கள் மூலமாகக் கட்டாயம் முதலாளிகள் சச்சரவுகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் அரசாங்கத்தாரால் சட்டம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது. சமரசக் குழுக்கள், தொழில் நீதிமன்றங்கள், விசாரணைக்குழுக்கள் முதலிய வற்றின் மூலமாகத் தொழில் தகராறுகளைத் தீர்க்க ஸ்டேட் அரசாங்கங்கள் அதிகாரங்கள் பெற்றுள்ளன.

## பகுதி 6

**கூட்டுறவும், அரசாங்க சமதர்மமும் :** அரசாங்கமும், முத-லாளிகளும், தொழிற் சங்கங்களும் தொழில் சச்சரவுகளைத் தீர்த்துக்கொள்ள பல வழிகளிலும் முயற்சிகள் செய்த போதிலும் முழுப் பயன் கிடைக்கவில்லை என்பது வெள்-ளிடை மலையாம். இப் பிரச்னைகளைத் தீர்க்கத் தற்காலத் தில் கூட்டுறவும், அரசாங்க சமதர்மமும் சிறந்தவைகளாகக் காணப்படுகின்றன.

வேலை நிறுத்தம் எப்பொழுதும் பயன்தரும் என்பது உறுதியில்லை. எனவே, தொழிலாளர் தங்கள் நிலைமையைச் சீர்படுத்திக்கொள்ள வேறு நல்ல வழிகளைப் பின்பற்றுதல் வேண்டும். 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்னும்

மெய்யுரையை அடிப்படையாகக் கொண்ட கூட்டுறவு முறை சிறந்த தொன்றும். ஒவ்வொருவரும் தம் நலனுக்கும் அனைவர் நலனுக்கும் பாடுபடுவதற்காக ஒன்று சேர்ந்து நடத்துவதே கூட்டுறவாகும்.

கூட்டுறவு இயக்கம் முதலாளித்துவத்திலுள்ள தீங்குகளைப் போக்கவும், சிறப்பாக உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் இடையிலுள்ளோர்க்கு இரையாகாதபடி உதவுகிறது. இவ்வியக்கம் 19-ஆம் நூற்றுண்டில் ஐரோப்பாவில் தோன்றி, இந் நூற்றுண்டின் ஆரம்பத்தில் நம் நாட்டிலும் பரவத் தொடங்கியது. விவசாயிகட்கு உதவி செய்ய கர்சன் பிரபு 1904-ல் ஏற்படுத்திய ஐக்கிய நாணய சங்கச் சட்டம், இவ்வியக்கம் நம் நாட்டில் தோன்றக் காரணமாயிற்று. பின்னர் இவ்வியக்கம் எல்லாத்துறைகளிலும் பரவத் தொடங்கியது. தொழிலாளர் இவ்வியக்கத்தின் மூலம் சிறந்த நன்மைகளை பெறக்கூடும். தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு கடன் வசதிகளைப் பெறலாம்; வீட்டு வசதிகள் செய்து கொள்ளலாம்; வாழ்க்கைக்குரிய பண்டங்களைப்பெறக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஏற்படுத்திக் கொள்ளலாம். கூட்டுறவுப் பாங்கிகளின் மூலம் ஊதியங்களைச் சிறிது சேமித்து வைக்கலாம். மேலும், அவர்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் குறிப்பிட்ட பங்குத் தொகையை அளித்து, ஒரு கூட்டுறவுச் சங்கத்தை நிறுவி, அதன் சார்பில் விரும்பிய தொழிற்சாலையை அமைத்துக் கொள்ளலாம். அதனிடத்தும் தமக்குள்ள நிர்வாகச் சபையை ஏற்படுத்திக் கொள்ளலாம். செய்பொருள்களைச் சேர்த்து வைத்து நல்ல விலைக்கு விற்கலாம். கருவிகள், யந்திரங்கள், மூலப்பொருள்கள் முதலியவற்றை எளிதில் பெறலாம். அரசாங்கத்தினிடமிருந்தும், கூட்டுறவு பாங்கிகளிடமிருந்தும் குறைந்த வட்டிக்குக் கடன் வசதிகள் பெறலாம். இதனல் வரும் இலாபமோ நஷ்டமோ, அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்படும். இதில் தொழிலாளர்களே முத-

லாளிகளாக விளங்குவராதலின் முதலாளி, தொழிலாளி தொல்லைகள் ஏற்படுதல் இல்லை. 1953-ல் குண்டக்கல்லில் (ஆந்திரப் பிரதேசம்) கூட்டுறவு முறையில் பருத்தி நூல் தொழிற்சாலை ஒன்றும், குடிவாடாவில் கூட்டுறவு முறையில் 1956-ல் நெல் மில்லும் நிறுவப்பட்டுள்ளன.

விவசாயத் தொழிலாளரும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கடன் வசதி, விவசாயக் கருவிகள், எரு, நல்ல விதைகள், நீர்ப்பாசன வசதி, விற்பனை வசதி முதலிய பல சௌகரியங்களைப் பெறலாம். குடிசைத் தொழில் வளர்ச்சிக்கும் இம்முறையால் பயன் காணலாம். கூட்டுறவு நாணயச் சங்கங்கள், கூட்டுறவு நுகர்வோர் சங்கம், கூட்டுறவுக் கட்டிடச் சங்கம், கூட்டுறவுப் பாங்கிகள், கூட்டுறவு விற்பனைச் சங்கம், கூட்டுறவுப் பண்ணைகள் முதலியன தொழிலாளருக்கு நலம் செய்து வருகின்றன. ஆனால், இக் கூட்டுறவு பயன்தர ஒற்றுமை, சுயநலமின்மை முதலியன அவசியம் வேண்டப்படுவனவாகும்.

சமதர்மம்: தொழிலாளர் குறைகளைத் தீர்க்க மற்றொரு நவீன மார்க்கம் சமதர்மமாகும். சமதர்மம் ஒரு புதிய பொருளாதாரச் சமூக அமைப்பியல் ஆகும். முதலாளித்துவத்தின் தீங்குகளைப் போக்குவதே இதன் சிறந்த நோக்கமாகும். உற்பத்திக்குச் சாதனமான நிலம், சுரங்கங்கள், மூலதனம் யாவும் சமூக நலனைக் கருதிச் சமூக அதிகாரத்திற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்; செல்வம் தனிப்பட்டவரிடம் குவியாமல் சமூக மக்கள் அனைவரிடமும் அது பொருந்துதல் வேண்டும். உணவு, உடை, குடியிருப்பு முதலியவற்றில் குறையின்றி வாழ்தல் வேண்டும்.

அரசாங்க சமதர்மம்: உற்பத்திக்கு மூலகாரணமான நிலம், சுரங்கப் பொருள்கள், மூலப் பொருள்கள், மூலதனம் முதலிய அனைத்தையும் அரசாங்கம் மேற்கொண்டு தொழிற்சாலைகளை நடத்துவதே அரசாங்க சமதர்மமாகும். இதனால் தொழிலாளர்கள் தமக்கு வேண்டிய நலன்களையெல்லாம்

அரசாங்கத்தினிடம் எளிதில் பெறலாம்; நல்ல ஊதியம் பெறலாம்; முதலாளிகளின் கொடுமைகளிலிருந்து நீங்கப் பெறலாம். நாட்டின் செல்வம் சமூக நலனுக்குப் பாதகமாகா வண்ணம் தனிப்பட்டவரிடம் குவிதல் இதனுல் இல்லை. உற்பத்திப் பெருக்கமும் உண்டு. தொழிலாளரின் நலன் உயர்வதுடன் நாட்டின் பொருளாதார நிலையும் உயர்கிறது. இதில் சில குறைபாடுகள் உண்டு. இதன் வெற்றிக்குத் தன்னலமற்ற ஆட்சியாளரும், பொது மக்களின் ஒத்துழைப்பும் வேண்டும். அரசாங்கமே தொழில்கள் அனைத்தையும் எடுத்து நடத்துதலால் இலாபக்குறிக்கோள் இன்மையால் பொது மக்களுக்கு உற்சாகம் குறைகிறது; தொழில் முன்னேற்றம் அதனுல் தடைப்படுகிறது; வேலை நிறுத்தங்கள் ஏற்படுங்கால் இடையிலிருந்து அதனைத் தீர்ப்பதற்கு ஆதரவற்ற நிலை ஏற்படுகிறது.

நாட்டின் தொழில் அனைத்தையும் அரசாங்கம் எடுத்து நடத்தாமல், முக்கிய அடிப்படைப் பெருந் தொழில்களை மட்டும் அரசாங்கம் எடுத்து நடத்தினுல் மிக்கப் பயனுண்டாம். சிறுவிதத் தொழில்களை தனிப்பட்டோரிடமே விட்டு விடுதல் நலமாம். தற்போது யூனியன் அரசாங்கத்தாரால் இருப்புப் பாதைகள், ஆகாய விமானப் போக்குவரத்து, ரிசர்வ் பாங்கு, இம்பீரியல் பாங்கு, மற்றும் சில பாங்குகள், ஆயுள் இன்ஷூரன்ஸ் முதலியன தேசீயமாக்கப்பட்டுள்ளன. சென்னை அரசாங்கத்தாரால் பஸ் போக்குவரத்தும், மின்சாரமும் தேசீயமாக்கப்பட்டுள்ளன.

## பயிற்சி

1. விவசாயத் தொழிலாளரின் முக்கிய துயரங்கள் யாவை? அவற்றைப் போக்க அரசாங்கத்தின் திட்டங்களுள் மூன்றினைக் குறிப்பிடுக.
2. நம் நாட்டில் தொழிலாளர் சங்க இயக்கம் எங்ஙனம் தோன்றியது? நம் நாட்டிலுள்ள இரு முக்கிய தொழிலாளர் சங்கங்களைக் குறிப்பிடுக.

3. தொழிலாளர் சங்கச் சட்டம் எப்போது இயற்றப் பட்டது? அதன் சிறப்பு யாது?
4. தொழில் தகராறுகளைத் தீர்க்கும் பொருட்டு அரசாங்கத்தின் முக்கியத் திட்டங்கள் யாவை?
5. கூட்டுறவு இயக்கம் தொழிலாளரின் நலனை உயர்த்த எங்ஙனம் உதவும்?
6. அரசாங்க சமதர்மம் என்றால் என்ன? அதன் முக்கிய நன்மை, தீமைகள் யாவை?
7. யூனியன் அரசாங்கத்தாரால் தேசீயமாக்கப்பட்ட சில ஸ்தாபனங்களைக் கூறுக.

---

## அத்தியாயம் 22

### நுகர்வு (Consumption)

ஒருவர் தமக்குத் தேவையான பொருள்களைப் பெறுவதின் மூலம் மனநிறைவு கொள்ளுதலே நுகர்வு எனப்படும். பொருளாதார நடமாட்டங்கள் அனைத்திற்கும் நுகர்வே அடிப்படையாகும். மனிதனின் சுயதேவைப் பூர்த்தியின்மையே அவனுடைய தேவைகளுக்குக் காரணமாகும். மனிதனுடைய தேவைகள் ஓரளவுக்குரிய ஊண், உடை, குடியிருப்பு வசதி முதலியவற்றைப் பற்றியதாகும். இவற்றை மனிதன் தன் முயற்சியாலேனும், அல்லது பிறரின் மூலமேனும் பெறுகின்றான். தேவைகள் ஒவ்வொரு மனிதனுக்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும், ஏற்படுவனவாம். நாகரிக வளர்ச்சிக்கேற்பத் தேவைகளும் விரிகின்றன. அதன் மூலம் நுகர்ச்சி அவாவும் உயருகிறது. மேலும் அத் தேவைகளைப் பொருளுற்பத்திச் சாலைகளின் மூலமாகவேனும், இயற்கை உற்பத்தி மூலமாகவேனும் அவன் பெறுகிறான்.

மக்களின் தேவைகள் இன்றியமையாதவை, சுகத்திற்குரியவை, ஆடம்பரத்திற்குரியவை என மூன்று வகைப் படுவனவாம். குறைந்த அளவில் ஊண், உடை, குடியிருப்பு

வசதி, வன்மையை வளர்க்கக் கூடிய பால், முட்டை முதலிய பொருள்கள், தேநீர் பருகுதல், புகையிலை உபயோகித்தல் போன்று பழக்கத்தின் மூலம் வழக்கமாக வந்துள்ளவை முதலியன இன்றியமையாத தேவைகளாகும். திறமை உயரும் பொருட்டு பயன் படுத்தும் மேஜை, நாற்காலி, வேலையாட்கள், வாகன வசதி முதலியன சுகத்திற்குரிய தேவைகளாகும். உயர்ந்த ஆடை, ஆபரணங்கள், வானுயர் மாளிகைகள் ஆகிய இன்ப வாழ்க்கைக் குரியவை ஆடம்பரத்திற்குரிய தேவைகளாம். தேவைகள் இன்ன இன்ன என்று வரையறுத்துக் கூறுதல் இயலாது. தேவைகளுக்கு அளவில்லை; அவை பெருகிக்கொண்டே போகும். தேவைகள் ஒன்றை யொன்று தொடர்ந்து நிற்கின்றன. [பௌண்டன் பேனு வாங்கினுல் மை வாங்குதல் தொடர்ந்தே இருக்கும்.]

**மன நிறைவு. கொள்ளுதல் பணத்தின் மதிப்பிற்கு ஏற்ற பொருள் பெறுதல்:** குறைந்த செலவில் மக்கள் தம் தேவைகளைப் பெற்று மனம் நிறைவு பெறுதலே பொருளாதார நடமாட்டத்தின் நோக்கமாகும். பசியுடையவன் குறித்த விலையில் உணவு வாங்கினுல், தன் பசி தீரும் என்று அவன் கருதலாம். இவ்வாறு கொடுக்கப்படுகின்ற விலை அவனுடைய தேவை அல்லது விருப்பத்தின் மிகுதியையும், மன நிறைவு கொள்ளுதலின் அளவையும் அறிவிப்பதாகும். மனத்திருப்தியைப் பணத்தின் மூலமாக அளவிடுதல் முடியாது. திருப்தி பெருதலில் அனைவருக்கும் ஒரே விதமான இயல்பு இல்லை; குறித்த ஒரு பொருளில் அனைவருக்கும் ஒரே விதமான திருப்தி ஏற்படுதல் இல்லை. குறித்த ஒரு மனிதன் குறித்த ஒரு பொருள் மூலம் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு விதமான திருப்தியை அடைகிருன். எனவே, மன நிறைவைத் திட்டமாக அளவிடுதல் இயலாது. மேலும், அதனைப் பணத்தினுல் மட்டும் அளவிடுதல் சரியன்று. விலையின் நிலை பல காரணங்களை

ஒட்டியதாகும். ஒவ்வொரு பொருளுக்கும் அதற்கென்று ஒரு விலையுண்டு. விற்பவன் இலாபத்தைக் கருதும்போது வாங்குபவன் தன் அனுகூலத்தைக் கருதுகிருன். இவ்விரு நிலையையும் ஒட்டியே விலை நிர்ணயிக்கப்படுகிறது: எனவே, விலையின் இயல்பு வாங்குவோனின் திருப்திமீது ஆதாரப்பட்டுள்ளது. பொருள் வாங்குவதில் ஒருவன் பணத்திற்குத் தக்க மதிப்பைப் பெறுகிருன் என்று கூறுதல் இயலாது.

**பொருளுற்பத்தி நுகர்வுக்கேற்ப ஒத்தியங்குதல்:** பொருளுற்பத்திக்கும் அதன் நுகர்வுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பொருள் நுகர்வின் பூர்த்திக்குப் பொருளுற்பத்தி ஏற்றவாறு அமைதல் வேண்டும். விவசாய நாடு ஒன்று மிகுதியான உணவுப் பொருள்களாலும், மூலப் பொருள்களாலும் நிறைந்து விளங்கலாம். ஆனுல், அது செய்தொழிற் பொருள்களில் பின்தங்கி நிற்கக்கூடும். கைத்தொழில் நாடொன்று செய்தொழிற் பொருள்களை மிகுதியாய் உற்பத்தி செய்யாலம்; ஆனுல், உணவுப் பொருள் உற்பத்தியில் பின்தங்கி நிற்கக்கூடும். இத்தகைய நிலையில் நுகர்விற்கேற்ற உற்பத்திக் குறைவு ஏற்படுதலைக் காணலாம். விவசாயம், கைத்தொழில் ஆகிய இரண்டிலும் முன்னேற்றம் அடைந்துள்ள ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளிற்ருன் உற்பத்தியும் நுகர்வும் ஒத்த சுயதேவை பூர்த்தியாகிறது. இந்தியா, பாகிஸ்தான், சீன, எகிப்து போன்ற நாடுகளில் விவசாயப் பொருள்கள் மிகுதியாக இருப்பினும், அவை அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி போன்ற சிறந்த ஆக்கத் தொழில் நாடுகளிலிருந்து ஆக்கப் பொருள்களைப் பெறல்வேண்டி வருகிறது. வர்த்தக உறவும், பன்னுட்டு நட்பும், உள்நாட்டு நுகர்வுக்கு உதவுகின்றன. ஆனுல், நுகர்வுப் பொருள்களைப் பெறுவதில் பல நாணய மாற்று முறைகள் தடைகளாய் உள்ளன. நம் நாட்டைப் பொறுத்த மட்டில் நுகர்வுக்கு ஏற்ப விவசாயப் பொருள்களும், கைத்தொழில் உற்பத்திப் பொருள்களும் குறை-

வாகவே உள்ளன. நம் நாடு விவசாய நாடாக இருப்பினும் உணவுப் பொருள்களின் உற்பத்தியும், மூலப்பொருள் களின் உற்பத்தியும் போதிய அளவில் இல்லை. இவற்றின் பொருட்டு நாம் பிற நாடுகளிலிருந்து, மூலதனம் யந்திரங் களுடன் தொழில் திறம் பெற்றவர்களையும் உதவியாகப் பெற்று நம் உற்பத்தியைப் பெருக்குதல் வேண்டும். இந்தியா பன்னாட்டு நாணயச் சங்கத்தில் அங்கமாய் விளங்குவதை உற்பத்திப் பெருக்குக்குரிய பெரும் மூல-தனத்தைக் கடனாகப் பெறுதலில் பயன்படுத்திக் கொள்ளு தல் நன்றாகும். இந்தியாவில் பதுங்கிக் கிடக்கும் மூல-தனங்களை வெளிப்படுத்தவும், தொழிற் திறமையை வளர்க்கவும் அரசாங்கம் தெளிவான கொள்கையைப் பின்பற்றுதல் வேண்டும். இங்ஙனம் செய்வதால் உற்பத்தி யையும் நுகர்ச்சியையும் ஈடு செய்து நாட்டை வளமாக்க லாம்.

## பயிற்சி

1. நுகர்வு என்பது யாது?
2. நமது தேவைகள் எத்தனை வகைப்படும்? அவற்றின் பொது லக்ஷணங்கள் யாவை?
3. பொருளின் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?
4. பொருள் நுகர்ச்சியும், பொருள் உற்பத்தியும் ஒத்து இயங்காமைக்குக் காரணம் என்ன?

# அத்தியாயம் 23

## பாங்குகளும், கொடுக்கல் வாங்கல்களும்

### பகுதி 1

**பாங்குகளும் அவற்றின் கடமைகளும்:** உலகில் பொருளாதார நிலைக்குப் பாங்குகளும், கொடுக்கல் வாங்கல்களும் இன்றியமையாதனவாய் உள்ளன. பாங்குகள் நம் நாட்டில் ரிக்குவேத காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளன. பண்டைக் காலத்தில் நம் நாட்டில் வியாபாரத்திற்கும், கைத் தொழிலுக்கும் நிதி ஸ்தாபனங்கள் உதவி செய்துவந்தன. கி. பி. 1700-ல் தான் நம் நாட்டில் முதல் ஐக்கிய மூலதன பாங்கு ஏற்பட்டது. 19-ஆம் நூற்றுண்டில் பம்பாய், வங்காளம், சென்னை ஆகிய இம்மூவிடங்களிலும் ஒவ்வொரு ராஜதானி பாங்குகள் ஏற்பட்டன.

பாங்குகள் பெரும்பாலும் கூட்டு ஸ்தாபனங்கள் ஆதலின், அவை பல சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு சமூகப் பொருளாதார நலனுக்குப் பணியாற்றி வரும். அவை பொது மக்களிடமிருந்து பங்கு வைப்புக்களைப் பெற்று, அவற்றைப் பாதுகாக்கின்றன. அவற்றுக்குச் சிறிதளவு வட்டியும் கொடுக்கின்றன ; மக்களிடைச் சிக்கன வாழ்க்கையை ஊக்கி, அவர்கள் தம் பணத்தை மிச்சப் படுத்துமாறு செய்கின்றன ; சொத்து முதலிய தக்க பெறுமானங்களின் மீதும் தாம் பெற்றுள்ள பணத்தை உற்பத்தி, வியாபாரம், தொழில் முதலியவற்றின் வளர்ச்சிக்கும் சிறிது அதிக வட்டிக்குக் கடன் கொடுத்து உதவுகின்றன. அன்றியும் செக்குகள், டிராப்டுகள், நாணய மாற்று பில்கள் முதலியவற்றின் மூலமாய் பாங்குகள், ஒரு வகை நாணயமாற்று வசதியை உண்டாக்குகின்றன. மேலும், அவை அயல்நாட்டு வர்த்தகத்திற்கும், அயல்நாட்டு நாணய மாற்றத்திற்கும், பயன் தரும் பொதுக் காரியங்கட்கும் உதவி புரிகின்றன. இவை பங்காளரின் ஏஜண்டு

களாக நின்று, அன்னாரின் வரவு செலவுகளைக் கவனித்து வருகின்றன. பாங்குகள் பங்காளரின் விலையேறப்பெற்ற அணிவகைகளையும், பிறவற்றையும் காத்து வைத்து உதவுகின்றன. இங்ஙனம் தற்காலத்தில் பாங்குகள் எண்ணற்ற அலுவல்களை ஆற்றி, பொருளாதாரப் பேராற்றைப் பெருக்கெடுத்தோடுமாறு செய்து வருகின்றன.

## பகுதி 2

**நம் நாட்டு பாங்குகள்**: நம் நாட்டு பாங்குகள் பல வகைப்படும். அவை: (1) **இந்திய ஐக்கிய மூலதன பாங்குகள்**, (2) **நாணய மாற்று பாங்குகள்**, (3) **கூட்டுறவு பாங்குகள்**, (4) **நில அடமான பாங்குகள்**, (5) **ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா**, (6) **ரிசர்வ் பாங்கு** முதலியனவாகும்.

1. **இந்திய ஐக்கிய மூலதன பாங்குகள் (Indian Joint Stock Banks)**: இவை பெரும்பாலும் இந்தியப் பங்குதாரர்களின் மூலதனத்தினால் இந்தியர்களாலேயே நடத்தப்பட்டு வருகின்றன. இவை இந்தியக் கம்பெனிகளின் சட்டப்படிப் பதிவு செய்யப்பட்டவை. இவற்றின் நிர்வாகஸ்தர்கள் பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப் படுவர். இவை பங்காளரிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும், பணத்தை தவணை குறித்த வைப்பு (Fixed Deposits), சேமிப்பு வைப்பு (Savings Deposits), நடை முறை வைப்பு (Current Deposits) முதலிய முறைகளில் பெற்று, குறித்த வட்டியை அவர்கட்குக் கொடுக்கின்றன. இவ் வழியில் பெறும் பணத்தை இப் பாங்குகள் வியாபாரிகளுக்கும், தொழில் துறையாளருக்கும் வட்டிக்குக் கடன் தந்து உதவுகின்றன. உள்நாட்டு வியாபாரத்தையும், கைத்தொழில்களையும் வளர்க்கக் கடனுதவியளிப்பதே அவற்றின் சிறந்த நோக்கமாகும். நம் நாட்டின் ஐக்கிய மூலதனப் பாங்குகளில் முக்கியமானவை **பாங்கு ஆப் இந்தியா, மத்திய இந்திய பாங்கு, பஞ்சாப் தேசிய பாங்கு,**

இந்தியன் பாங்கு, இந்தோ-கமர்ஷியல் பாங்கு முதலியன வாகும்.

2. நாணய மாற்று பாங்குகள் (Exchange Banks): அயல் நாட்டு வியாபாரத்திற்கு உதவுவதே இவற்றின் முக்கிய நோக்கமாகும். இவை சிறப்பாக அயல்நாட்டு ஸ்தாபனங்களேயாம். இவற்றின் தலைமைக் காரியாலயங்கள் அயல் நாடுகளில் இருக்கின்றன. அவற்றின் கிளைகள் உலகத்தில் பல பாகங்களிலும் உள்ளன. நாணய மாற்று பில்களைப் பெற்று, அவ்வந் நாட்டு நடைமுறை நாணயங்களைக் கொடுக்கின்றன. இவை நம் நாட்டிற்கும், உலகிலுள்ள பிற நாடுகளுக்கும் வாணிபத் தொடர்பை உண்டாக்குகின்றன. நம் நாட்டில் இத்தகைய பாங்குகளில் முக்கியமானவை சார்ட்டர்டு பாங்க் ஆப் இந்தியா, மர்க்கன்டைல் பாங்கு, நேஷனல் பாங்க் ஆப் இந்தியா, லாயிட்ஸ் பாங்கு முதலியனவாகும். (இவை தற்போது நம் நாட்டில் 15 ஆகும்.)

3. கூட்டுறவு பாங்குகள்: இப் பாங்குகள் பல சிறு பங்குதாரரின் மூலதனங்களைக்கொண்டு கூட்டுறவு முறையில் நடைபெறுவனவாம். இவற்றின் நிர்வாகஸ்தர்கள் பங்காளரால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இவை நம் நாட்டில் எங்கும் ஏற்பட்டுள்ளன. இவை இலாபத்தைக் கருதாமல் ஏழைகளுக்கு உதவுதல், சமூகத்தில் கூட்டுறவை வளர்த்தல், நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தல் ஆகியவற்றையே தம் சீரிய நோக்கங்களாகக் கொண்டுள்ளன. கி. பி. 1904-ல் விவசாயிகட்கு உதவும் பொருட்டு ஏற்பட்ட கூட்டுறவு நாணயச் சங்கச் சட்டமே இவற்றின் தோற்றத்திற்குக் காரணமாகும். இவை யாவும் அரசாங்கத்தில் பதிவு செய்யப் பெற்றவை. இவை பல தொழிற் துறைகட்கும் உதவும்படி ஏற்பட்டுள்ளன. விவசாயம், பண்டவிற்பனை, வீடுகட்டுதல், குடிசைத் தொழில்கள், வாழ்க்கைத் தேவை, நெசவு முதலியவற்றிற்குப் பொருள்

உதவி செய்யத் தனித்தனிக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவை பங்குதாரரின் மூலதனத்தைப் பெறுவதுடன் பொதுமக்களின் வைப்புகளையும், அரசாங்கத்தின் உதவியையும் பெற்றுப் பொதுப்பணி செய்கின்றன. இவை கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள், நகரக் கூட்டுறவு பாங்குகள், ஜில்லா அல்லது மத்தியக் கூட்டுறவு பாங்குகள், ராஜ்ஜியக் கூட்டுறவு பாங்குகள் என்று தொடர்ந்த அமைப்பில் உள்ளன.

கிராமக் கூட்டுறவுச் சங்கமே அடிப்படைக் கூட்டுறவுச் சங்கமாகும். பத்து அங்கத்தினர்களுக்குக் குறைவின்றி இச்சங்கத்தை அமைக்கலாம். இவை விவசாயத் தொழிலுக்கும் பிற கிராம அலுவல்களுக்கும் உதவுகின்றன. நகரக் கூட்டுறவுச் சங்கங்கள் வியாபாரிகட்கும், சிறுவிதத் தொழில்களுக்கும், நடுத்தர வகுப்பினர்க்கும் பண உதவி புரிகின்றன. மத்திய கூட்டுறவு பாங்குகள் கிராம நகரக் கூட்டுறவுச் சங்கங்கட்குப் பண உதவி செய்து அவற்றைக் கண்காணித்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தையும் கண்காணித்து அவற்றை நல்ல முறையில் நடத்தி வருவது ராஜ்ஜியக் கூட்டுறவு பாங்காகும். மத்திய பாங்குகளுக்கு வேண்டிய பணத்தைத் தலைமையான ராஜ்ஜிய பாங்கே கொடுத்து வருகிறது.

**கூட்டுறவு பாங்குகள் வளர்க்கும் நலன்கள்:** இவை பங்குதாரர் செலுத்திய மூலதன விகிதத்திற்கேற்பக் குறைந்த வட்டியில் கடன் அளித்து, அக்கடனைச் சிறுசிறு தொகையாகப் பல தவணைகளில் பெறுகின்றன. இப் பாங்குகளால் விவசாயம் வளர்க்கப்படுகின்றது. விவசாயிகளின் துயரங்கள் போக்கப்படுகின்றன. குடிசைத் தொழில்களும், சிறுவிதத் தொழில்களும் வளர்க்கப்படுகின்றன. கிராமப் பொருளாதாரம் முன்னேற்றம் அடைகிறது. கிராம மக்கள் சுகாதார மருத்துவக் கல்வி வசதிகளைப் பெறுகின்றனர். மக்களிடையே சேமிப்புப் பழக்கமும்

சிக்கனமும் ஏற்படுகின்றன. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்னும் உயர்ந்த தத்துவம் மக்கள் உள்ளத்தில் வளர்ந்து பயன் தருகிறது. 1956-ல் நம் நாட்டில் 6025 கூட்டுறவு பாங்குகள் உள்ளன.

4. **நில அடமான பாங்குகள்**: இவை கூட்டுறவு இயக்கத்தின் சார்பில் ஏற்பட்டவை. இவைகளும் கூட்டுறவு பாங்குகளைப் போல் விவசாயிகட்குப் பணம் உதவி செய்வதையே சிறந்த நோக்கமாகக் கொண்டுள்ளன. நில அடமானத்தின்மீது கடனைக் கொடுத்துக் குறைந்த வட்டியில் பல தவணைகளில் இவை பணத்தைப் பெறுகின்றன. 1920-ல் முதலில் பஞ்சாபில் ஏற்பட்டது.

**ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா**: கி. பி. 1921-ல் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று ராஜதானி பாங்குகளும் இணைக்கப்பட்டு இந்தியன் இம்பீரியல் பாங்கு என்று ஒன்று ஏற்பட்டது. இது 1935-ல் ரிசர்வ் பாங்கு ஏற்படும்வரை அரசாங்க பாங்கைப்போல் செயலாற்றி வந்தது. ஆனால், மத்திய பாங்கின் அதிகாரங்கள் இதற்கு ஏற்படவில்லை. இதன் கிளை ஸ்தாபனங்கள் நாடெங்கும் ஏற்பட்டுள்ளன. தொழில் வளர்ச்சிக்கும், அயல்நாட்டு நாணய மாற்றத்துக்கும் இது உதவுகிறது. தற்போது இது ரிசர்வ் பாங்கின் கிளை இல்லாத இடத்தில் அதன் ஏஜெண்டாக உள்ளது. 1955-ல் நம் யூனியன் அரசாங்கத்தாரால் இது தேசீயமாக்கப்பட்டு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா என்னும் புதுப் பெயருடன் விளங்குகிறது. இதன் தலைமைக் காரியாலயம் பம்பாயில் உள்ளது. இதன் தலைவர் ஸ்ரீ P. C. பட்டாச்சாரியா ஆவர்.

6. **ரிசர்வ் பாங்கு**: 1926-ல் இந்திய அசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட **ஹில்டன் யங் கமிஷன்** நம் நாட்டு நாணயச் செலாவணியைக் கவனிக்கவும், பொருளாதார நிலையைப் பாதுகாக்கவும், வாணிபம், கைத்தொழில் முதலியவற்றை வளர்க்கவும், நாட்டிலுள்ள பாங்குகளை ஆட்சி

புரியவும், அரசாங்கத்தின் நிதி நிலைமையைக் கண்காணிக்கவும் இந்தியன் ரிசர்வ் பாங்கு எனும் பெயர் கொண்ட மத்திய பாங்கு ஒன்று ஏற்படவேண்டுமென்று எடுத்துக் கூறியது. அவ்வறிக்கைக் கிணங்க 1935 ஏப்ரல் முதல் தேதியில் ரிசர்வ் பாங்கு நிறுவப்பட்டது.

**அமைப்பு :** இது 5 கோடி ரூபாய் மூலதனங் கொண்ட பங்காளரின் பாங்காக ஏற்பட்டது. அதன் காரியாலயம் பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை முதலிய இடங்களில் ஏற்பட்டன. இதற்குத் தலைமை அதிகாரியாகக் கவர்னர் ஒருவரும், அவர் கீழ் இரு உதவி கவர்னர்களும் இந்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டனர். 1949 ஜனவரி முதல் தேதியன்று இது தேசீயமாக்கப்பட்டு முழு அரசாங்க அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. தற்போது இதன் கவர்னர் ஸ்ரீ H. V. R. அய்யங்கார் என்பவராவர். இப்பாங்கின் தலைமை ஆபீஸ் பம்பாய் நகரத்திலுள்ளது.

**ரிசர்வ் பாங்கியின் முக்கிய அதிகாரங்களும் அலுவல்களும் :** இந்தியாவிலுள்ள பாங்குகளுக்கு எல்லாம் இதுவே அரசாய் விளங்குகிறது (Bank of Banks). இந்திய யூனியனிலுள்ள ஐக்கிய மூலதன பாங்குகள் அனைத்தையும் அடக்கி ஆள இதற்கு அதிகாரம் உண்டு. கூட்டுறவு பாங்குகள் நீங்கலாக மற்றுள்ள பாங்குகள் எல்லாம் ரிசர்வ் பாங்கின் அனுமதியின்றிச் செயலாற்றுதல் முடியாது. கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதற்கும், இடமாற்றம் பெறுவதற்கும் பாங்குகள் ரிசர்வ் பாங்கின் அதிகாரத்தை பெறுதல் வேண்டும். ஒவ்வொரு பாங்கும் ரிசர்வ் பாங்கில் குறிப்பிட்ட மூலதனத்தை சேமநிதியாகப் போட்டு வைத்தல் வேண்டும், பாங்குகளுக்கு ஏற்படும் நெருக்கடிக் காலங்களில் ரிசர்வ் பாங்கு அவைகளுக்கு உதவி அளிக்கும். நாட்டின் செலாவணியையும் அரசாங்க நிதி நிலைமையையும் கண்காணிப்பது இதன் சிறப்பான அலுவலாகும். அரசாங்கத்தின் சார்பாக கரன்ஸி நோட்டுகளை அச்சிட்டு, இது வெளியிடு

கிறது. அரசாங்கத்தின் சார்பாகக் கடன் கொடுக்கல், வாங்கல்களை இது செய்யும். தங்கம், வெள்ளி வாங்குதல், விற்றலை இதுவே செய்துவருகிறது. நம் நாடு பன்னாட்டு நாணயச் சங்கத்தில் அங்கம் வகித்து வருதலின் காரண மாக முன்போல் ஆங்கில் ஸ்டெர்லிங்கு நாணய மாற்றத்தை மட்டும் அன்றிப் பிற அயல் நாடுகளின் நாணய மாற்றங் களையும் கவனித்து வருகிறது. இந்திய யூனியனுக்கு ரிசர்வ் பாங்கு, பன்னாட்டு நாணயச் சங்கத்தின் ஏஜெண்டாக இருந்து வருகிறது. இதில் வைக்கப்படும் பணத்திற்கு வட்டியில்லை. வர்த்தகம் செய்வதிலும், தொழில் செய்வதிலும் இது ஈடுபடக்கூடாது; சொத்தின் பேரில் தனிப் பட்டவர்களுக்குக் கடன் கொடுத்தல் கூடாது. சுருங்கக் கூறின், இது நம் நாட்டு பாங்குகளுக்குச் சர்வாதிகாரி யாக வீற்றிருந்து நாட்டின் பொருளாதார நிலையைப் பாதுகாத்து வருகிறது. தற்போது 500 பாங்குகளுக்குமேல் இதன் அதிகாரத்தின் கீழ் உள்ளன.

**பாங்குக் கம்பெனிகளின் சட்டம்:** 1949-ல் பாங்குக் கம்பெனிச் சட்டம் ஏற்பட்டது. 1950-ல் இச்சட்டம் மறுபடியும் சீர்திருத்தப்பட்டது. இச்சட்டம் கூட்டுறவு நாணய பாங்குகள் நீங்கலாக மற்ற எல்லா இந்திய பாங்குகளுக்கும் பொருந்தும். நம் நாட்டில் இந்திய பாங்குகளில் மட்டுமின்றி, அயல் நாட்டு பாங்குகளிலும் இந்தியப் பங்காளரின் நலனை பாதுகாத்தல் இச் சட்டத்தின் நோக்கமாகும். இதன்படி எல்லாப் பாங்குகளும் ரிசர்வ் பாங்கின் லைசென்ஸ் பெறல் வேண்டும். எந்த வர்த்தக பாங்கும் பங்குதாரரின் மூலதனத்திற்குப் பாதகமாக வர்த்தக அலுவல்களில் ஈடுபடுதல் கூடாது. அரசாங்கத்தில் பதிவு செய்து கொண்டுள்ள பாங்குகள் அனைத்தும் ரிசர்வ் பாங்கியில் குறிப்பிட்ட பணம் இட்டுவைத்தல் வேண்டும்.

மேற்கூறிய பாங்குகள் அன்றித் தபாலாபீஸ்தோறும் சேமிப்புப் பாங்குகளும் மக்களுக்குச் சேமிப்பு முறையை

ஊக்கி வருகின்றன. இந்தியத் தேசீயச் சேமிப்புத் திட்டப் படி பொது மக்களின் வைப்புகளையும் அவை பெறு கின்றன.

## பகுதி 3

**இந்திய நடைமுறை நாணயம்:** ஆதியில் மக்கள் பண்ட-மாற்று முறையில் பொருள்களைப் பெற்றுவந்தனர். பண்-டங்களே, தேவையான பண்டங்களுக்கு நாணயமாக நின்று உதவின. நாகரிகம் வளரத் தொடங்கவே, மனிதர்களின் தேவைகளும் பெருகலாயின. அதன் விளைவால் பண்ட-மாற்று முறையில் வேறு ஒரு மாறுதலுக்கு அவசியம் ஏற் பட்டது. அதுவே நாணய முறையாகும். நாளடைவில், வாங்குவதற்கும் விற்பதற்கும் பணமே ஆதாரமாய் விளங்கி வரலாயிற்று. இன்று பொருளாதார உலகத்திற்குப் பணமே உயிர்நாடியாகும். ஒரு நாட்டில் நடைமுறையிலுள்ள பணத் திற்கு நடைமுறை நாணயம் (Currency) என்று பெயர். இது நாட்டிற்கு நாடு வேறுபடும். அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கனடாவிலும் டாலர் சென்ட்டும்; இங்கிலாந்தில் பவுன், ஷில்லிங், பென்ஸும்; ஹாலந்தில் கில்டரும்; பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்விட்ஸர்லாந்து இவற்றில் பிராங்கும்; ருஷியாவில் ரூபுலும்; ஜப்பானில் யென்னும்; நம் நாட்டில் ரூபாயும் நயாபைசாவும் நடைமுறை நாணயங்களாகும்.

தற்போது நம் நாட்டு நாணயங்கள் உலோக நாணயங்-கள், காகித நாணயங்கள் என இரு வகைப்படும். உலோக நாணயங்கள், வெள்ளி, நிக்கல், செம்பு முதலியவற்றால் செய்யப்பட்டுள்ளன. காகித நாணயங்கள் ஒரு ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரையில் உள்ளன.

1757-ல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியால் முதல் இந்திய ரூபாய் அச்சிடப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியில் கி. பி. 1835 முதற் கொண்டு வெள்ளி ரூபாய் நாணயம் பிரிட்டிஷ் இந்தியா முழுமைக்கும் நடைமுறை நாணயமாக ஏற்பட்-

டது. அது 180 கிரெயின் எடையில் 165 கிரெயின் சுத்த வெள்ளியைக் கொண்டிருந்தது. நம் நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டது முதற்கொண்டு நமது ரூபாய் நாணயம் இங்கிலாந்தின் பவுன், ஸ்டெர்லிங் நாணய முறையுடன் இணைக்கப்பட்டது. கி. பி. 1864-ல் ஒரு சவரனின் மதிப்பு 10 ரூபாய் ஆக இந்திய அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப் பட்டது. ஆனால், தங்கம், சட்டச் செலாவணி நாணயம் (Legal Tender) ஆகவில்லை. 1920-ல் சவரன் 10 ரூபாய் வீதம் சட்ட நாணயச் செலாவணியாயிற்று. அவ்வாண்டில் ரூபாயின் மதிப்பு 2 ஷில்லிங் ஆயிற்று. கி. பி. 1931-ல் உலகப் பொருளாதார நெருக்கடி காரணமாக, இந்தியா தங்க நாணயத் திட்டத்தை விட்டுவிட்டது. இந்திய ரூபாய், ஆங்கில பவுன் ஸ்டெர்லிங்குடன் ஒரு ரூபாய்க்கு 1 ஷில்லிங் 6 பென்ஸ் நாணய மாற்ற விகிதத்தில் இணைக்கப்பட்டது. இவ் விகிதமே இன்றும் இருந்து வருகிறது.

1900-க்குப் பிறகு இந்திய ரூபாயிலுள்ள வெள்ளி உலோக விகிதம் வரவரக் குறையத் தொடங்கிற்று. தற்போதுள்ள வெள்ளி நாணயத்தில் வெள்ளி விகிதம் சொற்பமே. அது நிக்கல் வெள்ளி ரூபாயாக ஒரு பிரதி நாணயமாக (Token coin) விளங்கி வருகின்றது. (1952-ல் கல்கத்தாவின் பகுதியிலுள்ள அலிப்பூரில் ஒரு பெரிய நாணயம் அச்சிடும் சாலை நிறுவப்பட்டது.)

காகித நாணயங்கள் அரசாங்கச் சார்பில் ரிசர்வ் பாங்கினால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. அவை நம்பிக்கை ஆதாரமான (Fiduciary) நடைமுறை நாணயம். அவை கடன் உறுதிச் சீட்டுகள் போல் (Promissory Notes) விளங்குவனவாம். (காகித நாணயம் முதன் முதலாக இந்தியாவில் இராஜப் பிரதிநிதி கானிங் காலத்தில் 1862-ல் ஜேம்ஸ் வில்ஸன் என்னும் நிதி ஆலோசகரால் ஏற்படுத்தப் பட்டது.) நடைமுறையில் இருக்கும் காகித நாணயங்களின்

மதிப்பில் 40% ரொக்கமாக நாணயத்தில் ரிசர்வ் பாங்கில் இருத்தல் வேண்டும். 1955-ல் நம் யூனியன் பார்லிமெண்ட் இனி நம் நாட்டில் தசாம்ச நாணய முறையைப் பின்பற்றச் சட்டம் ஒன்றை இயற்றியுள்ளது. இது 1957 ஏப்ரல் முதல் அமுலுக்கு வந்துள்ளது.

### பயிற்சி

1. *பாங்குகளின் முக்கிய அலுவல்கள் யாவை ?*
2. *கூட்டுறவு பாங்குகளால் ஏற்படும் பயன்கள் யாவை ?*
3. *ரிசர்வ் பாங்கு எப்போது, எந்த நோக்கத்துடன் நிறுவப்பட்டது ? அதன் முக்கிய அதிகாரங்களும் அலுவல்களும் யாவை ? அது எப்போது தேசீயம் ஆக்கப்பட்டது ?*
4. *தற்சமயம் ரிசர்வ் பாங்கின் கவர்னர் யார் ?*
5. *அமெரிக்காவின் நடைமுறை நாணயம் எது ?*
6. *ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் முக்கிய அலுவல்கள் எவை ?*
7. *தசாம்ச நாணய முறை என்பது என்ன ?*

---

## அத்தியாயம் 24

### இன்ஷுரன்சு

தற்காலப் பொருளாதார உலகத்தில் இன்ஷுரன்சு திட்டம் மிகச் சிறந்த பணி ஆற்றி வருகின்றது. வாழ்க்-கைத் துறைகளில் மக்களுக்கு இன்னல்கள் பல ஏற்படுவது இயல்பே. சிலர் எதிர்பாராமல் இறக்கின்றனர். சிலர் படுகாயமுற்றும், அங்கஹீனமாயும் வேலை செய்யத் தகுதியற்றவராகின்றனர். சிலர் வாழ்க்கையில் தம் தொழிலை இழந்து வருந்த நேரிடுவதும் உண்டு. தீ, வெள்ளம் முதலிய

இயற்கை விபத்துக்களுக்கும் சிலர் உள்ளாகலாம். ஆதலால், இத்தகைய நிலையில் மக்களும், தம்மைச் சேர்ந்தோரும் முற்றும் துயர்வுருவண்ணம் பாதுகாக்கும் பொருளாதார உதவியே இன்ஷுரன்சு முறையாகும்.

இன்ஷுரன்சு முறைகள் மக்களின் வாழ்க்கைத் துறைக் கேற்பப் பலவகைப்படும். சில, ஆயுள், சொத்துக்கள் சம்பந்தமாக உதவியளிக்கின்றன. சில, கட்டிடங்கள் தொழிற்சாலைகள் முதலியன தீ விபத்தினால் கேடுறின், அவற்றின் மதிப்புத் தொகையைக் கொடுத்து உதவுகின்றன. சில, கப்பல்கள், மோட்டார்கள் முதலியவற்றிற்குப் பாதுகாப்பளிக்கின்றன. சில, தொழிலாளர் நோய்வாய்ப் படுங்கால் அவர்கட்கு உதவுவன. இன்ஷுரன்சு திட்டப்படி குறிப்பிட்ட காலம் வரை, குறிப்பிட்ட தொகையைத் தவணை மூலம் கட்டிவிடுதல் வேண்டும். ஒருவர் குறிப்பிட்ட கால அளவு வரையும் மாதம், கால், அரை, ஓராண்டுத் தவணைகளில் குறிப்பிட்ட தொகையைச் செலுத்துவர். இப்படிச் செலுத்தும் தவணைக் கட்டணத்திற்குப் பிரிமியம் என்று பெயர். அவர் இன்ஷுரன்சு ஸ்தாபனங்களிலிருந்து பெறும் பாதுகாப்பு உறுதிப் பத்திரத்திற்குப் பாலிஸி (Policy) என்று பெயர். மத்தியில் அவர் இறக்க நேரிடில், உற்றார் உதவி பெறுகின்றனர். மேல் நாடுகளில் உள்ளவாறு நம் நாட்டில் இன்ஷுரன்சு நம் ஜனத்தொகைக்குத் தக்கவாறு வளர்ச்சியுறவில்லை. 1956-ல் ஆயுள் இன்ஷுரன்சு முறையை யூனியன் அரசாங்கம் தேசீயமாக்கிவிட்டது. மற்ற முறைகளைச் சில கம்பெனிகள் நடத்தி வருகின்றன.

இன்ஷுரன்சு திட்டத்தால் ஏற்படும் நன்மைகள் அளவற்றனவாம். கட்டாய சேமிப்புப் பழக்கம் ஏற்படுகிறது. தள்ளாத காலத்தில் சுகவாழ்க்கைக்கு இன்ஷுரன்சு உதவுகின்றது. நம் சொத்துக்கள் பலவிதமான விபத்துக்களிலிருந்து காக்கப்படுகின்றன. வேலை செய்பவர்கள்

வேலையை இழந்த காலத்திலும், தொழிலாளர்கள் தொழில் துறை விபத்துக்களால் வேலை செய்யத் தகுதியற்றவராக ஆகிவிடும்போதும் இன்ஷுரன்சு உதவுகிறது. சுருங்கக் கூறின் இன்ஷுரன்சு திட்டம் மக்களுக்கு எதிர்பாராத ஆபத்துக்கள், நஷ்டங்கள் முதலியன ஏற்பட்டால் அவற்றிலிருந்து மீள்வதற்கு முன் ஜாக்கிரதையாகப் பணத்தைச் சேமித்து வைக்கவும், பொருள் உதவி பெறவும் உதவுகிறது. நாட்டின் பொருளாதார நிலை உயர்வுக்கு இன்ஷுரன்சு மிகவும் உதவுகிறது.

பயிற்சி

1. இன்ஷுரன்சு என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? இன்ஷுரன்சால் ஏற்படும் நன்மைகள் யாவை?
2. பிரிமியம், பாலிஸி என்றால் என்ன?

---

# அத்தியாயம் 25

## பொது நிதி (Public Finance)

### பகுதி 1

**அரசாங்க வரவு செலவினங்கள் :** நாகரிக உலகில் சமூகப் பெருக்கத்திற் கேற்றவாறு அரசாங்கத்தின் அலுவல்களும் அதிகரிக்கின்றன. நாட்டைப் பகைவர்களிடமிருந்து காத்தல், உள்நாட்டு அமைதியைப் பாதுகாத்தல், சமூக நலனைப் பெருக்குதல், பொருளாதார நலனை ஒட்டி விவசாயம், கைத்தொழில்கள், போக்குவரத்துச் சாதனங்கள் அமைத்தல் போன்ற பல கடமைகள் அரசாங்கத்திற்கு ஏற்படுகின்றன. இக் கடமைகளை ஆற்றத் தக்க நிர்வாக அமைப்பு அரசாங்கத்தில் இருத்தல் அவசியம் அன்றோ? அந்நியப் படையெடுப்பைத் தடுக்க இராணுவமும், உள்நாட்டு அமைதியைப் பாதுகாக்கப் போலீஸ், நீதிபதி

தொகுதி, சிறைச்சாலைகள் முதலியனவும், சமூக நலனைப் பெருக்க மருத்துவச் சாலைகள், கல்வி நிலையங்கள் நிறுவுதல் முதலியனவும், விவசாயத்தின் பொருட்டு நீர்ப்பாசனத் திட்டங்கள் முதலியனவும், போக்குவரத்திற்குச் சாலைகள், இருப்புப் பாதைகள் முதலியனவும் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்படுகின்றன. இவற்றைக் கவனிக்கப் பல ஊழியர்கள் நியமிக்கப்படல் வேண்டும். பொது நலன்களுக்குப் பணமும் செலவிடப்படல் வேண்டும். இவற்றிற் கெல்லாம் பணம் வேண்டும். இந்தப் பணத்தை அரசாங்கம் பொது மக்களிடமிருந்து வரி மூலமாகவும் பிற வழிகளிலும் பெற்றுச் செலவு செய்கிறது. இந்த நிர்வாகச் செலவுகள் யூனியன் அரசாங்கத்தாலும், ஸ்டேட் அரசாங்கங்களாலும் செய்யப் பட்டு வருகின்றன.

**மத்திய அரசாங்கத்தின் முக்கிய வரவினங்கள் :** இறக்குமதிச் சுங்கவரிகள், உற்பத்தி வரிகள், வருமான வரி, கார்ப்பரேஷன் வரி, பெரிய கம்பெனிகளின் வருமானத்தின் மீது விதிக்கப்படும் மேல் வரி (Super-Tax), அதிக லாபத்தின்மீது வரி, எஸ்டேட் வரி, தனவரி (Wealth Tax) கொடை வரி (Gift Tax), செலவு வரி (Expenditure Tax), நாணய வெளியீட்டு வரி, ரெயில்வே வருமானம், தபால் தந்தி வருமானம் முதலியனவாகும்.

**மத்திய அரசாங்கத்தின் முக்கிய செலவினங்கள் :** பாதுகாப்பு, பொது மராமத்துச் செலவு, சிவில் நிர்வாகச் செலவு, தேசீயக் கடன்களுக்குச் செலுத்தும் வட்டி, பொதுச் செலவு, ஸ்டேட்டுகளுக்கு அளிக்கும் வருமான வரிப் பங்கீடு, தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையை ஒட்டி அகதிகளின் பொருட்டு ஏற்பட்டுள்ள செலவுகள் முதலியனவாகும்.

**ஸ்டேட் அரசாங்கத்தின் முக்கிய வரவினங்கள் :** விற்பனை வரி, நில வரி, உற்பத்தி வரி, மோட்டார் முதலிய வாகன

வரிகள், ஸ்டாம்பு வரி, பத்திரப் பதிவு வரி, மின்சார வருமானம், யூனியன் அரசாங்கத்தின் உதவி முதலியன வாகும்.

**ஸ்டேட் அரசாங்கத்தின் முக்கிய செலவினங்கள்:** கல்வி, சிவில்நிர்வாகம், போலீஸ் இலாக்கா, நீதி இலாக்கா, மருத்துவ உதவி, பொதுச் சுகாதாரம், விவசாயம், நீர்ப் பாசனம், பொது மராமத்து வேலைகள், கைத்தொழில்கள், கூட்டுறவு முதலியவற்றின் பொருட்டுச் செய்யும் செலவு களாகும்.

**வரிகள்:** வரிகளுள் பல வகையுண்டு. அவை நில வரி, வருமான வரி, அதிக இலாப வரி முதலியன நேர்முக வரிகள் (Direct Taxes) என்றும், இறக்குமதிச் சுங்க வரிகள், உற்பத்தி வரி, விற்பனை வரி முதலியன மறைமுக வரிகள் (Indirect Taxes) என்றும் இரு வகைப்படும். பொருள்கள் மீது வரிகளை உயர்த்தி விட்டால் அவ்வுயர்வை மக்கள் செலுத்துவதால் அது மறைமுக வரி ஆகும். வரிகள் குடிகளின் நன்மைக்காகவே விதிக்கப்படுவதால், அவற்றைக் குடிமக்கள் தவறுமல் செலுத்தக் கடமைப் பட்டவர்கள் ஆவர்.

பட்ஜெட்: யூனியன் அரசாங்கமும், ஸ்டேட்டு அரசாங்கமும் ஒவ்வொரு ஆண்டும் முன்னதாகவே தாம் எதிர்பார்க்கும் வரவு செலவினங்களைக் குறித்து ஒரு திட்டத்தைத் தயாரிக்கும். இதற்குப் பட்ஜெட் என்று பெயர். இது சட்ட சபைகளில் கொண்டு வரப்பட்டு, அவற்றின் இசைவினுல் நடைமுறைக்கு வரும்.

# பட்ஜெட் 1958 — 59

(A) யூனியன் அரசாங்கத்தின் மதிப்பிட்ட வரவு 763·16 கோடி ரூபாய்; மதிப்பிட்ட செலவு 796·01 கோடி ரூபாய்.

| முக்கியமான வரவு இனங்கள் | கோடி ரூபாய் |
|---|---|
| *இறக்குமதிச் சுங்க வரிகள்* (Customs) | 170 |
| *உற்பத்தி வரி* (Union Excise Duties) | 260·45 |
| *வருமான வரி* (Income-Tax) | 217 |
| **முக்கியமான செலவு இனங்கள்** | |
| *பாதுகாப்பு* (Defence) | 278·14 |
| *சிவில் நிர்வாகம்* (Civil Administration) | 130·09 |
| *ராஜ்ஜிய அரசாங்கங்களுக்குக் கடனுதவி* (Loans to States) | 362 |

(B) சென்னை அரசாங்கத்தின் இப்பொழுதுள்ள வரிகளின்படி வருமானம் 6,240 லக்ஷம் ரூபாய்; செலவு 6,375 லக்ஷம் ரூபாய்; துண்டுத் தொகை 135 லக்ஷம் ரூபாய்; அதிகப்படி மத்திய உதவி 30 லக்ஷம் ரூபாய்; இறுதியான துண்டு 105 லக்ஷம் ரூபாய்; வரி மாறுதல்கள் மூலம் கிடைப்பது 120 லக்ஷம் ரூபாய்; நிகர மிச்சம் 15 லக்ஷம் ரூபாய்.

| முக்கியமான வருமான இனங்கள் | லக்ஷம் ரூபாய் |
|---|---|
| வருமான வரியில் சென்னையின் பங்கு | 604 |
| உற்பத்தி வரியில் பங்கு | 215 |
| விவசாய வருமான வரி | 107 |
| எஸ்டேட் (மரண) வரி | 22 |
| மத்திய சர்க்கார் தரும் ரயில்வே பிரயாண வரியில் பங்கு | 64 |
| நிலவரி | 663 |
| ஸ்டாம்புகள் | 353 |
| மோட்டார் வரி | 450 |
| விற்பனை வரி | 1506 |
| புது வரிகள் மூலம் | 120 |
| **முக்கியமான செலவு இனங்கள்** | |
| பொது நிர்வாகம் | 435 |
| போலீஸ் | 522 |
| கல்வி | 1204 |
| வைத்தியம் | 415 |
| விவசாயம் | 254 |
| தொழில்கள் | 486 |

பகுதி 2

## ஐந்தாண்டுத் திட்டங்கள்

சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்புத் திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள் மக்கள் விரும்பும் சுகாதாரம், செல்வ நிலை, இன்ப வாழ்வு முதலியவற்றை உயர்த்துதலே ஆகும். நமது அரசாங்கம் இவற்றின் பொருட்டு மிகவும் பாடுபட்டு வருகிறது. யூனியன் அரசாங்கத்தில் நிறுவப்பட்டுள்ள திட்டக் கமிட்டி இப் பணியை மேற்கொண்டுள்ளது. 1951-ல் 2,356 கோடி ரூபாய் செலவில் முதல் இந்திய ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. அது மாபெரும் அடிப்படைச் சமூக நலத் திட்டமே யாகும். ஏனெனில், உணவு உற்பத்தித் திட்டங்கள், மின்சாரத் திட்டங்கள், தொழில், போக்குவரவுத் திட்டங்கள், சமூக சேவை (Social Service), சமுதாய அபிவிருத்தி (Community Development) போன்ற அடிப்படைத் திட்டங்களே முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறப்பிடம் பெற்றன. மேலும் அவற்றிற்கென மொத்தச் செலவில் 70 சதவீதம் ஒதுக்கப்பட்டது. உணவு உற்பத்தியைப் பெருக்க நீர்ப்பாசனத் திட்ட அபிவிருத்திக்காக பெரும் தொகை ஒதுக்கப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பொருளாதார, சமூக நல முன்னேற்றத்திற்காக யூனியன் அரசாங்கத்தாரால் "பாரத் சேவக் சமாஜம்" என்னும் அகில இந்தியத் தொண்டர் படை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஒவ்வொரு ராஜ்ஜியத்திலும் இந்த சமாஜத்தின் கிளை நிறுவப்பட்டுள்ளது.

அன்றியும், ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கிராமப் பொதுச் சுகாதாரத்தை முன்னிட்டு யூனியன் அரசாங்கத்தாரால் "தேசிய அபிவிருத்தி தொண்டுத் திட்டம்" (National Extension Service Scheme) ஒன்று 1953-ல் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் 1,20,000 கிராமங்கள் [நம் நாட்டு மொத்தக் கிராம ஜனத்தொகையில் சுமார் $\frac{1}{4}$ பாகம்] நலம் பெறும். இவற்றுள் 70,000 கிராமங்கள் கூர்ந்து கவனிக்கப்படும். குடியானவர்களுக்கு நல்ல எருக்கள், விதைகள்,

நீர்ப்பாசன வசதிகள் ஆகியவைகளை அளித்தல், கால்நடை அபிவிருத்தியை கவனித்தல், ரஸ்தாக்கள் போடுதல், தரிசு நிலங்களைப் பண்படுத்தல்—இதனுடைய முக்கிய வேலைக ளாவன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்: இத் திட்டம் 1956-1961-இல் நடைபெறும். யூனியன், ராஜ்ஜிய அரசாங்கங்-கள் 4,800 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டுள்ளது. தனிப்பட்டவர்கள் 2,300 கோடி ரூபாய் இத் திட்டத்திற் காகச் செலவிடலாம். இதன் முக்கிய நோக்கங்கள் ஆவன:

(1) தேசீய வருமானத்தை சுமார் 25% பெருக்குவது.

(2) எந்திரத் தொழிலை விரைவாகப் பெருக்குதல் — சிறப்பாக ஆதாரத் தொழில்கள், இரும்பு எஃகுத் தொழில் (Basic and heavy industries).

(3) பலருக்கு வேலை ஏற்படத் தகுந்த முறைகளைத் திட்டமிடுதல் (சுமார் 80 லட்சம் பேர்களுக்கு வேலையளித் தல்).

(4) பணம் அதிகமாய் ஒருவரிடமே குவியாமல் தடுத்தல்.

(5) சமதர்மக் கொள்கையின் சிறந்த அம்சங்களை அனுசரித்து நாட்டின் பொருளாதார நிலையைச் சீர் படுத்துதல்.

4,800 கோடி ரூபாயில் சுமார் பாதித் தொகை தொழில், தாதுப் பொருள், போக்குவரவுச் சாதனங்கள், மின்சார விருத்திக்கு உபயோகப்படுத்தப்படும்.

சமுதாயத் திட்டங்கள் (Community Projects): 1952-ல் நம் மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உதவியைக் கொண்டு நம் யூனியன் அரசாங்கத் திட்டக் கமிஷன் சமுதாயத் திட்டங்

களை வகுத்திருக்கின்றன. முதற்கண் கிராம முன்னேற்றமே இத் திட்டங்களின் முக்கிய நோக்கமாகும். சுமார் 40 கோடி ரூபாய் செலவில் 55 திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. சுமார் 2 லக்ஷம் ஜனங்களும், $1\frac{1}{2}$ லக்ஷம் ஏக்கர் பயிர் செய்யப்படும் நிலங்களும் உள்ள 300 கிராமங்கள் ஒரு திட்டமாகக் கருதப்படும். 18,464 கிராமங்களில் 26,950 சதுர மைல் பரப்பளவுள்ள பூமி இதனால் நலம் பெறும். விவசாயத்தை விருத்தி செய்ய எரு, மற்றும் பல நவீன சாதனங்கள் கிராம மக்களுக்கு அளிக்கப்படும். குடிசைத் தொழில்கள், சிற்றளவைத் தொழில்கள், கல்வி, சுகாதாரம், கால்நடைப் பண்ணைகள், தரிசு நிலங்களைப் பயிரிடுவதற்கு ஏற்றதாக்குதல் முதலியன சமுதாயத் திட்டங்களின் முக்கிய அம்சங்களாவன. நம் இந்திய நாடு வள்ளுவர் வகுத்த பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், காவல் அனைத்திலும் சிறந்தோக்கித் திகழ்வதாக! மக்கள் இவற்றின் பொருட்டு ஒன்றுபட்டு உழைப்பார்களாக!

## பயிற்சி

1. நேர்முகவரி, மறைமுகவரி என்பதை விளக்குக. இவைகளுக்கு இரண்டு உதாரணங்கள் கூறுக.
2. அரசாங்க பட்ஜெட் என்றால் என்ன? இது யாருடைய இசைவினால் நடைமுறைக்கு வரும்?
3. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சீரிய அம்சங்கள் யாவை?
4. தேசிய அபிவிருத்தி தொண்டுத் திட்டம், சமுதாயத் திட்டங்கள், பாரத் சேவக் சமாஜம் — இவைகளின் நோக்கங்கள் என்ன?
5. சமூக நல்வாழ்வை உயர்த்த நமது அரசாங்கம் கையாளும் சில முறைகளை விவரிக்க.

# மங்கலவுரை

## உலகம் உன்னிடம் என்ன எதிர்பார்க்கிறது ?

உலகம் வெறும் கல்லும் மண்ணும் அன்று. மக்கள் கூட்டம் உலகினை மாற்றியமைத்த வரலாற்றினைக் கற்கிறோம். எத்தனையோ இக்கட்டு; எத்தனையோ வருத்தம்! இவ்வளவும் பட்டு, மரத்தில் தொங்கியும், குகையில் ஒளிந்தும் வாழ்ந்த மனிதன் இன்று ஆகாயத்தில் பறந்தும், அணுவைப் பிளந்தும் வாழ்கிறான். காந்தியடிகளைப் போலத் தம் உயிரையுங்கொடுத்து, அறத்தோடன்பினை நிலைநாட்டவரும் மக்களின் முயற்சியும் மணிமுடியாக விளங்குகிறது. விலங்கு நிலையிலிருந்து மனிதத் தன்மை பெற்று நிற்கும் இந்த வெற்றியைப் பாதுகாப்பது உன்னுடைய கடமை; இதனை மேலும் மேலும் ஓங்க வளர்ப்பது உன்னுடைய கடமை.

உலகம் இன்று ஒரு குடும்பமாக விளங்குகிறது. வானொலி, ஆகாய விமானம் முதலான விஞ்ஞானக் கருவிகள் தொலைதூரம் என்பதே இல்லாதபடி எல்லா நாட்டினையும் அண்டை வீடுகள் போல் அமைத்து வருகின்றன. தனியே மனிதன் என்ன செய்வான் என்று தயங்காதே. கூட்டுறவு வாழ்வே மனித வாழ்வு. தனித்தனி ஒருவரும் இந்த உலக அறிவை, உலக அன்பினை, உலக அறத்தினை, உலக அழகினை எண்ணத்தாலோ, பேச்சாலோ, செயலாலோ கெடுக்காமல் இருக்கவேண்டும். இது உன்னால் ஆகக் கூடியது; இதே நோக்கத்தோடு கூடும் மக்கட் சமுதாய நிலையங்களில் சேர்ந்து உழைப்பதும் உன்னால் ஆகக் கூடியதே.

அணுகுண்டாலும், ஹைட்ரஜன் குண்டாலும் உலகம் அழியுமோவென்று அனைவரும் நடுநடுங்குகின்றனர். இந்த நடுக்கங் கெடக் காந்தியடிகள் நெறியில் நமது விஞ்ஞானப்

புலமையின் வழி அணுசக்தியைப் பயன்படுத்தி, உலகினை வாழ்விக்கும் முயற்சியில் ஈடுபடுவோரை எல்லோருமாகச் சேர்ந்து, துணை செய்து போற்றுதல் வேண்டும்.

உன்னுடைய உடம்பிலே பல ஆற்றல்கள் வளரக் கூடும். உன்னுடைய அறிவு உயர்ந்த நிலையை அடையக் கூடும். உன்னுடைய ஒழுக்கம் எல்லோரும் வியக்கும் நிலையை அடையக்கூடும். இந்த ஆற்றல்களை வீணே அழிய விடாமல் உன்னால் முடிந்த வரையில் முயன்று சிறப்படைக. அது உனக்கும் நல்லது; உலகுக்கும் நல்லது. உலகம் இதற்குமேல் உன்னிடத்தில் எதிர்பார்க்கவில்லை. இயற்கை உனக்கு அருந்துணை செய்ய வளங்கொழித்துக் கிடக்கிறது. மக்கள் கூட்டமும் இந்தக் குறிக்கோள்களைப் போற்றி வழிபடுவதற்கு உன்னைச் சுற்றி நிற்கிறது. மனங் குன்றாது எழுந்திரு. உன்னை நீயே பார்; நடந்து செல்; உயர்ந்த நோக்கத்தினை மறவாதே. ஆனால், பெருங் கனவாக அவை அழிதல் கூடாது. அவை செயலாக மலர வேண்டும்; மணம் வீச வேண்டும். அடுத்த அடி எங்கு எடுத்து வைப்பது என்பதனையும் மறவாதே; வெற்றி நமதே. தனியாளரின் பெருமை உனக்கு விளங்குகிற தன்றோ? யார் அறிவார்? நீ காந்தி ஆகலாம்; விஞ்ஞான ராமன் ஆகலாம்; கணக்கறிஞன் இராமானுசன் ஆகலாம்; இராசேந்திர சோழன் போன்ற படைவீரனாகலாம்; புகழ் கொழிக்கும் நேருவாகலாம்.

தன்னலத்திற்கு அடிமையாய் விடாதே. உலக நலமே தன்னலமாக இன்பந்தர இடம் இருக்கும்போது நீ வாடி வதங்குவதேன்? அறிவோரும், அன்போரும் ஆகிய அனைவரோடும் ஒத்துழை. கொயினா, பெனிசிலின் முதலிய மருந்துகள் எவ்வளவு உயிர்களைக் காப்பாற்றுகின்றன. விஞ்ஞானம் எவ்வளவு வகையில் நம் தொந்தரவுகளைக் குறைத்திருக்கின்றது. பஸ், மின்சாரம், வானொலி, ஆகாய

விமானம் இவற்றினைப் பார். ஆனால் இந்த நெறியில் ஆளும் மனப்பான்மை வேண்டாம்; தொண்டு மனப்பான்மை வேண்டும்.

உன்னுடைய தொழில் என்ன? எதற்காகப் பிறந்தாய்? உன்னுடைய வாழ்வின் நோக்கம் என்ன? உன்னுடைய ஆற்றலை எல்லாம், அறிவினை எல்லாம், அன்பினை எல்லாம், அறத்தினை எல்லாம் வளர்த்திடுக. உன் தொல்லைகள், உலகத் தொல்லைகள் என எண்ணி உறுதி கொண்டு நீக்க முயல். நீயும் உன்னைச் சார்ந்தாரும், உலகமும் இன்பமாக இருக்க இதுவே வழி.

புத்தர் வழி வந்தவன் நீ; வள்ளுவர் வழி வந்தவன் நீ; சங்கரர் வழி வந்தவன் நீ; ஆழ்வார்கள் வழி வந்தவன் நீ; அசோகர் வழி வந்தவன் நீ; அக்பர் வழி வந்தவன் நீ; சிவாஜி வழி வந்தவன் நீ; காளிதாசன் வழி வந்தவன் நீ; கம்பன் வழி வந்தவன் நீ; பாரதி வழி வந்தவன் நீ; காந்தியடிகள் வழி வந்தவன் நீ. இப் பெரியோர்களைப் பின்பற்றுக; பண்பு பெற்று நீ வாழ்க! சுதந்திர இந்தியர் வாழ்க!! அகில உலகமும் வாழ்க, வாழ்க!!!

---

# கலைச் சொற்கள்

அணுகுண்டு - Atom Bomb
அப்தம் - Era
அப்பீல் கோர்ட்டுகள் - Appellate Courts
அரசாங்க அமைப்பு - Constitution
அரசாங்க சபை - Council of State
அரசாங்க சமதர்மம் - State Socialism
அரசு வரி - Tax
ஆயுதப் பரிகரணம் - Disarmament
ஆடம்பரத்திற்குரியவை - Luxuries
இறக்குமதிச் சுங்க வரிகள் - Customs duties
இரட்டை ஆட்சி - Diarchy
இருதலை ஆட்சி - Double Government
இந்திய தேசீய காங்கிரஸ் - Indian National Congress
இடை வினக்கள் - Interpellations
இலக்கியம் - Literature
இயக்கம் - Movement
இயல் முறை - Policy
உயர்நீதிக் கோர்ட்டுகள் - High Courts of Judicature
உள்நாட்டு இலாக்கா - Home Office
உள்நாட்டு வர்த்தகம் - Inland trade
உற்பத்தி வரி, அப்காரி வரி - Excise duty
ஏகாதிபத்தியக் கொள்கை - Imperialism
ஏக உரிமை - Monopoly
ஒழுங்குபடுத்தும் சட்டம் - Regulating Act
கப்பற் படை இலாக்கா - Admiralty
கச்சாப்பொருள் - Raw Produce
காபினெட் (மந்திரி சபை) - Cabinet
காப்பு வரிகள் - Protective duties
காப்புவரித் திட்டம் - Protective Tariff
கிரிமினல் (சிவில்) வழக்கு முறைச்சட்டம் - Criminal (Civil) Procedure Code
குடிமை - Citizenship
குடிசைத் தொழில் - Cottage industry
குடியரசு - Republic
குடிவாரச் சட்டம் - Tenancy Act
கூட்டுறவு - Co-operation
கூட்டாட்சி அமைப்பு - Federal Constitution
கூட்டுறவு நாணயச் சங்கம் - Co-operative Credit Society
கூட்டுறவு விவசாயம் - Co-operative Farming
சரக்கு வரிகள் - Tariffs
சர்வாதிகாரி - Dictator
சர்வ தேச நீதிமன்றம் - International Court of Justice
சரி யொப்பமிடுதல் - Certification
சமூகம் - Community, Society

சட்டமும் அமைதியும் - Law and Order
சபைத் தலைவர் (ஸ்பீக்கர்) - Speaker
சங்கம் - Guild (League)
சட்டமியற்றல் - Legislation
சட்டசபை - Legislative Council
சட்டச்செலாவணி நாணயம்- Legal Tender
சந்தை - Market
சமூக வாழ்க்கை - Social life
சர்வ சாதன யுத்தம் - Total war
சர்வ கலாசாலை (பல்கலைக் கழகம்) - University
சிறுபான்மையோர் - Minorities
சுகத்திற்குரியவை - Comforts
சுய நிர்வாகம் - Autonomy
சுறண்டல் - Exploitation
சுய ஆட்சி - Self-Government
செய்தொழிற் செறிவு-Localization of industry
செஞ்சிலுவை - Red Cross
சேமிப்பு பாங்கு - Savings Bank
சோஷலிஸம் - Socialism
ஜனநாயகம் - Democracy
ஜூரி முறை - Jury system
டொமினியன் அந்தஸ்து - Dominion status
தடையிலா வர்த்தகம் - Free trade
தங்க நாணயத்திட்டம் - Gold standard
தர்மகர்த்தா சபை - Trusteeship Council
தலையிடாமை - laissez-faire
ஸ்தல சுய ஆட்சி-Local Self-Government
தண்டனைத்திறன் - Sanction
தலைமை நீதிக்கோர்ட்டு - Supreme Court of Justice
தரிசு நிலம் - Waste land
தாபனங்கள் - Institutions
திட்டம் - Scheme
துரோகக் குற்ற விசாரணை - Impeachment
தேசக்கடன் - National Debt
தேர்தல் தொகுதி- Electorate
தேசியப் படை - National Military
தேசமக்கள் - Nation
தேசிய உணர்ச்சி - Nationalism
தேவைகள் - Wants
தொழிற்சாலைச் சட்டம்-Factory Act
தொழிற் புரட்சி - Industrial Revolution
தொழிலாளர் இயக்கம் - Labour movement
தொழிலாளர் சங்கம் - Trade Union
நகராளன் - Alderman
நகரசபையார்- City Fathers
நகர அபிவிருத்தி டிரஸ்ட் - City Improvement Trust
நடைமுறை நாணயம் - Currency
நம்பிக்கையின்மைத் தீர்மானம் - No - confidence Motion
நாணயமுறை - Coinage
நாணயமாற்றம் - Exchange
நாணயச்சாலை - Mint
நாணய மாற்றுபில்கள் - Bills of Exchange
நியமனம் - Nomination
நிர்வாகம் - Administration

நிர்வாக சபை - Executive Council
நிலச்சுவான்தார் - Landlord
நில அடமான பாங்கு - Land Mortgage Bank
நில உரிமைத் திட்டம் - Land Tenure
நிலவரித் தீர்மானம்-Revenue Settlement
நுகர்வு - Consumption
நுகர்வோர் - Consumer
நெசவுத் தொழில் - Textile Industry
நேர்முகவரி -Direct taxation
பகிஷ்காரம் - Boycott
பரந்த விவசாயம் -Extensive cultivation
பண்பாடு - Culture
பதவியல் - Ex-officio
பஞ்ச நிவாரணம் - Famine Relief
பங்கீடுமுறை - Rationing
பலநாட்டு வர்த்தகம் - International trade
பண மசோதா - Money Bill
பந்தோபஸ்து சபை - Security Council
பாதுகாப்பு - Defence
பார்லிமென்ட் - Parliament
பிரதி நாணயம் - Token coin
பீரங்கிப் படை - Artillery
புள்ளிவிவரங்கள் - Statistics
பொன் (வெள்ளிக்) கட்டி - Bullion
பொது உடமைக் கொள்கை- Communism
பொருளாதார சாஸ்திரம் - Economics
பொருளாதார சமூக சபை - Economic and Social Council
பொருளாதார வாழ்க்கை - Economic life
பொருளுற்பத்தி- Production
பொறுப்பாட்சி - Responsible Government
பொதுநிதி - Public Finance
பாங்கு வைப்பு-Bank deposit
பொதுச் சுகாதார இலாக்கா- Public Health Department
மறைமுகவரி - Indirect taxation
மராமத்து மந்திரி - Minister of Public Works
மாற்றிய இலாக்கா - Transferred subject
மானியதார் - Tenant
முடியரசு - Monarchy
ரகசிய வோட்டு - Ballot
வரவு செலவு திட்டம்- Budget
வரியைப் பற்றிய - Fiscal
வருமான வரி - Income-tax
வாணிபச் சங்கம் - Chamber of Commerce
வாணிப இயல் முறை - Commercial policy
வாக்காளர் தொகுதி - Constituency
வாக்குரிமை அளித்தல் - Enfranchisement
வாக்குரிமை - Franchise, Suffrage ; Vote
வாணிபத் திட்டம் - Mercantile policy
விடா இலாக்கா - Reserved subject
வீட்டோ - தள்ளுதல்
வெளிநாட்டு இயல்முறை - Foreign policy
வேலை நிலையம் - Employment bureau

# SAMOOHA ARIVU NOOL

**BOOK III for FORM VI**

BY
SRI. K. RAMASWAMY SASTRY, B.A., L.T.
AND
SRI. M. S. NARASIMHACHARI, B.A., L.T.

THE TEACHERS' PUBLISHING HOUSE
53-56, CORAL MERCHANT ST. - MADRAS-1

[PRICE: Rs. 2-25 nP.